மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K. பழனிசாமி** அவர்கள்

பாரத ரத்னா புரட்சித் தலைவர்

டாக்டர் **எம்.ஜி.ஆர்** நூற்றாண்டு விழாவில்

மாவட்டங்களில் ஆற்றிய சிறப்பு உரைகளின் தொகுப்பு

தொகுதி - 1

‘பாரத ரத்னா’ புரட்சித் தலைவர்

டாக்டர் **எம்.ஜி.ஆர்** அவர்கள்

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

சிறப்பு வெளியீடு எண். 24

தமிழரசு

இலவச வெளியீடு

பிப்ரவரி 2019

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

நெஞ்சத்தில் நிறுத்துவோம்!

கடலினும் கடிய கலைத்துறையின் கரையைக் கடந்து யாரும் இதுவரை எட்டியிராத ஏற்றத்தையும், புகழையும் பெற்று, தமிழக மக்களின் நெஞ்சங்களின் உச்சத்தில் நிரந்தர இடம் பிடித்த திரைப்பட கலைஞர் ஒருவர், கலைத்துறையில் மட்டுமல்லாமல் அரசுத்துறையிலும், சரித்திரம் படைக்கும் வகையில் ஆளுமை செய்ய முடியும் என்பதை உலக மக்களுக்கு உணர்த்திச் சென்றவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

நதிகள் சங்கமிப்பது கடலில். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சொல்லும், செயலும், திட்டமும், பயனும் இறுதியாக சங்கமிப்பது ஏழை, எளிய மக்களின் இல்லங்களில். அவர் ஏற்றி வைத்த தீபங்களின் இன்ப ஒளியினால் ஏற்றம் பெற்ற பொதுமக்களின் இதய சிம்மாசனமே, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் அவர்களின் நிரந்தர இருப்பிடமாகியது.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் படைக்கப்பெற்று, வரலாறாக நிலைத்து விட்டிருந்த எண்ணற்ற சாதனைகளை மீண்டும் மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று புரட்சித்தலைவர் அவர்களின் சேவைக்கு நன்றி கூறும் நல்லெண்ணத்தின் அடிப்படையில், தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் அரசு விழா நடத்திட, ஆணையிட்டு அதனடிப்படையில் அவ்விழாக்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய பேருரைகளை தொகுத்து வழங்குவதை நோக்கமாகக் கொண்டதே இந்நூலாகும்.

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் எண்ணத்தில் உதித்த இணையற்ற மக்களாட்சித் தத்துவமாக விளங்கியது "மக்களிடம் செல்வோம்" "மக்களிடம் பயில்வோம்" "மக்களுக்காகவே உழைப்போம்" என்ற மூன்று தாராகத் தத்துவங்களாகும். இதன் அடிப்படையில் எழுந்த சரித்திரப் புகழ் பெற்ற திட்டங்களையும், தீர்வுகளையும் மக்களுக்கு நினைவுபடுத்தும் வகையிலும், நவீன காலத்திற்கேற்ப புதிய புதிய பல திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு அறிவிக்கும் முறையிலும் இவ்விழாக்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் கலந்து கொண்டு மகத்தான உரைகளாற்றி சிறப்பித்திருப்பதை இந்நூல் முழுவதும் காணலாம். அவ்வுரைகளின்றும், தமிழக எதிர்காலச் சந்ததியினர் தாங்கள் சார்ந்துள்ள மாவட்டங்களின் சரித்திரப் பின்னணியில் தொடங்கி இன்று வரை ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் உச்சம் வரை இடம் பெற்றிருப்பதைக் காணலாம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நூல் இப்போதைய தலைமுறை மட்டுமல்ல, எதிர்காலத் தலைமுறையினரும் தமது நெஞ்சங்களில் நிறுத்திப் போற்றுதலுக்குரியது மட்டுமல்லாமல் அடுத்தடுத்த சந்ததியினருக்கும் எடுத்துரைக்க ஏதுவாகும்.

– விழாக் குழுவினர்

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	மீனாட்சி மதுரையில் நல்லாட்சி நாயகர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டுத் தொடக்க விழா!	1
2.	தொழில் நகரம் திருப்பூரில் தொழிலாளர் இதயதெய்வம் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா!	13
3.	புனித பூமி திருவண்ணாமலையில் மனிதரில் புனிதர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா!	26
4.	வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி மக்கள் மனதில் நிற்பவர், எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா பெரம்பலூரில்!	42
5.	மாற்றுக் குறையாத மன்னவன் என்று மக்கள் போற்றிப் புகழும் வெற்றித் திருமகன் எம்.ஜி.ஆருக்கு விழுப்புரத்தில் நூற்றாண்டு விழா!	52
6.	"நாம பாடுற பாட்டும், ஆடுற கூத்தும் படிப்பினை தந்தாகனும்" என்ற கலைச் சக்கரவர்த்திக்குக் கடலூரில் நூற்றாண்டு விழா!	65
7.	"கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி" என்ற முதலமைச்சர் எனும் முதல் தொழிலாளிக்கு திருவாரூரில் நூற்றாண்டு விழா!	81
8.	"உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே" என்ற அரிய தலைவருக்கு அரியலூரில் நூற்றாண்டு விழா!	96
9.	காஞ்சித் தலைவனின் இதயக்கனிக்கு காஞ்சி மாவட்டத்தில் நூற்றாண்டு விழா!	113
10.	ஏழையின் சிரிப்பினிலே இறைவனைக் காணலாம் என்பதை பொருளாதாரக் கொள்கையாகக் கொண்ட ஏழை பங்காளனுக்குத் திருவள்ளூரில் நூற்றாண்டு விழா!	130

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
11.	‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்ற அண்ணாவின் ஆன்மிக நாத்திகத்தைப் போதித்த புரட்சித்தலைவருக்குப் பெரியாரின் ஈரோட்டில் நூற்றாண்டு விழா!	147
12.	வீரமும் ஈரமும் கொண்ட வெற்றித் திருமகன்எம்.ஜி.ஆருக்கு, விடுதலைக்கு வித்திட்ட வீரமண் வேலூரில் நூற்றாண்டு விழா!	166
13.	தர்மம் தலைகாக்கும் என்ற பொன்மொழியின் புகழ் உருவம், பொன்மனச் செம்மலுக்கு நாமக்கல்லில் நூற்றாண்டு விழா!	182
14.	தரையினில் பிறந்து, தண்ணீரில் பிழைக்கும் படகோட்டி மீனவ நண்பனுக்கு நாகையில் நூற்றாண்டு விழா!	200
15.	பாதையோரத்துப் பாட்டிகளுக்கும் படிஅளந்த கர்ண மகாராசருக்குக் கிருஷ்ணகிரியில் நூற்றாண்டு விழா!	216
16.	‘ஒருதாய் மக்கள் நாமென்போம்’ என்ற சமுதாயக் காவலருக்கு சேலத்தில் நூற்றாண்டு விழா!	234

மீனாட்சி மதுரையில்
நல்லாட்சி நாயகர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டுத் தொடக்க விழா!

மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்தவர்!

இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, பொன்மனச் செம்மல், 'பாரத ரத்னா', புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ள, அலை கடலெனக் கூடியிருக்கிற உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். வரலாற்றில் பதிவு செய்யக்கூடிய விழாவாக இதை நான் கருதுகிறேன்!

இம்மகத்தான விழாவிற்குத் தலைமை ஏற்று, தலைமையுரை ஆற்றியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே! சிறப்புரை ஆற்றியுள்ள மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு.தம்பிதுரை அவர்களே! முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜு அவர்களே! மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு.எஸ்.இராஜேந்திரன் அவர்களே! வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர்

முனைவர் கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., அவர்களே! மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே! மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே! மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே! மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களே! மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே! மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா அவர்களே! மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களே! மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே! மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்களே! மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களே! மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்களே! மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என். நடராஜன் அவர்களே! மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களே! மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களே! மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்களே! மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.எம்.மணிகண்டன் அவர்களே! மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களே! மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி அவர்களே! மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.பி.பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீரராகவராவ் அவர்களே! வாழ்த்துரை வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! கழகத்தின் வேர்களாக இருக்கின்ற கழகத் தொண்டர்களே! அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே,

தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களோடு பழகி, மக்களோடு வாழ்ந்து, மக்களுக்காக உழைத்து, மக்களுக்கு வாரி வழங்கி, மக்களுக்காகச் சிந்தித்து, 'மக்கள் திலகமாய்', 'மன்னாதி மன்னனாய்', வாழ்ந்து மறைந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைத்தான், இன்று இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள், தங்கள் இதயக் கோயிலில், தங்க சிம்மாசனமிட்டு அமர்த்தி மகிழ்கிறார்கள். அவர் மக்களிடம் காட்டிய அன்பும், பரிவும், மக்கள் அவரிடம் காட்டிய ஆர்வமும், பாசமும், உலக வரலாறு காணாத அற்புதங்கள்" என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் புகழப்பெற்ற, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை வரலாற்றுச் சிறப்பு மிக்க மதுரை மாநகரில், தமிழ்நாடு அரசின் சார்பாகத் தொடங்கி வைத்ததை, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

புரட்சித்தலைவரின் நூற்றாண்டு விழாவை, மதுரையில் தொடங்குவது என்பது மிகவும் பொருத்தமானதாகும். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மதுரையோடு நிறையத் தொடர்புகள் உண்டு என்றாலும் மிக முக்கியமான ஒருசில சம்பவங்களை மட்டும் இங்கு நான் நினைவுகூர விரும்புகிறேன். புரட்சித்தலைவர் அவர்கள் இலங்கை கண்டியில், 17.01.1917இல் தந்தை கோபால மேனனுக்கும் தாய் சத்யபாமாவுக்கும் ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார். கும்பகோணத்தில் தொடக்கக்கல்வியைத் தொடங்கிய எம்.ஜி.ஆர். அவர்கள், தன் குடும்ப வறுமையின் காரணமாகப் படிப்பைத் தொடர முடியாமல், ஏழாவது வயதிலேயே மதுரை 'ஒரிஜினல் பாய்ஸ்' நாடகக் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். எனவே, அவருடைய வாழ்க்கை மதுரையோடு தொடர்புடையதாக அமைந்தது. அதனால்தான், அவர் திரைவானில் ஒளிவீசிக் கொண்டிருந்தபோது மதுரை வீரன், மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் போன்ற படங்களில் நடித்தார்.

1985 பிப்ரவரி 12ஆம் நாள், எம்.ஜி.ஆர். மறுபிறவி எடுத்து அமெரிக்காவில் இருந்து மீண்டும் இந்தியா திரும்பினார். அவர் சாதாரணமாகத் திரும்பவில்லை, அமெரிக்காவில் சிகிச்சையில் இருந்தபடியே, மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிபெற்று, முதலமைச்சர் நிலையில் மீண்டும் தமிழ் மண்ணில் கால் வைத்தார். எனவே, மதுரை மாவட்டம் அரசியலில் புரட்சித்தலைவர் மறு அவதாரம் எடுக்கக் காரணமாக இருந்தது. 1986 ஜூலை 14, 15இல் இதே மதுரை மாநகரில் எம்.ஜி.ஆர். மன்ற மாநாடு நடத்த புரட்சித்தலைவர் ஆணையிட்டார். அந்த மாநாட்டில்தான், ஆறடி உயர வெள்ளிச் செங்கோல் ஒன்றினைத் தலைமைக்கழகத்தின் சார்பில் புரட்சித்தலைவர் அவர்களுக்கு அளிக்கும் வாய்ப்பு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குக் கிடைத்தது. அந்த வெள்ளிச் செங்கோலை, அதே மேடையில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.

அவர்கள் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடமே திருப்பி அளித்த போது, மாநாட்டில் திரண்டிருந்த மக்கள் எழுப்பிய கரவொலி விண்ணைத்தொட்டது. இதை அம்மா அவர்கள் அடிக்கடி நினைவு கூர்ந்து பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். இதுவே அம்மா அவர்களை எம்.ஜி.ஆர் அவர்களுக்குப் பிறகு அரசியல் வாரிசாக, கழகத்தின் அடுத்த தலைவராக அடையாளம் காட்டிய நாளாக அமைந்தது. அதனால் கழகத்தின் வரலாற்றிலும், புரட்சித்தலைவரின் வாழ்விலும், அம்மா அவர்களின் இதயத்திலும் மதுரை மாநகரம் நீங்காத இடத்தைப் பிடித்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசியல் வாழ்க்கையில் இந்த நிகழ்வு ஒரு பெரிய திருப்புமுனையாக அமைந்தது!

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்துக் கடைசியாக வெளிவந்த திரைப்படம் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன். இந்தப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் போதே, தமிழ்நாட்டை, தி.மு.க.விடமிருந்து மீட்டு தமிழ்நாட்டின் முதலமைச்சராக புரட்சி அவதாரம் எடுத்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஒரு தலைவர் மறைந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் மக்கள் மனதிலே பசுமையாக நிறைந்திருக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த மாபெரும் கூட்டத்தை விட வேறு எதைச் சொல்ல முடியும்?

மதுரையில் கடல் இல்லையென்ற குறையை, இந்த மக்கள் கடல் தீர்த்து வைத்திருக்கிறது. இந்தக் கண்கொள்ளாக் காட்சியையும் கழகத் தொண்டர்களின் கடலளவுக் கூட்டத்தையும், எழுச்சியையும் பார்ப்பதற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்மிடை இல்லையே என்ற ஒரு பெருங்குறைதான் கழகத்தொண்டர்களை வாட்டுகிறது. புரட்சித்தலைவரின் நூற்றாண்டு விழாவை எப்படியெல்லாம் கொண்டாட வேண்டும் என்று அம்மா அவர்கள் திட்டமிட்டு

இருந்தார்களோ, அதில் சிறிதளவு கூடக் குறைவு இல்லாமல், அம்மாவின் பிள்ளைகளாகிய நாங்கள், தமிழ்நாடு முழுவதும் இந்த விழாவைக் கொண்டாட முடிவு செய்திருக்கிறோம்.

மதுரையில் தொடங்கி, சென்னையில் நிறைவடைவது போல் திட்டமிடப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் மாநிலம் முழுவதும் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. இந்த மாபெரும் தொடக்க விழாவின் வாயிலாகக் கழக கண்மணிகளுக்குக் கழக வரலாற்றில் புரட்சித்தலைவரின் பங்களிப்பைப் பற்றிச் சுருக்கமாக கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

1944இல் திராவிடக் கழகம் தோன்றியது. 1949 செப்டம்பர் 17ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த போது ஆட்சிக்கட்டிலில் அமர வேண்டும் என்ற எண்ணம் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் துளியும் இல்லை. எதிர்க்கட்சி நிலையில் இருந்தால்தான், மக்களுக்கு வேண்டிய உரிமைகளையும் வசதிகளையும் உடனுக்குடன் ஆளுங்கட்சியினரிடம் கேட்டுப் பெற முடியும் என்று நினைத்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். ஆனால், 1953இல் காங்கிரஸில் இருந்து கழகத்தில் வந்து இணைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு வெகுஜன இயக்கமாக உருவெடுக்கச் செய்தார்.

எனவேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய முடிவை மாற்றிக் கொண்டு, 1958இல், திருச்சியில் நடந்த கழக மாநாட்டில் கழகம் தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கினார்.

அண்ணா அவர்களின் அறிவுக் கூர்மையினாலும், புரட்சித்தலைவரின் அன்பான அணுகுமுறையாலும், திராவிட முன்னேற்றக் கழகம் தமிழர்களின் மனதில் வேரூன்ற ஆரம்பித்தது. அதன் தொடர்ச்சியாக, 1947–லிருந்து 1967ஆம் ஆண்டுவரை 20 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து, திராவிட முன்னேற்றக்கழகம் தமிழ்நாட்டின் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தது.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் வேரூன்றி வளர்வதற்கு அடிவேர்களில் ஒன்றாக டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் விளங்கினார்கள் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டே ஆண்டுகளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து விட்டார்கள் .

தமிழ்நாட்டுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று அண்ணா அவர்கள் கனவு கண்டிருந்தாரோ, புரட்சித்தலைவரோடு கலந்து ஆலோசித்தாரோ அதையெல்லாம் செய்துகாட்ட வேண்டும் என்று புரட்சித்தலைவர் அவர்கள் எண்ணினார்கள். தம் எண்ணங்களை எல்லாம் தமது திரைப்படங்கள் மூலமாக மக்களுக்குத் தெரிவித்தார்கள்.

“நான் ஆணையிட்டால், அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்
உயிர் உள்ளவரை, ஒரு துன்பமில்லை! – அவர்
கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்!”

போன்ற பல புரட்சிப் பாடல்களைத் தமிழர் நெஞ்சங்களில் விதைத்து, புரட்சி எண்ணங்களை மக்களுக்குச் சென்றடையச் செய்தார். மக்களைக் கவரும் வகையில் தமது படங்களுக்குத் தலைப்புகளை வைத்தார். அவர் நடித்து வெளிவந்த 136 படங்களும் சமுதாயச் சிந்தனைகளுடன் கூடிய புதுப்புது செய்திகளைக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தின. சமுதாயத்தின் அடித்தட்டு மக்களையே மையமாகக் கொண்டு தலைப்புகள், வசனங்கள் மற்றும் பாடல்கள் அமைந்தன. வரலாற்றை கி.மு., கி.பி. என்று பிரிப்பதைப்போல சுதந்திர இந்தியாவின் அரசியலையும், ஆட்சி முறையையும் எம்.ஜி.ஆருக்கு முன், எம்.ஜி.ஆருக்குப் பின் என்று இரண்டாகப் பிரிக்கலாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிடுவார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக்குப் பின்னர்தான், ஒரு சாதாரண மனிதனை முன்வைத்துத் திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்தனர்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஆட்சி நடத்திய 10 ஆண்டுகளில், மக்களுக்காக அவர் கொண்டு வந்த திட்டங்கள் ஏராளம். அந்தத் திட்டங்கள் அனைத்தையும் இங்கே குறிப்பிட வேண்டும் என்றால் நேரம் போதாது. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டம், விதவை, ஆதரவற்ற பெண்களுக்குத் திருமண உதவி, தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், மகளிருக்குச் சேவை நிலையங்கள், பணிபுரியும் பெண்களுக்குத் தங்கும் விடுதிகள், தாய் சேய் நல இல்லங்கள், விலையில்லாச் சீருடைகள் வழங்கும் திட்டம், விலையில்லாக் காலணி வழங்கும் திட்டம், விலையில்லாப் பற்பொடி வழங்கும் திட்டம், விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டம், வறட்சிக் காலத்தில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம், அரிசி விலைக் குறைப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்டங்கள், விலையில்லா ஆம்புலன்ஸ் திட்டம், முதியோர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கும் திட்டம், இன்னும் பல திட்டங்கள் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டன. டாக்டர் எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம் பற்றி, ஐ.நா.சபையில் 158 நாடுகளின் மத்தியில், அண்ணன் பண்ருட்டி எஸ்.ராமச்சந்திரன் அவர்கள் பேசினார்கள். பன்னாட்டுத் தலைவர்கள் வியந்து சபையில் கரகோஷம் எழுப்பிப் பாராட்டினார்கள். அதற்கு முன்பு வரை நாட்டின் பிரதமர்களின் பெயர்களும், வெளியுறவுத்துறை அமைச்சர்களின் பெயர்களும்தான் ஐ.நா. சபை பதிவேட்டில் இடம் பெற்றிருந்தன. சத்துணவுத் திட்டத்தின் மூலமாக, முதன்முதலில் ஒரு மாநில முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்களின் பெயர் ஐ.நா. சபை ஏட்டில் பதிவானது!

1981இல் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் புரட்சித்தலைவர் அவர்கள் உலகமே வியக்கும் அளவிற்கு வெற்றிகரமாக நடத்தினார்கள். அப்போது முச்சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இந்த மதுரையில், உலகத் தமிழர்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவர மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைப்போம் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், புரட்சித்தலைவரின் கனவுத் திட்டமான உலகத் தமிழ்ச் சங்கத்திற்குப் புத்துயிர் கொடுக்கும் விதமாக, ரூ.37.25 கோடி மதிப்பீட்டில் மதுரையில் பெருந்திட்ட வளாகமாக உலகத் தமிழ்ச் சங்கத்தை எழுப்பி வைத்தார்கள் என்பதை, பெருமையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல 1981இல் புரட்சித்தலைவர் அவர்கள் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ ஆணையிட்டு, அது தமிழ்க்கோட்டமாகவும் தமிழர்களின் பண்பாட்டுக் கூடமாகவும் விளங்கிக் கொண்டிருக்கிறது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அகில இந்திய அ.தி.மு.க.வை இந்திய மண்ணில் வேரூன்ற எத்தனை போராட்டங்களையும் தியாகங்களையும் செய்தார்கள் என்பது ஒவ்வொரு கழகத் தொண்டருக்கும் தெரிந்திருக்க வேண்டும். புரட்சித்தலைவருக்குப் பிறகு, கழகத்தை ஒரு தாயைப்போல கட்டிக் காப்பாற்ற, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எத்தனை இன்னல்களையும், அவமானங்களையும் சந்தித்தார் என்பதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனியைக் கன்றிவிடும்படி கல்லால் அடித்தவர்களும், சொல்லால் அடித்தவர்களும் எத்தனை பேர்! அவர்களை எதிர்த்து, கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் புரட்சித்தலைவர் நடத்திய போராட்டங்கள் எத்தனை?

1967இல் புரட்சித்தலைவர் துப்பாக்கியால் சுடப்பட்ட போது, அதை அறிந்து நாடே பதறியது! தாய்க்குலம் அழுது புலம்பியது! இளைஞர் கூட்டம் கொந்தளித்தது! அப்பொழுதும் அவர் விரோதிகள் என்ன சொன்னார்கள் தெரியுமா? "முடிந்தது எம்.ஜி.ஆர். கதை; இனிமேல் அவர் பிழைக்கமாட்டார்!" என்று சிலர் அற்ப மகிழ்ச்சி கொண்டார்கள். எம்.ஜி.ஆரின் தொண்டைக்கருகில் பாய்ந்த குண்டு அகற்றப்பட்டது என்று மறுநாள் வந்த செய்தி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அப்போது அவர் எதிரிகள் என்ன சொன்னார்கள்? "பிழைத்து எழுந்தாலும் அவரால் முன்போலப் பேச முடியாது, பேச முடியாவிட்டால் எப்படி நடிக்க முடியும்?" என்று கூறி, தங்கள் அற்பமான மகிழ்ச்சியைச் சிலர் காட்டிக் கொண்டார்கள். "உயிரற்ற ஒரு துப்பாக்கித் தோட்டாகூட, "ஒரு நல்லவரை நோக்கி நாம் பாய்கிறோமே!" என்று உணர்ந்து தன் வேகத்தைக் கட்டுப்படுத்திப் பக்கவாட்டில் பாய்ந்தது. அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல், அவர் கழுத்திலேயே தங்கியது!" என்று மறைந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு.கா.காளிமுத்து அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசினார்கள். தன்னைக் கொல்ல வந்த தோட்டாவுக்கும் தன் கழுத்தில் இடம் கொடுத்தவர் புரட்சித்தலைவர் அவர்கள்!

1972ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். கட்சியை விட்டுத் தூக்கி எறியப்பட்டார். அவர் செய்த தவறு, கட்சிக் கணக்கைக் கேட்டதுதான். அதனால் கட்சித் தலைமை சீறியது; அவரைக் கட்சியில் இருந்து தற்காலிக நீக்கம் செய்தது; பின்னர் நிரந்தரமாகவே

நீக்கிவிட்டதாகவும் அறிவித்தது! அப்பொழுதும் அவர் எதிரிகள் என்ன சொன்னார்கள்? “இன்றோடு முடிந்தது எம்.ஜி.ஆரின் அரசியல் வாழ்வு” என்று கொக்கரித்தார்கள். கட்சியால் எம்.ஜி.ஆர். வளர்ந்தாரா? எம்.ஜி.ஆரால் கட்சி வளர்ந்ததா? என்று பத்திரிகைகளும் அரசியல் கட்சிகளும் ஆராய்ச்சி நடத்தின. ஆனால், எம்.ஜி.ஆர். நிலை என்ன? எம்.ஜி.ஆர். மீண்டும் இமயம் போல் எழுந்து நின்றார்.

புரட்சிநடிகர் புரட்சித்தலைவராக மாறினார். அண்ணாவின் பெயரால் அரசியல் கட்சியைத் தொடங்கி, ஐந்தே ஆண்டுகளில் கடுமையான அடக்குமுறைகளையும், மீறி, கட்சியை வளர்த்தார். ஆனால், அந்த ஐந்தாண்டுகளுக்குள் அவர் சந்தித்த போராட்டங்கள் எண்ணற்றவை. புரட்சித்தலைவர் தம் சுயவாழ்க்கையில் செய்த தியாகங்கள்தான், அவரை பொதுவாழ்க்கையில் புனிதராக உயர்த்தின. அவருடைய தியாகங்கள் மட்டுமே அவருக்கு இத்தனை பெரிய வளர்ச்சியைத் தந்துவிடவில்லை. அவருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்த குணாதிசயங்களும், வள்ளல் தன்மையும்தான் அவரை மிகச்சிறந்த தலைவராக மக்கள் மனதில் இடம்பெறச் செய்தது!

கடையேழு வள்ளல்கள் அள்ளி அள்ளி கொடுத்தார்கள் என்று நாம் சங்க இலக்கியங்களில் படித்திருக்கிறோம். ஆனால், இந்த நூற்றாண்டில் தம்மிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்கு குறிப்பறிந்து, தம் பையில் கைவிட்டு எண்ணிப்பார்க்காமல் இருப்பதை அப்படியே அள்ளிக் கொடுத்தவர் நமது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். என்பதை, கண்கூடாகப் பார்த்தவர்கள் நம்மிடையே பலர் உண்டு. தமது ராமாவரம் வீட்டிற்கு வந்தவர்களுக்கு எந்தநேரமும் பசியின்றி உணவளிக்க எப்போதும் அடுப்பு எரிந்து கொண்டிருந்ததை நம்மில் பலர் பார்த்திருக்கிறோம். ‘எட்டாவது வள்ளல் நமது புரட்சித்தலைவர்’ என்றால் அது மிகையில்லை. மழையைக் காட்டிலும் சிறந்த கொடையில்லை என்பார்கள். அந்த மழையைக் காட்டிலும் டாக்டர் எம்.ஜி.ஆர் சிறந்த வள்ளலாகத் திகழ்ந்தார்.

புரட்சித்தலைவர் தமது உழைப்பால் வந்த வருவாயைக் கொண்டு, அடையாறு பகுதியில், தனது தாயின் பெயரால் ‘சத்யா ஸ்டுடியோ’வை உருவாக்கினார். ஆனால், அந்த ‘ஸ்டுடியோ’வின் முதலாளிகள் யார் தெரியுமா? அவரிடம் பணியாற்றிய தொழிலாளர் தோழர்கள்தான்!

ரஷ்ய நாட்டில் ஆகட்டும், அல்லது கம்யூனிசம் பரவிய பிற நாடுகளில் ஆகட்டும், தனி மனிதன் உழைப்பால், தான் ஈட்டிய பொருளால் உருவான ஒரு நிறுவனத்தை – அதுவும் அப்போதே பல இலட்சங்கள், இப்போது பல கோடிகள் பெறுமானமுள்ள ஒரு பெரிய நிறுவனத்தை– தொழிலாளர்களுக்குச் சமபங்காக உரிமை எழுதி வைத்த ஒரு சமதர்மவாதியை, உண்மைப் பொதுவுடைமைவாதியை, உலகத் தலைவர்களிலே யாரையாவது, ஒருவரைக் காட்ட முடியுமா? காட்ட முடியும் என்றால் அவர் எம்.ஜி.ஆர். ஒருவர்தான் என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாக நான் கூறுவேன்.

“வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார் ?” என்ற கேள்வியை மக்கள் முன் எழுப்பினால், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.... என்றுதான் பதில் வரும், என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறினார்கள்.

கழகத்தை உருவாக்கிய புரட்சித்தலைவருக்கும் அவருக்குப்பின் கழகத்தை கட்டிக் காப்பாற்றிய புரட்சித்தலைவிக்கும் இருந்த புகழ் இன்னும் பல நூற்றாண்டுகள் அகில இந்திய அண்ணா தி.மு.க.வை தமிழ் மண்ணிலே நிலை நிறுத்தும். எனவே, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் உழைத்து உருவாக்கி வளர்த்த கழகத்தைக் காப்பாற்ற ஒவ்வொரு கழக தொண்டனுக்கும் கடமை உண்டு.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் தமிழ்ச் சமூகத்திற்கு என்னவெல்லாம் தொண்டு ஆற்றியிருப்பாரோ, அவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்காகத்தான் இந்த மாபெரும் இயக்கத்தை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தம்முடைய கரங்களில் விட்டுச் சென்றதாக மாண்புமிகு அம்மா அவர்கள் 2011இல் கழகத் தொண்டர்களுக்கு எழுதிய மடலில் உருக்கமாக எழுதியிருந்தார்கள். அதனால்தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வெல்வதற்கு இன்னொரு இயக்கம் இம்மண்ணில் இல்லை என்னும் அரசியல் பொற்காலத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள். ‘நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்’. ‘இப்படை தோற்கின் எப்படை வெல்லும் ?’ என்னும் புரட்சித் தலைவரின் வைர வரிகளை இன்னும் பட்டைத் தீட்டி ‘எப்படை வரினும் இப்படையே வெல்லும்’ என்னும் கம்பீர நிலைக்கு கழகத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மக்கள் உங்களிடம் வருவதற்குப் பதிலாக நீங்கள் சேவகனைப் போல மக்களிடம் செல்ல வேண்டும். பேரறிஞர் அண்ணாவின் பேச்சு! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் வசீகரம்! மாண்புமிகு அம்மாவின் உழைப்பு! இவைதான் கழகக் கொடியின் மூன்று வண்ணங்களாக நமக்குத் தெரிய வேண்டும். புரட்சித்தலைவர் அவர்களும், புரட்சித்தலைவி அவர்களும் சொன்ன அறிவுரைகளை எல்லாம் மந்திரங்களாக மனத்திலே இருத்தி, ஒற்றுமையாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து சகிப்புத்தன்மையோடு கழகத்தில் பணியாற்ற, இந்த இனிய நேரத்திலே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். இன்றிலிருந்து பேச்சைக் குறைத்துக் கொண்டு செயலில் இறங்குங்கள்.

இதைக் கூறுகிற போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. அக்பர், ஒரு நாள் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்த அரசவையில், ஒரு கேள்வியைக் கேட்டார். ‘அமைச்சரே, உலகத்திலேயே எல்லோராலும் வெறுக்கத்தக்க கெட்ட பொருள் எது?’ அதற்கு அமைச்சர் பீர்பால், ‘அரசே! உலகத்திலேயே மிகவும் கெட்ட பொருள் நமது நாக்குதான்’ என்றார். நாக்கா.. எப்படி ?’என்று ஆச்சரியத்தோடு கேட்டார் அரசர். அதற்கு பீர்பால், ‘அரசே! இந்த நாக்குதானே, இல்லாததையும் பொல்லாததையும் பேசி

மற்றவர்களை குறை கூறிக் கொண்டிருக்கிறது. வீண்வம்பு பேசுகிறது; வீண் சண்டை இழுக்கிறது!' என்றார். அக்பர் உட்பட அவையில் கூடியிருந்த அனைவருமே சரியான விடை என்று பாராட்டினார்கள். அடுத்த நாள் சபை கூடியது.

மன்னர் அக்பர் அன்றைக்கும் ஒரு கேள்வியைக் கேட்டார்: 'அமைச்சரே! உலகத்திலேயே மிகவும் நல்ல பொருள் எது?. 'அரசே! உலகத்திலேயே மிகவும் நல்ல பொருள் நாக்கு!' என்றார் பீர்பால். அக்பர் உட்பட அவையோர் அனைவரும் வியந்து போனார்கள். அக்பர், ஆச்சரியத்தோடு கேட்டார்: 'அமைச்சர் பீர்பால் அவர்களே, நேற்று உலகத்திலேயே கெட்ட பொருள் நாக்கு என்றீர்கள். அதற்கு நல்ல விளக்கமும் தந்தீர்கள்! இன்று அதே நாக்கே, உலகத்திலேயே நல்ல பொருள் என்கிறீர்கள். அது எப்படி?' என்று கேட்டார். அதற்கு பீர்பால், 'அரசே! தீயவைகளைப் பேசும் அதே நாக்கு நல்லவற்றைப் பேசினால், எல்லோரும் இந்த நாக்கைப் புகழ்ந்து பாராட்டத்தானே செய்வோம். கோபம், சண்டை போன்ற தீயவற்றைப் பேசாமல், அன்போடு பேசினால், பாசத்தோடு பேசினால், நேசத்தோடு பேசினால், அப்படிப் பேசும் நாக்கை உலகத்திலேயே சிறந்த பொருள் என்று சொல்லாமல், வேறென்னவென்று சொல்வது?' என்று நாக்கை புகழ்ந்து பேசினார்.

உண்மைதானே! ஒரு நாக்கை வைத்து, நல்லது பேசுவதும், கெட்டது பேசுவதும், நம் கையில்தான் இருக்கிறது. எனவே, நம் நாக்கை என்றும் பேணிக்காத்து, நல்லவைகளையே பேசப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆயிரத்தில் ஒருவனாக, மன்னாதி மன்னனாக, தனிப்பிறவியாக, நினைத்ததை முடிப்பவனாக, மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனாக, மதுரை வீரனாக, எல்லாரும் விரும்பும் ஆசைமுகமாக, அன்னமிட்டகையாக, தர்மம் தலைகாத்து, நீதிக்குத் தலைவணங்கி, நம் நாட்டுக்காக, உரிமைக் குரல் எழுப்பி ஊருக்கு உழைப்பவனாக வாழ்வதே என் கடமை என்றும், நாம் எல்லோரும் ஒருதாய் மக்கள் என்றும், நாளை நமதே என்றும் சங்கென முழக்கமிட்ட கழகத்தின் கலங்கரை விளக்கம், ஆனந்த ஜோதி, கழகத் தொண்டர்களின் குடியிருந்த கோயில், புதிய பூமியை மலரச் செய்த அறிஞர் அண்ணாவின் இதயக்கனி, மக்களின் இதய வீணை! நேற்று இன்று நாளை என முக்காலமும் மக்கள் மனதில் வாழும் தலைவன், எங்கள் வீட்டுப் பிள்ளை, எங்கள் தங்கம்! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தாயைக் காத்த தனயனாக விளங்கி, தாய்சொல்லைத் தட்டாதே என்றும், சிரித்து வாழ வேண்டும் என்றும், திருடாதே என்றும், நீதிக்கு பின் பாசம் என்றும் அறிவுரை கூறிய குடும்பத்தலைவன்! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்ட பரிசு தான் சக்கரவர்த்தி திருமகள், கலையரசி, மகாதேவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

இன்று, மாண்புமிகு அம்மா அவர்கள் நமக்கெல்லாம் தெய்வத்தாயாக இருந்து நம்மை வழிநடத்தி வருகிறார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழும், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழும் பல்லாண்டு வாழ்க என இந்த நல்ல நேரத்தில் வாழ்த்துகிறேன்!

“திட்டங்களுக்காக மக்கள் அல்ல! மக்களுக்காகத்தான் திட்டங்கள்” என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறுவார்கள். திட்டங்கள் என்பன, மக்களிடம் ஒரு மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் உருவாக்க வேண்டும்! அப்படிப்பட்ட திட்டங்களைத்தான், புரட்சித்தலைவர் அவர்களும், புரட்சித்தலைவி அவர்களும் தீட்டினார்கள். இந்த இனிய விழாவில், மதுரை மாவட்டத்தின் பொதுப்பணித் துறையின் சார்பில், மதுரை இராஜாஜி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள ரூ.40 கோடி மதிப்பீட்டிலான கட்டடங்கள் உள்ளிட்ட ரூ.51 கோடியே 14 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களையும், மதுரை மாநகராட்சி சார்பில் ரூ.2.94 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களையும் தொடங்கி வைத்ததோடு, ரூ.2.77 கோடிக்கான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதும், இந்துசமய அறநிலையத் துறை சார்பில் ரூ.1.93 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களையும், ஆவின் மற்றும் வேளாண்மைத்துறை சார்பில் ரூ.1 கோடியே 52 இலட்சத்து 92 ஆயிரம் மதிப்பீட்டிலான திட்டங்களையும் என ஆக மொத்தம், ரூ.60 கோடியே 34 இலட்சத்து 97 ஆயிரம் மதிப்பீட்டிலான திட்டங்களைத் தொடங்கி வைத்ததும், அடிக்கல் நாட்டியதும் என்னைப் பெருமிதம் கொள்ளச்செய்கின்றன!

இந்தப் பிரமாண்ட விழாவை வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருக்கிற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!

இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி! நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 30.06.2017 அன்று ‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு தொடக்க விழாவில் அறிவித்த சிறப்புத் திட்டம்

- மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மதுரை மாநகராட்சியின் எதிர்கால குடிநீர்த் தேவையினைக் கருத்தில் கொண்டு, இன்னும் 60 ஆண்டுகளுக்கு மதுரை மாநகரில் குடிநீர் தட்டுப்பாடே நிலவக் கூடாது என்று தொலைநோக்குத் திட்டத்தோடு, அம்மா அவர்கள் விரும்பியபடி, மாண்புமிகு புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் மிகவும் நேசித்த **மதுரை மாநகருக்கென சிறப்பு தனி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்** என்பதை ‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

  இந்தத் திட்டம் சுமார் 156 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள முல்லை பெரியார் அணை ‘லோயர் கேம்ப்’ பகுதியிலிருந்து, பெரிய ராட்சதக் குழாய்கள் மூலம் சுமார் 17 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் என்பதை, இத்தருணத்தில் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

அறிவிப்புகள்

- உலகப்புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் எழுந்தருளி இருக்கும் இம் மதுரை மண் – மல்லிகைக்கும் பெயர் பெற்றது – வீரத்திற்கும், விவேகத்திற்கும் மற்றும் விசுவாசத்திற்கும் பெயர் பெற்றது என்றால் அது மிகையன்று!

- கழகம் ஆரம்பித்த நாள் முதல், இன்றுவரை, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி அம்மா மற்றும் அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசிற்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, விசுவாசமாக இருக்கும் மக்கள் மதுரை மாவட்ட மக்கள் என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

- மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு நூற்றாண்டு விழா நாயகர், மக்கள் தலைவர், முன்னாள் முதலமைச்சர், ‘பாரத ரத்னா’ டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களது பெயரைச் சூட்ட வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்களும், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.உதயகுமார் அவர்களும், மதுரை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் விடுத்த கோரிக்கையினை அம்மாவின் அரசு உடனடியாக ஏற்று,

- புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் – மக்கள் தலைவராக – தமிழ்நாடு முதலமைச்சராக– 40 வருடங்களுக்கு முன் அதாவது – 30.06.1977இல் பதவியேற்ற இதே நன்னாளில், **மதுரை, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்குப் “புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம்” என்று பெயர் சூட்டப்படுகிறது என்பதை இம்மேடையில் மகிழ்ச்சியுடன் அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்**!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
30.06.2017 அன்று மதுரையில் நடைபெற்ற
‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். *நூற்றாண்டு*
தொடக்க விழாவில் ஆற்றிய உரை.

தொழில் நகரம் திருப்பூரில்
தொழிலாளர் இதய தெய்வம்
எம்.ஜி.ஆர். நூற்றாண்டுத் தொடக்க விழா!

அத்திக்கடவு-அவினாசி திட்டத்திற்கு ரூ.1,516 கோடி ஒதுக்கீடு!

திரைப்படவுலகில் அழியாப் புகழ்பெற்ற, பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதயங்களில் குடியிருக்கும் தெய்வம், 'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவிற்குத் தலைமை ஏற்று தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே! மக்களவை துணைத்தலைவர் டாக்டர் மு.தம்பிதுரை அவர்களே! முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சரும் இம்மண்ணின் மைந்தருமான திரு. உடுமலை K.ராதாகிருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே! மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே! மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே! மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே! மாண்புமிகு நிதியமைச்சர் அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்களே! மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்

டாக்டர் வி.சரோஜா அவர்களே! மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே! மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர்.காமராஜ் அவர்களே! மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே! மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு.எஸ் இராஜேந்திரன் அவர்களே! மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே! மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே! மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. கே.சி.வீரமணி அவர்களே! மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே! மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா.பெஞ்சமின் அவர்களே! மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. எம்.மணிகண்டன் அவர்களே! மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ்.ராமச்சந்திரன் அவர்களே! மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ்.வளர்மதி அவர்களே! மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே. வைரமுத்து அவர்களே! வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர் அவர்களே! நன்றியுரை ஆற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ்.பழனிசாமி, அவர்களே! முன்னாள் அமைச்சர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்களே, வாழ்த்துரை வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகத் தொண்டர்களே! அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவமணிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடிகாத்த குமரன் அவதரித்த வரலாற்று சிறப்புமிக்க இந்தத் திருப்பூர் மண்ணில் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சிறப்பிக்க நடைபெறும் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால் எனக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதிறேன்.

உழைப்பதற்கு அஞ்சாதவர்கள் திருப்பூர் மக்கள். திருப்பூர் குட்டி ஜப்பான் என்றழைக்கப்படுகிறது. “வேலை காலியில்லை” என்ற அட்டை, இந்தியாவில் உள்ள அனைத்து நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளிலும் தொங்கும். ஆனால், நமது திருப்பூரில் “வேலைக்கு ஆட்கள் தேவை” என்னும் வாசகம் பொறிக்கப்பட்ட விளம்பர அட்டை இருக்கும். இவ்வாறு, உழைப்பவர்கள் திருப்பூர் வந்தால் கண்டிப்பாக அவர்களுக்கு வேலை உறுதி.

திருப்பூருக்குப் பல்வேறு சிறப்புகள் இருக்கின்றன. திருப்பூரில் தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் அதிகமாக உள்ளன. குறிப்பாக, திருப்பூரில் பின்னலாடைத் தொழில் அதிகமாக நடந்து வருகிறது. அதனால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சாயப்பட்டறை கழிவுநீர் வெளியேற்றத்தில், ‘பூஜ்ய’ நிலையைக் கொண்டு வரும் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திப் பல ஆண்டுகளாக நிலவி வந்த, பின்னலாடைத் தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினைக்குத் தீர்வு கண்டார்கள். அதன் மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் மதிநுட்பத்தால், திருப்பூர் ஜவுளித் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் புதிய வாழ்க்கை கிடைத்தது என்பதை நீங்கள் யாரும் மறக்க முடியாது.அதேபோல, ஒரு பகுதியில் தொழில்கள் சிறப்பாக நடைபெறுகிறது என்றால் அங்கு சாலைப் போக்குவரத்து மிகமிக அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அம்மா அவர்கள், திருப்பூர் நகரில் போக்குவரத்து நெரிசலை குறைத்திடும் பொருட்டுப் பேருந்து நிலையம் அருகில் அவிநாசி–திருப்பூர்–பல்லடம்–பொள்ளாச்சி–கொச்சி (வழி) மீன்கரைச் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கான ஆணையைப் பிறப்பித்தார்கள். 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் இந்தப் பணிகள் இந்த வருட இறுதிக்குள் நிறைவடையும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திருப்பூர் மீது வைத்திருந்த ஈடுபாட்டையும் அக்கறையையும் போலவே, அம்மா வழியில் நடக்கும் இந்த அரசும் திருப்பூரில் அதிகக் கவனம் செலுத்தி, 16.02.2017 முதல் இன்றுவரை பல்வேறு நலத்திட்டப்பணிகளைச் செவ்வனே செய்து வருகிறது. அனைத்துத் திட்டங்களையும் இங்கே பட்டியலிட நேரமில்லை என்றாலும், குறிப்பாக ஒரு சில திட்டங்களை மட்டும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

குறு, சிறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் 145 கோடியே 57 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு, 27 ஆயிரத்து 205 பயனாளிகள் பயன்பெற்றனர். அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை விலையில்லா மின்சாரம் வழங்கப்பட்டு, 6 இலட்சத்து 41 ஆயிரத்து 119 குடும்பத்தினர் பயன்பெற்றனர். பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு, 20 கோடியே 29 இலட்சத்து 42 ஆயிரத்து 740 ரூபாய் மதிப்பீட்டில், 14 ஆயிரத்து 322 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 134 பள்ளிகளில், ஆய்வக உதவியாளர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஏழை, எளியோர் வயிறார

உண்ண 16 அம்மா உணவகங்கள் தொடங்கப்பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ரூ.9 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்கு, சூரிய மின் சக்தியுடன் கூடிய 519 பசுமை வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது. மகசூல் பாதித்த 78 ஆயிரத்து 215 விவசாயிகளுக்கு 81 கோடியே 87 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வருகிற ஆண்டுகளிலும் திருப்பூருக்குப் பல திட்டங்களை இந்த அரசு வழங்க இருக்கிறது. காரணம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் உழைக்கும் வர்க்கத்தின் மீது அதிக பாசம் கொண்டவர்கள்.

"ஓடி ஓடி உழைக்கணும்
ஊருக்கெல்லாம் கொடுக்கணும்"

என்றபுரட்சித்தலைவரின்பாடல்வரிகளுக்குஏற்றவாறுஉழைப்பாளர்கள்வாயிலாக இந்த நாட்டுக்குக் கிடைக்கும் வருவாயின் மூலம்தான் நாட்டின் மற்ற மக்களுக்கு வேண்டியனவற்றைச் செய்ய முடிகிறது. உழைக்கும் தொழிலாளர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருப்பார்கள். தொழிலாளர்கள் நெஞ்சங்களில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தத்துவப் பாடல்கள்தான் ஒலித்துக் கொண்டிருக்கும். அவர்களுடைய உதடுகள் எல்லாம் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருக்கும் என்பதை நாம் இப்போதும் காணலாம்.

திரைப்படங்களில் புரட்சித்தலைவர் அவர்கள் பெரும்பாலும் "கூலித்தொழிலாளி" கதாபாத்திரங்களில் நடித்து வந்தார். "கூண்டுக் கிளி"யில் ஆலைத் தொழிலாளியாகவும், "திருடாதே" படத்தில் ரோடு போடும் கூலித் தொழிலாளியாகவும், "தொழிலாளி"யில் மூட்டை வண்டி இழுப்பவராகவும், "ஆயிரத்தில் ஒருவன்" படத்தில் விறகு வெட்டியாகவும், "படகோட்டி" மற்றும் "மீனவ நண்பன்" படத்தில் மீனவராகவும், "தனிப்பிறவி"யில் இரும்புப் பட்டறைத் தொழிலாளியாகவும், "தாய்க்குத் தலைமகன்" படத்தில் மோட்டார் வாகனங்களின் மெக்கானிக்காகவும் "பெற்றால்தான் பிள்ளையா" படத்தில் தூர்வாரும் தொழிலாளியாகவும், "காவல்காரன்" படத்தில் கார் ஓட்டுநராகவும், "ஒளி விளக்கு" படத்தில் கல் உடைக்கும் தொழிலாளியாகவும், "மாட்டுக்கார வேலன்" படத்தில் மாடுகள் மேய்ப்பவராகவும், "என் அண்ணன்" படத்தில் குதிரை வண்டி ஓட்டுபவராகவும், "எங்கள் தங்கம்" படத்தில் லாரி ஓட்டுநராகவும், "குமரிக்கோட்டம்" படத்தில் பத்திரிகை விற்பனை செய்பவராகவும், வீட்டு வேலைக்காரனாகவும், தோட்டக்காரனாகவும், செருப்பு பாலிஷ் செய்பவராகவும், "ரிக்ஷாக்காரன்" படத்தில் ரிக்ஷா ஓட்டுபவராகவும், "நல்ல நேரம்" படத்தில் யானைப் பாகனாகவும், "இதய வீணை"யில் சுற்றுலா வழிகாட்டியாகவும், கல்லூரிப் பேருந்து ஓட்டுநராகவும், "நேற்று இன்று நாளை" படத்தில் துப்புரவுத் தொழிலாளியாகவும், "நினைத்ததை முடிப்பவன்" படத்தில் பேண்டு வாத்தியக்காரராகவும், "நீதிக்குத் தலைவணங்கு" படத்தில் சமையல்காரராகவும் நடித்து அனைத்துத் தொழிலாளர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றார்.

இன்றைய நவீன காலத்திலும் கூட, தொழில்நுட்பங்கள் பெருகிவிட்ட நிலையிலும், பட்டதாரி இளைஞர்கள்கூட எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல்களை விருப்பத்துடன் கேட்டுப் புத்துணர்வு பெற்று வருவதை நாம் இன்றைக்கும் கண்கூடாகப் பார்க்கிறோம். அதனால்தான் புரட்சித்தலைவர் அவர்கள் மறைந்து 30 வருடங்களுக்குப் பிறகும் கூட, அவர்களுடைய படங்கள் புதுப்பிக்கப்பட்டு அவை இன்றைய சிறந்த படங்களுக்கு நிகராக வசூலில் சாதனை படைத்து வருகின்றன. இது, வேறு எந்த நடிகருக்கும் கிடைக்காத சிறப்பு என்று கூறலாம்! உலகிலேயே, மக்கள் நலனுக்காகத் திரை ஊடகத்தைப் பயன்படுத்திய முதல் நடிகர் புரட்சித்தலைவர் அவர்கள்தான். தமிழ் மண்ணில் கடைசி மனிதன் உள்ளவரை, திரைப்படங்கள் போன்ற ஊடகங்கள் இருக்கும் வரை, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரும் புகழும் நிலைத்து நிற்கும்!

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இத்தனைப் புகழுக்கும் காரணம் அவர் திரையில் நடித்ததைப் போலவே, தன் சொந்த வாழ்க்கையையும் அமைத்துக் கொண்டதுதான். பண்பின் புத்தகம், மனிதாபிமானத்தின் மகுடம், அன்பின் களஞ்சியம், அமைதியின் பிறப்பிடம், கொள்கையின் கூடாரம், கொடையின் இலக்கணம், பாசத்தின் பாசறை போன்ற பன்முக ஆற்றல் கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் உலகின் இன்னொரு அதிசயம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு தனி மனிதர் அல்ல, கோடானு கோடி உள்ளங்களின் கூட்டமைப்பு! அவர் சிரித்த போது கோடானு கோடி உள்ளங்களும் சிரித்தன. அவருடைய விரல் அசைவுக்குத் தமிழ்நாடே கட்டுப்பட்டது. மக்கள் நல்வாழ்வில் உண்மையான அக்கறை கொண்டு, விழி அசைவில் துன்பம் தீர்த்த நமது ஏழைப் பங்காளன் எம்.ஜி.ஆர். அவர்கள். மக்கள் திலகம் மீது

மக்கள் எத்தனை பாசம் வைத்திருந்தார்கள் என்பதற்கு ஓர் உதாரணத்தை இங்கே கூறலாம். மக்கள் திலகம் அவர்கள் சுடப்பட்டதில் தொண்டையில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு அவரால் முன்பு போல பேச முடியவில்லை. ஒரு நடிகனுக்கு அப்போதைய காலகட்டத்தில் குரல் வளமே முக்கியமான ஒன்றாக இருந்தது. ஆனால், நமது புரட்சித்தலைவர் அவர்களுக்கு குரலில் ஏற்பட்ட குறையை மக்கள் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள்! முன்பை விட அமோக வரவேற்பைத் தந்தார்கள். இது வேறு எந்தக் கலைஞனுக்கும் சாத்தியமில்லாத ஒன்று!

மக்கள் திலகம் திரைவாழ்க்கையில் எப்படி புகழின் உச்சத்தைத் தொட்டாரோ, அதைப்போல அரசியலிலும் சாதனை உச்சத்தைத் தொட்டார். அறிஞர் அண்ணாவால் ஈர்க்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தில் மக்கள் திலகம் சேர்ந்தார். பின்னர் அறிஞர் அண்ணாவின் ‘இதயக்கனி’யாகவும் மாறினார். அண்ணாவிற்குப் பிறகு கட்சியும் ஆட்சியும் கைமாறியது. அப்போதைய ஆட்சித் தலைமையிடம் கணக்குக் கேட்டதற்காக கட்சியில் இருந்து நீக்கப்பட்ட நமது பொன்மனச் செம்மல் அவர்களை, அழைக்காமலேயே சூழ்ந்த மக்கள்; திரண்டு நின்று, அன்பைச் சொரிந்து, ஆதரவு முழக்கம் எழுப்பினர். அந்த மக்கள் கடலைப் பார்த்து உள்ளுக்குள்அவர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். புரட்சிநடிகர், புரட்சித்தலைவராக அவதாரம் எடுத்தார். அண்ணாவின் பெயரால் ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கி, ஐந்தே ஆண்டுகளில் கடுமையான அடக்கு முறைகளையும் மீறி, கட்சியை வளர்த்தார். 1977இல் தமிழகத்தின் ஆட்சியிலும் அமர்ந்தார். 1977லிருந்து 1987 வரை தமிழகத்தை ஆண்டபோது உலகமே பாராட்டும் வகையில், தொலைநோக்குப் பார்வையுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க பல திட்டங்களைக் கொண்டு வந்தார். ஏழைகளுக்குப் பயனளிக்கும் திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானித்துவிட்டால், அதில் எத்தனை தடைகள் வந்தாலும், நிருவாக சிக்கல்கள் இருந்தாலும், பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், அதையெல்லாம் தகர்த்து எறிந்துவிட்டு அந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதில் மக்கள் திலகத்திற்கு நிகர் மக்கள் திலகம்தான்!

அதற்கு ஒரு நிகழ்வை இங்கே உதாரணமாகக் கூறலாம். 1980இல் மக்கள் திலகம் இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆனார். சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினார். “பல கோடி ரூபாய் செலவாகும்; அந்த அளவுக்கு அரசிடம் பணம் இல்லை” என்று அதிகாரிகள் கூறினர். “பணம் இல்லையா? மனம் இல்லையா? பொருளாதாரம் பற்றி எனக்குத் தெரியாது. ஏழ்மையைப் பற்றித் தெரியும். பசியின் கொடுமையை நான் அறிவேன். இந்த திட்டத்திற்கு எவ்வளவு செலவானாலும் நிதி திரட்டித் தருவேன்” என்று உறுதியோடு கூறினார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவர் சொன்னதைப் போலவே பலவழிகளிலும் நிதி திரட்டி சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்தினார். எம்.ஜி.ஆரின் திட்டங்களில் மகத்தான திட்டம் சத்துணவுத் திட்டமாகும். மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்ற திட்டமாக இன்றைக்கும் திகழ்கிறது.

பள்ளிக் குழந்தைகளின் பசியைப் போக்க புரட்சித்தலைவர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தச் சத்துணவுத் திட்டம்தான், பிற்காலத்தில் – மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழைகளின் உழைப்பாளர் பெருமக்களின் பசியைப் போக்க மிகக்குறைந்த விலையில் 'அம்மா உணவகம்' கொண்டுவரக் காரணமாக இருந்திருக்குமோ என நான் நினைக்கின்றேன். மக்களிடையே சத்துணவுத் திட்டத்திற்கு எத்தனை வரவேற்பு இருந்ததோ, அதே அளவிற்கு 'அம்மா உணவகம்' திட்டம் பெருத்த ஆதரவையும் வரவேற்பையும் பெற்றது என்பதை இந்த உலகமே அறியும். அம்மா உணவகத்தை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு, பிற மாநிலங்களும் இது போன்றதொரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை, இந்த நேரத்திலே நான் பெருமையோடு கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏழைகளுக்கு உணவளிக்கும் அன்னபூரணித்தாய் என்று அம்மா அவர்களை மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள். டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடுக்கடுக்கான திட்டங்களைக் கொண்டு வருவதற்கு அவர் வாழ்க்கையின் தொடக்கத்தில் பட்ட கஷ்டங்களும் போராட்டங்களும்தான் காரணமாக இருந்தன. தான்பட்ட கஷ்டங்களை தன் மக்கள் படக்கூடாது என்கிற எண்ணத்தில்தான் அவர் பல திட்டங்களைத் தீட்டினார். அவருடைய திட்டங்கள் அனைத்தும் ஏழைகளை, தொழிலாளர்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்டவை. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு பிறகு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அதனைச் சிறப்பாக மக்கள் மத்தியில் கொண்டு சென்ற ஒரு சில திட்டங்களை இங்கே குறிப்பிடலாம்.

விதவை, ஆதரவற்ற பெண்களுக்குத் திருமண உதவி, தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், மகளிருக்குச் சேவை நிலையங்கள், பணிபுரியும் பெண்களுக்குத் தங்கும் விடுதிகள், தாய் சேய் நல இல்லங்கள், ஜீலையில்லா வேட்டி சேலை திட்டம், குடிசைக்கு விலையில்லா மின்விளக்கு திட்டம் – போன்ற பல நலத்திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் இத்தனை திட்டங்களை கொண்டு வருவதற்கும் அதனை அடித்தட்டு மக்கள் வரை பயனடையச் செய்வதற்கும் பெரிய பாலமாக இருந்தவர்கள் தொண்டர்கள்தான். காரணம் தொண்டர்களைத் தன் கட்டுப்பாட்டில் பிள்ளைகளைப் போல வைத்து வளர்த்தவர்கள் புரட்சித்தலைவரும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும். ஆட்சியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உயிரென போற்றப்பட்டன. தலைமை சொல்வதையே தாரக மந்திரமாக ஏற்றுக்கொண்டு இராணுவ வீரர்களைப் போல் தொண்டர்கள் செயல்பட்டார்கள். இன்றைக்கும் அ.தி.மு.க. ஒரு இரும்புக் கோட்டையாக இருக்கிறது என்றால் அதன் அசைக்க முடியாத எஃகு சுவர்களாக இருப்பவர்கள் தொண்டர்கள்தான் என்பதை மறுக்க முடியாது.

தலைமைக்குக் கட்டுப்படும் விஷயத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முன் உதாரணமாகத் திகழ்ந்திருக்கிறார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கட்டளைக்குக் கழகத்தொண்டர்கள் கட்டுப்பட்டு நடந்தார்கள். ஒரு தொண்டர் எப்படி

நடக்க வேண்டும் என்பதற்கும், ஒரு தலைமை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் இலக்கணம் வகுத்தவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் ஆவார்கள். கழகத் தொண்டர்கள் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரைப் போல, புரட்சித்தலைவி அம்மா அவர்களைப்போல தலைமைக்கு கட்டுப்பட்டு நடந்தால் உங்களைத் தேடி பதவிகள் வரும். பல்வேறு தலைமைப் பொறுப்புகளை ஏற்கக்கூடிய காலம் கனிந்து வரும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைமைக்குக் கட்டுப்படும் அறிவுரையை உங்களிடம் கூறுகிறபோது ஒரு கதை என் நினைவுக்கு வருகிறது. ஒரு கோயில் கோபுரத்தில் பல புறாக்கள் குடியிருந்து வந்தன. அந்தப் புறாக்களுக்கெல்லாம் ஒரு தலைமைப் புறா இருந்தது. அந்தத் தலைமைப் புறா மற்ற புறாக்களுக்கெல்லாம் எந்தவிதத் துன்பமும் நேராமல் பாதுகாத்து வந்தது. ஒரு நாள் காலை, வழக்கமாக எல்லா புறாக்களும் இரை தேடிக் கொண்டிருந்தன. அப்போது தலைமைப் புறாவைக் காணவில்லை. மற்ற புறாக்களெல்லாம் தலைமைப் புறாவைக் காணாது மன வேதனையுடன் பல இடங்களிலும் தேடி அலைந்தன. ஆனால் அன்று பகல் முழுவதும் தலைமைப் புறா இருக்குமிடம் தெரியாமல் மாலையில் மற்ற புறாக்கள் அனைத்தும் தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தன. அந்த நேரம் தலைமைப் புறாவும் தன்னுடைய இருப்பிடத்திற்கு வந்துவிட்டது. மற்ற புறாக்களெல்லாம் ஆச்சரியத்துடன் தலைமைப் புறாவைப் பார்த்து காணாமல் போன விசயத்தைப் பற்றிக் கேட்டன. அதற்குத் தலைமைப் புறா “நேற்று நான் கோயில் வளாகத்தில் இரைதேடிக் கொண்டிருந்தபோது கோயில் அதிகாரிகள் சிலர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். இந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெறப் போகிறதாம். அதனால் கோபுரத்திற்கு வர்ணம் அடிக்கப் போவதாகவும் அதற்கு முன்பு கோபுரத்தைச் சுத்தம் செய்யவேண்டும் என்றும் பேசிக் கொண்டார்கள். எனவே அவர்கள் நாளையே வேலையை ஆரம்பிக்கலாம். அவர்களால் நமக்குத் துன்பம் நேரிடலாம். எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அடுத்து நாம் தங்கப் போகும் இடத்தைத் தேர்வு செய்வதற்காக அவசரமாக சென்றுவிட்டேன். பக்கத்தில் உள்ள காட்டில் உள்ள ஒரு பெரிய ஆலமரத்தைத் தேர்வு செய்திருக்கிறேன். அது நமக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கும். நாளை காலையில் நாம் அங்கு குடிபெயர்ந்து விடலாம்” என்று தலைமைப் புறா கூறியது. தலைமையுடைய தன்னலமில்லாத செயலை நினைத்து மற்ற புறாக்கள் பாராட்டின. மறுநாள் காலை புறாக்கள் அனைத்தும் காட்டில் உள்ள ஆலமரத்திற்குக் குடிபெயர்ந்தன. அப்போது தலைமைப் புறா அனைத்துப் புறாக்களையும் அழைத்து “நீங்கள் அனைவரும் இதுவரை கோபுரத்தில் தங்கியே வாழ்க்கையை ஓட்டியிருக்கிறீர்கள். தனியாகக் கூடு கட்டி வாழ்ந்ததில்லை. ஆனால் இப்போது கூடுகட்டித்தான் வாழ வேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம்.

நாம் அனைவரும் தனித்தனியாக கூடுகட்டி பிரிந்து வாழ்ந்தால் காட்டில் உள்ள மிருகங்களாலும், பெரிய பறவைகளாலும் நமக்கு துன்பம் நேரிடலாம். ஆகவே அனைவரும் ஒன்றிணைந்து ஒரே கூடாகக் கட்டி அதில் சேர்ந்து வாழலாம்'' என்று

யோசனை கூறியது. தலைமை யோசனையை ஏற்றுக் கொண்டு புறாக்கள் ஒரே நாளில் கூட்டைக் கட்டி முடித்துவிட்டன. அனைத்துப் புறாக்களும் ஒரே கூட்டில் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கின. அந்த மகிழ்ச்சிக்கு திருஷ்டி வைப்பது போல் மறுநாளே ஒரு சம்பவம் நடந்தேறியது. அன்று காலை அனைத்துப் புறாக்களும் இரை தேட புறப்படுவதற்கு முன்பு தலைமைப் புறா கூட்டுக்கு வெளியில் வந்து வெளியில் ஏதாவது ஆபத்து இருக்கிறதா? என்று சுற்றுமுற்றும் பார்த்தது. ஆலமரத்தின் அருகிலேயே புறாக்கூட்டை உற்று பார்த்தபடி ஒரு பெரிய கழுகு உட்கார்ந்திருந்தது. சுதாரித்துக் கொண்ட தலைமைப் புறா வேகமாக திரும்பவும் கூட்டுக்குச் சென்று மற்ற புறாக்களிடம் "நம்மை பிடித்துத் தின்பதற்காக வெளியில் ஒரு கழுகு காத்துக் கொண்டிருக்கிறது. யாரும் என் கட்டளையில்லாமல் வெளியில் வந்து விட வேண்டாம். நான் எப்படியாவது அந்த கழுகைச் சமாளிக்கிறேன்'' என்று கூறியபடியே தலைமைப் புறா, கழுகு இருக்கும் இடம் நோக்கி வந்தது; கழுகின் காதில் விழும்படி ''நல்ல வேளை பழம் நழுவி பாலில் விழுந்துவிட்டது. எனக்கு வேலை மிகவும் எளிதாகிவிட்டது'' என்றது. ''என்ன வேலை எளிதாகிவிட்டது? புலம்பிக் கொண்டே வருகிறாய்?" என்று கழுகு கேட்டது. அதற்கு தலைமைப் புறா ''ஒன்றும் இல்லை கழுகாரே! வழக்கமாக இந்த வருஷமும் மாபோலி என்கிற வெளிநாட்டுப் பறவை நமது காட்டுக்கு வந்திருக்கிறது. அந்தப் பறவைக்கு கழுகு மாமிசம்தான் மிகவும் பிடிக்குமாம்.''

''ஒருமுறை வரும்போது குறைந்தது 10 கழுகையாவது சாப்பிட்டுவிட்டுப் போய்விடும். இங்கிருக்கும் ஏதாவது ஒரு பறவையைப் பிடித்துக் கொண்டு அந்தப் பறவையின் உதவியுடன் கழுகுகள் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்ளும். துரதிஷ்டமாக இந்த வருடம் அது கண்ணில் நான் பட்டுவிட்டேன்'' என்றது. அதிர்ச்சி அடைந்த கழுகு ''அந்தப் பறவை இப்போது எங்கே இருக்கிறது ?'' என்று பதட்டத்துடன் கேட்டது. "என் கூட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது. நீ வெளியில் இருக்கும் விஷயத்தைச் சொன்னால் அது உடனே வந்துவிடும். எனக்கும் வேலை எளிதாகிவிடும்" என்று கூறி தன் கூட்டை நோக்கி தலைமைப் புறா திரும்பியது. "புறாவே! கொஞ்சம் நில், நான் இங்கிருந்து தப்பித்து தொலைதூரம் சென்று விடுகிறேன். இனிமேல் இந்தப் பக்கம் திரும்பி வரமாட்டேன்'' என்றபடி கழுகு வேகமாக பறந்து தப்பித்தது. தலைமைப் புறா மீண்டும் கூட்டுக்கு வந்து வெளியில் நடந்த விஷயத்தை மற்ற புறாக்களிடம் கூறியது.

''நாம் தனித்தனியாக இருந்திருந்தால் அந்த கழுகிடமிருந்து தப்பித்திருக்க முடியாது. தலைவரே! நீங்கள் சொன்னதைக் கேட்டு ஒரே கூட்டில் இருந்ததால்தான் தப்பித்தோம்'' என்று மற்ற புறாக்கள் தலைமைப் புறாவைப் புகழ்ந்தன. புரட்சித்தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் அந்தத் தலைமைப் புறாவைப் போலதான். கழகத்தைக் கண்ணின் மணியைப் போல சிந்தாமல் சிதறாமல் ஒரே குடையின் கீழ் கட்டி காப்பாற்றி வந்தார்கள். அவர்கள் வழியைப் பின்பற்றி 1½ கோடி தமிழர்களாகிய நாம் ஒரு கூட்டுப் பறவைகளைப் போல ஒற்றுமையாக இருக்க

வேண்டும் என்றும், மாண்புமிகு அம்மா அவர்கள் நம்மிடம் ஒப்படைத்துச் சென்றுள்ள கழகத்தை வளர்த்து மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியது போல், "எனக்குப் பிறகும் அகில இந்திய அ.தி.மு.க. இன்னும் நூறாண்டுகளுக்கு மேல் நிலைத்து நிற்கும்" என்பதை மெய்ப்பித்துக்காட்ட இந்த நேரத்தில் நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த இனிய விழாவில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில், 207 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும்; 13 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கல்வித்துறை, வருவாய்த்துறை, வேளாண்மைத் துறை, பேரூராட்சிகள் துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆகிய துறைகளின் சார்பில் புதிய கட்டடங்களை திறந்து வைப்பதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மேலும், 21,099 நபர்களுக்கு 219 கோடியே 99 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போது, இந்த திருப்பூர் மாவட்ட மக்கள் பயன்பெற வேண்டி, விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வில் வளம்பெற வேண்டும் என்பதற்காக அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை ஆரம்பித்தார்கள்.

அறிவிப்புகள்

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் வந்த அம்மா அரசு, இதற்காக இந்த ஆண்டு 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது. இந்த அத்திக்கடவு – அவிநாசி திட்டம் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய மூன்று மாவட்டங்கள் உள்ளடங்கிய விவசாய பெருங்குடி மக்கள் பயன்பெறுகின்ற ஓர் அற்புதமான திட்டம். இந்தத் திட்டத்திற்கு கிட்டத்தட்ட 1.50 டிஎம்சி தண்ணீர் தேவை. இந்தத் திட்டத்திற்காக 70 நாட்கள், 250 கிணறுகளில் தண்ணீர் எடுக்கப்பட்டு, கிட்டத்தட்ட 9 வட்டங்களில் உள்ள பொதுப்பணித் துறை ஏரிகள், 41 ஏரிகள், 630 குளம் குட்டைகள் இதனால் நீர் நிரப்பப்பட்டு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம், 2 திட்டங்களாக வகுக்கப்பட்டன. ஆகவே இந்தத் திட்டங்களிலே மிக முக்கியமானவற்றைக் கவனித்து, எந்தத் திட்டம் எளிது என்றும், எந்தத் திட்டம் வேகமாக விரைவாக நடைபெறும் என்றும், இந்தத் திட்டத்தை ஆய்வு செய்த போது, இதிலே நமக்குக் கிடைத்தது, பவானி அருகில் உள்ள காளிங்கராயன் பகுதிதான். அங்கிருந்து தண்ணீர், பம்ப் செய்யப்பட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காக 1,516 கோடி ரூபாய் அரசு ஒதுக்கி இருக்கிறது. இதை மாநில அரசாங்கமே முழுமையாகச் செயல்படுத்தலாம். இதற்கு முன்பு இருந்தத் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் சுமார் 7 அல்லது 8 ஆண்டு காலம் பிடிக்கும். ஆனால் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற

போது, 30 மாதத்தில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு வரும் என்பதை இந்தத் நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் இந்தப் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு, இந்தப் பணிகள் தொடங்குகின்ற நற்செய்தியை இந்த நேரத்திலே தெரிவிப்பதுடன், அம்மாவினுடைய அரசு ஆட்சியில் இருக்கின்ற போதே, ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற போதே, அடிக்கல் நாட்டப்பட்டு அம்மாவுடைய ஆட்சியிலே திறப்பு விழா செய்யப்பட்டு 3 மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறுவார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அருமைச் சகோதரர் திரு.வேலுமணி அவர்களும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த அருமை நண்பர் திரு.உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களும், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களும், இந்த திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், கழக முன்னோடிப் பொறுப்பாளர்களும், விவசாயப் பெருங்குடி மக்களும், ஆக, அத்தனைபேரும் கோரிக்கை வைத்தார்கள். எங்கள் பகுதியில் தென்னையை நாங்கள் அதிகமாகப் பயிரிட்டிருக்கின்றோம். இந்தத் தென்னை மரத்திலிருந்து நீரா என்கிற பானத்தை இறக்குகின்ற ஒரு சூழ்நிலையை எங்களுக்கு உருவாக்கித் தாருங்கள். தென்னைக்கு என்று தனியாகத் திட்டம் அறிவியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே, இந்த நீராபானம் மூலமாக அருமையான திட்டத்தை அரசு அறிவித்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இந்த நீராபானத்தினை எடுப்பதன்மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் பலமடங்கு வருவாய் பெறுவார்கள். இன்றைக்கு ஒரு தென்னைமரம் மூலம் ஆண்டுக்கு 1,000 ரூபாய் வருமானம் என்று எடுத்துக் கொண்டால், இந்த நீராபானம் வருகின்ற போது, அதை நடைமுறைப்படுத்துகின்ற போது ஒரு தென்னை மரத்திலிருந்து குறைந்தபட்சம் ஆண்டுக்கு 5,000 ரூபாய் வருமானம் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசு விவசாயிகளுடைய அரசு; விவசாயிகளின் எண்ணங்களை நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதேபோல விவசாயிகள் உரமிட்டுத்தான் விவசாயம் செய்ய வேண்டிய சூழ்நிலை, அப்படி உரமிட்டு விவசாயம் செய்கின்றபோது அதிகமான விளைச்சலைப் பெற முடியவில்லை, இயற்கையான விளைச்சல் நமக்குக் கிடைப்பதில்லை. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு இங்கே இருக்கின்ற மூத்த அமைச்சர்களோடு கலந்து பேசி வண்டல் மண் தமிழ்நாடு முழுவதும் விவசாயப் பெருங்குடி மக்கள் அள்ளுவதற்கு ஒரு ஆணையைப் பிறப்பித்து, தங்குதடையில்லாமல் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் வண்டல் மண் அள்ளப்படுகிறது. முதற்கட்டமாக ரூ.100 கோடி கொடுத்தோம். 1,509

ஏரிகள் தூர்வாருவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதன்முதலாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் அதைத் தொடக்கி வைத்தேன். மற்ற மாவட்ட தலைநகரங்களில் அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் தொடக்கி வைத்தார்கள். அந்தப் பணி முடியும் தருவாயில் இருக்கிறது. மீண்டும் அந்தப் பணி தொடங்குவதற்காக 2,065 ஏரிகள் ரூ.300 கோடி செலவில் இன்றைக்குத் தூர்வாருவதற்கான நடவடிக்கையை அம்மாவினுடைய அரசு எடுத்து இருக்கின்றது. இந்தத் தூர்வாருவதன் மூலமாகக் குளங்கள் ஆழப்படுத்தப்படுகின்றன, அதனால் பெய்கின்ற மழை நீர் முழுவதும் சேமித்து வைக்கப்படுகின்றது. அதோடு, அந்த ஏரி குளங்களில் அள்ளப்படுகின்ற வண்டல் மண் இயற்கை உரமாக விவசாயிகளுக்குக் கிடைக்கின்றது. மண்ணை வளப்படுத்துகின்றது. விளைச்சலை அதிகமாக பெறுவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, சாலைகள், பாலங்கள், கல்லூரிகள் என இவை சார்ந்தப் பல்வேறு திட்டங்களை அறிவித்து கொண்டிருக்கின்றது. கடுமையான வறட்சி! 140 ஆண்டு காலம் இல்லாத கடுமையான வறட்சி. மழையே இல்லை. குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்காத ஒரு சூழ்நிலை, எவ்வளவுதான் அரசாங்கம் திட்டம் போட்டு நிதி ஒதுக்கீடு செய்தாலும், இன்றைக்கு நிலத்தடி நீர் 1,000 அடிக்குக் கீழே போய்விட்டது, 1,000 அடிக்கு கீழ் இருந்து தான் நீரை எடுத்து மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டிய ஒரு சூழ்நிலை. இவ்வளவு பிரச்சினைகளுக்கு இடையிலும், இவ்வளவு கடுமையான வறட்சியிலும் நமக்கு 38 சதவிகிதம் மழை தான் பொழிந்திருக்கின்றது, 62 சதவிகிதம் மழை பொழியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து, தமிழகத்திலே குடிநீர் பிரச்சினை இல்லாமல் பார்த்துக் கொண்ட அரசு, அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழ் அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த விதியின் மூலமாக நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கி இருக்கிறார்கள். இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 110 என்று அறிவித்தாலே மக்கள் மகிழ்ச்சி அடைவார்கள். சட்டமன்ற நிகழ்ச்சி நடைபெற்றபோதெல்லாம் மக்கள் பேப்பரை பார்ப்பார்கள், இன்றைக்கு என்ன செய்தி வந்திருக்கிறது, இதயத்தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழ் என்ன அறிவிப்பை கொடுத்திருக்கிறார்கள், நம்முடைய பகுதிக்கு என்ன திட்டம் வந்திருக்கிறது என்று ஆச்சரியத்தோடு பார்ப்பார்கள். ஆகவே, இதயத்தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றம் நடக்கின்றபோதெல்லாம் சட்டப்பேரவை விதி 110இன் கீழ், பல்வேறு அற்புதமான திட்டங்களை அறிவித்து, நாட்டு மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் நிறைவேற்றியவர்.

இன்றைக்கு அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய அரசும், சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழ் பல்வேறு அறிவிப்புகளைத் தந்திருக்கிறது. இந்த அறிவிப்புகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மேடையில் வீற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ''அமராவதி ஆற்றிலே தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது, படிப்படியாக உயர்ந்து கொண்டிருக்கிறது, ஆகவே, எங்களுக்கு அத்தண்ணீரை, கால்வாய்களிலும், ஆற்றிலும் திறந்துவிட வேண்டும், குடிதண்ணீர் வேண்டும்'' என்று கோரிக்கை வைக்கிறார்கள். அம்மாவினுடைய அரசு கனிவோடு பரிசீலித்து இதையும் செய்யும் என்பதை மகிழ்ச்சியோடு இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் குடிநீர் பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருக்கின்ற போது தான், காவிரி நீரை பெற்றுத் தந்தார்கள். சட்டப் போராட்டத்தின் மூலமாக, நமக்கு சட்ட அங்கீகாரத்தை பெற்றுத் தந்த ஒரே தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாம்! இன்றைக்குத் தமிழகத்திலே ஜீவநதியாக இருப்பது காவிரி நதி. அந்தக் காவிரி நதியிலிருந்து தான் பாசனத்திற்கு, குடிநீருக்கு நீரை எடுத்துப் பயன்படுத்தி வருகின்றோம். கடுமையான வறட்சி காரணமாக, கடந்த முறை மேட்டூர் அணை வறண்டுவிட்டது. குடிநீர்ப் பிரச்சினை, பாசனத்திற்கும் தண்ணீர் திறந்து விடவில்லை. இன்றைக்கு உச்சநீதிமன்றத்தில் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. நிச்சயமாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆசியோடு அவ்வழக்கு வெற்றி பெற்று நமக்கு நீதி கிடைக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

பயனாளிகள் வாழ்வில் அனைத்து நலன்களையும், வளங்களையும் பெற எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இனிய விழாவை இத்தனை சிறப்பாக ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் என் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

22.07.2017 அன்று திருப்பூரில் நடைபெற்ற

'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

புனித பூமி திருவண்ணாமலையில்
மனிதரில் புனிதர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழா!

"அம்மா" அரசு! உங்களுடைய அரசு!

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நேர்மையின் சின்னம்! நீதியின் செங்கோல்! அன்பின் களஞ்சியம்! கொடுத்துச் சிவந்த கரம், கலியுகக் கர்ணன், பேறிஞர் அண்ணாவின் இதயக்கனி, புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இம்மகத்தான விழாவிற்கு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! முன்னிலை வகிக்கின்ற இந்த மண்ணின் மைந்தர் திரு. சேவூர் இராமச்சந்திரன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு. திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே! திரு. செங்கோட்டையன் அவர்களே! திரு. செல்லூர் ராஜு அவர்களே! திரு. தங்கமணி அவர்களே! திரு. வேலுமணி அவர்களே! திரு.ஜெயக்குமார் அவர்களே! திரு. சி.வி. சண்முகம் அவர்களே! திரு.கே.பி.அன்பழகன் அவர்களே! டாக்டர் வி.சரோஜா அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! திரு. ஆர்.காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே! டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே!

திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! திரு. கே.சி.வீரமணி அவர்களே! திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே! திரு. பா.பெஞ்சமின் அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! திரு. எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! திருமதி எஸ். வளர்மதி அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி. பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! வரவேற்புரை ஆற்றிய தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர் திரு. வெங்கடேசன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் வடநேரே அவர்களே! மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களே! மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே! தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திருமதி அமுதா அருணாச்சலம் அவர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே, கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகத் தொண்டர்களே! கூட்டுறவுத்துறை நிருவாகிகளே, முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகளே, அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, இளைஞர்களே! மாணவ, மாணவிகளே! தாய்மார்களே, நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுக்கு விவசாயம், அமைதிக்கு ஆன்மீகம், மகிழ்ச்சிக்கு சுற்றுலா இவை மூன்றும் ஒரு மனிதனை ஆரோக்கியமாக வாழச் செய்யும். இந்த மூன்றும் ஒரே மாவட்டத்தில் அமைந்திருக்கிறது என்றால் அது திருவண்ணாமலை மாவட்டம்தான். எனவேதான் ஆரோக்கியத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும், மன அமைதிக்காகவும், உலகத்தின் பல பகுதிகளில் இருந்தும் புண்ணியபூமி திருவண்ணாமலைக்கு மக்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். திருவண்ணாமலையில் அமைந்துள்ள அருணாசலேஸ்வரர் ஆலயம், உலக மக்களை தன்வசம் இழுக்கும் காந்த சக்தி கொண்டதாகத் திகழ்கின்றது. திருவாரூரில் பிறக்க முக்தி! காஞ்சியில் வசிக்க முக்தி! காசியில் இறக்க முக்தி! என்பார்கள். ஆனால், திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி கிடைக்கும்! இந்தியாவின் புகழ்பெற்ற பஞ்சபூத ஸ்தலங்களில், ‘அக்னி ஸ்தலமாக’, திருவண்ணாமலை விளங்குகிறது. ஞானிகள் மற்றும் சித்தர்களின் ஆன்மாக்கள் உலவும் நகரமாக திருவண்ணாமலை விளங்குகிறது. பகவான் ரமணரும், சேஷாத்திரி சுவாமிகளும் பக்தியால் உறைந்த இடம் இந்த திருவண்ணாமலை.

18 சித்தர்களில் ஒருவரான இடைக்காட்டுச்சித்தர் வாழ்ந்து இறையருள் பெற்றதும் இந்தத் திருவண்ணாமலைதான். மாணிக்கவாசகர் சுவாமிகள், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்ற ஸ்தலம், இந்த திருவண்ணாமலை. இந்த மண்ணில்தான் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் அவதரித்தார். அதனால்தான், உலகம் முழுவதிலும் இருந்து இலட்சோப இலட்சம் பக்தர்கள் கிரிவலம் என்ற பெயரில் இந்த புனித பூமியில் கால்பதிக்க வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புமிக்க திருவண்ணாமலையில் ஏழைகளுக்கெல்லாம் இறைவனாகத் தெரியும் மக்கள் தலைவர், பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்திக் கொண்டிருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கிறது. மறைந்தும் மறையா வரம் பெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் வரலாற்று சாதனைகளை, அவர் நடந்து வந்த பாதைகளை, அவர் வாழ்க்கையில் கடைப்பிடித்த ஒழுக்கத்தை, பண்பாட்டை, உழைப்பால் உயர்ந்த வரலாற்றை இந்த தலைமுறை இளைஞர்களும், குழந்தைகளும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை 30.06.2017இல் மதுரையில் தொடங்கி இவ்வாண்டு டிசம்பரில் சென்னையில் நிறைவு செய்யத் திட்டமிட்டுள்ளது. அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பணியாளர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகள், மாண்புமிகு அம்மாவின் விசுவாசிகள், பொதுமக்கள் அனைவரின் ஒத்துழைப்புடன் மதுரையிலும், திருப்பூரிலும் நூற்றாண்டுவிழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

கார்த்திகைத் தீபத்தின்போது பக்தர்களால் சூழப்பட்டிருக்கும் திருவண்ணாமலை, இப்போது காண்போரை வியக்க வைக்கும் வண்ணம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உடன்பிறப்புகளால் பெருங்கடலென சூழப்பட்டுள்ளது. அதற்காக, இம்மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் இராமச்சந்திரன் அவர்களுக்கும், அவர்களோடு உறுதுணையாக இருந்து உழைத்த மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிருவாகிகள் மற்றும் கழக விசுவாசிகள் என்று அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

“மக்களுக்காகவே திட்டங்கள், திட்டங்களுக்காக மக்கள் அல்ல” என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறுவார்கள். இந்தப் பொன்மொழி, மாண்புமிகு அம்மாவின் இதயத்தில் தோன்றுவதற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், அவர்களின் திட்டங்களும் தான் காரணம் என்பதை இங்கே கூற விரும்புகிறேன். மக்களுக்காக எப்படி திட்டம் போட வேண்டும் என்று புரட்சித்தலைவர் அவர்கள் “கன்னித்தாய்” என்ற படத்தில் வரும் பாடலின் மூலம் வெளிப்படுத்தினார்கள்.

"தவி தவிக்கிற ஏழைக்காகத்
திட்டம் போடணும் – பொருளை
சரிசமமா பங்கு வைக்க
சட்டம் போடணும்.

குவியக் குவிய விளைவதெல்லாம்
கூறுபோடணும்–ஏழை
குடிசைக்குள்ளே தேனும் பாலும்
ஆறா ஓடனும்."

திட்டங்கள் என்றால் அது ஏழைகள் வாழ்க்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் புரட்சித்தலைவரின் நோக்கம். புரட்சித்தலைவர் முதல்வராக இருந்தபோது மின்சார விளக்கு இல்லாத வீடுகளே இருக்கக் கூடாது என்று "குடிசைக்கு ஒரு மின்விளக்கு" திட்டத்தின் கீழ் விலையில்லா மின்சாரம் வழங்கினார். அந்தத் திட்டத்திற்குப் பிறகுதான், அதுவரை இருண்டுகிடந்த பல குடிசைப்பகுதிகள் முதன்முதலாக வெளிச்சத்தைப் பார்த்தன. ஏழைகளின் வாழ்க்கைக்கும் வெளிச்சம் கிடைத்தது. ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி கிட்டியது. ஏழைகளின் முகங்களிலும் வெளிச்சம் தெரிந்தது. புரட்சித்தலைவரை, ஏழை மக்கள் தங்கள் இதயங்களில் குலவிளக்காக வைத்துப் போற்றினார்கள். புரட்சித்தலைவர் அவர்களின் திட்டங்களிலேயே உலகப் பிரசித்தி பெற்ற திட்டம், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டமாகும். தனது சிறுவயதில் ஒருவேளை பசிக்கு உணவில்லாமல் இருந்ததைப் போல வேறு எந்த குழந்தையும் பசியால் வாடக்கூடாது என்று, 1982ஆம் ஆண்டு, புரட்சித்தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இன்று இலட்சக்கணக்கான குழந்தைகள் ஒருசேர சத்தான மதிய உணவு சாப்பிட வழி வகை ஏற்பட்டது! புரட்சித்தலைவர் அவர்கள் காலத்தில் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த மறு வருடத்தில், 11 வருடங்களாக இருந்த இடைநிலைக்கல்வியை 10 வருடங்களாக மாற்றியமைத்தார்.

பட்டப்படிப்புக்கு முன்னதாக கல்லூரியில் படிக்கும் பி.யு.சி. ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பதிலாக 2 ஆண்டுகள் படிக்கும் +2 எனப்படும் மேல்நிலைக்கல்வி பள்ளிகளில் அறிமுகம் செய்யப்பட்டது. அப்போது மற்ற மாநிலங்களில் +2 வகுப்புகளை கல்லூரிகளில் நடத்தினார்கள். தமிழகத்தில் மட்டுமே பள்ளிகளில் +2 வகுப்புகள் நடந்தன. இதனால் தமிழகத்திற்கு மிகப்பெரிய பலன் கிடைத்தது. மாநிலம் முழுவதும் பரவியிருந்த பள்ளிகளில் +2 வகுப்புகள் நடைபெற்றன. இத்திட்டத்தின் மூலம் கிராமப் பகுதிகளிலும் அதிகமான குழந்தைகள் கல்வி கற்க முடிந்தது. புரட்சித்தலைவர் அவர்கள் பள்ளிக்கல்வித் துறையில்தான் இப்படி ஒரு புரட்சியைக் கொண்டுவந்தார் என்றால், உயர்கல்வித் துறையிலும் அதிரடியான பல புரட்சிகளைக் கொண்டுவந்தார். நூறு ஆண்டுகளில் தமிழகத்தில் 4 பல்கலைக்கழகங்கள் மட்டுமே நிறுவப்பெற்றன.

ஆனால், தமிழ்நாடு முதலமைச்சராக நமது புரட்சித்தலைவர் பதவியேற்ற 11 ஆண்டுகளில் 7 புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டன. பாரதியார், பாரதிதாசன், காமராஜர், அண்ணா பல்கலைக் கழகங்கள், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், ஈ.வெ.ரா. மணியம்மை பெண்கள் பல்கலைக்கழகம் ஆகியவை புரட்சித்தலைவர் அவர்களால் நிறுவப்பெற்றவையாகும்.

தமிழ்நாட்டின் வாழ்வாதாரம் விவசாயத்தை நம்பி இருப்பதால் புரட்சித்தலைவர் அவர்கள் விவசாயிகளின் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார்கள். அதனால்தான் “கடவுள் என்னும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி– விவசாயி ” என்று தமது “விவசாயி” படத்தில் பாடி நடித்திருப்பார். அவருடைய நடிப்பிற்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியே இருக்காது. விவசாயிகளை கடவுளின் குழந்தைகளாகவே நினைத்தவர் புரட்சித்தலைவர் அவர்கள். அவர் எண்ணத்தில் உள்ளதுதான் கதையாகவும், வசனமாகவும், நடிப்பாகவும் வரும் என்பது எல்லாருக்கும் தெரியும். தமது எண்ணங்களில் உதித்த பொதுமைக் கருத்துக்கள், குழந்தைகளுக்குரிய அறிவுரைகள், உழைப்பாளியின் வாழ்வில் உள்ள கஷ்டங்கள், பொது நீதி, பெண்மைக்கு மரியாதை, அரசியலில் நேர்மை என்று அனைத்து விதமான அறிவுரைகளையும் தனது திரைப்படப் பாடல்களின் வழியாகச் சாதாரண எளிய மக்களுக்குச் சென்று சேர்த்தார். தாம் அறிவுறுத்தியவாறே வாழ்ந்தும் காட்டினார்!

விவசாயிகள் புரட்சித்தலைவரை எந்த அளவுக்கு போற்றினார்கள் என்பதற்கு ஒரு சம்பவத்தை இங்கே நினைவுபடுத்துகிறேன். எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சி தொடங்கி தேர்தல் பிரச்சாரத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவத்தை இங்கே நினைவுகூற விரும்புகிறேன். மதுராந்தகத்தில் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு திரும்பும்போது, ஊரின் எல்லையில் வயல்வேலைக்குச் சென்று கொண்டிருந்த விவசாயிகள் புரட்சித்தலைவரைப் பார்த்துவிட்டார்கள். புரட்சித்தலைவரின் காரை மறித்து, “மூன்று ஆண்டுகளாக சரியான விளைச்சல் இல்லாமல் நாங்கள் கடனில் தத்தளிக்கிறோம். எங்கள் நெல் விளையும் பூமியில் உங்கள் பொன்னான கால்பட்டால் அதில் பொன் விளையும். எனவே, உங்கள் பாதம் எங்கள் நிலத்தில் ஒரு முறையேனும் பட வேண்டும்”, என்று அன்போடு வலியுறுத்தினார்கள். அதற்குள் கையில் மண் சட்டியுடன் ஒருவர் வந்தார். அவ்வளவு தூரம் நடந்துவந்து நீங்கள் சிரமப்பட வேண்டாம். இந்த மண்சட்டியில் உள்ள மண்ணை மிதித்துக் கொடுத்தால், அந்த மண்ணைக் கொண்டுபோய் எங்கள் வயலில் தூவுகிறோம் என்றார்கள். அந்த விவசாயிகளின் அன்பைக் கண்டு வியந்து போன மக்கள் திலகம், விவசாயிகளின் விருப்பப்படியே மண்சட்டியில் காலை வைத்து மிதித்துக் கொடுத்தார். அந்த விவசாயிகளின் அன்பிற்குக் கைமாறாகத்தான் புரட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்தபிறகு, விவசாயிகளுக்காகப் பல திட்டங்களைக் கொண்டுவந்து அவர்களின் வாழ்வில் விளக்கேற்றினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 16.01.2010 அன்று கழக உடன்பிறப்புகளுக்கு எழுதிய மடல் ஒன்றில், புரட்சித்தலைவர் அவர்கள் காவிரி நீர் பிரச்சினையை எப்படிக் கையாண்டார் என்பதை மிக அழகாகக் கோடிட்டுக் காட்டியிருந்தார் என்பதை உங்களோடு நான் பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன். ஆட்சிக் கட்டிலில் அமருவதற்கு முன்பே தமிழ்நாட்டின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்தவர் புரட்சித்தலைவர் அவர்கள். 1977ஆம் ஆண்டு, பொதுத்தேர்தலுக்கு முன்பு தமிழகம் முழுவதும் புரட்சித்தலைவர் அவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் செய்தார்கள். அப்போது வற்றிய ஏரி, குளங்களையும், வாடிய பயிர்களையும் பார்வையிட்டார்கள்.இதற்குக் காரணம், கருநாடகம் காவிரியில் தண்ணீர் திறந்துவிடாததுதான் என்பதையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். உடனடியாக கருநாடக பொதுப்பணித் துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு, அவருடைய வீட்டிற்கு விருந்து சாப்பிட வருவதாகத் தெரிவிக்கிறார் புரட்சித்தலைவர். பலமுறை விருந்துக்கு அழைத்த போதெல்லாம் வராத புரட்சித்தலைவர், தானாகவே வலிய வந்து விருந்துக்கு வருகிறேன் என்று சொன்னதும், கருநாடகப் பொதுப்பணித் துறை அமைச்சர் ஆனந்தமடைகிறார்.

மறுநாள் விருந்தில் பங்கேற்கிறார் புரட்சித்தலைவர். விருந்துக்கு வந்த புரட்சித்தலைவரை கருநாடக பொதுப்பணித் துறை அமைச்சரும், அவருடைய தாயாரும் அன்புடன் உபசரித்தனர். விருந்து ஆரம்பித்த உடனேயே புரட்சித்தலைவருக்கு விக்கல் வருகிறது. புரட்சித்தலைவருக்கு விக்கல் வருவதைப் பார்த்த அமைச்சரின் தாயார், தம் மகனிடம் "அவருக்கு விக்கல் வருகிறது; தண்ணீர் தரக்கூடாதா? என்று கேட்கிறார். உடனே புரட்சித்தலைவர் அவர்கள் "உங்கள் மகன் எங்கே தண்ணீர் தருகிறார்?" என்று தமிழகத்திற்குக் கருநாடகா தண்ணீர் திறந்துவிடாததையும், தமிழ்நாட்டில் பயிர்கள் வாடுவதையும் சூசகமாக தெரிவிக்கிறார். புரட்சித்தலைவரின் வருகைக்கான காரணத்தை புரிந்து கொண்ட கருநாடக பொதுப்பணித் துறை அமைச்சர், கருநாடக முதலமைச்சரிடம் இந்தத் தகவலைத் தெரிவித்தார். கருநாடக முதலமைச்சரும், "எம்.ஜி.ஆர். கேட்கும் உதவியை உடனடியாகச் செய்யுங்கள்" என்று உத்தரவிடுகிறார்.

புரட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து சேர்வதற்கு முன்பாகவே காவிரித் தண்ணீர் இங்கு வந்து சேர்ந்தது. அதனால்தான், புரட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்து மூன்றுமுறை முதல்வராக, 11 ஆண்டுகாலம் ஆட்சி செலுத்தி, மக்களின் இதயம் நிறைந்த முதல்வராகச் சாதனை புரிந்தார். புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே மக்களிடையே புரட்சித்தலைவர் அவர்களுக்கு எத்தனையளவு செல்வாக்கு இருந்தது என்பதை ஒரு சம்பவத்தின்மூலம் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரையில் 1976ஆம் ஆண்டு நடந்த தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில், அன்னை இந்திராவும் புரட்சித்தலைவரும் கலந்து கொண்டனர். பல்வேறு கட்சித் தலைவர்கள் பேசினார்கள். கடைசியாக புரட்சித்தலைவரும், பிரதமரும் பேச வேண்டும். மக்கள்

செல்வாக்கு மிக்க புரட்சித்தலைவரை முதலில் பேச வைப்பதா? பாரதப் பிரதமர் இந்திரா அம்மையாரை பேச வைப்பதா? கூட்டத்தை நடத்தியவர்களுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டது. இதை நொடிப் பொழுதில் புரிந்துகொண்ட புரட்சித்தலைவர் அவர்கள் மைக்கை நோக்கி நடந்தார். அந்த சமயம் யாரும் எதிர்பாராத வகையில் அன்னை இந்திராகாந்தி அம்மையார் எழுந்து சென்று புரட்சித்தலைவரின் கையைப் பிடித்து நிறுத்தி, “முதலில் நான் பேசி விடுகிறேன். அதன்பின்பு நீங்கள் பேசுங்கள். ஏனென்றால் நீங்கள் முதலில் பேசிவிட்டால் கூட்டத்துக்கு வந்த மக்கள் கலைந்து சென்று விடுவார்கள்” என்று கூறி முதலில் அன்னை இந்திரா அம்மையார் பேசினார்.

பிறகுதான் புரட்சித்தலைவர் பேசினார். புரட்சித்தலைவருக்குக் கிடைத்த இந்தப்பெருமைஇந்தியாவில்உள்ளவேறுஎந்தமுதல்வருக்கோ,மாநிலத்தலைவருக்கோ கிடைத்ததில்லை என்பதை பெருமையோடு கூறிக்கொள்கிறேன். எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் அந்தத் திட்டத்தின் பலன் முழுமையாக பயனாளிகளுக்குச் சேர்கிறதா என்றும், திட்டத்தில் குறிப்பிட்டதைப் போல இம்மியளவும் குறையாத தரத்துடன் திட்டப் பொருள்கள் வழங்கப்படுகிறதா? என்பதை புரட்சித்தலைவர் அவர்கள் தாயுள்ளத்தோடு கண்காணித்தார்கள். புரட்சித்தலைவர் தமிழக முதல்வராக இருந்த போது, விலையில்லாக் காலணித் திட்டத்தை அமல்படுத்த முடிவெடுத்தார். அப்போது தமிழ்நாடு தோல்பொருள் வாரியத்தைச் சார்ந்தவர்கள் விலையில்லாக் காலணியின் ஒரு ஜோடி, மாதிரி காலணியைக் கொண்டுவந்து காட்டினார்கள். புரட்சித்தலைவர் அந்தக் காலணிகளை வாங்கி தண்ணீர் தொட்டியில் போட்டு ஊறவைத்தார். சிறிது நேரம் கழித்து அதை மடக்கிப் பரிசோதித்த போது காலணி பிய்ந்து போய் கையோடு வந்து விட்டது.

கடுங்கோபம் கொண்ட புரட்சித்தலைவர் காலணியைக் கொண்டு வந்தவர்களிடம் “கிராமத்திலிருந்து நகரத்திற்கு வேகாத வெயிலில் கால் வலிக்க நடந்து படிக்க வரும் ஏழைப் பிள்ளைகளுக்கு இது போன்ற தரமற்ற காலணியையா வழங்குவது? ஒரு மழைக்குக்கூட இது தாங்காதே. மழை, வெயில் இரண்டுக்கும் தாக்குப் பிடிக்கிற அளவுக்குத் தரமான காலணியாகத் தயாரித்து கொண்டு வாருங்கள்'', என்று கண்டிப்பான குரலில் உத்தரவிட்டார். அதன் பின்னர் வழங்கப்பட்ட விலையில்லாக் காலணிகள் மிகத் தரமானவையாக இருந்தன என்பது நாடறிந்த உண்மை. அதேபோல, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், ஏழை, எளிய மக்களுக்கு அளித்த விலையில்லா திட்டப் பொருட்கள் ஆகட்டும், பள்ளிக் குழந்தைகளுக்கு அளித்த விலையில்லா பொருட்கள் ஆகட்டும், அவற்றின் தரத்தினை தானே சோதித்துதான் அப்பொருட்களை ஏழை மக்களுக்கும், பள்ளிக் குழந்தைகளுக்கும் விநியோகிக்க உத்தரவிடுவார்கள்.

தமிழ்நாட்டு மக்களின்மேல் இவ்விரு தலைவர்களுக்கும் இருந்த அக்கறையை இது காட்டுகிறது. அதனால்தான் மக்களும் இத்தலைவர்களை தங்கள் குடும்பத்தில் ஒருவராகப் பாவித்தனர். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன், திருவண்ணாமலையை உலக ஆன்மீக மையமாக உருவாக்கினார்கள். உலகின் பல பகுதிகளிலிருந்தும் வருகை தரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் செய்து தரும்படியான திட்டங்களை வழங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டபடி, கடந்த 06.02.2017 அன்று ஒரு கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்றது. கிரிவலப் பாதையில் சாதுக்கள் தங்குவதற்கு சாமியார் மடம், பக்தர்கள் தினசரி உணவருந்தும் அன்னதானக் கூடம், ஓதுவார் பயிற்சிப் பள்ளி, ஆதரவற்ற சிறுவர்களுக்கு உணவு, கல்வியுடன் கூடிய கருணை இல்லம், கோசாலை ஆகியன பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

பக்தர்கள் தங்குவதற்கு 28 கோடி ரூபாய் செலவில் ‘யாத்ரீநிவாஸ்’ கட்டும்பணி விரைந்து நடைபெற்று வருகிறது. இதைத் தவிர, திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 2011லிருந்து 2017 வரை, 449 திருக்கோயில்களில் 37 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கும் நடைபெற்றுள்ளது.

திருக்கோயில் பணிகளைத் தவிர, சமூக நலப்பணிகள் பலவற்றையும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கி வைத்த பல்வேறு திட்டங்களை, அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு தொடர்ந்து நிறைவு செய்து வருவதை நீங்கள் அறிவீர்கள். பல துறைகளின் சார்பாக நிறைவேற்றப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் இங்கே குறிப்பிட முடியாவிட்டாலும் ஒரு சில திட்டங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில், 45 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் துணை மின்நிலையங்கள் மற்றும் இதர கட்டடங்கள் என மொத்தம் 192 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3,112 பணிகள் 04.03.2017 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. 08.05.2017 அன்று, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கோட்ட அலுவலகக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. மேலும் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள இசைப் பள்ளிக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள 15 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டத்தின்கீழ், 25 கோடியே 12 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள 3 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 'நபார்டு' கடனுதவி திட்டத்தின்கீழ், 5 கோடியே 26 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் ஆகியவை 24.06.2017இல் திறந்து வைக்கப்பட்டன. ஆக மொத்தம், திருவண்ணாமலை மாவட்டத்திற்கென 289 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் 3,279 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டும், மேலும் 2 பணிகள் அடிக்கல் நாட்டப்பட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நமது திருவண்ணாமலை மாவட்டத்தில், 36.26 கோடி ரூபாய் செலவில் ஆரணி நகராட்சி கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் இதர கட்டடங்கள் என மொத்தம் 67.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 134 பணிகள் தொடங்கி வைக்கப்படுகின்றன.

புரட்சித்தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் ஆன்மீக பூமியான திருவண்ணாமலை மாவட்டத்தின் மீது, பாசமும் அக்கறையும் உண்டு! எனவே, அவர்கள் வழியில் வந்த இந்த அரசு, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு இன்னும் பல திட்டங்களை வழங்கி, திருவண்ணாமலை மாவட்டத்தை முன்மாதிரி மாவட்டமாக உருவாக்குவோம் என உறுதி கூறுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள், அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வை இராணுவக் கட்டுப்பாட்டுடனும், குடும்பப் பாசத்துடனும் வளர்த்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்காகத் தொண்டர்களும், தொண்டர்களுக்காக மாண்புமிகு அம்மா அவர்களும் தியாகங்கள் பல செய்து பாதுகாத்த கழகம் இது. இந்நிலையில், தியாகங்கள் நிறைந்த ஓர் இயக்கம் என்றால், அது அனைத்திந்திய அண்ணா தி.மு.க.தான்! இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்காகவும் புரட்சித்தலைவி அம்மா அவர்களும், கழகத் தொண்டர்களும் போட்டி போட்டுக் கொண்டு தியாகங்கள் பல செய்திருக்கிறார்கள்.

அந்தத் தியாகங்களை நினைவு கூரும் போது ஒரு கதையை இங்கே கூற விரும்புகிறேன். ஒரு காட்டுக்கு, மேய்ச்சலுக்குச் சென்ற பசுக்கூட்டம் மாலை வீடு திரும்பும்போது, உடல் சுகமில்லாமல் ஒரு பசு மட்டும் அந்தக் கூட்டத்திலிருந்து பின்தங்கியது. இதை உற்று நோக்கிக் கொண்டிருந்த ஒரு நரியும், அதன் குட்டியும்,

அந்தப் பசுவைத் தாக்கி இரையாக்கிக் கொள்ள தீர்மானித்தன.அந்த நரிகள் பசுவைத் தாக்க முற்படும்போது பசு, அந்த நரிகளைப் பார்த்து, “நரிகளே!” நீங்கள் என்னை இரையாக்கிக் கொள்ளுங்கள். ஆனால், கடைசியாக ஒரு விண்ணப்பத்தை உங்களிடம் வைக்கிறேன்.

நான் மக்களால் புனிதமாக போற்றப்படுகிற பசு. எங்களுக்கு உயர்ந்த குணாதிசயங்கள் உண்டு. சொன்ன சொல்லை ஒரு நாளும் மீற மாட்டேன். என்னுடைய கன்று வீட்டில் இருக்கிறது. நான் இங்கு உங்களுக்கு இரையாகிவிட்டால், நான் எங்கே சென்றேன் என்று என் கன்று தவிக்க நேரிடும். எனவே, வீட்டிற்குச் சென்று என் கன்றிடம் நடந்த விசயத்தைக் கூறி நான் இல்லாமல் இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிவுரையும் கூறிவிட்டு திரும்பவும் இங்கே வந்துவிடுகிறேன். இது சத்தியம்! அதுவரை நீங்கள் பொறுத்திருக்க வேண்டும்'', என்றது. நரிகள் சிரித்தபடியே, “யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? நீ போனால் திரும்ப மாட்டாய். நீ திரும்புவதற்கு மற்ற பசுக்களும் உன்னுடைய கன்றும் அனுமதிக்காது'', என்றுகூறி மீண்டும் பசுவை கொல்ல நெருங்கின. பசு மீண்டும், “நான் ஒருபோதும் வாக்குறுதியை மீற மாட்டேன். அப்படி மீறுவது என்பது என் இனத்திற்கே இழுக்கைத் தேடித்தரும். என்னை நம்புங்கள்'', என்று கெஞ்சியது. பசுவின் உருக்கமான பேச்சைக் கேட்டு நரிகள் பசுவுக்கு அனுமதியளித்து அனுப்பி வைத்தன. பசு நேராக தன் வீட்டிற்கு வந்து கன்றை கட்டித்தழுவி, காட்டில் நடந்த சம்பவத்தை கூறி, “கன்றே! தாயில்லாமல் நீ இந்த உலகத்தில் நல்ல பிள்ளையாக வாழ வேண்டும்.''

“நம் இனத்தைவிட்டுப் பிரியாமல் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்'', என்று பல அறிவுரைகளைக் கூறி காட்டுக்குத் திரும்ப முற்பட்ட போது, கன்று, அதனை மறித்து, “அம்மா! நானும் உன்னுடன் வருகிறேன். உன்னைப் பிரிந்து என்னால் வாழ முடியாது'', என்று பிடிவாதம் பிடித்தது. கன்றைச் சமாதானப்படுத்திவிட்டு, நரிகள் இருக்கும் இடத்திற்கு பசு விரைந்தது. பசு அங்கு சென்று சேர்வதற்குள், பசுவின் கன்று நரிகளோடு நின்று பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்து பசு அதிர்ச்சியுற்றது. கன்று, நரிகளிடம், “நரியாரே! என்னை முதலில் இரையாக்கிக் கொண்டு பிறகு என் தாயாரை இரையாக்குங்கள். என் தாயைப் பிரிந்து என்னால் ஒரு காலமும் வாழ முடியாது. எங்கள் இரண்டு பேரையுமே நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்'', என்று கெஞ்சியது. இதைக் கேட்ட நரிக்குட்டி நரியிடம், “அம்மா! தாய், பிள்ளை பாசம் என்ன என்பதை நான் இப்போது புரிந்து கொண்டேன். பாவம், தியாக திருவுருவங்களாக இருக்கும் பசுவையும் கன்றையும் நாம் இரையாக்கிக் கொள்ள வேண்டாம்'' என்றது. நரிக்குட்டியின் ஆலோசனையைக் கேட்ட நரி, பசுவையும் கன்றையும் வணங்கி அந்த இடத்தைவிட்டு நகர்ந்தது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நமக்காக தன் பொன் உடலை வருத்தி, உழைத்து தியாகம் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவிற்காக, அவருடைய குழந்தைகளாக இருந்து, நாம் இந்தக் கழகத்திற்காகத் தியாகம் செய்து கழகத்தின் மாண்பைக் காப்பாற்ற வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

❖ 65 கோடி ரூபாய் செலவில், பக்தர்களின் வசதிக்காகக் குடிநீர், கழிவறை, மின்விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, கிரிவலப்பாதையை அகலப்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

❖ 'நீட்' தேர்வு – இன்றைக்குப் பல எதிர்க்கட்சித் தலைவர்கள், வேண்டுமென்றே திட்டமிட்டு நம்முடைய அம்மா அரசு மீது தேவையில்லாத கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு செயல்பட்டு வருகிறது. நான் ஒவ்வொரு முறையும் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களை நேரில் சந்திக்கும் பொழுதும், தமிழக மாணவர்களுக்கு 'நீட்' தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி, தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மேலும் நமது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர், சட்டத்துறை அமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர் பெருமக்களை நேரில் சந்தித்து தொடர்ந்து நீட் தேர்விலிருந்து, தமிழகத்திற்கு விலக்கு அளிக்க வலியுறுத்தி வருகின்றனர் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அம்மாவுடைய அரசு, மாணவர்களின் நலன் காக்கும் அரசு!

விவசாயப் பெருமக்களுக்கு அவர்களுடைய நிலத்தைப் பண்படுத்த வேண்டுமென்பதற்காக, இயற்கை உரமாக அமைந்துள்ளது வண்டல் மண். அந்த வண்டல் மண் குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்க வேண்டுமென்பதற்காக, 100 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்து, 1,519 ஏரிகள் இதற்காக தேர்வு செய்யப்பட்டு அந்த ஏரிகளில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகள் பங்களிப்புடன், அரசும் சேர்ந்து விவசாயிகளுக்கு விலையில்லாமல் வண்டல் மண்ணை அள்ளுவதற்கு அனுமதி அளித்து, அந்த விவசாயிகளும் அந்த வண்டல் மண்ணை அள்ளி, நிலங்களைப் பண்படுத்தி வருகின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். பல ஆண்டுகாலமாக, விவசாயிகள், தங்களுடைய நிலங்களுக்கு இயற்கை உரம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அந்த இயற்கை உரம் வண்டல் மண். அப்படிப்பட்ட வண்டல்மண் தங்களது ஏரிப்பகுதியிலே இருக்கின்றது. அந்த ஏரிப்பகுதியிலே இருக்கின்ற வண்டல் மண்ணை, விலையில்லாமல் எடுத்துக்கொள்வதற்கு அரசு அனுமதி வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, விவசாயிகளின் பங்களிப்புடன் அதை இலவசமாக அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏரிகளில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளிக் கொள்ளலாம் என்று உத்தரவு வழங்கியதன் காரணமாக, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் பெருமகிழ்ச்சியில் இருக்கின்றார்கள். அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளித் தங்களுடைய நிலங்களுக்கு அதனை எருவாகப் பயன்படுத்துகின்ற காட்சியை நாம்

பார்க்கின்றோம். ஆகவே, இன்றைக்கு, அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்பதற்காக 300 கோடி ரூபாயை நாங்கள் அளித்தோம். அதற்காக, 2,065 ஏரிகள் எங்களால் தேர்வு செய்யப்பட்டு, இந்தப் பணி விரைவாகத் தொடங்கவிருக்கின்றது. இந்தக் குடிமராமத்துப் பணி, விவசாயிகள் பங்களிப்போடு, அரசோடு சேர்ந்து நடக்கும் மிகப்பெரிய பணி. இதற்கு முன்பெல்லாம், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபொழுது, 'டெண்டர்' விட்டு இந்தப் பணியை தொடங்கும் அரசு. இப்பொழுது அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் பங்களிப்போடு அரசும் இணைந்து, இந்த குடிமராமத்துத் திட்டத்தை நிறைவு செய்கின்றது. ஏனென்று சொன்னால், இந்தத் திட்டம் முழுமையாக விவசாயிகள் திட்டம்! இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு முழுக்க, முழுக்கப் பயன்பட வேண்டுமென்பதற்காக. அரசு இந்த குடிமராமத்துத் திட்டத்தை விவசாயிகளின் பங்களிப்போடு இன்றைக்கு நிறைவேற்றி வருகின்றது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் 13.03.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மணிமங்கலம் ஏரியிலே, முதன்முதலாக, நேரடியாகச் சென்று அந்தக் குடிமராமத்துப் பணியை தொடக்கிவைத்தேன். அதுபோல, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அமைச்சர் அவர்கள், ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகளில் குடிமராமத்துப் பணிகளை தொடக்கி வைத்தார்கள். அதற்குப் பிறகு அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. 55 நாள் கழித்து, இங்கிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் 07.05.2017 அன்று, சைதாப்பேட்டை கோதண்டராமர் திருக்கோயில் குளத்தில் தூர்வாரினார். எல்லோரும் தூர்வாரினால் எங்கே தூர்வாருவார்கள்? ஏரிகள், குளத்தில் தூர்வாருவார்கள். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் கோயில் குளத்தில் தூர்வாரினார். எண்ணிப்பாருங்கள். நாமெல்லாம், விவசாயப் பெருங்குடி மக்கள், மழை பெய்கின்ற காலங்களிலே, பெய்கின்ற மழை நீரைக் குளங்கள், ஏரிகளில் சேகரிக்க வேண்டும், கிணற்றிற்கு நிலத்தடி நீர் உயர வேண்டும், பாசனத்திற்குத் தேவையான நீர் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையிலே குடிமராமத்துத் திட்டத்தை அறிவித்தோம். இந்தத் திட்டம் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று கருதப்படுவதோடு, மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்று அவர்களுக்கு மகிழ்ச்சியையும் அளித்து வருகின்றது. இதனால் அரசுக்கு மிகப்பெரிய செல்வாக்கு மக்களிடத்திலே கிடைக்கின்றது என்று எண்ணி, இவர் கோயில் குளத்தில் சென்று தூர்வாருகின்றார். இந்தக் கோயில் குளம் பல ஆண்டுகளாக வறண்டு கிடந்தது. அப்பொழுதெல்லாம் இவருக்குக் கண் தெரியவில்லை. நான் தூர்வாரியதையொட்டி, இந்த அரசுக்கு நல்ல பெயர் ஏதும் வந்துவிடுமே என்று எண்ணி, இவர் கோயில் குளத்தில் தூர்வாரினார். சரி, தூர்வாருவதும் நல்லது தான். ஏனென்றால், கோயில் குளத்தில் தூர்வாருவதால் புண்ணியம் கிடைக்கும், யாரோ சொல்லியிருப்பார்கள் என்று எண்ணுகின்றேன். அதனால் தான், கோயில் குளத்தில் சென்று, புண்ணியம் தேடுவதற்காக அந்த பணியைச் செய்திருப்பார் என்று நான் கருதுகின்றேன். அதற்குப் பிறகு, இப்பொழுது என்னுடைய தொகுதிக்கு போய்விட்டார்.

தமிழகத்தில், பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சி ஒன்றிய துறைக்கு உட்பட்ட ஏரி, குளங்கள் 40 ஆயிரத்திற்கு மேல் இருக்கின்றன. இத்தனை குளங்களிலும் ஒரே நேரத்தில் தூர்வாருவது என்பது இயலாத காரியம்! படிப்படியாகத் திட்டமிட்டு, அரசு அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, குடிமராமத்துப் பணி மூலமாக, விவசாயிகள் பங்களிப்புடன் இந்தத் திட்டத்தை இன்றைக்கு நிறைவேற்றி வருகின்றது. ஆனால், இவர்கள் வேண்டுமென்றே, எந்த அனுமதியும் பெறாமல், குளத்திற்குச் சென்று மண்ணை அள்ளுவது எப்படி நியாயம் ஆகும்? இது அரசாங்கத்தினுடைய சொத்து; இது அரசாங்கத்தினுடைய குளம், ஏரி. இந்த அரசாங்கத்தினுடைய குளம், ஏரியில் தூர்வாரவேண்டுமென்று சொன்னால், அரசாங்கத்தினுடைய அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்றுத்தான் அந்தப் பணியைத் தொடங்க வேண்டும். இவர்கள் எந்த அனுமதியும் பெறாமல் அந்த குளத்திற்குச் செல்கின்றார்கள். ஆனால், அங்கே இருக்கின்ற விவசாயிகள், அந்தக் குளம், ஏரிகளிலிருந்து, வண்டல் மண்ணை தங்களின் நிலப் பயன்பாட்டிற்காக எடுத்துச் செல்கின்றார்கள். அதை மறித்து, இவர்களுடைய கட்சிக்காரர்கள், அங்கே சென்று, அந்தக் குளத்தில் எந்த அனுமதியும் இல்லாமல், மண் அள்ளுவது எந்தவிதத்திலே சரியாக இருக்கும்? இதை நேரடியாகப் பார்க்க வேண்டுமாம். இவையெல்லாம் இந்த ஆட்சியின் மீது பழி போடுவதற்கான திட்டம். ஆகவே, அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் சிறப்பாக ஆட்சி செய்து வருகிறது. சட்டப்படியான ஆட்சி. சட்டப்படிதான் அம்மாவினுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு வண்டல் மண் அள்ளுவதற்கு, அதற்குண்டான அதிகாரிகளிடத்திலே அனுமதி பெற்றுத்தான் அந்த வண்டல் மண்ணை எடுத்துச் செல்ல வேண்டும். இது தான் அரசினுடைய உத்தரவு. அதன்படி தான், ஆங்காங்கே இருக்கின்ற குளங்கள், ஏரிகள் மூலமாக வண்டல் மண் விவசாயிகள் இன்றைக்கு அள்ளிச் செல்கின்றார்கள். ஆனால், இவர்களுக்கு மட்டும் தனி விதி, தனிச் சட்டம், இவர்கள் நினைத்ததை செய்ய வேண்டும். ஒருக்காலும் நடக்காது. மாண்புமிகு அம்மாவினுடைய அரசு சட்டத்தின் ஆட்சியில் நடக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இன்னொரு கருத்தையும் எதிர்க்கட்சித்தலைவர் சொல்லியிருக்கின்றார். ‘‘இவர்களுடைய மாவட்டத்திலே எந்தப் பணியும் நடைபெறவில்லை. அதனால்தான், முதலமைச்சர் தொகுதியிலே சென்று, நான் தூர்வாரினேன்’’ என்ற ஒரு தவறான செய்தியைச் சொல்லி வருகின்றார். என்னுடைய எடப்பாடி வட்டத்தில் பொதுப்பணித் துறையின் கீழ் 8 நீர்நிலைகள், உள்ளாட்சித் துறையின் கீழ் 31 நீர் நிலை என மொத்தம் 39 நீர்நிலைகள் மாவட்ட அரசிதழில் விளம்புகை செய்யப்பட்டுள்ளன. தற்போது வரை 36 நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு வருகின்றன. 2,326 விவசாயிகள், 2 இலட்சத்து, 62 ஆயிரத்து 803 கன மீட்டர் வண்டல் மண் மற்றும் சவுடு ஆகியவற்றை எடுத்துச் சென்றுள்ளனர் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில், 133 நீர்நிலைகளும், உள்ளாட்சித்துறை கட்டுப்பாட்டில், 846 நீர்நிலைகளும் என மொத்தம், 979 நீர்நிலைகள் உள்ளன. இதில், 26.07.2017 வரை, 415 நீர்நிலைகளில் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 26.07.2017 வரை, 37 ஆயிரத்து 616 விவசாய பெருமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 3 கோடியே 51 இலட்சத்து, 41 ஆயிரத்து 888 கன மீட்டர் களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் கிராவல் எடுக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதியில் கூறுவார்கள், குழம்பிய குட்டையில் மீன் பிடித்தல் என்று – அது போல இவர் கூறுகிறார்.

சேலம் மாவட்டத்தில், குடிமராமத்துப் பணிகளே நடைபெறவில்லை, அதுவும் எனது தொகுதியில் நடைபெறவில்லை என்று – முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பதுபோல, ஏற்கெனவே எங்கள் பகுதி விவசாய பெருமக்களால் தொடங்கி தூர் வாரி முடிக்கப்பட்ட கச்சராயன் குட்டையில் தூர் வார வருகிறார் – பார்வையிட வருகிறார் என்று.

அரசியல் செய்வதற்கு என்று எவ்வளவோ இடங்கள் உள்ளன. ஏற்கெனவே, வறட்சியால் பாதிக்கப்பட்டு, இவ்வாண்டு பெய்யும் பருவ மழையினை சேமித்து வைக்க குடிமராமத்து பணிகளைச் செய்து வரும் விவசாயிகளின் வாழ்க்கையில் அரசியல் செய்ய வேண்டாம் என்று எதிர்கட்சிக்காரர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, 140 ஆண்டுக்காலம் இல்லாத வறட்சி! இன்றைக்குத் தமிழகத்தில் போதிய மழை இல்லை! நமக்கு 32 சதவீதம் தான் மழை பொழிந்துள்ளது! ஆகவே, நீர்நிலைகளில் நீர் இல்லை. ஒருசில இடங்களில் 1,000 அடிக்கு ஆழ்துளை போட்டால்தான் குடிநீர் கிடைக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, தமிழகத்திலே எங்கும் குடிநீர் பிரச்சினை இல்லை என்கின்ற நிலையை எடுத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்றைக்கு 2,247 கோடி ரூபாய் நிவாரணம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஆங்காங்கே நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். புதிதாகப் பயிர் செய்கின்ற விவசாயிகளுக்குத் தேவையான கடனை, உடனடியாக வழங்க ஆணையிட்டு, விவசாயிகளுக்குத் தேவையான பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகின்றது என்பதையும் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, கல்வியிலும் புரட்சியையும் மறுமலர்ச்சியையும், இன்றைக்கு எம்.ஜி.ஆர். வழியில் அம்மாவினுடைய ஆட்சியில் பார்க்க முடிகிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, கல்விக்கென தனிக்கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் கல்வி வளர்ச்சியில் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்

என்றால் அது மிகையன்று! சேர்க்கை விகிதம் கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் அமர்கின்ற காலத்தில் 21 சதவிகிதமாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், தமிழகத்தில் 2016ஆம் ஆண்டு உயர் கல்வி சேர்க்கை விகிதம் 44.3 சதவிகிதம். இது இந்திய அளவில் 24.5 சதவிகிதம் ஆகும்.

இதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்களின் 6 ஆண்டுகால ஆட்சியில் 4 பொறியியல் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள், 21 அரசு கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் என்று மொத்தம் 65 கல்லூரிகள் துவக்கப்பட்டதுதான் என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் கூறுகிறேன். இப்படி பல்வேறு கல்லூரிகள் துவங்கப்பட்டதன் விளைவாக ஏழை, எளிய, கிராமப்புற, ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்து, அம்மாவினுடைய அரசில் இன்று தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது! படிப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் அம்மா ஆட்சியில் இவ்வருடம் 8 அரசு கலை கல்லூரிகள், 3 பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள் என்று மொத்தம் 11 கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை இங்கு பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் 75 மீனவர் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் அம்மா அரசின் தொடர் முயற்சியின் பலனாக நேற்று 75 மீனவர்கள் இலங்கை நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எங்களது தொடர் வலியுறுத்தலின் காரணமாக இலங்கை அரசை வலியுறுத்திய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு நான் இச்சமயத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல, தமிழகத்திலே, வீடு இல்லாதவர்களுக்குப், புதிதாக, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் வீடு கட்டிக் கொள்வதற்கு 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. எந்த ஒருவருக்கும் வீடு இல்லை என்ற நிலைமாறி அனைவருக்குமான இல்லங்கள் என்ற நிலை இன்றைக்குத் தமிழகத்தில் உருவாக வேண்டுமென்ற அடிப்படையில், தொடர்ந்து, பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து வலியுறுத்தியதன் காரணமாக, நேற்று இராமேஸ்வரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில், தமிழகத்திற்கு எத்தனை இலட்சம் வீடுகள் கேட்டாலும் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இது அம்மாவின் அரசுக்கு கிடைத்த வெற்றி!

❖ நெசவாளிகளுக்கு குறிப்பிட்ட அளவிற்கு விலையில்லா மின்சாரம், கடும் வறட்சியிலும் குடிநீர் பிரச்சினையை சமாளித்தல் அதேபோல, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கடுமையான மின்வெட்டு ஏற்பட்டது. இதனால், தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் அமர்ந்தவுடன் அப்படிப்பட்ட நிலையை மாற்றி,

தமிழகத்திலே மூன்றாண்டுகளில் சரிசெய்து மின்வெட்டே இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டினார்கள் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருவண்ணாமலை மாவட்ட அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று இரண்டு புதிய அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகின்றேன்.

அறிவிப்புகள்

- ❖ திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர், செங்கம், கலசபாக்கம் வட்டங்களில் உள்ள மலைகிராமங்களை உள்ளடக்கி, ஜமுனாமரத்தூர் என்ற புதிய வட்டம் உருவாக்கப்படும். இதன்மூலம், மலைகிராமங்களிலுள்ள மக்கள், அவர்கள் பகுதியிலேயே புதியதாகத் திறக்கப்பட உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில் தங்களது தேவைகளைச் சிரமமின்றி பூர்த்தி செய்து கொள்ளலாம்.
- ❖ திருவண்ணாமலையில் இதுவரை இரண்டு வருவாய்க் கோட்டங்கள் மட்டுமே உள்ளன. எனவே நிருவாக மேம்பாட்டுக்காகவும், பொதுமக்கள் வசதிக்காகவும் ஆரணி, போளூர், கலசபாக்கம் மற்றும் புதியதாக அமையவுள்ள ஜமுனாமரத்தூர் என்கிற 4 வட்டங்களை உள்ளடக்கி, ஆரணியைத் தலைமையிடமாகக் கொண்டு 3ஆவது புதிய வருவாய் கோட்டம் அமைக்கப்படும்.

அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு. ஏழை, எளியவர்களுடைய அரசு. ஏழை, எளியவர்களின் நலனைக் காக்கக்கூடிய அரசு. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திலே குறிப்பிட்டார்கள், “எனக்குப் பின்னாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் 100 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்தில் இருந்து, ஏழை மக்களுக்கு நன்மைபயக்கும்” என்று அறிவித்தார்கள். அந்த வெற்றிப் பாதையிலே, அம்மாவினுடைய அரசு செல்லும். அதற்கு நீங்கள் துணை நிற்பீர்கள் என்று அன்போடு, நம்பிக்கையோடு கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! ஓங்குக அம்மாவினுடைய புகழ் எனச் சொல்லி விடைபெறுகிறேன்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

29.07.2017 அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற

‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி
மக்கள் மனதில் நிற்பவர், எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழா பெரம்பலூரில்

ஏழைகளின் இறைவன்! எல்லோருக்கும் தோழர்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இம்மகத்தான விழாவிற்குச் சிறப்புரை ஆற்றிய, தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே!

முன்னிலை வகிக்கின்ற நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.வைத்திலிங்கம் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. வெங்கடேசன் அவர்களே! அமைச்சர் பெருமக்கள், திரு. திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே! திரு. செங்கோட்டையன் அவர்களே! திரு. செல்லூர் ராஜு அவர்களே! திரு. தங்கமணி அவர்களே! திரு. வேலுமணி அவர்களே! திரு. சி.வி. சண்முகம் அவர்களே! திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! டாக்டர் வி.சரோஜா அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! திரு. ஆர்.காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! திரு. பா.பெஞ்சமின் அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! திரு.எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே!

திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்களே! திருமதி எஸ்.வளர்மதி அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர்களே! சட்டமன்ற உறுப்பினர்களே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகத் தொண்டர்களே! அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, இளைஞர்களே! மாணவ, மாணவிகளே! தாய்மார்களே, நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்திற்குப் பல சிறப்புகள் உள்ளன. சிறுவாச்சூர் அருள்மிகு மதுர காளியம்மன் கோவில், செட்டிகுளம் பாலதண்டாயுதபாணி கோயில், போன்ற பல தெய்வத் திருத்தலங்களை கொண்டு ஆன்மீக மணம் கமழும் பூமியாகவும் பெரம்பலூர் மாவட்டம் திகழ்கிறது.

ரஞ்சன்குடிகோட்டை, சாத்தனூர் கல்மரம் போன்ற சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பல இடங்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ளன. இப்படிப் பல பெருமைகளைப் பெற்றிருக்கும் இந்த மாவட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு நிகராகப் பொருளாதார அளவில் சிறந்த மாவட்டமாக உருவாக்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல திட்டங்களைத் தீட்டினார்கள்.

பெரம்பலூர் மாவட்டத்தின் மீது மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தனிக்கருணையும், பாசமும் இருந்தது. அதற்குக் காரணம் இருக்கிறது. உலகில் வாழும் அத்தனை தமிழர்களும் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களை ‘அம்மா’ என்று அழைத்தாலும் தமிழ்நாட்டுக்குத் தன்னிகரற்ற தாயாக அவர் விளங்கினாலும் பெரம்பலூர் மாவட்டத்தைப் பெற்றெடுத்த பெருமைமிக்க தாய் அவர். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தாம், 1995 நவம்பர் 1ஆம் தேதி திருச்சி மாவட்டத்தில் இருந்து பிரித்து, பெரம்பலூரைப் புதிய மாவட்டமாக உருவாக்கிய தாய். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தாம் பெரம்பலூர் மாவட்டத்திற்கு முதல்முதலாக வந்த தமிழ்நாடு முதலமைச்சர் என்ற பெருமையைப் பெற்றார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பட்டதும்தான் பெரம்பலூர் மாவட்டம் புதுப்பொலிவைப் பெற்றது. விவசாயத்திலும் தொழில் வளர்ச்சியிலும் இந்த மாவட்டம் முன்னேறத் தொடங்கியது. குறிப்பாக, கடந்த ஆறு ஆண்டுகளாக, பெரம்பலூர் மாவட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் மேற்கொண்ட ஒரு சில திட்டங்களைக் குறிப்பிட நான் கடமைப்பட்டுள்ளேன்.

பெரம்பலூர் மாவட்டம் 1 இலட்சத்து 75 ஆயிரத்து 736 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது. இதில் பெரும்பான்மை மக்கள் விவசாயத் தொழிலாளர்களாக உள்ளனர். எனவே, பெரம்பலூர் மாவட்டம் விவசாயத்தையே நம்பி இருக்கிறது. அதனால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த மாவட்டத்தின் மீது அதிக அக்கறை எடுத்துக் கொண்டு பல திட்டங்களைச் செயல்படுத்தினார்கள்.

அவற்றுள் சிலவற்றை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சின்ன வெங்காய சாகுபடியில் பெரம்பலூர் மாவட்டம், முன்னோடி மாவட்டமாகத் திகழ்கிறது. இம்மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சின்னவெங்காயம் பயிரிடப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, சின்ன வெங்காய விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக, செட்டிகுளம் வெங்காய வணிக வளாகம், 27.06.2014 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது. இந்த இவ்வணிக வளாகத்தில் இதுவரை ரூபாய் 4 கோடியே 39 இலட்சம் மதிப்பில் 2,243 டன் சின்ன வெங்காயப் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. இதன்மூலம், 10,348 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசால், 2012–2013ஆம் ஆண்டு முதல், பெரம்பலூர் மாவட்டத்தில் கோழி அபிவிருத்தி திட்டத்தின்கீழ், 350 கறிக்கோழிப் பண்ணைகள் மற்றும் 215 நாட்டுக்கோழிப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இதற்காக ரூ.8.74 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க தொடங்கப் பெற்ற பல திட்டங்கள் அம்மாவின் அரசால் முடிக்கப்பெற்று, பெரம்பலூர் மாவட்டத்தில் மட்டும், கடந்த மார்ச் மாதத்தில் 85 கோடியே 69 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

முக்கியமாக, பாடலூரில் 36 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தினசரி 1 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன் கொண்ட நவீன தொழில் நுட்ப வசதியுடன் கூடிய பால் பண்ணை திறந்து வைக்கப்பட்டது.

தற்போது, செட்டிக்குளம் வணிக வளாகத்தில் சுமார் 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் சின்னவெங்காய மதிப்பு கூட்டு மையம் அமைத்து, இம்மாத இறுதியிலிருந்து இயங்கும் நிலையில் உள்ளது. இதனால், பெரம்பலூர் மாவட்ட மக்காச்சோளம் மற்றும் சின்னவெங்காய உற்பத்தியாளர் நிறுவன விவசாயிகள், தங்களது சின்ன வெங்காயத்தினை, மதிப்புக் கூட்டுப் பொருளாக மாற்றி விற்பனை செய்து இலாபம் ஈட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 4 கோடியே 82 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டப்பட்டுள்ள உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் திறந்து வைக்கப்படுகின்றன. அதைப்போல 11 கோடியே 44 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், குன்னம்

மற்றும் ஆலத்தூர் வட்டத்திற்குட்பட்ட பள்ளிக்கல்வித்துறை மற்றும் சார்நிலைக் கருவூலக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

77 கோடியே 41 இலட்சத்து 94 ஆயிரத்து 834 ரூபாய் மதிப்பீட்டில், 9 ஆயிரத்து 102 பயனாளிகள் பயன்பெறும் வகையிலான நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் மையப்பகுதியில் இருக்கும் பெரம்பலூர் மாவட்டத்திற்கு மேலும் பல திட்டங்களைக் கொண்டுவர இந்த அரசு தயாராக இருக்கிறது. உங்களுக்கெல்லாம் புது நம்பிக்கையையும், புத்துணர்வையும் ஏற்படுத்துவதற்காகத்தான், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா இங்கு சீரும் சிறப்புமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர் கடந்துவந்த பாதையையும், அவர் எட்டிய சாதனை சிகரத்தையும், அவர் ஏழைகளுக்காக தீட்டிய திட்டங்களையும், இந்தத் தலைமுறை இளைஞர்களும் குழந்தைகளும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவேதான் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டுவிழா மாவட்டந்தோறும் அரசு சார்பில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

'வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்களின் மனதில் நிற்பவர் யார்?' என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தனது பாடல் வரிகள் மூலம் கேள்வி கேட்பார். அந்தக் கேள்விக்குப் பதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்தான். காலங்கள் கடந்தும் மக்களின் மனதில் நிலையாக நிற்கக்கூடிய வெகு சிலரில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் ஒருவர்.

கிராமப் பகுதிகளில் தேர்தல் நேரத்தில், "நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள்?" என்று கேட்டால், "எம்.ஜி.ஆர். அவர்களுக்குத்தான் வாக்களித்தேன்" என்று கூறும் முதியோர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள். அரசின் சார்பில் விலையில்லா வேட்டி சேலை வழங்கினால், "மகராசன் எம்.ஜி.ஆர். கொடுத்த வேட்டி சேலை" என்று கூறும் முதியோர் இன்றைக்கும் இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருக்குப் பிறகு, ஓர் பெண் எம்.ஜி.ஆராகத் தமிழ்நாட்டிற்கு கிடைத்தவர், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! மாண்புமிகு புரட்சித்தலைவர் தமது ஆட்சிக்காலத்தில் மக்களுக்காகத் தீட்டி இருந்த திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் வழியில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் முன்னோடி திட்டங்கள் பலப்பல தந்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார். இந்த மகத்தான இரண்டு தலைவர்களுமே இறைவன் அருளால் தமிழ்நாட்டிற்குக் கிடைத்த வரம், கொடை. இதை எதிர்க்கட்சிக்காரர்களே ஒத்துக்கொள்வார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களும் அரசியலுக்கு வருவதற்கு முன்பு திரை உலகில் இருந்துகொண்டு மக்களுக்கு ஆற்றிய பணிகள்தாம் அவர்களை மக்கள் தலைவர்களாக உருவாக்கியது. இரண்டு தலைவர்களுமே உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதவர்கள். திறந்த இதயத்தோடு, மலர்ந்த முகத்தோடு, சுயநலம் சிறிதும் இல்லாமல் மக்களுக்காகவே உழைத்தார்கள், மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்தார்கள்.

அதனால்தான், மறைந்தும் மறையா வரம் பெற்று மக்கள் மனத்தில் நேற்றும், இன்றும், என்றும் நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார்கள்.

மக்கள் மனத்திலிருந்து, எந்த சக்தியாலும் இரண்டு தலைவர்களையும் பிரிக்கவே முடியாது. அவர்களுடைய நினைவுகள் மக்கள் மனத்தில் உள்ளவரை, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறியதைப் போல இன்னும் நூறாண்டுகள் ஆனாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிலைத்து நிற்கும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திடீரென்று ஓர் அரசியல் தலைவராக உயரவில்லை. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திறந்த இதயத்திற்குள் தமிழகத்தின் மக்கள் அன்புடனும், பாசத்துடனும் நுழைந்து குடிகொண்டவர்கள். அதனால்தான், குடியிருந்த கோயில் என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் இதயத்தைத் தான் நாம் நினைக்கத் தோன்றுகிறது!

மக்கள் திலகம் பிரபலமான நடிகரான பிறகு அவருக்கென தனிப்பாடல்கள் இல்லாமல் படங்கள் வெளியானதில்லை. அவரது திரைப்படப் பாடல்களில், வசனங்களில், ஒரு தீர்க்கதரிசியைப் போல் எதிர்காலத்தில் தன் மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை எளிமையாக தெரிவித்தார். "நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?" என்று தீர்க்கதரிசி நமது மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அன்றே சொன்னார்கள்.

திரையுலகச் சக்கரவர்த்தியாக, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆற்றிய சாதனைகளை இதுவரை யாரும் முறியடிக்க முடியவில்லை. மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், தனது திரை வாழ்க்கையிலேயே ஒரு மகத்தான தலைவருக்குரிய அத்தனை தகுதிகளையும் பெற்றிருந்தார்.

ஓட்டு வங்கிக்காக செயற்கையான குணங்களை அவர் பெற்றிருக்கவில்லை. இயற்கையாகவே அவருக்கு தொண்டு உள்ளமும், வள்ளல் தன்மையும் அமைந்திருந்தது என்பதற்கு பல உதாரணங்களை கூறலாம் என்றாலும், ஒருசில உதாரணங்களை இங்கே நினைவுகூர விரும்புகிறேன்.

புரட்சித்தலைவர் அவர்கள் திரைவாழ்வில் தன் சக நடிகர்களின் இன்ப துன்பங்களில் தாமும் பங்கெடுத்துக் கொள்வார். நடிகர்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தான். சுயவாழ்வில் உள்ளுக்குள் அழுது கொண்டிருந்தாலும், வெண்திரையில் ரசிகர்களைச் சிரிக்க வைக்கிற பல நடிகர் நடிகைகளை இனமறிந்து அவர்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்தவர் புரட்சித்தலைவர் அவர்கள். பொருளாதாரத்தால், நெருக்கடியைச் சந்தித்த பல நடிகர்களுக்காக சம்பளம் வாங்காமல் நடித்துக் கொடுத்து அவர்களை தன்னிறைவு அடையச் செய்து மகிழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்காக “பைத்தியக்காரன்” என்ற படத்திலும் நடிகை கண்ணாம்மாவுக்காக “தாலிபாக்கியம்” என்ற படத்திலும் நடிகர் அசோகனுக்காக “நேற்று இன்று நாளை” என்ற படத்திலும் தயாரிப்பாளர் ஏ.பி. நாகராஜனுக்காக “நவரத்தினம்” என்ற படத்திலும் சம்பளம் வாங்காமல் நடித்துக்கொடுத்திருக்கிறார்.

இப்படிப்பட்ட தன்னலமற்ற ஒரு நடிகரை, ஒரு தலைவரை தமிழ்நாடு பெற்றுத் தழைத்து ஓங்கியது. பேரறிஞர் அண்ணா அவர்களுக்காக “தாய் மகளுக்குக் கட்டிய தாலி” என்ற படத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நடித்துக் கொடுத்தார்கள். காரணம், பேரறிஞர் அண்ணா அவர்கள், அப்பழுக்கற்ற ஒரு அரசியல்வாதி. அரசியல்தான் ஒரு நாட்டின் ஆணிவேர் என்று மக்களை நம்ப வைத்த ஒரு பகுத்தறிவுவாதி என்பதால் அண்ணா அவர்களுக்காக ஓடி ஓடி உழைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன். சென்னை தி.நகர். வெங்கடாசலபதி கோவிலின் பின்புறம் எம்.ஜி.ஆர். அவர்களுக்குச் சொந்தமான அப்பு பங்களா இருந்தது. அந்த இடம் திரு.வி.கே.ராமசாமிக்குச் சொந்தமானது. அந்த இடத்தை அந்தக்காலத்தில் 4 இலட்சம் ரூபாய்க்கு திரு.வி.கே.ராமசாமி அவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவருக்கு விற்றார். பல ஆண்டுகள் ஆனது. அதன் மதிப்பு பல கோடி ஆனது. ஆனால், அந்த நேரம் மாண்புமிகு புரட்சித்தலைவர் திரு. வி.கே.ராமசாமியை அழைத்து இப்போது இந்த இடம் பலகோடி மதிப்புப் பெறும். ஆனால், நீங்கள் பழைய விலையான 4 இலட்சம்

ரூபாய் கொடுத்து இதை நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள் என்று பிடிவாதமாகக் கூறினார். மாண்புமிகு புரட்சித்தலைவருடைய பெருந்தன்மையையும் தாராள மனதையும் கண்டு திரு.வி.கே.ராமசாமி அவர்கள் மனம் நெகிழ்ந்து போனார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்பு அவர் பொதுமக்களுக்கு வாரிவழங்கிய சில நிதியுதவிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1960களில் சென்னை, தஞ்சை, மதுரையில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது, நிவாரணமாக 85 ஆயிரம் ரூபாயும், 5 ஆயிரம் ரிக்ஷா தொழிலாளிகளுக்கு மழை கோட்டு வாங்க ரூபாய் 1 இலட்சமும் வழங்கினார். மேலும், பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் பூகம்ப சேதங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாராளமான நிதியுதவி வழங்கினார்.

1970ஆம் ஆண்டில் பரங்கிமலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணமாக 200 மூட்டை அரிசியைப் பொன்மனச்செம்மல், மக்கள் திலகம் அவர்கள் வழங்கினார்.

மக்கள் திலகம் அளித்த நிவாரணம் மற்றும் நிதியுதவியில் நூற்றில் ஒரு பங்கைத்தான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். இன்னும் 99 விழுக்காடு அவர் அளித்த உதவியைச் சொல்ல வேண்டும் என்றால், அதற்கு நேரம் போதாது. மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், தாம் மக்களுக்குச் செய்த உதவிகளை உடனுக்குடன் மறந்து விடுவார். பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் பதிவு செய்த விபரங்கள்தாம் இவை. விளம்பரத்திற்காக மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் எந்த உதவியையும் யாருக்கும் செய்ததில்லை.

நடிகரும், பத்திரிகையாளருமான திரு. சோ ராமசாமி அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப்பற்றி ஒரு பேட்டியில் கூறும் போது, ‘‘எம்.ஜி.ஆர். விளம்பரத்துக்காக பிறருக்கு உதவி செய்கிறார் என்பது தவறு. விளம்பர நோக்கம் இல்லாமல் எம்.ஜி.ஆர். பிறருக்கு உதவுவதைப் பார்த்திருக்கிறேன். திரைப்படத் துறையில் அவருக்கு எதிராக இயங்கியவர்களுக்குக்கூட அவர் உதவியிருக்கிறார்’’, என்று கூறியிருக்கிறார். தன் அருகில் இருந்த சக நடிகர்களுக்கு உதவிய அவருடைய கரங்கள்தான் பின்னாளில் தமிழ்நாட்டுக்கே உதவும்படியாக நீண்டன. கொடுத்துக் கொடுத்து சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர் என்று அவருக்குப் புகழைப் பெற்றுத்தந்தன.

‘பாரத்’ விருது மற்றும் ‘பாரத ரத்னா’ விருது பெற்ற ஒரே தமிழ் நடிகர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். திரைவாழ்விலும் அரசியல் வாழ்விலும் மாண்புமிகு புரட்சித்தலைவரைப் போல இருக்க வேண்டும் என்று கனவு காண்பவர்கள், பொதுவாழ்வில் புரட்சித்தலைவரைப் போல பொதுமக்களுக்காக உதவிகள் செய்ய வேண்டும். நாட்டில் இயற்கைச் சீற்றங்கள் வரும்போதும், வறட்சியால் பாதிக்கப்படும் போதும் ஓடி வந்து உதவ வேண்டும். மக்களால் சம்பாதித்த பணத்திலிருந்து மக்களுக்காக ஒரு பகுதியைச் செலவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரைப் போல ஆக வேண்டும் என்று நினைப்பவர்கள் அதற்காகப் பல தியாகங்களைச் செய்ய வேண்டும். மற்றவர்களை விமர்சனம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் ஒருகாலமும் எம்.ஜி.ஆர். ஆக முடியாது!

தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒரே எம்.ஜி.ஆர்.தான்! எம்.ஜி.ஆராகக் கனவு காண்பவர்களின் நிலை, புலியைப் பார்த்துப் பூனை சூடுபோட்டுக் கொண்ட கதையாகத்தான் முடியும்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சினிமாவிலும், அரசியலிலும் எவரும் வீழ்த்த முடியாத அதிசய மனிதர். ஒரு நாட்டை ஒரு கலைவேந்தன் ஆள வேண்டும் என்று 200 ஆண்டுகளுக்கு முன்னர் தத்துவஞானி பிளாட்டோ கனவு கண்டார். அந்தக் கனவை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் முதன்முதலில் நனவாக்கிக் காட்டினார்.

வானத்தில் ஒரே பகலவனை, ஒரே சந்திரனைத்தான் பார்க்க முடியும். அதே போல எம்.ஜி.ஆர் என்பவர் இந்த உலகத்தில் ஒருவர்தான் இருக்க முடியும்.

நடிகராக இருந்து தலைவராக உயர நினைப்பவர்கள், மக்கள் களத்திற்கு வந்து மக்களுக்காக உழைக்க வேண்டும். மக்களின் இன்ப, துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அவர்கள் எம்.ஜி.ஆர். ஆக உயர்கிறார்களா? இல்லையா? என்று மக்கள் தீர்மானிப்பார்கள். மக்கள் மனக்கோட்டையை பிடிக்க இயலாதவர்கள் புனித ஜார்ஜ் கோட்டையை ஒருகாலமும் பிடிக்க முடியாது. “புரட்சித்தலைவரின் தீர்க்க தரிசனமும் திறமைமிக்க நிருவாகமும், தலைமையும் தமிழகத்தில் ஒரு பொற்காலத்தைத் தோற்றுவித்துள்ளது” என்று அரிசோனா பல்கலைக்கழக அறக்கட்டளைக் குழுவினர் ஒரு பேட்டியில் கூறியுள்ளனர்.

மக்கள் ஏற்றுக் கொண்ட தலைவர் புரட்சித்தலைவர் அவர்கள் ஏழைகளின் இறைவன், எல்லோருக்கும் தோழர், நல்லோர்க்குச் சோலை, தீயோரை திருத்தும் திருக்குறள். புரட்சித்தலைவர் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கி ஆட்சிக் கட்டிலில் அமர உழைத்த உழைப்பையும், பட்ட அவமானங்களையும் செய்த தியாகங்களையும், ஒவ்வொரு இயக்கத் தொண்டனும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

கழகத் தொண்டர்களின் விசுவாசமும், தியாகமும்தான் இந்த இயக்கத்தைக் காப்பாற்ற முடியும் என்பதை நினைவில் நிறுத்துங்கள்! தியாகமும் விசுவாசமும் எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு கதையின் மூலம் கூறினால் நன்றாகப் புரியும்.

ஒரு பசுமையான காட்டில் திடீரென்று தீப்பற்றியது. அதுவரை அங்கு வாழ்ந்து கொண்டிருந்த விலங்குகள், பறவைகள் அனைத்தும் வேகம் வேகமாக அந்தக் காட்டிலிருந்து வேறு காட்டிற்குக் குடிபெயரத் தொடங்கின.

வானவீதியில் போய்க்கொண்டிருந்த இறைவன் இந்தக் காட்சியை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அங்கு இறைவன் கண்ட காட்சி அவரை வியப்பில் ஆழ்த்தியது. ஒரு சிட்டுக்குருவி காட்டில் இருந்த ஒரு சிறு ஓடையிலிருந்து, காலையில் இருந்து கடும் வெயிலையும் பொருட்படுத்தாது, தனது சிறு அலகால் நீரை மீண்டும் மீண்டும் எடுத்து வந்து காட்டுத்தீயின் மீது தொடர்ந்து தெளித்துக் கொண்டிருந்தது. அந்தச் சிட்டுக்குருவியின் அருகில் சென்ற இறைவன் "சிட்டுக்குருவியே! உன் செயல் வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது. நீயோ, சிறு குருவி. உன் சிறு அலகால் துளி அளவு மட்டுமே நீரை எடுக்க முடியும். அப்படி எடுத்து வந்து இந்தப் பெரிய காட்டுத் தீயில் தெளித்தால், தீ அணைந்து விடுமா? என்று கேட்டார். இறைவன் பேசுவதை காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் செயலில் சுறுசுறுப்பாக இருந்தது. 'என் கேள்விக்குப் பதில் சொல் குருவியே!' என இறைவன் திரும்பவும் கேட்டார். நான் இந்தக் காட்டில்தான் பிறந்தேன். இந்தக்காட்டில்தான் வளர்ந்தேன். இந்தக்காட்டில்தான் பறந்து திரிந்து விளையாடினேன். இருக்க இடமும் உண்ண உணவும் கொடுத்த இந்தக் காடு, ஏதோ விதி வசத்தால் இப்படி ஒரு காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நான் வேறு காட்டுக்கு செல்வது நன்றி மறந்த செயல் ஆகாதா? என் கடமை என்னால் முடிந்த வரை இந்த நீரை தெளிப்பதுதான் என்றது. அந்தச் சிறு குருவியின் நன்றியுணர்வையும் கடமையுணர்வையும், கண்ட இறைவன் அந்தச் சிட்டுக் குருவியிடம், "குருவியே.. நான் இறைவன் உன் நன்றி உணர்வை மெச்சினேன். என்னிடம் ஏதாவது வரம் கேள்" என்றார். "இந்த காட்டுத்தீ அணைந்து, பழையபடி பசுமையாக மாற வேண்டும்" என்றது. "வரம் கொடுத்தேன்" என்று இறைவன் மறைந்தார். காட்டுத்தீ அணைந்து காடு பசுமையாக மாறியது. குடிபெயர்ந்த பறவைகளும் விலங்குகளும் திரும்பவும் காட்டுக்குத் திரும்பின. அந்தச் சிட்டுக் குருவியைப்போல.. ஒவ்வொரு கழகத் தொண்டனும் விசுவாசமும் தியாகமும் உடையவர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விசுவாசத்திற்கும் தியாகத்திற்கும் உதாரணமாக திகழ்கிற நம் கழகக் கண்மணிகளுக்கு இந்தக் கதை பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவிற்காக உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும் கழகத் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

பெரம்பலூர் மாவட்ட மக்கள், விடுமுறை நாட்களில் தங்கள் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகச் சுற்றுலா சென்று வர, அருகில் உள்ள முக்கொம்பிற்கோ, அல்லது கல்லணைக்கோ, அல்லது அருகில் உள்ள மாவட்டங்களுக்கோ செல்லவேண்டிய நிலை உள்ளது என்றும் எனவே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கல்லாற்றின் குறுக்கே 33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட விஸ்வகுடி அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலாத் தலமாக்க வேண்டுமென்று இம்மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று விஸ்வகுடி அணைக்கட்டு பகுதியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொழுதுபோக்குப் பூங்கா அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, பெரம்பலூர்–கடலூர் மாவட்டத்தினை இணைக்கும், திருவாளந்துறை–கீழகல்பூண்டி இடையே, கல்லாற்றின் குறுக்கே 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஓர் உயர்மட்ட மேம்பாலம் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே அமைந்துள்ள விளையாட்டு மைதானம், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் குளம் ஆகியவை அடங்கிய விளையாட்டு வளாகத்திற்கு **'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு வளாகம்** என்று பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
05.08.2017 அன்று பெரம்பலூரில் நடைபெற்ற
'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

மாற்றுக் குறையாத மன்னவன் என்று மக்கள் போற்றிப் புகழும் வெற்றித் திருமகன் எம்.ஜி.ஆருக்கு விழுப்புரத்தில் நூற்றாண்டு விழா!

விழுப்புரம் மாவட்டத்தில் குடிநீர்த் திட்டமும்! பாதாளச் சாக்கடைத் திட்டமும்!

அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெறும் புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்த மகத்தான விழாவிற்கு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களே! கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் க.காமராஜ் அவர்களே! ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வெ.ஏழுமலை அவர்களே! உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர்

திரு. இரா. குமரகுரு அவர்களே! கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ. பிரபு அவர்களே! வானூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.சக்ரபாணி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு. திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே! திரு. செங்கோட்டையன் அவர்களே! திரு. செல்லூர் ராஜு அவர்களே! திரு.தங்கமணி அவர்களே! திரு.வேலுமணி அவர்களே! திரு.ஜெயக்குமார் அவர்களே! திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! டாக்டர் வி.சரோஜா அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! திரு. ஆர்.காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்களே! திரு. கே.சி.வீரமணி அவர்களே! திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே! திரு. பா.பெஞ்சமின் அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! திரு. எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி. வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் இல.சுப்பிரமணியன் அவர்களே! தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத் தலைவர் திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி அவர்களே! தலைமைக் கழக நிருவாகிகளே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கூட்டுறவுச் சங்க நிருவாகிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகத் தொண்டர்களே! அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிப் பேசுவது என்றால் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துப் பேசுவது? எந்த ஆற்றலைப் பற்றிப் பேசுவது? எட்டுத்திசைகளையும் வென்ற, 'எட்டாவது வள்ளல்' புரட்சித்தலைவர், பொன்மனச்செம்மல் அவர்கள் பள்ளிக்கு செல்லும் வயதில் வறுமையின் காரணமாக, அரிதாரம் பூசி நாடகத்தில் நடிக்கத் தொடங்கினாரே! அதைப்பற்றியா? திரையுலகில் முடிசூடா மன்னனாகப் புகழின் உச்சியில் இருந்தாரே! அதைப்பற்றியா? அரசியல் வரலாற்றில் யாராலும் அசைக்க முடியாத முதலமைச்சராக, மன்னாதி மன்னனாக, தமிழ்நாட்டின் வெற்றித் திலகமாகத் திகழ்ந்தாரே! அதைப்பற்றியா? எதைப்பற்றிப் பேசுவது? என்ற பிரமிப்பு எனக்கு ஏற்படுகிறது!

மாண்புமிகு புரட்சித்தலைவர் பற்றி எதைப் பேசினாலும், மாதக்கணக்கில் பேசலாம்! அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரம் போல, அவ்வளவு அரிய செய்திகள் மாண்புமிகு புரட்சித்தலைவரின் வாழ்க்கையிலே பொதிந்து கிடக்கின்றன. புரட்சித்தலைவர் அவர்களுடைய வாழ்க்கை ஓர் ஆழமான கடலைப் போன்றது. அதில் மூழ்கினால், எல்லோருடைய வாழ்க்கைக்கும் தேவையான விலை மதிப்பற்ற முத்தான படிப்பினைகள் கிடைக்கும். என்னைப் பொறுத்தவரை புரட்சித்தலைவருக்கு நூற்றாண்டு விழா எடுக்கிற இந்த இனிய ஆண்டில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்க்கை வரலாற்றில் நான் பலமுறை மூழ்கியிருக்கிறேன். இன்னும் 27 மாவட்டங்களில் 27 முறை நான் மூழ்க ஆவலோடு இருக்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பல ஆண்டுகள் தமிழ்நாட்டில் தலைப்புச் செய்திகளாகவே வாழ்ந்த ஒரு மாபெரும் தலைவர். சிலர் வரலாறு படிப்பார்கள். சிலர் வரலாறு படைப்பார்கள். சிலரில் சிலர்தான் வரலாறாக வாழ்வார்கள். ஆனால், புரட்சித்தலைவர் அவர்கள்தான் வரலாறாகவே இந்தப் பூமிக்கு இறைவனால் அனுப்பப்பட்ட மாமனிதர். "தோன்றின் புகழோடு தோன்றுக" என்ற திருக்குறள் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்காகவே எழுதப்பட்டதோ எனத் தோன்றும் வகையில் மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. தோன்றும் போதே புகழோடு தோன்றியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். இலட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தில் புரட்சித்தலைவர் தோன்றினார் என்றால் அவர் தனியாகத் தெரிவார்! அவர் புகழ்மட்டுமே அங்கு பேசப்படும்!

"மாபெரும் சபைதனில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும். ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று போற்றிப் புகழ வேண்டும்" என்று அவருடைய பாடலே அவருக்குப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனிச்சிறப்புகள் பல இருந்தாலும் விழுப்புரம் மாவட்டத்திற்கு என்று மிகப்பெரிய பாரம்பரியம் இருக்கிறது. இந்த மாவட்டம் ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் அழகுபடுத்தப்பட்ட பெருமைப்படுத்தப்பட்ட புகழ்பெற்ற மாவட்டம் ஆகும். விழி மாநகரம் என்றும் 'நடு நாடு' என்றும் அழைக்கப்பெறுகின்ற இந்த விழுப்புரம் மாவட்டத்தில் சான்றோர்கள் பலர் தோன்றியுள்ளார்கள். சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்த சுந்தரமூர்த்தி நாயனார், காஞ்சிப் பெரியவர் பரமாச்சாரியார் சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள், கவிச்சக்கரவர்த்தி கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல், ஆசுகவி, காளமேகப்புலவர் போன்ற பல பெரியோர்கள் பிறந்த புனித மண் இந்த மாவட்டம் ஆகும்.செஞ்சியை ஆண்ட தேசிங்குராஜன் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரரே. பெரிய புராணம் புகழும் மெய்ப்பொருள் நாயனார் இப்பகுதியை ஆண்டிருக்கிறார். பாரி மகளிரை மணந்த கோப்பெருஞ்சிங்கன் இப்பகுதியில் 37 ஆண்டுகள் தொடர்ந்து ஆண்டிருக்கிறார். கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி இப்பகுதியை ஆண்டிருக்கிறார். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த சென்னை ராஜதானியின் முதல்வராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், திருக்குறள் வி.முனுசாமி, கவிஞர் உளுந்தூர்பேட்டை சண்முகம் போன்ற இன்னும் பலர் இந்த மண்ணில் விளைந்த சான்றோர் பெருமக்கள், இந்த மாவட்டத்திற்குப் புகழைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

இந்த மாவட்டம் விவசாயப் பெருமக்கள், வணிகப் பெருமக்கள், தொழிலாளர் பெருமக்கள், ஆகியோர் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழும் மாவட்டமாகும். மேல்மலையனூர் திருக்கோவிலூர், திருவிடையாறு, திருவெண்ணைநல்லூர், திருவக்கரை, கூவாகம் போன்ற ஆன்மீக ஊர்களை உடையது இந்த மாவட்டம். அதே போல செஞ்சிக் கோட்டை, கல்வராயன் மலை, மரக்காணம், ரிஷிவந்தியம் போன்ற ஏராளமான சுற்றுலா இடங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் புனிதமான இந்த மண்ணில் பேசுகிற வாய்ப்பினை பெற்றதற்கு நான் பாக்கியம் செய்திருக்கிறேன். இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கி உங்களையெல்லாம் சந்திப்பதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் இந்த நிலையை எட்டியதற்கும், இந்த மாவட்டம் உருவானதற்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் காரணம். ஆங்கிலேயர் ஆட்சியில் பாலாற்றுக்கு வடக்கில் இருப்பது வட ஆற்காடு மாவட்டமாகவும், தெற்கில் இருப்பது தென் ஆற்காடு மாவட்டமாகவும் உருவாக்கப்பட்டது. பின்னர் தென்ஆற்காடு மாவட்டத்தில் இருந்து 1993ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டதுதான் இந்த விழுப்புரம் மாவட்டம். எனவே, புராண, வரலாற்று பெருமைகள் பல இந்த மாவட்டத்திற்கு இருந்தாலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டதால் இந்த மாவட்டத்திற்கு தனிச்சிறப்பு ஏற்பட்டது. விழுப்புரம் மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கிறது. அதனால் வேளாண்மைத்துறை சார்ந்த ஒரு சில விவரங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில் நெல் சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பு 1 இலட்சத்து 71 ஆயிரத்து 478 ஹெக்டேர் ஆகும். அதாவது மாவட்டத்தில் உள்ள நிலப்பரப்பில் 36.1 சதவிகிதமாகும். மாநில நிலப்பரப்பில் 9.6 சதவிகிதமாகும். ஆனால் நெல் உற்பத்தியின் அளவு 8 இலட்சத்து 32 ஆயிரத்து 585 டன்னாகும்.இது மாநில உற்பத்தியில் 10.5 சதவிகிதமாகும். இதே போன்று, இம்மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி செய்யப்படும் நிலப்பரப்பு 79 ஆயிரத்து 709 ஹெக்டேர் ஆகும். அதாவது, மாவட்ட நிலப்பரப்பில் 16.8 சதவிகிதமாகும். மாநில நிலப்பரப்பில் 30.3 சதவிகிதமாகும். கரும்பு உற்பத்தியின் அளவு 93,68,212 டன்களாகும். இது மாநில உற்பத்தியில் 33.3 சதவிகிதமாகும். அதிக அளவு நெல் மற்றும் கரும்பு உற்பத்தி செய்யும் மாவட்டம் விழுப்புரம் மாவட்டமாகும் என்பதை அறிவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். விழுப்புரம் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் உழைப்பிற்கு இது ஓர் அளவுகோல் என்றே சொல்லலாம்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தனது பெரும்பாலான திரைப்படங்களில் தொழிலாளி கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். அவற்றில் விவசாயி கதாபாத்திரங்களை ஏற்று நடிக்கும் போது அவர் உண்மை விவசாயியாகவே மாறிவிடுவார். காரணம் விவசாயத்தின் மீதும் விவசாயப் பெருங்குடிமக்களின் மீதும்

புரட்சித்தலைவர் அவர்களுக்கு மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் இருந்தது. அதனால் உழவர் பெருமக்களை அதிகமாகக் கொண்டிருக்கிற விழுப்புரம் மாவட்டத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவது என்பது மிகவும் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன். மேலும், இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு ஒரு தகுதியான பெருமை என்னவென்றால்.. நூற்றாண்டு நாயகன் புரட்சித்தலைவர், பொன்மனச்செம்மல், எம்.ஜி.ஆர். அவர்களின் கலைச் சேவையைப் பாராட்டி விழுப்புரம் முத்தமிழ் மன்றம் “கலை அரசர்” என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. உங்களைப் போன்ற நல்ல உள்ளமுடையவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கு வழங்கிய பட்டங்கள்தாம் அவரை ஊக்குவித்து பின்னாளில் தமிழ் நாட்டின் தலைசிறந்த மனிதராக, தலைவராக, முதலமைச்சராக மாற்றியது. புரட்சித்தலைவர் வேர் என்றால் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அந்த வேரால் வளர்ந்த கற்பக விருட்சம். பரந்து விரிந்து இருக்கின்ற அந்த கற்பக விருட்ச நிழலில் நாம் அனைவரும் இப்போது குடியிருக்கிறோம். நாளை வரப்போகிற அத்தனை தலைமுறைகளும் ‘அம்மா’ என்ற கற்பக விருட்ச நிழலில்தான் குடியிருப்பார்கள்.

புரட்சித்தலைவர் வாழ்ந்த போது வாழ்ந்த பெரியோர்கள், புரட்சித்தலைவரின் கலை வாழ்கையையும் அரசியல் வெற்றிகளையும் மலரும் நினைவுகளாக நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டின் மாபெரும் சக்தியாக விளங்கிய சாதனைத் தலைவர்களின் சரித்திரம் இன்றைய தலைமுறையினருக்கு தெரிந்திருக்க வேண்டும். அதற்காகத்தான், இந்த நூற்றாண்டுவிழா சீரும் சிறப்புமாக மாவட்டம்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த விழாவின்மூலம், இளைஞர்கள், குழந்தைகள், மாணவ மாணவிகள் புரட்சித்தலைவரை முன்மாதிரியாக கொண்டு உழைக்க வேண்டும், ஒழுக்கத்தோடு வாழ வேண்டும், பெற்றோரைப் பாதுகாக்க வேண்டும், பெரியோரை மதிக்க வேண்டும், தருமம் செய்ய வேண்டும் என்பதை உறுதிமொழியாக

எடுத்துக் கொள்ள வேண்டும் என்பவைதாம் எனது விருப்பங்களாகும். அதுதான் இந்த விழாவிற்கு கிடைத்த வெற்றியாகும்.எனவே, நான் தொடக்கத்திலே கூறியதைப்போல புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். என்கிற கடலில் மூழ்கி எடுத்த முத்துப்போன்ற தகவல்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது; அதனினும் அரிது கூன் செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது; அதனினும் அரிது புரட்சித்தலைவரைப்போல் பிறத்தல் அரிது; அதனினும் அரிது அவரைப்போல் வள்ளலாக வாழ்தல் அரிது; அதனினும் அரிது அவரைப்போல் முதல்வராய் ஆள்வதும் அரிது. அதனினும் அரிது; அவரைப்போல் மக்கள் மனதில் இருப்பதும் அரிது" இது முற்றிலும் உண்மையாகும். இது உண்மைதான் என்பதற்கு சில சம்பவங்களை இங்கே எடுத்துக்கூற நான் கடமைப்பட்டுள்ளேன். புரட்சித்தலைவர் அவர்கள் 1977ஆம் ஆண்டில் தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்றதும், முதலில் மாவட்ட ஆட்சியர்களை தம் அறைக்கு அழைத்துக் கேட்ட முதல் கேள்வி இதுதான். "தமிழ்நாட்டில் ஏழ்மையில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஏழைகளுக்கான திட்டங்கள் உங்களிடம் என்ன இருக்கிறது?" "அந்த திட்டங்களில் விவசாயம், கல்வி, ரேசன், வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு முன்னுரிமை இருக்கிறதா?'' என்பதைத் தான் கேட்டார். மாவட்ட ஆட்சியர்கள் வியந்து போனார்கள். சில ஆண்டுகள் மட்டுமே பள்ளிக்குச் சென்ற ஒருவருக்கு மூவேந்தர்களுக்கு இருந்த ஆளுமையும், அறிவும், வீரமும் சேர்ந்து இருந்ததை ... புரட்சித்தலைவர் ஆட்சிப்பொறுப்பேற்ற ஆறே மாதத்தில் மக்கள் புரிந்து கொண்டார்கள்.

ஒருமுறை பத்திரிகையாளர்கள் புரட்சித்தலைவர் அவர்களிடம் "இந்த ஆறு மாதத்தில், தமிழ்நாட்டிற்கு சொல்லும்படியாக என்ன செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். உடனடியாக புரட்சித்தலைவர் பதில் கூறினார். இந்த 6 மாதத்தில் மூடப்பட்டிருந்த 8 பஞ்சாலைகளில் 4 ஆலைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த 6 மாதத்தில் மூடப்பட்டிருந்த 153 தொழிற்சாலைகளில், 141 தொழிற்சாலைகள் இயங்க ஆரம்பித்துவிட்டன. இந்த 6 மாதத்தில், 28 ஆயிரத்து 440 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு அளித்திருக்கிறேன் என்று ஆறு மாதத்தில் செய்து முடித்த திட்டங்களைப்பற்றி வரிசையாக தெளிவாக எடுத்துரைத்தார். பத்திரிகையாளர்கள் வாயடைத்துப் போனார்கள்!

சமீப காலங்களாக, எதிர்க்கட்சிகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த தமிழ்நாடு அரசு மத்திய அரசின் இணக்கப் போக்கை விமர்சித்து அறிக்கைகள் வெளியிட்ட வண்ணம் இருக்கின்றன. ஆட்சிக்கு வரும்வரை நான் அரசியல்வாதி; ஆட்சிக்கு வந்தபிறகு நான் அனைவருக்கும் பொதுவானவன். நான் எதிர்கட்சி, ஆளுங்கட்சி என்று பார்ப்பதில்லை. அனைவரும் தமிழ்நாட்டு மக்கள்தான். அனைவருக்காகவும்தான் நலத்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன; என்ற கொள்கையைக் கொண்டிருந்த ஒரு மகத்தான தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், முதன்முறை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது அப்போது பாரதப் பிரதமராக இருந்த

திருமதி இந்திராகாந்தி அவர்களுக்கு ஆதரவாக இருந்தார். அதன்பிறகு திரு.மொரார்ஜி தேசாய் பாரதப் பிரதமரானார். அவரையும் புரட்சித்தலைவர் ஆதரித்தார். அதன் பிறகு, திரு. சரண்சிங் பிரதமரானார். அவருக்கும் புரட்சித்தலைவர் அவர்கள் ஆதரவுக் கரம் நீட்டினார். அதனால், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரை எதிர்க்கட்சிகள் கிண்டல் செய்தன. இதுபற்றி பத்திரிகையாளர்கள் புரட்சித்தலைவரிடம் கேட்டனர். அதற்கு "நான் இப்போது தனிப்பட்ட மனிதன் அல்ல; தமிழ்நாட்டின் முதலமைச்சர். மக்களின் நலன்தான் எனக்கு முக்கியம். மக்கள் நலத்திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்காக மத்திய அரசுடன் இணக்கமான சூழ்நிலையைக் கடைப்பிடிக்கிறேன். எதிர்க்கட்சிகளின் விமர்சனம் பற்றி எனக்குக் கவலையில்லை'' என்று தெரிவித்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனித நேயமிக்க வழியைத்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு கடைப்பிடிக்கிறது. எங்களுக்கு மக்கள் நலன்தான் முக்கியம், எதிர்க்கட்சிகளின் விமர்சனம் முக்கியமில்லை. இன்னொரு சம்பவத்தையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். திரு. ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது தமிழ்நாட்டு பள்ளிக் குழந்தைகளுக்கு விலையில்லாச் சீருடை வழங்க 120 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது என டெல்லிக்குச் சென்று நேரில் கோரிக்கை வைத்தார். "பின்னர் பார்க்கலாம்" என திரு.ராஜீவ் காந்தி கூறவே, புரட்சித்தலைவர் அவர்கள் டெல்லி தமிழ்நாடு இல்லத்திற்கு திரும்பிய உடன், அரசு அதிகாரிகளிடம் "தமிழ்நாட்டின் நிதி நெருக்கடியைப் பற்றி மக்களிடம் கூறி வீட்டுக்கு கொஞ்சம் பணம் பெற்று நாமே சீருடைத் திட்டத்தை செயல்படுத்துவோம்" என்றார். ஆனால், அதற்கு அவசியம் ஏற்படவில்லை.

புரட்சித்தலைவர் அவர்கள் மீது இருந்த மரியாதை காரணமாக, பாரதப் பிரதமர் புரட்சித்தலைவரை மீண்டும் அழைத்து சீருடைக்கு மானியம் வழங்கச் சம்மதித்தார். "சிறு வயதில் ஒரு வாய் சோற்றுக்கும் ஒரு ஜோடி துணிக்கும் எவ்வளவு கஷ்டப்பட்டேன் என்று எனக்குத்தான் தெரியும், அதனால்தான் சத்துணவோடு சீருடையும் கொடுக்க விரும்புகிறேன்" என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் உருக்கத்தோடு கூறினார். ''என்னை நம்பி வாக்களித்தவர்களுக்கு, நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே, என்னுடைய புனித கடமையாகக் கருதுகிறேன்! ஏழை, எளிய மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நான் ஒரு போதும் தவறியதில்லை,'' என்றார் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அதன் அடிப்படையில்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் வந்த அரசு மக்களின் தேவைகளை விரைந்து பூர்த்தி செய்கின்ற அரசாக செயல்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் பல துறைகள் மூலம் பல கோடி ரூபாய் செலவில் மக்கள் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றை இங்கே வரிசைப்படுத்த நேரமில்லை. எனினும், ஒருசிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

➢ கல்வராயன்மலை, திருநாவலூர் மற்றும் உளுந்தூர்ப்பேட்டையில், 15 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் மாதிரிப்பள்ளிகள்;

➢ ஆசிரியர் கல்வி பட்டப்படிப்பிற்காக, 4 கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகக் கல்வியியல் உறுப்புக் கல்லூரி;

➢ 7 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில், மகளிருக்கான புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி;

➢ பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், 763 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஊரகப்பகுதி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் ஏழைகளுக்கு 31,146 வீடுகள்;

➢ வரலாறு காணாத வறட்சியிலும், பொதுமக்களுக்குச் சீராகக் குடிநீர் வழங்க 56 கோடியே 75 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டில், 2,124 குடிநீர் பணிகள்;

மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட 1 இலட்சத்து 54 ஆயிரத்து 435 விவசாயிகளுக்கு, நிவாரணத் தொகையாக 79 கோடியே 91 இலட்சத்து 9 ஆயிரத்து 853 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது ஏரிகளின் நீர்வளத்தை அதிகரிப்பதற்காக குடிமராமத்துப் பணிகள் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் அம்மாவின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இந்த அரசால் துவக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்கீழ், 808 இலட்சம் மதிப்பீட்டில் 101 குடிமராமத்து பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 92 குடிமராமத்து பணிகளை முடித்திட 1,250 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. விவசாயிகளின் நலன் கருதி, ஏரிகளிலிருந்து கட்டணமில்லாமல் வண்டல் மண் எடுக்கும் திட்டம் தற்பொழுது துவக்கப்பட்டுள்ளது. இதன்படி, இதுவரை 1,249 ஏரிகளில், 18,053 விவசாயிகளுக்கு 15 இலட்சத்து 35 ஆயிரத்து 704 கன மீட்டர் அளவிற்கு வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, ஆயிரம் கோடி ரூபாய் செலவில், பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்து, நீர் ஆதாரத்தினைப் பெருக்குவதற்கு உரிய நடவடிக்கையை அம்மா அரசு எடுத்து வருகிறது. மயிலம்–பேரணி இரயில் நிலையங்களுக்கு இடையில் மயிலம் சாலையில், நெடுஞ்சாலைத் துறையினரால் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம், சின்ன சேலம் மற்றும் தியாக துருக்கத்தில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் உட்பட, 27 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களைத் திறந்து வைத்துள்ளேன். மேலும், 67 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள புதிய சட்டக்கல்லூரி உட்பட, 859 கோடியே 58 இலட்சம் ரூபாய் பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியுள்ளேன். 41 ஆயிரத்து 248 பயனாளிகளுக்கு, 784 கோடியே 47 இலட்சத்து 50 ஆயிரத்து 286 ரூபாய் மதிப்பீட்டில், நலத்திட்ட உதவிகள் வழங்கியுள்ளேன்!

இப்படி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் வழியில் வந்த அரசு, மாநிலத்தின் முன்னேற்றத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, பெண்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு "அம்மா மகப்பேறு சஞ்சீவிப் பெட்டகம்" மற்றும், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 16 பொருட்கள் அடங்கிய "அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம்" வழங்கப்படுகிறது. இதில் குழந்தையை சிரிக்க வைக்கும் 'கிலுகிலுப்பை'யும் அடங்கும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற தத்துவத்தினை உறுதி செய்யும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் இப்படி பல திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வரும் இந்த அரசும் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர், சுயநலத்துக்காக எதையாவது பேசி, மக்களைத் திசை திருப்பி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதில் முனைப்புக் காட்டுகிறார்கள். அவர்கள் தங்கள் முயற்சியைக் கைவிட்டு, மக்கள் பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இதைக் கூறுகிறபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

நாட்டுக்குத் தேர்தல் வருவதுபோல், வழக்கமாக காட்டுக்கும் தேர்தல் வந்தது. சிங்கம்தான் அந்த காட்டின் நிரந்தரத் தலைவர். பிற பதவிகளுக்குத்தான் தேர்தல் நடக்கும். தேர்தல் பிரச்சாரம் களை கட்டியது. காட்டு உயிரினங்கள் அதன் பங்குக்குத் தேர்தல் வேலைகளை பார்த்தன. இணை பிரியாத நண்பர்களாக இருந்த ஒரு புலியும், நரியும் மட்டும் தேர்தல் வேலையில் ஈடுபடவில்லை. சிங்கம் தலைவராக இருப்பதைக் கண்டு புலிக்குப் பொறாமை. சூழ்ச்சியால் சிங்கத்தை வீழ்த்த திட்டமிட்டது. ஒருநாள் நண்பர் நரியிடம், "நரியாரே! சிங்கத்தின் கறியை ஒரு முறையேனும் சுவைத்துவிட வேண்டும் என்பது எனது நீண்டகால, நிறைவேறாத ஆசை. அதை உன்னால் மட்டுமே நிறைவேற்ற முடியும். நிறைவேற்றினால், சிங்கத்திற்கு அடுத்த நிலையில் இருக்கும் நான் உன்னையே இந்தக் காட்டுக்குத் தலைவராக ஆக்கிவிட்டு, நிம்மதியாக கண் மூடுவேன்", என்று உருக்கமாக கூறியது. புலியின் பேச்சை நம்பிய நரி, சிங்கத்தை வீழ்த்த யானையை பயன்படுத்த எண்ணியது. யானையிடம் சென்று "யானையாரே! உங்கள் பலம் உங்களுக்குத் தெரியவில்லை. நியாயப்படி நீங்கள்தான் இந்தக் காட்டுக்குத் தலைவராக வரவேண்டும்.

நீங்கள் தேர்தலில் நின்றால் நிச்சயம் ஜெயிக்கலாம், என்று யானைக்கு ஆசையை ஏற்படுத்தியது. யானைக்குத் தெரியாமல், நரி சிங்கத்திடம் சென்று, "தலைவர் பதவிக்கு உங்களை எதிர்த்து யானை போட்டியிடப் போகிறதாம், இந்த செய்தியை உங்களுக்கு நான் கூறினேன் என்பது யாருக்கும் தெரிய வேண்டாம்" என்றது. சிங்கத்திற்குக் கோபம் வந்து, அந்தப் பக்கம் சென்ற கழுதையிடம், நீ உடனடியாக அந்த யானையை இங்கு அழைத்து வா! என்று கட்டளையிட்டது. தன் திட்டப்படி, இன்று யானையும்

சிங்கமும் ஒருவரை ஒருவர் தாக்கி மடியப் போகின்றனர். சிங்கத்தின் கறியை புலிக்குக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு நாம் இந்தக் காட்டுக்குத் தலைவராகிவிடலாம் என்ற எண்ணத்தோடு, நரி அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டது. கழுதை ஓடிப்போய் யானையை சிங்கத்திடம் அழைத்து வந்தது.

நரி தன்னிடம் வந்து சொன்ன செய்தி உண்மையா? என்று சிங்கம், யானையிடம் கேட்டது. “என்னைத் தேர்தலில் போட்டியிடச் சொன்னவனே நரிதான்” என்று யானை உண்மையைப் போட்டு உடைத்தது. நரியின் சூழ்ச்சியை தெரிந்து கொண்ட சிங்கம் உடனே, அந்தப் பக்கமாக வந்த காக்கையிடம், “காக்கையே! நரிக்குக் கொடுக்க ஒரு பரிசு வைத்திருக்கிறேன், நீ நரியை உடனே இங்கு அழைத்து வா!” என்றது. காக்கை நரியிடம் சென்று, சிங்கம் சொன்ன செய்தியைச் சொன்னது. நரி குழப்பத்துடன் சிங்கத்திடம் வந்தது. அங்கு யானையும் சிங்கமும் ஒரே இடத்தில் இணக்கமாகப் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்து நரி அதிர்ச்சியடைந்தது. சிங்கம் ஓடிப்போய் நரியைத் தாக்கியது. தப்பித்தோம், பிழைத்தோம் என்று நரி காயத்துடன் நொண்டியபடியே புலி இருக்கும் இடத்திற்கு வந்தது. “நரியாரே! என்ன நடந்தது?” என்று புலி கேட்டது. “புலியாரே! உங்கள் ஆசையைத் தீர்த்து வைப்பதற்காக நான் சிங்கத்திடம் நேருக்கு நேர் மோதினேன். சிங்கம் என்னை தாக்கிவிட்டுத் தப்பித்துவிட்டது'' என்று சமாளித்தது. காட்டில் நடந்த இந்தக் கதையைப்போல நாட்டிலும் பலர் நரியைப் போல சூழ்ச்சியில் ஈடுபடுகிறார்கள்.

ஒருகாலும் அவர்களுடைய சூழ்ச்சி வெற்றியடையாது. மற்றவர்கள் ஏற்படுத்தும் குழப்பங்களையும் சூழ்ச்சிகளையும் கழகத் தொண்டர்கள் ஓரணியில் நின்று முறியடிப்பார்கள் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை நினைவு கொள்ளும் வகையில், இந்த மாவட்டத்தில் புதிதாக துவக்கப்பட்டுள்ள மகளிர் கலை மற்றும் கல்லூரிக்கு “டாக்டர் எம்.ஜி.ஆர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி” என பெயர் சூட்டப்படும்.

மாவட்ட ஆட்சியரகப் பெருந்திட்ட வளாகத்தில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கம் “டாக்டர் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கம்” என அழைக்கப்படும்.மேலும், நகரப்பகுதியில் அமைந்துள்ள ‘இரயில்வே கேட்’–டால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு விழுப்புரம்–வெங்கடேசபுரம் இரயில் நிலையங்களுக்கு இடையில், விழுப்புரம் நகரத்திற்குச் செல்லும் பழைய தேசிய நெடுஞ்சாலை எண் 45இல், சாலை மேம்பாலம் அமைக்கும் பணி துரிதப்படுத்தப்படும். இந்தச் சீர்மிகு விழாவிற்காக உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும் கழகத் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய குழந்தைகள் சிந்திக்கக்கூடிய ஒரே முதலமைச்சர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான். ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து தன் குழந்தைக்கு என்னென்ன செய்யவேண்டுமென்று நினைத்து, நினைத்துப் பார்த்து செய்து கொடுத்திருக்கின்றார். ஆகவே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, கருவில் உதிக்கின்றபொழுதே அந்தக் குழந்தை நன்றாக வளர வேண்டுமென்பதற்காக, ரூபாய் 6,000லிருந்து ரூபாய் 12,000 ஆயிரம் வரை கர்ப்பிணிப் பெண்களுக்கு வழங்கினார்கள். ரூபாய் 12,000லிருந்து ரூபாய் 18,000 ஆயிரம் வழங்கினார்கள். ஆகவே, கரு உருவாகின்றபொழுதுகூட அந்தக் கரு நன்றாக வளர வேண்டுமென்று சிந்தித்து, சிந்தித்து சேவை செய்த தலைவி நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே தான் தெய்வத்திற்குச் சமமாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை நாம் எண்ணுகின்றோம்.

அதுமட்டுமல்ல, குழந்தை பிறந்த பிறகு, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, 16 வகையான பொருட்களைக் கொடுக்கின்றார்கள். அம்மா பரிசுப் பெட்டகம் பெறுகின்ற குழந்தை அம்மாவினுடைய உதவி பெறுகின்றது என்று சொன்னால், இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டும்தான், வேறு எங்கும் கிடையாது! ஆகவே பிறக்கின்ற ஏழைக் குழந்தைகூட சுகாதாரமாய் இருக்க வேண்டும், இந்த பூமியில் பிறந்த அத்தனை குழந்தைகளும் நன்றாக வளர வேண்டுமென்று தாயுள்ளத்துடன் சிந்தனை செய்து, திட்டம் தீட்டிய ஒரே முதலமைச்சர் நம் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான்! ஆகவே, ஏழைகளை வாழ வைத்த தெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு தெய்வமாக மாறியிருக்கின்றார்கள். அந்த தெய்வத்தினுடைய ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எத்தனையோ பேர் எனக்கு முன்னாலே அருமைச் சகோதரர் நம்முடைய மாவட்டத்தின் மைந்தன் மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அழகாகக் குறிப்பிட்டார். இந்த ஆட்சி இருக்குமா, இருக்காதா, எத்தனை நாள் எண்ணப்படும் என்றெல்லாம் சொன்னார். ஆகவே, நான் இந்த நேரத்திலே சொல்கின்றேன். இங்கே அமர்ந்திருக்கின்ற இந்த மண்ணின் மைந்தன் மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சகோதரர் சி.வி.சண்முகம் போல் அங்கே அமர்ந்திருக்கின்ற அத்தனை அமைச்சர்களும், இங்கே இருக்கின்ற அத்தனை கழகத் தொண்டர்களும் இருக்கின்றபொழுது, வேறு யாராலும் அசைக்க முடியாது. இந்த ஆட்சி மக்களுடைய ஆட்சி, மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஆட்சி. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும், உயர வேண்டும் என்பதற்காக இரவு, பகல் பாராமல் உழைக்கின்ற ஆட்சி இந்த ஆட்சி, உங்கள் ஆட்சி. உங்களுடைய ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது. நீங்கள் இருக்கின்றவரை, இந்த மண்ணிலே எவராலும் ஆட்சியை சிதைக்க முடியாது. அம்மாவினுடைய அரசு தொடர்ந்து சிறப்பான பணிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, புதிய அறிவிப்புகள். நான் இங்கே வந்தபோதே, இந்த மண்ணின் மைந்தர் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சகோதரர் திரு சி.வி.சண்முகம் அவர்கள் நீங்கள் எல்லா மாவட்டத்திற்கும் போகின்றீர்கள், எங்கள் மாவட்டத்திற்கும் வந்திருக்கின்றீர்கள், ஏதாவது திட்டம் கொடுக்க வேண்டும். ஏற்கனவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சில திட்டங்களை அறிவித்துச் சென்றார்கள். அதில் பல பிரச்சினைகள் உள்ளது. அதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அதேபோல, நம்முடைய தொகுதியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், கழக முன்னோடி நிருவாகிகள் அத்தனைபேரும் ஒருமித்த கருத்தோடு தெரிவித்தார்கள். அதை நிறைவேற்றிடும் விதமாக இந்த புதிய அறிவிப்பை வெளியிடுகின்றேன்.

அறிவிப்புகள்

★ விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்காக, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

★ விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு, ஏற்கெனவே கொள்ளிடம் ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தில், தற்போது 140 ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சியால், நீர் ஆதாரம் குறைந்துவிட்டநிலையில், விழுப்புரம் மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வகையில், நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு, மாற்று ஏற்பாடாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியுடன், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மரக்காணத்திலிருந்து விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி நகராட்சிகள், உளுந்தூர்பேட்டை, விக்கிரவாண்டி, சங்கராபுரம் பேரூராட்சிகள் மற்றும் உளுந்தூர்பேட்டை, கணை, விக்கிரவாண்டி, திருநாவலூர், மரக்காணம், வானூர் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில், நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,000 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தினால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு, நிலையான குடிநீர் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

★ மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆசியுடன், விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விழுப்புரம் நகராட்சியில் ஏற்கெனவே பாதாள சாக்கடைத் திட்டம், நகரின் மையப்பகுதியில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

ஆசியுடன் விழுப்புரம் நகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதியான பாணாம்பட்டு, சலமேடு, வழுவடத்தி, எருமணந்தங்கள், காரகுப்பம் ஆகிய பகுதிகளுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், 198 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே, இந்த விழா சீரும் சிறப்புமாக நடைபெறுவதற்குத் தேவையான ஏற்பாடு செய்த நம்முடைய சட்டத் துறை அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய மாவட்டச் செயலாளர் குமரகுரு அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நிகழ்ச்சி மிக எழுச்சியோடும், சிறப்போடும் நடைபெற வேண்டும் என்பதற்காக, கிட்டத்தட்ட ஒருமாத காலமாக இரவு, பகல் பாராமல் இந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பணி நிறைவு பெறுகின்ற நேரத்திலே, கடந்த இரண்டு நாட்களாகக் கடுமையான மழை பெய்தது. அந்த மழையையும் பொருட்படுத்தாமல், இந்த அருமையான விழாவை ஏற்பாடு செய்து முடித்து வெற்றி கண்ட சட்டத் துறை அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்களுக்கும், மாவட்டச் செயலாளர் குமரகுரு அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றியவர்களுக்கும் மனதார உளமார நன்றியை இந்த நேரத்திலே உரித்தாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமன்று. இந்தப் பகுதிக்கு அம்மாவினுடைய அரசு, சட்டக்கல்லூரியைக் கொடுத்தது, அதற்குத் தேவையான நிலத்தையும் கொடுத்தது, அதற்குத் தேவையான கட்டடம் கட்டுவதற்கு 60 கோடி நிதியையும் ஒதுக்கீடு செய்தது. அதேபோல, அரசு கலை மற்றும் மகளிர் கலைக் கல்லூரியும் அம்மா கொடுத்தது, இந்த ஆண்டே துவங்கப்பட்டது. ஆகவே, இத்தனைத் திட்டமும் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்று இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்து இந்தச் சீர்மிகு விழாவிற்கு உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*

09.08.2017 அன்று, விழுப்புரம் மாவட்டத்தில் நடைபெற்ற

'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

"நாம பாடுறப் பாட்டும் ஆடுற கூத்தும் படிப்பினை தந்தாகணும்" என்ற கலைச் சக்கரவர்த்திக்குக் கடலூரில் நூற்றாண்டு விழா!

தமிழ்நாட்டிற்குக் கிடைத்த தன்னலமற்ற தலைவர்!

அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் புரட்சித்தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்த மகத்தான விழாவிற்குச் சிறப்புரை ஆற்றிய கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன் அவர்களே!

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. பி. தனபால் அவர்களே! முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்களே! வரவேற்பு உரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் அவர்களே, நன்றியுரையாற்ற உள்ள கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி.பி. ராஜேஷ் அவர்களே! சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரகாசி அவர்களே! காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்களே! சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.பாண்டியன் அவர்களே! விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.கலைச்செல்வன் அவர்களே! பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் திருமதி சத்யா பன்னீர்செல்வம் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு. திண்டுக்கல் சீனிவாசன்

அவர்களே! திரு. செங்கோட்டையன் அவர்களே! திரு. செல்லூர் ராஜு அவர்களே! திரு. தங்கமணி அவர்களே! திரு. வேலுமணி அவர்களே! திரு. ஜெயக்குமார் அவர்களே! திரு. சி.வி. சண்முகம் அவர்களே! திரு. கே.பி. அன்பழகன் அவர்களே! டாக்டர் வி. சரோஜா அவர்களே! திரு. கே.சி. கருப்பணன் அவர்களே! திரு. ஆர். காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. இரா துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! திரு. கே.சி. வீரமணி அவர்களே! திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களே! திரு. பா. பெஞ்சமின் அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே! திரு. எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி வி.எம். ராஜலட்சுமி அவர்களே! திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களே! திருமதி எஸ். வளர்மதி அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா. வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே. வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள கடலூர் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி கோ. விஜயா அவர்களே! தலைமைக் கழக நிருவாகிகளே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற ரத்தத்தின் ரத்தங்களான கழக உடன்பிறப்புக்களே! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் தீவிர ரசிகர்களே! அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ, மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

"சோழநாடு சோறுடைத்து
பாண்டிய நாடு முத்துடைத்து
சேரநாடு தந்தம் உடைத்து
தொண்டை நாடு சான்றோர் உடைத்து"

என்பது முதுமொழி. தொண்டை நாடாகிய கடலூரில் சான்றோர் பெருமக்கள் பலர் அவதரித்தார்கள். சைவத்தின் மூலம் தமிழையும், ஆன்மீகத்தையும் தமிழ் மண்ணில் வேரூன்ற வைத்த அப்பர் அடிகள் அவதரித்த மண் இது.

"அருட்பெரும் ஜோதி! தனிப்பெரும் கருணை!" என்றும், "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்றும் புதிய சிந்தனையை மக்கள் மனதில் ஊன்றிய புரட்சித்துறவி வள்ளலார் வாழ்ந்து, ஜோதியில் கலந்த வடலூரைத் தன்னகத்தே கொண்டது இந்தக் கடலூர் மாவட்டம். 1920இல், சென்னை

மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த சுப்பராயலு ரெட்டியார் கடலூர் மண்ணின் மைந்தர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்த கடலூர், சென்னை மாகாணத்தின் தலைநகராகவே விளங்கியிருக்கிறது. பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், உடையார்கள் விஜயநகர ஆட்சியாளர்கள், செஞ்சி நாயக்கர்கள், பிஜப்பூர் சுல்தான்கள், மராத்தியர்கள், முகலாயர் எனப் பலர் ஆண்டிருந்தாலும், தனக்கே உரிய கலை, கலாச்சாரம், பண்பாடு எதையும் யாரிடமும் எப்போதும் இழக்காமல், இன்றைக்கும் தனித்தன்மையோடு திகழும் பூமி தான் இந்தக் கடலூர். கடலூரில் அறமும் ஆன்மிகமும் கைகோர்த்துத் தழைத்தன.

108 வைணவத் தலங்களுள் ஒன்றான திருவந்திபுரம் தேவநாதசுவாமி கோயில், பூலோகக் கைலாசம் என்று அழைக்கப்படும் சிதம்பரம் தில்லை நடராஜர் கோயில், ஸ்ரீமுஷ்ணம் பூவராகவசுவாமி கோயில், முருகப்பெருமான் அரூபமாக காட்சியளிக்கும் விருதாச்சலம் கொளஞ்சியப்பர் கோயில், என பல தெய்வத் திருத்தலங்களாலும், பிச்சாவரம் அலையாத்திக் காடுகள், நீண்ட நெடிய வெள்ளிக் கடற்கரை போன்ற பல சுற்றுலாத் தலங்களாலும், கொள்ளிடம், தென்பெண்ணை, மணிமுத்தாறு, கெடிலம் போன்ற ஆறுகளாலும், பெருமாள் ஏரி, வாலாஜா ஏரி, வீராணம் ஏரி, வெலிங்டன் ஏரி போன்ற நீர் நிலைகளாலும் சூழப்பட்டது கடலூர். ஒரு பக்கம் நீல நிறக் கடலாலும், ஒரு பக்கம் பச்சை நிற வயல்களாலும், இன்னொரு பக்கம் தொழிற்சாலைகளாலும் பரந்து விரிந்தது நம்முடைய கடலூர் மாவட்டம்.

பணம் ஈட்டப் பல வழிகள் உண்டு. ஆனால், உணவு உற்பத்தி செய்ய ஒரே வழிதான் இருக்கிறது. அதுதான் விவசாயம் என்பதை உணர்ந்தவர்கள் இந்தக் கடலூரை ஆண்ட சோழர்கள். முதலாம் பராந்தகச் சோழன், வீராணம் ஏரியை உருவாக்கி வேளாண்மையை வளப்படுத்தி, கடலூர் மாவட்டத்தை பசுமை பூமியாக மாற்றினார். மாண்புமிகு அம்மா அவர்கள் புதிய வீராணம் திட்டத்தின் மூலம், சென்னை மாநகர மக்களின் தாகத்தைத் தணித்தார்கள். தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் கடலூர் ஒரு புண்ணிய பூமி என்றே கூறலாம். கடலூரில் பிறக்கவும் வாழவும், நீங்கள் பாக்கியம் செய்திருக்கிறீர்கள். நீங்கள் வசிக்கிற, வரலாற்று சிறப்புகள் கொண்ட கடலூரில், புரட்சித்தலைவர் பொன்மனச்செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை நடத்துவதில் ஒரு பொருத்தம் இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கற்பக விருட்சம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசியல் பிரவேசம் கடலூரில் தான் தொடங்கியது!

1982ஆம் ஆண்டு, கடலூரில் நடைபெற்ற மாநாட்டில்தான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை முதன்முதலில் அரசியலுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அதன்பிறகு, கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமித்தார்கள். எனவே, இந்தக் கடலூர் மாவட்டத்தில் இருந்து மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய அரசியல் பயணத்தைத்

தொடங்கினார்கள். கழக நிர்வாகத்தையும், ஆட்சிப்பொறுப்பையும் இலட்சோப இலட்ச கழகத் தொண்டர்களையும் தனி ஒருவராகத் தன் தோளில் சுமந்து கொண்டிருந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் கழகப் பொறுப்புகளைப் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தது இந்தக் கடலூர் மண்ணில்தான்.

எனவே, கழகத்தின் வரலாற்றில் கடலூர் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. கழக சரித்திரத்தில் கடலூர் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஊர். இத்தனைச் சிறப்புகளைக் கொண்ட இப்புனித மண்ணில் நடைபெறும் இந்த விழாவில், கலந்து கொள்வதை நானும் பெருமையாகக் கருதுகிறேன். கடலூர் இளைஞர்களும் பெண்களும் வீரமும் விசுவாசமும் மிக்கவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். கடலூர் இளைஞர்களின் சக்தியும் தியாகமும் கடலூருக்கு இயற்கை இடர்பாடு ஏற்படும் ஒவ்வொரு தருணத்திலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. என்னைப் பொறுத்தவரை, வீரமும் விவேகமும் கொண்ட இளைஞர்களை, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிம்பங்களாகவே நான் பார்க்கிறேன். ஓர் இளைஞன் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுத்துக் கொடுத்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஒரு நடிகரும் ஒரு தலைவரும் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணமாக வாழ்ந்தவரும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தாம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து மந்திரம், மக்கள் மனதில் பதியக் காரணமாக இருந்தது அவரது திரையிசைப் பாடல்கள்தான்.

தமது மேன்மையான கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்ல, சரியான வழி, திரைப்படப் பாடல்கள்தாம் என்பதைப் புரிந்து கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள், சமூக விழிப்புணர்வுப் பாடல்களைத் தம் படங்களில் இடம் பெறச்செய்து, இளைஞர்களை ஊக்கப்படுத்தினார்கள். புரட்சித்தலைவர் அவர்களின் பாடல்கள் மூலம் கவர்ந்து ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் புரட்சித்தலைவரின் தீவிர ரசிகர்களாக மாறி சமுதாயத் தொண்டில் ஈடுபட ஆரம்பித்தார்கள். புரட்சித்தலைவர் திரைவழியாகவும், பாடல்கள் மூலமாகவும் கூறிய அறிவுரைகளின்படி தங்களையும் சமுதாயத்தையும் மாற்றி ஒரு புதிய தமிழ்நாட்டை உருவாக்கினார்கள். அதன் விளைவுதான், 1977இல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக, தன்னிகரற்ற அரசியல் தலைவராக அவதாரம் எடுத்தார். அன்றைய இளைஞர்களுக்கு மட்டுமல்ல; இன்றைய இளைஞர்களுக்கும், நாளைய இளைஞர்களுக்கும் கூட புரட்சித்தலைவர் அவர்கள் புத்துணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய சக்தியாக விளங்குகிறார்.

> "நாம பாடுற பாட்டும், ஆடுற கூத்தும்
> படிப்பினை தந்தாகணும்!"

என்று புரட்சித்தலைவர் 'நல்ல நேரம்' படத்தில் பாடியதைப் போல.. அவருடைய பாடல்கள் பாடப் புத்தகத்தைப் போல, பெரியோரின் அனுபவத்தைப்போல, இளைஞர்களுக்கு படிப்பினையைத் தருகின்றன. இளைஞர்களுக்காக புரட்சித்தலைவர் அவர்கள்

அறிவுறுத்திய ஒரு சில தத்துவங்களை இந்த விழாவின் மூலம் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

"தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது"

என்றார் நபிகள் நாயகம். புரட்சித்தலைவர் தன் தாயை எப்படி மதித்தாரோ, அப்படியே தன்னைப் பின்பற்றும் இளைஞர்களும் தாயை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான்.. தனது படங்களின் பெயர்களில்கூட தாய்க்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

'தாய்க்குப் பின் தாரம்' 'தாயைக் காத்த தனயன்' 'தாய் சொல்லைத் தட்டாதே' 'தாயின் மடியில்' 'தெய்வத்தாய்' 'ஒரு தாய் மக்கள்' என்று தாயைப் போற்றும் படங்களில் நடித்தார். 'அடிமைப்பெண்' படத்தில் "தாயில்லாமல் நானில்லை" என்ற பாடலும் "பாசம்" படத்தில்

"எல்லாம் எனக்குள் இருந்தாலும்,
என்னைத் தனக்குள் வைத்திருக்கும்
அன்னை மனமே என் கோயில்
அவளே என்றும் என் தெய்வம்" என்ற பாடலும்,

"வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்–அதை வாங்கித்தந்த பெருமையெல்லாம் உன்னைச் சேரும்" என்ற பாடலும்; புரட்சித்தலைவர் தாய் மீது வைத்திருந்த பாசத்தைப் பிரதிபலிக்கும். தன்னைப் போல, தன்னை பின்பற்றும் இளைஞர்களும் தாயைப் போற்ற வேண்டுமென்று நினைத்துத்தான் புரட்சித்தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட காலத்தால் அழியாத பாடல்களைத் தமிழுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தந்தார்கள்.

தமிழ்நாட்டுக் குழந்தைகளின்மேல் புரட்சித்தலைவர் அவர்களுக்கு அதிக அக்கறை இருந்ததை அவருடைய பாடல்கள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

"சின்னப் பயலே, சின்னப் பயலே, சேதி கேளடா!"

என்ற பாடலை நாம் மறக்க முடியுமா ? அந்தப்பாடலில்

"ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதான்டா வளர்ச்சி"

என்று குழந்தைகளின் உடல் வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் படம் பிடித்துக் காட்டுவார். இளைஞர்கள்தாம் இந்தியாவின் வருங்காலத் தூண்கள் என்பதால் இளைஞர்களை நம்பித்தான் நாடும் வீடும் இருக்கிறது என்பதை

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி"

என்று புரட்சித்தலைவர் அவர்கள் தம் பாடல் வரிகளில் மிகத் தெளிவாக எடுத்துரைப்பார்.

“நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே!
நம் நாடு என்னும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே!” என்று பாடினார்.

“சிரித்து வாழ வேண்டும்– பிறர்
சிரிக்க வாழ்ந்திடாதே!”

என்ற சிறந்த கருத்தை இளைஞர்களின் மனதில் விதையாகத் தெளித்தார் புரட்சித்தலைவர் அவர்கள்.

“கருணை இருந்தால் வள்ளலாகலாம்;
கடமை இருந்தால் வீரனாகலாம்;
பொறுமை இருந்தால் மனிதனாகலாம் – இந்த
மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்”

என்று தலைவன் ஆவதற்கான தகுதிகளைப் புரட்சித்தலைவர் பட்டியல் இடுவார்.

கருணை, கடமை, பொறுமை இந்த மூன்றும் இயல்பாகவே இருந்ததால்தான் எம்.ஜி.ராமச்சந்திரன் என்கிற ஒரு சாமானியர் புரட்சி நடிகராகவும், புரட்சித்தலைவராகவும் உயர்ந்து முதலமைச்சராக உயர முடிந்தது.

“இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்”

என்று இளைஞர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று புரட்சித்தலைவர் அவர்கள் ஆசைப்பட்டாரோ! அப்படியே தாமும் வாழ்ந்து காட்டினார்.

இளைஞர்களை வழிநடத்த, வாராது வந்த மாமழைபோல், தவம் கிடந்து பெற்ற தவப்புதல்வராய் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த தன்னலமற்ற மாபெரும் தலைவர் புரட்சித்தலைவர் அவர்கள். புரட்சித்தலைவர் அவர்களுக்குப் பிறகு, தொண்டர்களை வெற்றிப்பாதையில் வழி நடத்தியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், தமிழகத்தை வழிநடத்தும் ஒரே தகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்புகளுக்கு மட்டும்தான் இருக்கிறது. காரணம்... இந்த கழகத்தில்தான் உண்மையும் உழைப்பும் விசுவாசமும் தியாகமும் கொண்ட இளைஞர் சக்தி இருக்கிறது. அதிலும், குறிப்பாக கடலூர் இளைஞர்கள் ஜப்பானியர்களைப் போன்றவர்கள். இயற்கை இடர்பாடுகள் எத்தனை வந்தாலும் அதனை எதிர்கொண்டு, அதிலிருந்து மீண்டெழுந்து வெற்றி காண்பவர்கள் கடலூர் இளைஞர்கள்!

கடலூரின் பாதுகாப்பிலும், முன்னேற்றத்திலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அக்கறையும் ஈடுபாடும் இருந்தது. தமிழ்நாட்டுக்கு பட்ஜெட் போடும்போது கடலூருக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். அம்மா வழியைத்தான் அம்மாவின் வழியில்

வரும் நாங்களும் பின்பற்றுகிறோம். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கும் இந்த அரசு, இங்கு நடைபெறும் கடல் தொழிலுக்கும் கழனித் தொழிலுக்கும் அரிய பல திட்டங்களைத் தந்தது. பசிநீக்கும் வடலூர் வள்ளலாரின் சத்திய தருமசாலையைப் போல, இருள் நீக்கும் நெய்வேலி அனல் மின் நிலையம் கடலூருக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம்! அப்போதைய மத்திய அரசு, நெய்வேலி அனல் மின் நிலையத்தின் பங்குகளைத் தனியாருக்குத் தாரை வார்க்க முடிவு செய்தபோது, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அதனைத் தடுத்து நிறுத்தி 3.56 சதவீதப் பங்குகளைத் தமிழ்நாடு அரசே வாங்க வழிவகை செய்தார்கள். அதன்மூலம், தனியாருக்குச் செல்ல இருந்த நெய்வேலி அனல் மின் நிலையத்தைக் காத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

கடலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கடலூர் துறைமுகத்தை மேம்படுத்தி, அனைத்துப் பருவகாலத்திலும் கப்பல்களைக் கையாளக்கூடிய துறைமுகமாக மாற்றுவதற்கு, மத்திய அரசின் 'சாகர்மாலா' திட்டத்தின் கீழ், தமிழக அரசின் பங்களிப்புடன் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. துறைமுகத்தின் நீர்த்தடுப்பிகளை நீட்டிப்புச் செய்தல், அணுகுக் கால்வாய் முழுவதும் 9 மீட்டர் ஆழத்திற்குத் தூர்வாருதல் மற்றும் உள்நாட்டுச் சரக்குகளுக்கான தோணித்துறைகள் கட்டுதல் ஆகிய பணிகளை 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குக் கடலோர விதிமுறை மண்டலம் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதிகள் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உரிய அனுமதிகள் பெற்றபின், துறைமுக மேம்பாட்டுப்பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் துவக்கப்படும்.

'கடலூர்த் துறைமுக மேம்பாட்டுத் திட்டத்'தின் மூலம், கடலூர் துறைமுகத்திற்குள் நேரடியாகக் கப்பல்கள் வந்து, சரக்கினைக் கையாள இயலும். இந்தத் திட்டத்தின்

பலனாக, மீனவர்களின் படகுகள் தங்குதடையின்றிச் சென்றுவரவும் மீன்பிடி வாழ்வாதாரம் மேம்படவும் வழிவகை செய்யும்.

இந்தத் திட்டத்தின் மூலம், கடலூர் மாவட்டத்தின் சமூக பொருளாதார வளர்ச்சி மேம்படுவதுடன், சுமார் 500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக் கிடைக்க வழிவகை செய்யும். நகராட்சி நிருவாகம், பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில், 50 கோடி ரூபாய் மதிப்பில் 9 புதிய திட்டப்பணிகளுக்கு, இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அதைப்போல, தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் சார்பில், 260 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கொள்ளிடம் கூட்டுக்குடிநீர் திட்டம் உட்பட பல்வேறு துறைகளின் சார்பாக, 312 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் 23 நிறைவடைந்த திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்படுகின்றன. மேலும், 41 ஆயிரத்து, 608 பயனாளிகளுக்கு, ரூ.212.63 கோடி மதிப்பிலான பயன்கள் வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டம் கடலோர மாவட்டம் என்பதால் இங்கே தென்றலும் வீசும், புயலும் வீசும் இங்குள்ள மக்கள் தென்றலை அனுபவிப்பது போலவே, புயலையும் எதிர்கொள்ளும் வீரம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். தன்னைவிட சக்தி கொண்டவன் இந்த நாட்டில் யாரும் இல்லை. தன்னால்தான் நாட்டில் எல்லாமும் நடக்கிறது. அனைவரும் தனக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று கர்வமும், ஆணவமும் மிக்கவன் இயற்கைக்கு முன்பு ஒன்றுமில்லாமல் ஆகிவிடுகிறான் என்பதனை, உலகுக்கு இந்தக் கடலூர் அடிக்கடி நிரூபித்துக் காட்டியிருக்கிறது. ''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'' என்பார்கள். ஒற்றுமையின் வலிமையை, உணர்ந்தால்தான் தெரியும்! யார் பெரியவர் யார், சிறியவர் என்ற பேதமில்லாமல், ஒருவரோடு ஒருவராக இணைந்து இணக்கமாக வாழ்வது என்பது நமக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கும் நல்லது. நாட்டை விடுங்கள்; ஒற்றுமை என்பது ஒரு காட்டுக்கு எப்படி நன்மையாக இருந்தது என்பதை ஒரு கதையின் மூலம் கூறினால் நன்றாகப் புரியும்.

ஒரு காட்டில் இருக்கும் பெரிய ஆலமரம், தன் நிழலில் ஒதுங்கும் விலங்குகளிடமும் பறவைகளிடமும் மனிதர்களிடமும் எப்போதும் தன் பெருமைகளையே கூறிக்கொண்டிருக்கும். ஒருநாள், ஒரு முனிவர், அந்த மரத்திற்கு அடியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். வழக்கம்போல, அந்த மரம் முனிவரிடமும் தன் பெருமையைக் கூறியது. "என் நிழலில்தான் சிங்கம், புலி, கரடி, யானை எல்லாம் படுத்து களைப்பாறுகின்றன; ஏன், இந்த வழியாகப் போகும் மன்னர்கள் கூட என்னடியில் அமர்ந்து ஓய்வெடுத்துதான் செல்கிறார்கள்; இந்தக் காட்டில் வாழும் அத்தனை உயிரினங்களும் என் ஒருவனுக்குத்தான் கட்டுப்பட்டவை. எனவே, நான்தான் இந்தக் காட்டிற்குப் பெரியவன்" என்று அந்த மரம் முனிவரிடம் கூறியது. மரம் கூறுவதைக் கேட்டு முனிவர் சிரித்தபடியே, ''மரமே, நீ இப்படி எல்லோரிடமும் உன் பெருமையைப்

பேசிக்கொண்டே இருந்தால் உனக்கு நண்பர்களே இல்லாமல் போய் விடுவார்கள்; உனக்கு ஓர் ஆபத்து என்றால் யாரும் உதவ முன்வர மாட்டார்கள்; எனவே, நீ அடக்கமாக இருக்க வேண்டும்; காற்று உன் நண்பனாக இருக்கும் வரை உனக்கு ஆபத்து ஒன்றுமில்லை'' என்றார். முனிவர் சொல்வதைக் கேட்டு, மரத்திற்குக் கடும் கோபம் வந்தது. ''முனிவரே, காற்று என் நண்பன் தான்; ஆனால், அவன் என்னை விட உயர்ந்தவன் அல்லன்; காற்றையும் எதிர்க்கும் வல்லமை எனக்கு உண்டு'' என்றது. ''மரமே, நீ கூறியதை நான் அப்படியே காற்றிடம் போய் சொல்லட்டுமா ?'' என்று முனிவர் கேட்டார். ''எனக்கென்ன பயம் இருக்கிறது ? போய்ச் சொல்! இன்று இரவே என்னோடு மோதிப் பார்க்கட்டும்! யார் வலிமையானவர் என்பதைக் காட்டுகிறேன்'' என்று மரம் சவால் விட்டது. ''சரி, இன்று இரவே காற்றை அனுப்புகிறேன்; உன்னைப் புயலாக வந்து அவன் சந்திப்பான்'' என்றபடி முனிவர் புறப்பட்டு விட்டார்.

முனிவர் சென்ற பிறகு, மரத்திற்கு பயம் வந்தது. இன்று இரவு, காற்று புயலாக வந்து தன்னைத் தாக்கப் போவது உறுதி. அந்தப் புயலில் இருந்து, தப்பிக்க வேண்டும் என்றால், தன்னுடைய கிளைகள், கனிகள் அனைத்தையும் உதிர்த்துவிட்டு நின்றால், காற்றால் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்று மரம் நினைத்து, கிளைகளையும் கனிகளையும் உதிர்த்துவிட்டு நெட்ட நெடுமரமாக நின்றது. இரவு வந்தது. காற்று, மரத்தை நெருங்கி வந்து, "ஏ! நண்பனே! நான் புயலாக வந்தால் எதையெல்லாம் நீ இழப்பாயோ, அதையெல்லாம் நான் வருவதற்கு முன்பாகவே நீ இழந்து விட்டதால் எனக்கு வேலை ஒன்றும் இல்லாமல் செய்து விட்டாய்; உன் ஆணவத்தால் உன்னால் உருவான காய், கனி, இலை, கிளைகளை நீயே இழந்து விட்டாய்; உன் நிழலுக்காக வரும் காட்டு விலங்குகள்கூட இனிமேல் உன்னிடம் வராது; உன் கர்வத்தால் நீ தனிமைப்பட்டுவிட்டாய்; இனியாவது, உன் ஆணவத்தைக் கைவிட்டு, எனக்கு நல்ல நண்பனாக மாறு; அதுதான் இந்தக் காட்டுக்கு நல்லது; நாம் அனைவரும் சேர்ந்தால்தான், தென்றலாக வீச முடியும்; நமக்குள் பகை ஏற்பட்டால், உனக்கு மட்டுமன்று, இந்தக் காட்டுக்கே கேடு விளையும்!'' என்று மரத்திற்குக் காற்று அறிவுரை கூறியது. மரம், தன் தவற்றை உணர்ந்தது. காற்றும் மரமும் பழையபடி நண்பர்களாகின. இனி அந்தக் காட்டில் புயலுக்கு வேலையே இல்லை. தென்றல்தான் வீசப் போகிறது. இதைக் கழக உடன்பிறப்புகள் மனதில் நிறுத்தி, ஒற்றுமையுடன் செயலாற்றி, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் விருப்பத்தையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களையும் நிறைவேற்ற இந்த இனிய நாளில் உறுதியேற்போம்!

இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்னென்ன கனவு கண்டார்களோ, அவற்றையெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி வருகின்றது. விவசாயிகள் இந்த நாட்டிற்குத் தூணாக விளங்குகின்றார்கள். விவசாயம் செழிக்க வேண்டும், விவசாயிக்களுக்குத் தேவையான நன்மைகள் கிடைக்க வேண்டும் என்ற சிந்தனையோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அம்மா

வழியில் வந்த அம்மாவினுடைய அரசு, விவசாயிகள் நன்மை கிடைக்கவேண்டும் என்பதற்காக ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களையெல்லாம் தூர்வார வேண்டும் என்பதற்காக குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை அறிவித்தது. இது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். இந்த திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கி 1,519 ஏரிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தில் முழுக்க முழுக்க விவசாயிகள் பங்களிப்போடு, அரசும் சேர்ந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக அரசு தருகின்றது. இந்த வண்டல் மண்ணை விவசாயிகள் அள்ளி தங்கள் நிலங்களுக்கு எருவாக இடுகின்றபோது, அந்த விவசாயிகள் பயிரிடுகின்றபொழுது, அதில் அதிகமான விளைச்சல் பெற்று, அதிகமான இலாபம் பெறக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது. இதுவரைக்கும் எந்த அரசும் செய்ய முடியாத திட்டம். இன்றைக்கு விவசாயிகளுடைய மேம்பாட்டிற்காக, விவசாயிகளுடைய வளர்ச்சிக்காக, விவசாயிகளுடைய வளர்ச்சி மேலும், மேலும் சிறப்படைய, விளைச்சல் அதிகரிக்க, வருமானம் இரட்டிப்பாக பெறுவதற்காக, இந்தத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டம் சிறப்பான திட்டம் என்று விவசாயிகள் மத்தியில் இருந்து கோரிக்கைகள் வந்ததன் விளைவாக, மேலும் இந்த திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கி, தமிழகத்தில் 2,065 ஏரிகள் இந்தத் திட்டத்தின் மூலமாக எடுத்துக் கொள்ள இருக்கின்றது. இந்தத் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலமாக, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் மூலமாக விவசாயிகள் வண்டல்மண் அள்ளுகிறார்கள். வண்டல்மண் அள்ளுகின்ற பொழுது, தூர்வாருகின்ற பொழுது, அந்தக் குளம் ஆழமாகின்றது. ஆகவே, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் முழுவதும் அந்த ஏரி, குளங்களில் சேமிக்கப்படுகிறது. வறட்சியான காலத்தில் நிலத்தடி நீர் உயர்ந்து, விவசாயத்திற்கு தேவையான நீர், குடிதண்ணீருக்கு தேவையான நீர் இந்தத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கிறது. இந்த அற்புதமான திட்டத்தால் விவசாயிகளும் பயன்பெறுகிறார்கள், பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் பாதுகாக்கின்ற திட்டம் குடிமராமத்து திட்டம் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகளுக்கு ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்திருக்கிறது. நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும். ஆங்காங்கே இருக்கும் ஓடைகளின், நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயரவேண்டும் என்பதற்காக மூன்றாண்டுகளிலே தடுப்பணை கட்டுவதற்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. முதல்கட்டமாக, அம்மாவினுடைய அரசு 350 கோடி ரூபாய் இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கியுள்ளது. இதன் மூலமாக, ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, நீர்நிலைகளை உயர்த்தி,

மக்களுக்குத் தேவையான நீரைச் சேமிக்கக்கூடிய வகையில், அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோல நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு, தமிழகம் முழுவதும் 220 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக 787 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இத்திட்டத்தின் மூலமாக, வாய்க்கால்கள், ஏரிகள், மதகுகள் புதுப்பிக்கப்படும். இதன் மூலமாக, பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்துக் கொள்ளப்படும். இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை விவசாயிகளுக்கு வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற அரசு இந்த அரசு என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, கடலூர் மாவட்டம், விவசாயம் நிறைந்த மாவட்டம், விவசாயத்தை நம்பி வாழ்கின்ற அதிகமான விவசாயிகள் இருக்கின்ற மாவட்டம், விவசாயிகள், விவசாயத் தொழில்கள் அதிகமாக இருக்கின்ற பகுதி இந்த கடலூர் மாவட்டம். ஆகவே, கடலூர் மாவட்டத்தில் ஏராளமான திட்டங்களை அம்மா வாரிவாரி கொடுத்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, கடந்த 140 ஆண்டுகாலமாக இல்லாத கடுமையான வறட்சி, பருவமழை பொய்த்து விட்டது. அப்படி இருந்தும்கூட, தமிழகத்தில் விலைவாசி ஏறாமல் அம்மாவினுடைய அரசு பார்த்துக் கொண்டது. இப்படிப்பட்ட கடுமையான வறட்சியிலும், ஆங்காங்கே குடிநீர்ப் பிரச்சினை ஏற்படாமல் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கிய அரசு இந்த அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக 2,244 கோடி ரூபாய் அளித்து, அந்தத் திட்டம் இன்றைக்கு செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல, கல்விக்கு முன்னுரிமை. ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி, கல்வியை மையமாகத் தான் வைத்திருக்கின்றது. எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு மாநிலத்திலும் கல்வி அறிவு அதிகமாக இருக்கின்றது என்றால், அங்கே வளம் இருக்கும்! சமூகம் பொருளாதார மேம்பாடு எய்தும்! அங்கே அமைதி, அன்பு, திறமை இருக்கும். எனவே, அத்தனையும் வேண்டுமென்றால் கல்வி வேண்டும். அப்படிப்பட்ட கல்வியை அம்மா அவர்கள் தந்தார்கள். அம்மா, கல்வியில் ஒரு புரட்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள். இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குக் கல்வியில் அதிக நிதி ஒதுக்கீடு செய்த ஒரே மாநிலம், தமிழ்நாடு தான் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்! ஏனென்று சொன்னால், ஒரு நாடு அமைதியாக இருக்க வேண்டும் என்று சொன்னால், அதற்குக் கல்வி அறிவு தேவை. அதற்கு அம்மா எடுத்த நடவடிக்கைகள் ஏராளம்! கல்வியிலே அம்மா, புரட்சி ஏற்படுத்தியதன் விளைவு, இன்றைக்கு நம்முடைய மாணவர்களுடைய தரம் உயர்ந்திருக்கின்றது, உயர்கல்வி கற்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, 2011ஆம் ஆண்டு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றபொழுது, 100க்கு 21 பேர்கள் மட்டும் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியில் எடுத்த நடவடிக்கையின் விளைவாக, கல்வியில் ஏராளமான திட்டங்களை நம்முடைய மாணவர்களுக்கு கொடுத்ததன் விளைவாக, தற்போது கல்வியினுடைய சதவீதம், உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை 44.3 சதவீதமாக உயர்ந்து இன்றைக்கு தமிழகம் கல்வியிலே ஓர் உயர்ந்த மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்திய அளவில் பார்க்கும் பொழுது, 24.5 தான். தமிழ்நாட்டில்தான் உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, அம்மா அவர்கள் ஆங்காங்கே கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதாரண குடும்பத்திலே இருக்கின்ற மாணவ, மாணவிகள் உயர்கல்விகள் கற்கவேண்டும், பட்டப்படிப்பு படிக்கவேண்டும் என்பதற்காக, தம் 6 ஆண்டு கால ஆட்சியிலே ஏராளமான கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தமிழகத்திலே நிறுவினார்கள். ஆறாண்டுக்கால ஆட்சியிலே, 4 பொறியியல் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள், 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், என்று மொத்தம் 65 கல்லூரிகளை தொடக்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

இன்றைக்குக் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வியை நம்முடைய மாணவச் செல்வங்கள் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கல்வி கற்றுள்ளார்கள். எனவே தான், இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் ஆறாண்டு காலத்தில் இத்தனை கல்லூரிகளை உருவாக்கிய சரித்திம் கிடையாது. அம்மா அவர்கள் தாம் செய்தார்கள். இன்றைக்கு வசதி படைத்தவர்கள் எல்லாம் தனியார் கல்லூரிகளில் படித்து, பட்டம் பெற்று வேலைக்குச் சென்று விடுகிறார்கள். ஆனால் ஏழை குடும்பத்திலே பிறந்த தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகள் எல்லாம் தனியார் கல்லூரிக்குச் சென்று படிக்க முடியாத சூழ்நிலை. இப்படிப்பட்ட மாணவர்களும் சமமாக இருக்கவேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் அரசுக் கல்லூரியை உருவாக்கி, இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிப்பதற்கு வித்திட்டவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா வழியில் நடக்கும் இந்த அரசு, இந்த ஆண்டு 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, உங்களுடைய மாவட்டத்திலும் அம்மாவினுடைய அரசு, ஒரு அரசு மற்றும் அறிவியில் கல்லூரியை உங்களுடைய பகுதிக்கு கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். காட்டுமன்னார் கோயில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தந்திருக்கின்றது, இந்த ஆண்டே தொடங்கப்பட்டுவிட்டது. ஆகவே ஏழை மாணவன் படிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை கொடுத்திருக்கின்றோம். அதேபோல, 8 அரசு கலை மற்றும்

அறிவியல் கல்லூரிகள், 3 பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் என்று மொத்தம் 11 கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே, மீனவர்களை விடுதலை செய்த அரசு அம்மாவினுடைய அரசு. சில பேர் பேசுகின்றார்கள். அடிக்கடி டெல்லி சென்று பாரதப் பிரதமரை சந்திக்கிறார்கள், என்ன சாதித்தார்கள் என்றெல்லாம் சொல்கின்றார்கள். நாங்கள் அடிக்கடி பிரதமரைச் சந்தித்ததன் விளைவுதான் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடிக்கடி டெல்லி சென்று பாரதப் பிரதமரையும், மத்திய அமைச்சர்களையும் சந்திப்பது, தமிழ்நாட்டினுடைய நன்மைக்குத்தான் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளில் ஏழை, எளியோர் வீடு கட்டுவதற்காக, 2,10,000 ரூபாய் மானியமாக, அரசின் சார்பாக கொடுக்க இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நெசவாளர்களுக்கு மின்சார சலுகை, விசைத்தறி நெசவாளர்களுக்கு விசைத்தறி தொழில் செய்பவர்களுக்கு மானியத்திலே மின்சாரம், இப்படிப் பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டப் பேரவை உறுப்பினர்களும் இங்கே கோரிக்கைகளைத் தந்தார்கள். இக்கோரிக்கைகளின் அடிப்படையிலே இங்கே புதிய அறிவிப்புகள் சிலவற்றை வெளியிடுகிறேன்.

அறிவிப்புகள்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்திலே, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயில், ம.ஆதனூர் குமாரமங்கலத்தில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, ரூ.400 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும் என மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி 110இன்கீழ் அறிவிப்புச் செய்ததன் தொடர்ச்சியாக, விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. திட்ட அறிக்கையைப் பரிசீலித்து, ஒப்புதல் வழங்கி, பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

- தரைமட்ட தடுப்பணை ஒன்று புதிதாகக் கட்டப்படும்.
- கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரத்தில் ஓடும் நதியில் தடுப்பணை ஒன்று புதிதாகக் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ கடலூர் மாவட்டம், தெப்பக்குடி வட்டம், திட்டக்குடியில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும். இத்தடுப்பணைகளால் நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

❖ கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் பிச்சாவரத்தில் முப்பனாறு வடிகாலின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலைத் தடுக்கும் ஒரு சுவர் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர், உங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பகுதியிலே கடல்நீர் விளைநிலங்களில் புகுகின்றது, அதைத் தடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதை நிறைவேற்றுகின்ற விதமாக, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, வல்லம் படுகையில் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் புவனகிரி வட்டம், ஆதிவடகாநல்லூர் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலைத் தடுக்க சுவர் அமைப்பது குறித்து ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்ட அறிக்கை தயார் செய்யப்படும், திட்ட அறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக 57 கிராமங்கள் பாதுகாக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல அம்மாவினுடைய அரசு, காட்டுமன்னார் கோயிலில் அரசு மற்றும் அறிவியல் கல்லூரி நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர், அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று புதிதாக காட்டுமன்னார்கோயிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தோம். இந்த கல்லூரிக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என பெயர் சூட்டப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலனில் மிகுந்த அக்கறைகொண்ட மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடலூர் மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக, கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் மற்றும் காட்டு மன்னார் கோயில் ஆகிய பகுதியிலுள்ள பெரிய ஓடைகள், வடிகால், வாய்க்கால்களில் நீர் தடுக்கும் திறனை அதிகரித்தல், பழைய கொள்ளிடம் ஆற்றில் வெள்ள பாதிப்புகளை தடுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய நிரந்தர வெள்ள தடுப்புப் பணிகள் 140 கோடி ரூபாய் மதிப்பில் செய்வதற்கு அந்தப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, நான் கடலூருக்கு வருகின்றபோதே உங்களுடைய அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எங்களுக்கு நிலையான குடிநீர் வசதி செய்துதர வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளை ஏற்று, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோரக் குடியிருப்புகளுக்கென, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை, நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பேரூராட்சிகள் மற்றும் ஊரக குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு ஏற்கனவே கொள்ளிடம் ஆற்றை நீர் ஆதரமாகக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தில், தற்போது 140 ஆண்டுகாலம் இல்லாத கடும் வறட்சியால் நீர் ஆதாரம் குறைந்துவிட்டதால், கடலூர் மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வகையில், நிரந்தரத் தீர்வுகாணும் பொருட்டு, மாற்று ஏற்பாடாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, கடலூர் மாவட்டத்திலுள்ள திட்டக்குடி, பெண்ணாடம், மங்கலம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கன்னிகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் விருத்தாசலம், நல்லூர் மற்றும் மங்கலூர் ஊராட்சி முதலிய ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறுகிற வகையில் சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு நிலையான குடிநீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவை நாம் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். ஒரு சிலர் இதை அரசு நிகழ்ச்சியாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே அம்மா அவர்கள் ஆசைப்பட்டார்கள். ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம்! அதன் ஒப்பற்ற முதலமைச்சராக இருந்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்! தாம் இருக்கின்ற வரை தமது நாட்டு மக்களுக்காக உழைத்து, மறைந்த மாபெரும் மனிதர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்! அவரை நினைவு கூர்கின்ற வகையிலே, இந்த நாட்டு மக்கள் அவரது பெருமைகளைத் தெரிந்து கொள்ளும் வகையிலே அரசின் சார்பாக, ஓர் ஆண்டு முழுதும் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டுமென்று அம்மா எடுத்த முடிவின்படி, அம்மாவின் அரசு அதனை இன்று நடத்திக் கொண்டிருக்கிறது. நாங்கள் நடத்தவில்லை; அம்மா ஆணையிட்டார்கள்! புரட்சித்தலைவர் அவர்களுடைய பிறந்தநாள் ஆனாலும் சரி, அம்மாவின் பிறந்தநாள் ஆனாலும் சரி, ஏழை, எளியவர்களுக்கு நலத் திட்டங்களை வழங்கும் ஒரே கட்சி இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான்!

நான் கொள்கை பரப்புச் செயலாளராக இருந்த போது, திரு. சுரத்தூர் ராஜேந்திரன் அவர்கள் கடலூர் மாவட்டச் செயலாளராக இருந்தார். அப்போது புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள, ஏழை, எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டுமென்று கடலூர் மாவட்டத்திற்கு வர வேண்டும் என்று அழைத்தார். மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு, அந்த விழாவில் கலந்துகொண்டு, 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை கடலூர் மாவட்ட மக்களுக்காக நான் வழங்கினேன்.

நான் 1974இல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தேன். அதற்குப் பிறகு கிளைக் கழகச் செயலாளராக, முதன்முதலில் கட்சிப் பணியைத் தொடங்கினேன். பின்னர் ஒன்றியத் தலைவராகவும், மாவட்ட கழகத் தலைவராகவும், பதவி வகித்தேன். சாதாரண கிளைக் கழகத்திலிருந்து உயர்ந்து இந்த நிலைக்கு வந்திருக்கிறேன்!

நாங்கள் ஒன்றும் கொல்லைப்புற வழியாக வரவில்லை. உழைத்து இந்தப் பதவிக்கு வந்திருக்கிறோம். உழைப்பை நம்பியவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். சிலர் கொல்லைப்புறத்தின் வழியாக வந்து, கட்சியையும் ஆட்சியையும் பிடித்து விட வேண்டுமென்று எண்ணுகிறார்கள். இது ஒருபோதும் நடக்காது! புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் உருவாக்கி வளர்த்த வந்த இயக்கத்தை மட்டுமின்றி ஒன்றரை கோடி தொண்டர்கள் இருக்கும் வரை, இந்த கட்சியையோ ஆட்சியையோ அசைக்க முடியாது!

இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான், ஒரு சாதாரண மனிதன் கூட தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆக முடியும் என்ற சரித்திரத்தை இந்த இயக்கம் படைத்திருக்கிறது. இந்தியாவிலே, எந்த இயக்கத்திலும் உயர்ந்த பதவிக்கு வர முடியாது! ஆனால், இந்த இயக்கத்திலே உழைப்பு மற்றும் விசுவாசம் இருந்தால், சாதாரண ஒரு தொண்டன் கூட, உயர்ந்த நிலைக்கு வர முடியும் என்பதற்கு நானே ஒரு உதாரணம் என்பதை சுட்டிக் காட்டி விரும்புகிறேன்.

என்னைப் போன்ற ஒரு விவசாயி, ஒரு தொண்டாக இருந்து, இன்றைக்கு உயர்ந்து நின்று, கோட்டை கொத்தளத்திலே கொடியேற்றுகின்ற பெருமையை வழங்கிய அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்!

இந்த சீர்மிகு விழாவிற்காக, ஒற்றுமையோடு உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி *அவர்கள்*
16.08.2017 அன்று கடலூரில் நடைபெற்ற
'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

"கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி" என்ற முதலமைச்சர் எனும் முதல் தொழிலாளிக்கு திருவாரூரில் நூற்றாண்டுத் திருவிழா!

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சட்டம் ஒழுங்கு, சுகாதார வசதி மற்றும் கல்வியும் சிறந்து விளங்குகிறது!

அன்பின் வடிவம், ஆற்றலின் பிறப்பிடம், இதய தெய்வம், ஈகையின் அடையாளம், உழைப்பின் உருவம், ஊக்கத்தின் உதாரணம், எல்லோருக்கும் தாய், ஏழைகளின் குலவிளக்கு, ஐந்தெழுத்து மந்திரம், ஒப்பில்லா ஆளுமை, ஓங்கி ஒலித்த உரிமைக்குரல், ஔவையின் அவதாரம் எனத் திரும்பும் திசையெல்லாம், தெய்வமாய் நிற்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி 'அம்மா' அவர்களை வணங்குகிறேன்!

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த மகத்தான விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவைத் துணைத்தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்களே! தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. ப.தனபால் அவர்களே! முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆர்.காமராஜ் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்களே! நாகப்பட்டினம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே. கோபால் அவர்களே! தஞ்சாவூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கு.பரசுராமன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே! திரு. பி.தங்கமணி அவர்களே! திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களே! திரு. டி.ஜெயக்குமார் அவர்களே! திரு. சி.வி.சண்முகம் அவர்களே! திரு. கே.பி.அன்பழகன் அவர்களே!

டாக்டர் வி.சரோஜா அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! திரு. ஓ.எஸ்.மணியன் அவர்களே! திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என். நடராஜன் அவர்களே! திரு. கே.சி.வீரமணி அவர்களே! திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே! திரு. பா.பெஞ்சமின் அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! திரு. சேவூர் எஸ். இராமசந்திரன் அவர்களே! திருமதி எஸ்.வளர்மதி அவர்களே! திரு. பி.பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இல. நிர்மல் ராஜ், இ.ஆ.ப., அவர்களே! தலைமைக் கழக நிருவாகிகளே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கூட்டுறவு சங்க நிருவாகிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், வேளாண்மை, ஆன்மீகம், தமிழ், கலை ஆகிய நான்கும் கலந்த ஓர் அழகு மாவட்டமாகத் திகழ்கிறது. திருவாரூர் ‘அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில் காலத்தால் கணக்கிட முடியாத பழம் பெருமை வாய்ந்தது!

மன்னார்குடி மதிலழகு, வேதாரண்யம் விளக்கழகு, திருவிடைமருதூர் தெருவழகு, திருவாரூர் தேரழகு என்பார்கள். திருவாரூர் அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில் தேர்தான் தமிழ்நாட்டிலேயே உயரமான தேர். திருவாரூர் ஆழித்தேரை செப்பனிட்டு, ஓடச் செய்தது ‘அம்மா’ அரசு. அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில், ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற சமயக் குரவர்களால் பாடல் பெற்றது.

பஞ்சபூதங்களில் நிலம் அல்லது மண் தத்துவத்தை உடையது திருவாரூர். திருவாரூரில் பிறப்பதே முக்தி என்கிறார்கள். சப்தவிடங்கத் தலங்களுள் முதன்மையானது திருவாரூர்.

தியாகராஜ திருக்கோயில் எழுந்தருளியுள்ள இந்த இடம், சக்தி பீடங்களுள் ஞானசக்தி பீடமாகும். அதனால்தான், இந்தக் கோயிலில், மகாசரஸ்வதிக்கென்று தனி சந்நிதி இருக்கிறது.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள கூத்தனூரில், ஒட்டக்கூத்தரால் 3ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட, மகா சரஸ்வதி ஆலயம் உலகப்புகழ் பெற்றது. காரணம், இந்தியாவிலேயே, கல்விக்கடவுள் கலைவாணி சரஸ்வதிக்கென்று உள்ள தனி ஆலயம் இது. மன்னார்குடியில் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அருள்மிகு இராஜகோபால சுவாமி திருக்கோயில், இம்மாவட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது!

நீடாமங்கலம் வட்டத்திலுள்ள திருராமேஸ்வரம் கோயில் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பழமையான கோயில் ஆகும். இந்த மாவட்டத்தைச் சார்ந்த முத்துப்பேட்டை தர்கா புகழ் பெற்றதாகும்.

ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் அறிவு மணம் கமழும் அற்புதமான மாவட்டம் திருவாரூர். ஒரு பசுவுக்கு நீதி வழங்கத் தன் சொந்த மகனையே தேர் ஏற்றிக் கொன்ற மனுநீதிச் சோழன் ஆண்ட மண் இந்தத் திருவாரூர் மண்.

செங்கோல் தவறாமல், நீதிக்கு இலக்கணமாகத் திகழ்ந்த மனுநீதிச் சோழன், திருவாரூரையே தன் தலைநகரமாகக் கொண்டவன். தமிழரைத் தலைநிமிர வைத்த இந்த நீதி வரலாறைப் பிற்காலச் சோழர்கள் கோயிலுக்குள்ளேயே கல் தேராக வடிவமைத்து வைத்துள்ளனர். கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் இந்த மண்ணில் பிறந்தவர்கள்.

தமிழ் ஓலைச்சுவடிகளை ஓடி ஓடிச் சென்று சேகரித்து தமிழ் இலக்கியங்களை உலகம் அறியச் செய்த ‘தமிழ் தாத்தா’ உ.வே.சாமிநாதய்யர் பிறந்த உத்தமநாதபுரம் இந்த மாவட்டத்திற்கு மேலும் புகழ் சேர்க்கிறது. ஆங்கிலேயர்களுக்கே ஆங்கிலப் புலமையைக் கற்றுத்தந்த “சில்வர் டங்” சீனிவாச சாஸ்திரிகள் இம்மாவட்டத்தில் உள்ள வலங்கைமானை சார்ந்தவர்!

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் திருவாரூரில் பிறந்து, தமிழுக்குத் தொண்டாற்றியிருக்கிறார். அவருடைய பேச்சும், எழுத்தும், தமிழ் உள்ளவரை உயிர் வாழும்! இயக்குநர் இமயம் கே.பாலச்சந்தர் அவர்களைப் பெற்றெடுத்து புகழ் பெற்றது நன்னிலம்.

இப்படி இந்த மண்ணில் பிறந்த மாமனிதர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். அறியாமை, மூடநம்பிக்கை, சாதிய வேற்றுமை ஆகியவற்றிற்கு எதிராக போரிட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின், திருஉருவச்சிலை ஒன்று திருவாரூர் மாவட்டத்தின், வடக்கு நுழைவாயிலான கீரனூரில், விவசாயப் பெருங்குடி மக்களால் நிறுவப்பட்டுள்ளதைக் கொண்டும், இந்த திருவாரூர் மாவட்டத்தின் மண் – திராவிடம் உரம் ஏற்றப்பட்டுள்ளது என்பதை என்னால் உணர முடிகிறது!

எல்லாப் புகழுக்கும், சிறப்புக்கும் மேலாக, இந்த மாவட்டம் உழவர்களும் – உழைப்பாளர்களும் நிறைந்த ஒரு விவசாய மாவட்டம் என்பதில்தான், பெருமை கொள்கிறது! இந்த மாவட்டத்தின் நெல் உற்பத்தியின் அளவு 8 இலட்சத்து 52 ஆயிரத்து 925 டன்னாகும். இது மாநில உற்பத்தியில் 10.7 சதவிகிதமாகும்.

தமிழ்நாட்டில் அதிக அளவு நெல் உற்பத்தி செய்யும் மாவட்டம் திருவாரூர் மாவட்டமாகும் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகிய மூன்றுதான் நாட்டு மக்களுக்கு அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுகின்றது.

அதில் முக்கியத் தேவையாகிய உண்ண உணவு வழங்கக்கூடிய மாவட்டமாக திருவாரூர் மாவட்டம் திகழ்கிறது. விவசாயத்தின் அவசியத்தை, விவசாயிகள் அருமைகளைத் தமது படங்களின் மூலமாகவும், பாடல்களின் மூலமாகவும் உலகுக்கு எடுத்துச் சொன்னவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள்.

‘கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி – விவசாயி’ என்று விவசாயிகளை கடவுளின் குழந்தைகளாக மதித்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதனால்தான் புரட்சித்தலைவர் அவர்கள் பல படங்களில் விவசாயியாக நடித்திருப்பார். அத்தகைய கதாபாத்திரங்கள்தான் அவருக்கு அதிக செல்வாக்கைப் பெற்றுத் தந்தன. புரட்சித்தலைவர் நடித்த ‘விவசாயி’ படம் 100 நாட்களை கடந்து ஓடி சாதனை நிகழ்த்தியது என்றால் அந்தப் படத்தை விவசாய பெருமக்கள் அதிகமாக பார்த்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

“சும்மா கிடந்த நிலத்தைக் கொத்தி,
சோம்பலில்லாம ஏர் நடத்தி,
கம்மாக் கரையை ஒசத்திக் கட்டி,
கரும்புக் கொல்லையில் வாய்க்கால் வெட்டி,
சம்பாப் பயிரை பறிச்சி நட்டு,
தகுந்த முறையில் தண்ணீர் விட்டு,
நெல்லு வெளைஞ்சிருக்கு –
வரப்பும் உள்ளே மறைஞ்சிருக்கு.
அட, காடு வெளைஞ் – சென்ன மச்சான்,
நமக்கு கையுங்காலுந்தானே மிச்சம்”

என்று நாடோடி மன்னன் படத்தில் கதாநாயகி பாடுவார். அதற்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

“இப்போ காடு வெளையட்டும் பொண்ணே – நமக்கு காலமிருக்குது பின்னே என்று விவசாயிகளுக்கு ஊக்கம் தரும் வகையில் பாடுவார்.

அதன் பின்னர், விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்காக, தாம் பின்னாளில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருவோம் என்று தீர்க்க தரிசனமாக

உணர்ந்து "நானே போடப் போறேன் சட்டம், பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்! நாடு நலம் பெறும் திட்டம்!" என்று பாடி அந்தப் பாட்டை முடிப்பார்.

"நல்ல நல்ல நிலம் பார்த்து, நாமும் விதை விதைக்கணும்" என்றும் விவசாயம் செய்யும் முறையை தம் பாடலின் வாயிலாகச் சொன்ன ஒரே நடிகர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். அதனால்தான், பின்னாளில் புரட்சித்தலைவர் அவர்கள் முதலமைச்சரானவுடன், 330 கோடி ரூபாய் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ததோடு, பயிர்ப் பாதுகாப்பு காப்பீட்டு முறையையும் கொண்டு வந்தார்.

"அன்னமிட்ட கை, நம்மை ஆக்கி விட்ட கை" என்றும் "நாளை உலகை ஆளவேண்டும் உழைக்கும் கரங்களே" என்று உழைக்கும் கைகளைப் புகழ்ந்தவர் புரட்சித்தலைவர் அவர்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஒரு நாட்டின் வெற்றி தோல்வியை விவசாயம்தான் தீர்மானிப்பதாக எண்ணினார்.

பொதுவாகவே, உழைக்கும் மக்களுக்கு ஒரு துன்பம் என்றால் முதலில் உதவிக்கரம் நீட்டுபவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களாகத்தான் இருப்பார். தவறைத் தட்டிக் கேட்கும் குணம் அவர் ரத்தத்திலேயே ஊறியிருந்தது! அதற்கு உதாரணமாக, அவருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தையே எடுத்துக் கூறலாம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கும்பகோணம் யானையடி பள்ளியில் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது, அந்த வகுப்புத் தலைவன் வகுப்புக்குத் தண்ணீர்ப் பானை வாங்க, ஆளுக்கு காலணா பணம் வசூலித்தான்.

ஒரு ரூபாய் சேர்ந்த பிறகு வகுப்புத் தலைவன் முக்கால் ரூபாய்க்கு பானை வாங்கிவிட்டு, கால் ரூபாய்க்கு தின்பண்டம் வாங்கி சாப்பிட்டு விட்டான். இதை அறிந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அந்த வகுப்புத் தலைவனிடம், "மாணவர்களின் பொது பணத்தை நீ சாப்பிட்டது தப்பு! அதை திருப்பிக் கொடுத்து விடு" என்றார்.

கோபம் கொண்ட அந்த வகுப்புத் தலைவன் சிறுவன் எம்.ஜி.ஆரை தகாத வார்த்தைகளால் திட்டினான். பொறுத்துக் கொள்ள முடியாத சிறுவன் எம்.ஜி.ஆர். அந்த மாணவனை பளார் என்று அறைந்து விட்டார்.

பஞ்சாயத்து, வகுப்பு ஆசிரியரிடம் சென்றது. "நான் வகுப்புத் தலைவனை அறைந்தது தப்புதான், மன்னித்துவிடுங்கள்" என்றார் எம்.ஜி.ஆர். ஆசிரியர் எம்.ஜி.ஆரை தட்டிக் கொடுத்து, பிறர் பொருளை எடுப்பது தவறு என்றும், அந்தத் தவறை தட்டிக் கேட்க தயங்கக்கூடாது என்ற தைரியமும், தவறு என்றால் மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும், சிறுவன் எம்.ஜி.ஆரிடம் இருப்பதைக் கண்டு ஆசிரியர் வியந்தார்!

உடனடியாக அந்த வகுப்புத் தலைவனை மாற்றிவிட்டு, சிறுவன் எம்.ஜி.இராமச்சந்திரனை வகுப்புத் தலைவனாக்கினார். இந்த சம்பவத்தைப் போலவே, பிற்காலத்தில் அவருடைய அரசியல் வாழ்க்கையிலும் ஒன்று நடந்தது.

தான் சார்ந்திருந்த கட்சியிடம் கணக்குக் கேட்டதற்காகக் கட்சியிலிருந்தே நீக்கப்பட்டார். தவறைத் தட்டிக் கேட்கும் புரட்சித்தலைவர் அவர்களின் குணம்தான் பின்னாளில் தமிழ்நாட்டின் தலையெழுத்தையே மாற்றி எழுதியது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அந்த குணம்தான் அவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக்கியது.

காலம் மாறினாலும், தம் குணத்தை மாற்றிக் கொள்ளாத கொள்கை விளக்காகத் திகழ்ந்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் புரட்சித்தலைவர் அவர்களின் குணங்களையும், கொள்கைகளையும் அதிகமாகத் தெரிந்து வைத்திருந்தவர்.

அதனால்தான் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாரிசாக, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, காவிரி டெல்டா மாவட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து திட்டம் தீட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவிரி நதிநீர் பிரச்சினைக்கு அதிக அழுத்தம் கொடுத்து நீதிமன்றங்களில் வாதிட்டு, வெற்றியும் பெற்றார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொடர் முயற்சியால் 19.02.2013 அன்று, மத்திய அரசிதழில் காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணையை, அந்த உரிமையை, பெற்றுத் தந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், டெல்டா மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதை அதிகம் விரும்பினார்கள். தம் சுற்றுப் பயணத்தின் போதெல்லாம், டெல்டா மாவட்ட மக்களிடம், மனம் திறந்து பேசுவார்கள்.

08.03.2003 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே திருவாரூரில் நடந்த ஒரு கூட்டத்தில் ஆற்றிய உரை வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

அந்தக் கூட்டத்தில் ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாகத் திரண்டிருந்ததைக் கண்ட புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மகிழ்ச்சியுற்று, பூரிப்படைந்தார்கள். அப்போது, “உலகத்தில் இருந்த பெண் தலைவர்களின் வரலாற்றை நாம் எடுத்துப் பார்த்தோமானால், அவர்கள் அனைவருமே மன்னர்களின் மகள்களாகவோ, மனைவிகளாகவோ இருந்திருக்கிறார்கள்!”

ஜனநாயக முறை ஆட்சி நடக்கின்ற நாடுகளில், பெண் தலைவர்கள் எப்போதுமே பெரிய தலைவர்களின் – அதாவது ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரி ஆகியோர்களின் மகளாகவோ, மனைவியாகவோ இருந்திருக்கிறார்கள்.

முதலாம் ராணி எலிஸபெத், ராணி விக்டோரியா, இன்றைய ராணி எலிஸபெத் இவர்கள் எல்லாம் மன்னர் பரம்பரையில் பிறந்தவர்கள். மன்னர்களின் மகள்களாகப் பிறந்ததனால் தான் அவர்கள் ராணியாக முடிந்தது; நாட்டை ஆள முடிந்தது.

இந்த ஆசியக் கண்டத்தை எடுத்துப் பார்த்தோமானால் ஸ்ரீமாவோ பண்டாரநாயகே, திருமதி பெனாசிர் பூட்டோ, அன்னை இந்திரா காந்தி, பங்களாதேசை ஆண்ட கலிதாஜியா, ஷேக் ஹசினா ... இவர்கள் அந்தத் தலைவர்களின் மனைவியாகவோ – மகளாகவோ இருந்ததால்தான் அவர்களால் அந்தப் பதவிக்கே வர முடிந்தது.

அத்தகைய எந்தப் பின்னணியும் இல்லாமல், அத்தகைய எந்த ஒரு ஆதரவும் இல்லாமல், அத்தகைய எந்தப் பாரம்பரியமும் இல்லாமல், நான் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறேன் என்றால், தமிழகத்தில் இருக்கின்ற மகளிர் எதையும் சாதிக்க முடியும் என்பதைத்தான் இது காட்டுகிறது'' என்று பேசத் தொடங்கி, பேச்சின் நிறைவில், ''எத்தனையோ சோதனைகளின் கீழ், எங்களுடைய அரசு பல்வேறு வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது.

இதற்கு சில இடர்பாடுகளை, சில நேரங்களில் இயற்கையும் ஏற்படுத்துகிறது. சில நேரங்களில் மனிதர்களும் ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால், எத்தனை இன்னல்கள் வந்தாலும், தடைகள் ஏற்படுத்தினாலும், எதற்காகவும் நாங்கள் தயங்குவதில்லை. யாருக்காகவும் நாங்கள் அஞ்சுவதில்லை என்பதை, எனது அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவருக்கும் கூறிக்கொள்கிறேன்!'' என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உணர்ச்சி ததும்ப பேசினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அந்த உரையின் வழியில்தான், தமிழ்நாட்டில் இன்று அம்மாவின் ஆட்சி நடந்து வருகிறது. சிறிய மாவட்டமாக இருந்தாலும் இது சிறந்த மாவட்டமாக, உயர்ந்த மாவட்டமாகத் திகழ்கிறது.

இந்த மாவட்டம் மேலும் மேலும் சிறக்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள், பார்த்துப் பார்த்துப் பல திட்டங்களை வழங்கினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களைத் தொடர்ந்து அம்மா அவர்கள் வழியில் நடக்கும் அம்மாவின் அரசு பல புதிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கும் இந்த அரசு, பதவியேற்ற குறைந்த காலங்களிலேயே, பல திட்டங்களைத் தொடக்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் இருக்கிறது. அவற்றை முழுமையாகக் கூற நேரமில்லை என்றாலும் ஒருசிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

❖ மகசூல் பாதித்த ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 361 விவசாயிகளுக்கு, 161 கோடியே 22 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

❖ டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட, நடப்பாண்டில் 56 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் "குறுவை தொகுப்புத் திட்டம்" இந்த அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

- குடிமராமத்துத் திட்டத்தின்கீழ், திருவாரூர் மாவட்டத்தில், 72 பணிகள் 5 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு, 4 கோடியே 99 இலட்சத்து ஓராயிரத்து 620 ரூபாய் மதிப்பீட்டில், 11 ஆயிரத்து 744 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 29 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில், வையகளத்தூர் இரயில்வே கடவு இடையே சாலை மேம்பாலம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2 துணை மின் நிலையங்கள், 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ளன.

- மனுநீதிச் சோழன் நினைவாக, திருவாரூரில் புதிதாக நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படியே, நாங்களும், இந்த மாவட்டத்திற்கு வேண்டிய அத்தனை திட்டங்களையும் விரைந்து செயல்படுத்துவோம் என உறுதி கூறுகின்றோம்.

வேளாண் துறை, கூட்டுறவுத் துறை, காவல் துறை, தொழிற்கல்வித் துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் – ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம், அரசு மாணவர் விடுதி, பாலம், கூட்டுறவு சங்கங்களின் அலுவலகக் கட்டடங்கள், ஆயுதப்படை அலுவலகக் கட்டடம், அனைத்து மகளிர் காவல் நிலையம், அரசு பாலிடெக்னிக் கல்லூரி என, 37 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 பணிகள் நிறைவு பெற்று இன்று இந்த இனிய நாளில் திறந்து வைக்கப்பட்டன.

281 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 ஆயிரத்து 918 பேர் பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளும் இன்று வழங்கப்பட்டன.

திருவாரூர் மக்கள், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தன் சொந்த மகனுக்கு, சொந்தச் சகோதரனுக்கு, சொந்தத் தந்தைக்கு எடுக்கும் விழாவாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்!

சாமானியர்களையும் சரித்திரம் ஆக்கும் வல்லமையுடையது கழகம்! வல்லமை உடையவர், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வளர்ந்தவர்கள் கடைசி வரை கழகத்திற்கு நன்றியுடையவர்களாக இருந்தால், இந்தக் கழகம் இன்னும் 100 ஆண்டுகள் இந்த மண்ணில் வேரூன்றி நிலைத்து இருக்கும்.

இதைக்கூறுகிற போது ஒரு கதை நினைவுக்கு வருகிறது. முனிவர் ஒருவர் காட்டில் வசித்து வந்தார். ஒரு பூனை அவருடன் தங்கி, அவருக்கு உதவிகள் செய்து வந்தது. வெளி உலகம் தெரியாமல் முனிவரின் ஆசிரமத்துக்குள்ளேயே வளர்ந்த பூனை அது.

பூனையின் மேல் முனிவருக்கும், முனிவர் மேல் பூனைக்கும் நல்ல பாசம் இருந்தது. ஒரு நாள் பூனை, காட்டில் முதன்முதலாக நாய் ஒன்றைப் பார்த்து விட்டது. தன்னைவிட நாய் பெரிய உருவமாக இருப்பதைக் கண்டு அஞ்சியது. நேராக முனிவரிடம் சென்று "தவ வலிமைமிக்க உங்களுடன் நான் இருந்து என்ன பயன் ? இந்த நாய் என்னைவிட உருவத்தில் பெரியதாகவும், வலிமை மிக்கதாகவும் இருக்கிறது. அதனால், என்னை நாயாக மாற்றி விடுங்கள்" என்று பூனை முனிவரிடம் வேண்டியது.

முனிவரும், தன் தவ வலிமையால் பூனையை – நாயாக மாற்றினார். பூனை மகிழ்ச்சியடைந்தது. சிறிது நாட்களுக்குப் பிறகு, ஒரு புலியைப் பார்க்கும் வாய்ப்பு, நாயாக மாறிய பூனைக்கு ஏற்பட்டது. புலியைப் பார்த்ததும் பூனைக்கு வியப்பும், பயமும் ஏற்பட்டது. மீண்டும் முனிவரிடம் போய், நாயாக உள்ள தன்னைப் புலியாக மாற்றினால் நல்லது என்றது. முனிவரும் அவ்வாறே செய்தார். நாயாக இருந்த பூனை, தற்போது புலியாக மாறியது. அதன் பிறகு ஒரு நாள், சிங்கம் ஒன்றைப் புலியாக இருந்த பூனை பார்த்தது. இப்போது, புலி உருவத்தில் இருந்த பூனை முனிவரிடம், – "முனிவரே! என்னைச் சிங்கமாக மாற்றுங்கள்" என்றது. முனிவரும் அப்படியே செய்தார். 'இனி இந்தக் காட்டுக்கு நான்தான் ராஜா – என்னை யாராலும், ஒன்றும் செய்துவிட முடியாது' – என்றபடி சிங்க உருவப் பூனை கர்வத்துடன் காட்டில் உலாவியது.

பிறகு, 'சரபம்' என்ற எட்டுக் கால்களை உடைய விசித்திரமான பெரிய மிருகம் ஒன்று போய்க் கொண்டிருந்தது. அனைத்து மிருகங்களும் அதைப் பார்த்து பயந்து பதுங்கின. அதைப் பார்த்த சிங்க உருவம் கொண்ட பூனைக்கும் பயம் வந்தது. முனிவரிடம் ஓடியது. "குருவே! எனது கடைசி ஆசை. அதோ அந்த 'சரபம்' மிருகமாக என்னை மாற்றுங்கள் நான் இந்தக் காட்டுக்கே பாதுகாப்பாக இருப்பேன்" என்றது.

முனிவரும் சிங்க உருவத்திலிருந்த பூனையை சரபம் மிருகமாக மாற்றினார். அவ்வளவுதான்! சரபமாக மாறிய பூனை ஆணவமாகக் காடு முழுவதும் சுற்றித் திரிந்தது. எல்லா மிருகங்களும் தன்னைக் கண்டு அஞ்சுவதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தது.

திடீரென்று ஒருநாள், அதற்கு ஒரு யோசனை தோன்றியது. இந்த முனிவர், தன்னைப் போல வேறு ஏதாவது மிருகத்தை, சரபமாக மாற்றிவிட்டால் தனக்கு ஆபத்து ஏற்பட்டு விடும். இனிமேல், தனக்குப் போட்டியாக யாரும் இந்தக் காட்டுக்குள் வராமல் இருக்க வேண்டுமென்றால், முனிவரைத் தீர்த்துக் கட்டுவதுதான் சிறந்த வழி என்று தீர்மானித்து,

முனிவரைக் கொல்வதற்காக கொலைவெறியுடன் சென்றது. சரபம் உருவில் இருந்த பூனையின் கெட்ட எண்ணத்தை, தன் தவ வலிமையால் தெரிந்து கொண்ட முனிவர், பூனையிடம், "உருவத்தில் நான் உன்னை எப்படி மாற்றினாலும், நீ இன்னும் பூனையாகவே இருக்கிறாய்!" என்று அந்தச் சரபம் மிருகத்தை பழையபடி பூனையாக மாற்றினார். பூனை வாலைச் சுருட்டிக்கொண்டு, முனிவரின் ஆசிரமத்தில் ஒரு மூலையில் படுத்துக் கொண்டது.

இந்தக் கதையில் வரும் முனிவர் என்பவர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை கூறிவிடுகின்றேன். பூனை யாராக இருக்கும் என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகின்றேன். தன்னை வளர்த்து ஆளாக்கிய கழகத்திற்கு, களங்கம் விளைவிப்பவர்கள் – யாராக இருந்தாலும், அவர்களுக்கு இந்தப் பூனையின் கதிதான் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதைக் கழக உடன்பிறப்புகள் மனதில் நிறுத்தி, ஒற்றுமையுடன் செயலாற்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் விருப்பத்தையும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களையும் நிறைவேற்ற இந்த இனிய நாளில் உறுதியேற்போம்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்திலே, விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை வாரி வழங்கினார்கள்! அதே வழியில் வந்த அம்மாவினுடைய அரசு, அந்த விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை இன்றைக்கு தமிழகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதில் ஒன்று தான், குடிமராமத்து என்ற அற்புதமான திட்டம். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கி, 1,519 ஏரிகள், விவசாயிகள் பங்களிப்புடன் அரசும் சேர்ந்து இந்த திட்டத்தைத் தொடங்கி, இப்பொழுது இந்தத் திட்டம் நிறைவு பெறுகின்ற நிலையிலே இருக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபொழுது, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகளிலும், குளங்களிலும் இருக்கின்ற வண்டல் மண், விவசாயிகளால் இலவசமாக எடுத்துச் செல்லப்பட்டு, வயல்களில், தோட்டங்களில், அந்த வண்டல் மண்ணைப் பரத்தி, அந்த விவசாயிகள் பயிரிடுகின்றபொழுது, அதில் அதிகமான விளைச்சல் பெற்று, அதிகமான லாபம் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித்தந்த அரசு, அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட காலமாக, விவசாயிகள் தூர் வாரவேண்டும் என்று கோரிக்கை ஒன்றை வைத்ததார்கள். அவை பல ஆண்டுகாலமாகத் தூர்வாரப்படாமல் இருந்தன. தூர் வாருவதன் மூலமாக குளம் ஆழமாகிறது, விவசாயிகளுக்கு தேவையான வண்டல் மண் கிடைக்கிறது; குளங்கள் ஆழமாவதன் மூலமாக, பருவ காலங்களில் பெய்யும் மழை முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு, வறட்சியான காலத்திலே செறிவூட்டப்பட்டு, வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கிறது. இந்தத் திட்டம் சிறப்பாக இருக்கிறது என்று கருதி, மேலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று, விவசாய பெருமக்கள் கோரிக்கை வைத்ததை ஏற்று, அம்மாவினுடைய அரசு, 2,065 ஏரிகளை, 300 கோடி ரூபாய் திட்டத்திலே எடுத்துக்கொள்ள இருக்கின்றது.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலே தான், விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்கள் மற்றும் பயிர் வகைகளைச் சேமித்து வைக்க கிட்டத்திட்ட 7,879 கிடங்குகள், தமிழ்நாடு முழுவதும் கட்டப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றன. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களின் விலை குறையும் பொழுது, விவசாயிகளை நஷ்டத்திலிருந்து மீட்க வேண்டும் என்பதற்காகத் தான், விளைபொருட்களைக் கிடங்குகளிலே வைத்து, அதற்குக் குறைந்த வட்டியிலே கடனை பெற்று, விலை ஏறுகின்றபொழுது, அந்த விளைபொருட்களை விற்று, அந்தக் கடனை அடைத்து விடலாம்.

அது மட்டுமல்ல. இந்த மாவட்டம், விவசாயிகள், உழைப்பாளிகள் நிறைந்த மாவட்டம். ஆகவே, அவர்களுக்குத் தேவையான பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும், 7,000 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டிருக்கின்றது. பயிர்க்கடன் எந்த மாவட்டத்தில், எவ்வளவு பேருக்கு வேண்டுமானாலும் வழங்க வேண்டும் என்று அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. ஆகவே, வேளாண் பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னிலை பெற்றிருக்கிறது. இந்தியாவிலேயே, 3 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு ஐந்தாண்டுக் காலமாக தொடர்ந்து முன்னிலை வகித்துக் கொண்டிருக்கின்றது! நான்காண்டு காலம் மத்திய அரசினுடைய 'கிரிஷ் கர்மான்' விருதைத் தமிழ்நாடு அரசு பெற்று வந்துள்ளது. நான்காண்டுக் காலமாக, மத்திய அரசினுடைய முதல் பரிசைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், இந்தியாவிலேயே, 4 முறை முதல் பரிசு பெற்ற ஒரே மாநிலம் அம்மாவின் அரசைக் கொண்டுள்ள தமிழ்நாடு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதில், மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். காவிரி மேலாண்மை வாரியம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் விவசாயிகளினுடைய நன்மைக்காக அம்மா அரசு தொடர்ந்து போராடும், வெற்றி கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, கல்வியிலேயும் ஒரு புரட்சியை அம்மாவினுடைய அரசு செய்திருக்கிறது. ஒரே நேரத்தில், தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை ஆசிரியப் பெருமக்களையும் சென்னைக்கு வரவழைத்து, சுமார் 20,000–க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பணி ஆணையை இவ்வரசு வழங்கியுள்ளதற்கு அடையாளமாக அம்மா அவர்கள் தம் திருக்கரங்களால் பணி ஆணையை வழங்கினார்கள். இதனால், தமிழ்நாட்டில் கல்வியிலே புரட்சி ஏற்பட்டது. காலிப் பணியிடங்களை நிரப்பியதன் விளைவாக கல்வியில் புரட்சி உருவாக்கப்பட்டது. ஆகவே, 2011ஆம் ஆண்டு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பொழுது, தமிழகத்தினுடைய உயர்கல்வியினுடைய வளர்ச்சி விகிதம் 21 சதவீதம். 2006ல் இருந்து, 2011 வரை, திமுக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்பொழுது 100க்கு

21 பேர் உயர்கல்விப் படிப்புப் படித்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு செய்த ஊக்குவிப்புகள், வழங்கிய நலத்திட்டங்களின் விளைவாக, கல்வியில் புரட்சி ஏற்பட்டு இன்றைக்கு கல்வியினுடைய சதவீதம், உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை 44.3 சதவீதமாக உயர்ந்திருக்கின்றது. பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்று சொன்னால், கல்வி அறிவு முக்கியம், அந்த கல்வி அறிவை இந்த அம்மாவினுடைய அரசு கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆறு ஆண்டுகளிலே, அம்மாவினுடைய அரசு 65 கல்லூரிகளைத் தமிழகத்தில் உருவாக்கித் தந்திருக்கின்றது. இன்றைக்கு, தனியார் கல்லூரியில் படிக்க வேண்டுமென்றால் அதிகமாக செலவாகும். ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதாரண குடும்பத்திலே இருக்கின்ற, கிராமத்தினர் படிக்கவேண்டுமென்று சொன்னால், அங்கே தனியார் கல்லூரியில் கூடுதல் கட்டணம் செலுத்திப் படிக்கவேண்டும். புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்கு சிந்தனையோடு, இன்றைக்கு வசதி படைத்தவர்கள் படிப்பதுபோல ஏழை, எளிய மக்களும் கல்வி பயில வேண்டும் என்ற எண்ணத்தில், 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்தார். பள்ளியிலே படிக்கும் குழந்தைகளுக்குக் காலணி, சீருடை, புத்தகம், நோட்டு கொண்டுவருவதற்கு, பை ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. இன்றைக்கு, திருவாரூர் போன்ற இடத்தில் உள்ள குழந்தைகள் அதிக தூரம் படிக்கச் செல்லும் பொழுது, அவர்களுக்கு செல்ல ஏதுவாக, விலையில்லா சைக்கிள் வாங்கி கொடுத்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இவ்வளவு எண்ணற்ற திட்டங்களை கொடுத்த காரணத்தினால்தான், இந்தியாவிலேயே, கல்வியில் இன்றைக்கு தமிழ்நாடு சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். அந்தப் பெருமைக்கு முழுக் காரணம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்!

பேரூராட்சிப் பகுதியிலே, இன்றைக்கு ஏழை எளியோருக்கு வீடுகட்டுவதற்காக மத்திய அரசோடு, மாநில அரசும் சேர்ந்து 2,10,000 ரூபாய் மானியமாகக் கொடுத்து உதவி செய்கின்றது. இன்றைக்கு, பலபேர் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குடிசையில் வாழ்கின்ற ஏழைகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து, 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மானியமாகக் கொடுத்து, நல்ல வீடுகள் கட்டுவதற்கு உதவி செய்து வருகின்றன. அந்தத் திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்த போது, நான், தமிழகத்திற்கு அதிகமான வீடுகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவர் சிரித்துக் கொண்டே நிச்சயமாக தருவேன் என்று சொன்னார். அண்மையிலே ராமேஸ்வரம் வந்திருந்தார். அந்த பொது கூட்டத்திலே பேசினார். அவர் உரையாற்றுகின்ற போது, தமிழகத்திற்கு எத்தனை இலட்சம் வீடுகள் வேண்டுமானாலும் தருகிறேன் என்ற உறுதிமொழியை தந்தார். சிலபேர் சொல்லி கொண்டிருக்கிறார்கள். "அடிக்கடி டெல்லி செல்கிறார்கள்; பாரதப் பிரதமரை சந்திக்கிறார்கள்; எந்தத் திட்டத்தை கொண்டு வந்தார்கள்?" என்று கேட்கிறார்கள். நாங்கள் அடிக்கடி டெல்லி சென்று

பாரதப் பிரதமரை சந்தித்ததன் காரணமாக தான், ராமேஸ்வரம் பொது கூட்டத்திலே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் எவ்வளவு வீடுகள் வேண்டுமானாலும் தமிழகத்திற்குத் தருவேன் என்ற உறுதிமொழியைத் தந்து சென்றார்கள். ஆக, ஏழை எளிய ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பேரூராட்சி நகராட்சிப் பகுதிகளிலே வசிக்கும் மக்கள் வீடு கட்டுவதற்காக, 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மானியமாக அரசு தருவதற்கு முடிவெடுத்து, இன்றைக்கு தரக்கூடிய சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல நெசவாளர்களுக்கு மின்கட்டணச் சலுகை போன்ற நிறைய திட்டங்களை இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு வாரி வாரி வழங்கி வருகிறது.

இன்னும் பலபேர் பேசுகிறார்கள். இந்த ஆட்சியை எப்படியாவது கலைக்க வேண்டும் என்று! இந்த ஆட்சி மீது, தொடர்ந்து தவறான செய்தியை வெளியிட்டு கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்று பல்வேறு, திட்டங்களைச் செயல்படுத்தியதால், நாட்டு மக்கள் பயனடைந்து இருக்கிறார்கள்.

அதே வழியில், அம்மாவினுடைய அரசு இந்த ஆறு மாத காலத்திலே பல்வேறு திட்டங்களை வகுத்துத் தந்து, நாட்டு மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தேர்தல் நேரத்திலே குறிப்பிட்ட வாக்குறுதிகளை எல்லாம் இந்த அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி வருகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் கனவை, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நனவாக்கினார்கள்! புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம்!

இன்றைக்குத் தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்து வருகிறது. இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது. சுகாதார வசதியும் சிறந்து விளங்குகிறது. கல்வியும் சிறந்து விளங்குகிறது.

அம்மாவினுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 140 ஆண்டுக்காலம் இல்லாத கடுமையான வறட்சி தமிழகத்தில் தற்போது நிலவுகிறது. இந்த வறட்சியால், மேட்டூர் அணையில்கூட தண்ணீர் இல்லை. ஏனவே, பாசனத்திற்கு வேண்டிய நீரை, நம்முடைய திருவாரூர் விவசாயிகளுக்கு அளிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட வறட்சி இருந்தும், விலைவாசி உயராமல் அம்மாவின் அரசு பார்த்துக் கொண்டது!

அதேபோல, மக்களுக்குத் தேவையான வேலைவாய்ப்பையும் இவ்வரசு அளித்துக் கொண்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான நிவாரணத் தொகையையும் வழங்கிக் கொண்டிருக்கிறது. அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு காப்பீட்டுத் தொகை வழங்கிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், பல்வேறு கோரிக்கைகளை வைத்தார். உங்களுடைய அமைச்சர் திரு.காமராஜ் அவர்கள் உங்கள் மாவட்டத்தின் எந்தக்

கோரிக்கையும் நிறைவேற்றித்தர உறுதுணை புரிவார். அவர் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அரசின் சார்பாக நான் இப்பொழுது சில அறிவிப்புகளை அறிவிக்கிறேன்.

அறிவிப்புகள்

❖ வலங்கைமான் வட்டத்தில் உள்ள வலங்கைமான் மற்றும் அரித்துவாரமங்கலம், காவல் நிலையங்கள் தஞ்சாவூர் மாவட்டக் காவல் சரகத்தில் இருந்து மாற்றப்பட்டு, திருவாரூர் மாவட்டக் காவல் சரகத்துடன் சேர்க்கப்படும்.

❖ வலங்கைமான் மற்றும் ஆலங்குடி மின்வாரிய அலுவலகங்களை, தஞ்சாவூர் மின்பகிர்மான வட்டத்தில் இருந்து, திருவாரூர் மின்பகிர்மான வட்டத்தில் சேர்க்கப்படும்.

❖ மன்னார்குடி வட்டம், சவளக்காரன் கிராமத்தில், 110 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் நிறுவப்படும்.

❖ குடவாசல் பேருந்து நிலையம், புதிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

❖ குடவாசல் ஒன்றியம் மணப்பறவை – குடவாசல் பேரூராட்சி ஏரூர்ந்தவாடி வழியாக, கும்பகோணம் சாலையை இணைக்கும் வகையில், சோழசூடாமணி ஆற்றின் குறுக்கே, புதிய பாலம் மற்றும் சுற்றுச்சாலை அமைக்கப்படும்.

❖ மன்னார்குடி நகராட்சியையும் கர்த்தநாதபுரத்தையும் இணைக்கும் வகையில், பாமிணி ஆற்றின் குறுக்கே, புதிய பாலம் அமைக்கப்படும்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், "எங்கள் பகுதியிலே அதிகத் தடுப்பணைகள் கட்ட வேண்டும் என்றும் நிலத்தடி நீரை செறிவூட்ட வேண்டும்; ஆங்காங்கே தேங்குகின்ற மழைநீர் ஓடைகளின் இடையிலே தடுப்பணைகள் கட்டித் தண்ணீரைத்தேக்கி, விவசாயத்திற்குத்தேவையான நீரைத்தேக்கிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்! அவருடைய கோரிக்கையை, அரசு பரிசீலிக்கும் என்பதை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, குடவாசலிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரியை தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். மாண்புமிகு அம்மாவுடைய அரசு இக்கல்லூரியை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அனுமதி அளித்து, கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் பேசும் போது, குடவாசலில் புதிதாக, அம்மாவின் அரசால் தொடங்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு, 'டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி' என்று பெயர்

சூட்ட வேண்டுமென்று, கோரிக்கை வைத்தார். அவரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோபால் அவர்களும் கோரிக்கை வைத்தார். இருவரும் சேர்ந்து அந்தக் கல்லூரிக்குப் பெயர் சூட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களது கோரிக்கையை ஏற்று, அக்கல்லூரிக்கு, 'டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி' என்று பெயர் சூட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு சாதனை மேல் சாதனைகளை படைத்து கொண்டிருக்கிறது இந்த நேரத்திலே இன்றைக்கு இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுவதற்கு காரணகர்த்தவாக இருந்த உங்களுடைய மாவட்டத் தலைவர், மண்ணின் மைந்தர் திரு. காமராஜ் அவர்களுக்கு அவரது அயரா முயற்சிகளைச் சுட்டிக்காட்டி, மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது, 'பாரத ரத்னா' புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா போல் அல்லாமல், ஒரு மாநில மாநாடு போல் காட்சியளிக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கே நோக்கினாலும், எந்தத் திசையை நோக்கினாலும், மக்கள் வெள்ளத்தைப் பார்க்கின்றோம். அந்த அளவிற்கு, மாண்புமிகு அம்மாவினுடைய அரசுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், 'பொன்மனச் செம்மல்', புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்க வேண்டும் என்பதற்காக, பட்டிதொட்டி எல்லாம் இருந்து வந்து சிறப்பித்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி பாராட்டி,

இந்த சீர்மிகு விழாவிற்காக ஒற்றுமையோடு உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும் கழகத் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்!
வளர்க, புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
19.08.2017 அன்று திருவாரூரில் நடைபெற்ற
'பாரத ரத்னா' புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை

"உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே" என்ற அரிய தலைவருக்கு அரியலூரில் நூற்றாண்டு விழா

ஏற்றமிகு பல திட்டங்களைத் தீட்டியவர் எம்.ஜி.ஆர்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். புரட்சித் தலைவர், பொன்மனச்செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த மகத்தான விழாவிற்கு, தலைமையேற்று சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே!

அற்புதமான கருத்துக்களை உங்களிடத்திலே எடுத்துவைத்து, இன்றைக்கு இணைந்து சிறப்பித்திருக்கின்ற, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கண்ட கனவை நனவாக்குவதே எங்களுடைய இலட்சியம் என்ற இலட்சியப் பாதையில் இணைந்திருக்கின்ற அண்ணன் அவர்கள், இன்றைய தினம் மேடையிலே 6 மாதத்திற்குப் பிறகு இணைந்து ஒன்றாக பேசுகின்ற காட்சி உன்னத மகிழ்ச்சி அளிக்கின்றது. அந்த உன்னத மகிழ்ச்சிக்கு உரியவர் கழகத்தினுடைய பொருளாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! இங்கே, சிறப்பான கருத்துகளை வழங்கி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை

அவர்களே! சுருக்கமான நல்ல, பல கருத்துக்களை எடுத்துவைத்து அமர்ந்திருக்கின்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு.வைத்திலிங்கம் அவர்களே! வந்திருக்கின்ற மக்கள் வெள்ளத்தைப் பார்க்கின்றபொழுது, இது அரியலூரில் நடந்து கொண்டிருக்கின்ற பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய, நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டமாக மட்டுமே கருதவில்லை. இதனை ஒரு மாநில மாநாடுபோல் காட்சியளிக்கின்ற அளவிற்குச் சிறப்பான ஏற்பாட்டைச் செய்ததுடன், இன்றைக்கு அரியலூர் மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் இங்கே குழுமி, “பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நாங்கள், கொண்டாடுகிறோம் என்று சொல்கின்ற அளவிற்கு மக்கள் வெள்ளம் குழுமியிருக்கின்ற அந்தக் காட்சியை ஏற்படுத்திய இந்த மண்ணின் மைந்தரும் முன்னிலையுரை ஆற்றியுள்ள அரசு தலைமைக் கொறடாவுமான திரு. இராஜேந்திரன் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. ஆர்.வெங்கடேசன் அவர்களே! வாழ்த்துரை வழங்கிய சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. மா.சந்திரகாசி அவர்களே! ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்களே! குன்னம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.ராமச்சந்திரன் அவர்களே! அமைச்சர் பெருமக்கள், திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே! திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே! திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே! திரு.டி.ஜெயக்குமார் அவர்களே! திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! திரு. ஆர்.காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே! டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! திரு. கே.சி.வீரமணி அவர்களே! திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி. வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. கே. பாண்டியராஜன் அவர்களே திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்களே! திருமதி. எஸ்.வளர்மதி அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள, அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க. லட்சுமி ப்ரியா, அவர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்கள் அவர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, வருகைபுரிந்திருக்கின்ற தலைமைக்

கழகத்தினுடைய நிர்வாகிகளே, முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிருவாகிகளே, வருகை புரிந்திருக்கின்ற கழகத்தினுடைய அனைத்துமட்ட நிருவாகிகளே, கிளைக் கழகத்தினுடைய நிர்வாகிகளே, அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! அத்தனைபேருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுக்கு முந்தைய பழமையையும், பல மன்னர்களின் ஆளுகையையும், ஆன்மிக அறநிலையங்களையும், கட்டடக்கலையின் தொகுப்பையும், தொழிற்சாலைகளையும், தன்னகத்தே கொண்டு தமிழ்நாட்டின் நடுநாயகமாக விளங்கும் அரியலூர் மாவட்டம், ஓர் அற்புதமான மாவட்டமாகும்.

இப்போது, அரியலூராக இருக்கும் இந்த நிலம், மனித இனம் தோன்றுவதற்கு முன், கடலுக்கு அடியில் மூழ்கி இருந்தது. பிற்காலத்தில், கடல்நீர் கிழக்கு நோக்கி நகர்ந்ததால், உருமாறிய பாறைகள், நிலமாக வெளிப்பட்டன. அதன்பிறகுதான் மனிதர்கள் அங்கே குடியேறத் தொடங்கினார்கள். வரலாற்றுக்கு முந்தைய கால மக்கள் வாழ்ந்த பகுதியான அரியலூர் மாவட்டம், 'புவியியல் ஆராய்ச்சியாளர்களின் மெக்கா' என்று அழைக்கப்படுகிறது.

மரம், விலங்கு மற்றும் தாவர இனங்களின் பல்வேறு வகையான படிமங்கள் இம்மாவட்டத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. 'டைனோசர்' முட்டைகள் கூட, இந்த மாவட்டத்திலுள்ள கல்லங்குறிச்சியில் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த மாவட்டத்தை 'தொல்லுயிர் விலங்கியல் பூங்கா' என்றும் அழைக்கிறார்கள்.

வில் வித்தையில் சிறந்து விளங்கிய ஓரி மன்னன், இந்த அரியலூரை ஆண்டிருக்கிறான். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை அரியலூர் மாவட்டம் பல்லவப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது.

இராஜராஜ சோழன் காலம் வரை, தஞ்சாவூர்தான், சோழர்களின் தலைநகராக இருந்திருக்கிறது. அதன் பிறகு, வறண்ட பகுதியாக இருந்த, இந்த அரியலூர் பகுதியில் உள்ள கங்கை கொண்ட சோழபுரத்திற்குத் தலைநகரை மாற்றி, அதைச்சுற்றி 86 ஊர்களைத் தோற்றுவித்து, இந்த பகுதி வளர்ச்சிக்கு வித்திட்டவர் ராஜேந்திர சோழன்தான்.

தன் தந்தை இராஜராஜசோழன், தஞ்சையில் கட்டிய பெருவுடையார் கோயிலைப் போலவே, கங்கைகொண்ட சோழபுரத்திலும் மிக உயரமான வானை முட்டும் கோபுரத்துடன் பிரகதீஸ்வரர் கோயிலை இராஜேந்திர சோழன் கட்டினார். இந்தக் கோயில் 'யுனெஸ்கோ'வால் உலகப் பாரம்பரியம் மிக்க சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜேந்திர சோழன், இந்தியாவிற்கு வெளியே படையெடுத்துச் சென்று, பல நாடுகளை வெற்றி கொண்டதால், கங்கைகொண்ட சோழபுரம், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கே தலைநகரமாக விளங்கித் தமிழனின் பெருமையைப் பறை சாற்றியது.

இவையெல்லாம், அரியலூர் மாவட்டம் பெற்றுள்ள வரலாற்றுப் பெருமைகள். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டுவதற்கும், கங்கைகொண்ட சோழபுரம் ஆலயத்தைக் கட்டுவதற்கும், இன்னும் பல திருக்கோயில்களை கட்டுவதற்கும், பல ஏரிகளை வெட்டுவதற்கும், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உடல் வலிமையோடும், மன வலிமையோடும் உழைத்திருக்கிறார்கள்.

சோழர் கால தொழிலாளர்களின் தொழில்நுட்ப அறிவையும், கலைத்திறனையும் பார்த்து, இப்போது இங்கு சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகள் வியக்கிறார்கள் என்றால், உழைப்புக்கும், தொழில்நுட்ப அறிவுக்கும், கலைத் திறனுக்கும், உலகத்திற்கே தமிழன்தான் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறான் என்பது தெரியவரும்.

அதிலும், அரியலூர் தொழிலாளர் பெருமக்கள், தமிழர்களின் கலைநுட்பத்திற்கு முன்னுதாரணமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுகளிலிருந்து அறியமுடிகிறது. முதலாம் ராஜேந்திரசோழன் முதல், மூன்றாம் ராஜேந்திர சோழன் வரை, பதினாறு சோழ மன்னர்கள், கங்கைகொண்ட சோழபுரத்தை 240 ஆண்டுகள் ஆண்டிருக்கிறார்கள்.

சோழர்களுக்கு பிறகு, பாண்டியர்கள், ஹொய்சாளர்கள், விஜயநகர மன்னர்கள், பீஜப்பூர் சுல்தான்கள், மராட்டியர்கள், கர்நாடக நவாப்புகள் போன்ற ஆட்சியாளர்கள் ஆண்ட பூமி இது. மன்னர்கள் ஆட்சி மாறி, ஆங்கிலேயர்களின் அடக்குமுறையில் அரியலூர் இருந்தபோது, இந்த மண்ணிலிருந்து அதிக அளவில் சுதந்திர போராட்ட வீரர்கள் வீரிட்டு எழுந்தார்கள்.

அரியலூர் சபாபதி பிள்ளை, நடேச அய்யர், கணபதி ரெட்டியார், நடராஜ பிள்ளை, ஏரவாங்குடி பத்மநாதன், அரியலூர் மானோஜி ராவ், குப்புசாமி, அபரஞ்சி, அப்பாசாமி, வீரபத்திரன், ரங்கராஜன், விக்கிரமங்கலம் அழகேசம் பிள்ளை, மணக்கால் சதாசிவம் பிள்ளை போன்ற எண்ணற்ற தியாகிகளை, நான் இந்த நேரத்தில், நினைவு கூர்ந்து வணங்குவதோடு, அவர்கள் பிறந்து, வாழ்ந்து, மறைந்த இந்தப் புனிதமான மண்ணையும் வணங்குகிறேன்.

மேலப்பழுவூர் சுந்தரேசுவரர் கோயில், கீழப்பழுவூர் ஆலந்துறையார் கோயில், திருமழப்பாடி வைத்தியநாத சுவாமி கோயில், காமரசவல்லி சுந்தரேசுவரர் கோயில், கோவிந்தபுத்தூர் கங்கஜெகதீஸ்வரர் கோயில், விக்கிரமங்கலம், செந்துறை, ஸ்ரீபுரந்தான், மற்றும் சென்னிவனம் சிவன் கோயில்கள், ஏலாக்குறிச்சி அடைக்கல மாதா ஆலயம் போன்ற ஆன்மீகத் திருவிடங்களையும், வேட்டக்குடி – கரைய வெட்டி பறவைகள் சரணாலயம் போன்ற சுற்றுலா இடங்களையும் கொண்டது இந்த அரியலூர் மாவட்டம். இந்த மாவட்டத்தில், பல தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன.

சுண்ணாம்பு மற்றும் கல் சார்ந்த தொழில்கள் ஏராளமாக நடைபெறுகின்றன. எனவே, இது உழைப்பாளர் பெருமக்களை அதிகமாகக் கொண்ட மாவட்டமாகத் திகழ்கிறது. எனவேதான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த பகுதி மக்களை தம் உறவு மக்களாகவே நினைத்தார்கள்!

'ஒன்று எங்கள் சாதியே, ஒன்று எங்கள் நீதியே, உழைக்கும் மக்கள் யாவரும் – ஒருவர் பெற்ற மக்களே' என்று மக்கள் திலகம் உழைக்கும் மக்களை ஒரு தாய் பெற்ற மக்களாகவே போற்றினார்கள். 1972ஆம் ஆண்டுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்கக்கூடிய ஒரு தனிமனிதராகத் திகழ்ந்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஏழையாகப் பிறந்து, ஏழையாக வளர்ந்து, ஏழைகளுக்காக தமிழ்நாட்டை ஆண்டு, ஏழைகள் இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றிட, ஏற்றமிகு திட்டங்கள் பலதீட்டி, உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்கு, அல்லும் பகலும் உழைத்து, தான் உயர்ந்த பதவிக்கு வந்த பின்பும், கடைசிவரை உழைப்பாளராகவே வாழ்ந்து, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'இல்லாமை நீக்க வேண்டும், தொழில் ஆக்கம் வேண்டும், இங்கு எல்லோரும் வாழவேண்டும், முன்னேற என்ன வேண்டும், நல்ல எண்ணம் வேண்டும்' – என்று 'அன்னமிட்டகை' என்ற படத்தில் எம்.ஜி.ஆர். பாடினார்கள்.

'படகோட்டி' படத்தில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 'நான் தனிமனிதன் அல்ல, மக்களுக்குக் கட்டுப்பட்டவன், நான் தலைவன் அல்ல, தலைவன் என்ற பெயரில், மக்களின் அடிமை நான்' என்று வசனம் பேசுவார்.

அதேபோல, 'பல்லாண்டு வாழ்க' என்ற படத்தில் ஒரு பெண்மணி – எம்.ஜி.ஆரைப் பார்த்து, 'இந்த உலகத்தில் ஏழைகளுடைய கஷ்டத்தைப் புரிஞ்சவங்க உன்ன மாதிரி வேறு யாரும் இல்லை' என்பார்.

இவற்றையெல்லாம் திரைப்படங்களுக்காக எழுதப்பெற்ற கற்பனைப் பாடல்களாகவும் வசனங்களாகவும் நாம் கொள்ளக்கூடாது. திரையில், நடிப்புக்காக ஒரு பேச்சு, வெளியில் ஒரு பேச்சு என்று புரட்சித்தலைவர் பேசியதே இல்லை. தாம் மக்களுக்கு – என்ன சொல்ல வேண்டும் என்று நினைக்கிறாரோ, அதை வெண்திரையின் மூலம் சொல்லி விடுவார்.

பொழுதுபோக்குக் கலையாக இருந்த திரைப்படங்களை, இந்தியாவிலேயே முதன்முதலில், மக்கள் நலனுக்காகவும், மக்கள் விழிப்புணர்வுக்காகவும் பயன்படுத்தியவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். புரட்சித்தலைவர் அவர்களைப் பின்பற்றிதான், இந்தியாவின் மற்ற மாநிலங்களில், திரைப்படக் கதாநாயகர்கள் பொது வாழ்க்கைக்கு வந்தார்கள்.

புரட்சித்தலைவர் அவர்களின் ஆலோசனைப்படிதான், பக்கத்து மாநிலம் ஆந்திராவில், திரு. என்.டி.ராமாராவ் அவர்கள் அரசியலுக்கு வந்தார். புரட்சித்தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்களின் ஆலோசனைப்படி, அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய என்.டி.ஆர். அவர்கள், ஆந்திராவில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், திரு. என்.டி.ஆர் அவர்களிடம் தமக்கிருந்த தனிப்பட்ட நட்பின் மூலம், தெலுங்கு கங்கைத் திட்டத்தினை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்தார்கள்.

அதைப்போல, கேரளாவில், திரு.பிரேம்நசீர் அவர்களும், கருநாடகாவில், திரு.ராஜ்குமார் அவர்களும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள். அதனால்தான், திரு.என்.டி.ஆர். அவர்களை ‘ஆந்திர எம்.ஜி.ஆர்’ என்றும் பிரேம்நசீர் அவர்களை ‘கேரள எம்.ஜி.ஆர்’ என்றும், ராஜ்குமார் அவர்களை ‘கன்னட எம்.ஜி.ஆர்.’ என்றும் மக்கள் அன்போடு அழைத்தார்கள்.

இந்தியாவில் உள்ள நடிகர்களுக்கு, தலைவர்களுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முன்மாதிரியாக விளங்கியதைப் போலவே, மற்ற மாநிலங்களுக்கு, தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக உருவாக்கிய பெருமையும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு உண்டு.

‘கலைஞர்கள் நாட்டுக்காகப் பாடுபடவேண்டும். அப்போதுதான், அவர்கள் சிரஞ்சீவியாக வாழ்வார்கள்’ என்ற கோட்பாட்டைச் சொன்னவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.

‘மக்களுக்கு எதையும் செய்யாமல், மக்கள் தலைவன் ஆகலாம்’ என்றால் அவர்களை மக்கள் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இதனை ஏன் இங்கே நான் குறிப்பிடுகிறேன் என்றால் முடியாட்சிக் காலத்தில், இந்த அரியலூர் மண்ணைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட இராஜேந்திர சோழன், ஆசிய நாடுகளின் பெரும்பகுதிகளை வென்று, தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்ததைப் போல, குடியாட்சிக் காலத்தில், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தமது அன்பால், ஆளுமையால், உழைப்பால், உலகத் தலைவர்களின் உள்ளங்களை

வென்று, தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்தார்கள். அந்த பெருமைகளையெல்லாம் தக்கவைத்துக் கொள்வதற்காகத்தான், தமக்குப் பிறகு, தாம் சார்ந்த இயக்கத்தை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம் புரட்சித்தலைவர் அவர்கள் ஒப்படைத்தார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுத்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். 'நாளொரு மேடை, பொழுதொரு நடிப்பு, அவன்பேர் மனிதனல்ல, நாவில் ஒன்று, நினைவில் ஒன்று, அதன்பேர் உள்ளமல்ல.

உள்ளத்தில் வைத்ததை உதட்டில் வைப்பவன் எவனோ அவனே மனிதன்' என்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல், புரட்சித்தலைவர் அவர்களுக்கே பொருத்தமாக அமைந்தது. தமது சிந்தனையில் உதித்த தொலைநோக்கு திட்டங்களையும் செயலாக்கி, தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் என்ற நிலையை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

'அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி, அதன் அருகினில் ஓலைக் குடிசை கட்டி, பொன்னான உலகென்று பெயரும் இட்டால்.. இந்த பூமி சிரிக்கும், அந்த சாமி சிரிக்கும்' என்று – புரட்சித்தலைவர் அவர்கள் பாடியதன் நோக்கம், தமிழ்நாடு குடிசைகளே இல்லாத மாநிலமாக மாற வேண்டும் என்பதுதான்.. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்திலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலும், பல்வேறு குடிசை மாற்று வாரியத் திட்டங்களாலும், வீட்டு வசதி வாரிய திட்டங்களின் மூலமாகவும் தமிழ்நாடு குடிசைகள் இல்லாத மாநிலமாக மாறி வருகிறது. 'குடிசையெல்லாம் வீடாகும் நேரத்திலே – நாங்க தெருவோரம் குடியேறத் தேவையில்லை சர்க்காரு ஏழை பக்கம் இருக்கையிலே நாங்க சட்டதிட்டம் மீறி இங்க நடப்பதில்லை' என்று 'ஒளி விளக்கு' படத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் மக்கள் எண்ணங்களைப் பிரதிபலித்திருப்பார்கள்.

அதைப்போல.. தமிழ்நாட்டு மக்கள் யாரும் பசியென்று யாரிடமும் கையேந்தும் அவலநிலை கூடாது என்று புரட்சித்தலைவர் அவர்கள் எண்ணினார்கள்.

அதனால் தான்.. ரேஷன் கடைகள் மூலம் விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம், பள்ளிகளில் சத்துணவுத் திட்டம், மலிவு விலையில் அம்மா உணவகம் என்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்பட்டு வரும் அம்மாவின் அரசும், பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செவ்வனே நடைமுறைப்படுத்தி, தமிழ்நாட்டை ஏழைகள் இல்லாத மாநிலமாக மாற்றி வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில், பல துறைகள் மூலம் பல கோடி ரூபாய் செலவில் மக்கள் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் இங்கே வரிசைப்படுத்த நேரமில்லை. எனினும், ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 6 ஆயிரத்து 956 சிறு, குறு விவசாயிகளுக்கு, 28 கோடியே 59 இலட்சம் ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டது. அந்த பயிர்க்கடன் திட்டம் இப்போதும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

- கூட்டுறவு வங்கிகளின் மூலம், 23 ஆயிரத்து 317 சிறு குறு விவசாயிகளுக்கு, 90 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

- அம்மா சிறு வணிகக் கடன் திட்டத்தின்கீழ், ஆயிரத்து 78 நபர்களுக்கு 54 இலட்சம் ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

- உரிய காலத்தில் பயிர்க் கடனை திருப்பி செலுத்திய 95 ஆயிரத்து 958 விவசாயிகளுக்கு, ரூபாய் 502 கோடியே 81 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அதற்கு, தமிழ்நாடு அரசு 30 கோடி ரூபாய் வட்டி மானியம் அளித்துள்ளது.

- கடந்த 6 ஆண்டுகளில், பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 119 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஏழை, எளிய குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன் கூடிய 6,001 பசுமை வீடுகள் கட்ட, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- கடந்த 6 ஆண்டுகளில், பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், 66 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஏழை, எளிய நெசவாளர் குடும்பங்களுக்கு சூரிய மின் சக்தியுடன் கூடிய 254 பசுமை வீடுகள் கட்ட, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- 48 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த 995 எண்ணிக்கையிலான, ஏரி, குளம் மற்றும் குட்டைகளிலிருந்து 16 இலட்சத்து 87 ஆயிரத்து 658 கன மீட்டர் வண்டல் மண் எடுக்கப்பட்டு, 16 ஆயிரத்து 536 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- பொதுப்பணித்துறையின் மூலம், ஏரிகள் தூர்வாருதல் மற்றும் ஆற்றின் கரைகள் உயர்த்துதல் போன்ற 65 குடிமராமத்துப் பணிகள், 5 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் நல்வாழ்வுத் துறை, தோட்டக்கலைத் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, பள்ளிக் கல்வித் துறை மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை சார்பில், 5 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 6 நிறைவடைந்த திட்டங்கள் இன்று என்னால் தொடக்கி வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம், அரியலூர் குரும்பச்சாவடி கிராமத்தில் 288 அடுக்குமாடி குடியிருப்புகள் உட்பட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மற்றும் உயர் கல்வித்துறை சார்பில், 69 கோடியே, 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 6 பணிகளுக்கு, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

86 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 11 ஆயிரத்து 514 பேர் பயன்பெறும் வகையில், பல்வேறு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளும் இன்று வழங்கப்பட்டன. “மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட, மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு, என்ன என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றியே நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக் கொண்டு இருக்கிறேன். அதனால் தான் என் அன்பிற்குரிய மக்களாகிய நீங்கள் எப்பொழுதும் என் பக்கம் இருக்கிறீர்கள்!” என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறியதையே தான் – அவர்களோடு ஆசியோடு வந்த நானும் – கூறுகின்றேன்.

சர்வசதா காலமும் உங்களுக்கு உழைப்பதன் மூலம்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியைப் பெற முடியும் என்பதால் என் சிந்தனைகள் மட்டுமல்ல, செயல்களும் மக்களுக்காகவே இருக்கின்றன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., மற்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் இருவரும் ஏழை, எளிய மக்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றியதைப் போல, மாபெரும் தலைவர்கள் இருவரின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் உங்கள் எண்ணம் அறிந்து செயல்படும் என்று உறுதி கூறுகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணப்படி, தங்கு தடையின்றி, மக்கள் நலத் திட்டங்கள் மக்களுக்குச் சென்று சேர வேண்டுமென்றால் நாம் அனைவரும் ஒரே அணியில் நின்று, ஒத்த கருத்துடன், ஒருமித்த நோக்கத்துடன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியையும், ஆட்சியையும் வலுப்படுத்த வேண்டும்.

சகோதர, சகோதரிகளாய் இணைந்து ஒரே குடும்பமாக இந்த இயக்கத்தைக் கொண்டு செல்ல வேண்டும். நாம் ஒருவருக்கொருவர் பாசப் பிணைப்புடன்தான் இருக்கிறோம்; அதை வெளிப்படுத்தியுள்ளோம்.

இயக்கத் தலைவர்களின், தொண்டர்களின் ஒற்றுமை ஒன்றையே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு காணிக்கை ஆக்குவோம். இதை ஒரு நிகழ்வின் மூலம் கூறினால் உங்களுக்கு நன்றாகப் புரியும்.

ஒரு ஊரில் சாமியார் ஒருவர் ஆன்மீக சொற்பொழிவு செய்து கொண்டிருந்தார்.

அதிக மக்கள் தொகை கொண்ட ஊராக இருந்தாலும், அன்று சொற்பொழிவு கேட்பதற்கு பெரிய அளவில் கூட்டம் வரவில்லை. வந்தவர்களும் தனித்தனியாக அமர்ந்திருந்தார்கள். இதைப் பார்த்த சாமியார் அந்த ஊர் மக்களிடையே ஒற்றுமையில்லை என்பதை உணர்ந்து கொண்டார்.

வந்தவர்களையெல்லாம் அழைத்து, ஒவ்வொருவருடைய கையிலும் ஒரு கயிற்றை கட்டிவிட்டு, ஒவ்வொருவரிடமும் மேலும் 3 கயிறுகளைக் கொடுத்து, “இதை இந்த ஊரில் உங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவியாக இருந்தவர்கள் மற்றும் விருப்பமானவர்கள் கைகளில் கட்டுங்கள். ஒவ்வொருவரும் மூன்று பேருக்குக் கட்டி விடுவதுடன். அவர்களிடம் மூன்று கயிற்றையும் கொடுத்து, அவரவர்களுக்குப் பிடித்தமானவர்களுக்கு கட்டச் சொல்லுங்கள். அடுத்த வாரம் இதே இடத்தில், இதே நாள் காலையில் நாம் இங்கு கூடுவோம்” என்று கூறினார். கயிறுகளை வாங்கிக் கொண்டு மக்கள் கலைந்தனர். மறுநாளிலிருந்து அவரவருக்குப் பிடித்தவர்களின் கையில் கயிறு கட்டப்பட்டன.

ஒரு வாரம் முடிந்து, சாமியாரின் கூட்டத்திற்கு மக்கள் கூடினர். சாமியாருக்கு ஆச்சரியம்! குழந்தைகள் முதற்கொண்டு முதியவர்கள் வரை ஊர் மக்கள் அனைவரும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அனைவருடைய கைகளாலும் கயிறுகள் கட்டப்பட்டிருந்தன. சாமியார் மக்களைப் பார்த்து, “மக்களே, எனக்கு உங்களைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது. நீங்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள். ஒருவருக்கொருவர் அன்பையும், நன்றியையும் வெளிப்படுத்திக் கொள்ளத் தெரியாமல் இதுவரை இருந்துள்ளீர்கள், இப்போது இந்தக் கயிறுகள் உங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்திவிட்டன. இனிமேல், நீங்கள் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்” என்று சாமியார் வாழ்த்தினார்.

இந்தக் கதையில் வருவதைப் போல நாம் ஒற்றுமையாக ஒன்றுபட்டு கட்சிக்கும், ஆட்சிக்கும் வலுமை கொடுப்போம் என்று இந்த நன்னாளில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி நடத்துகின்ற பொழுது, இந்த மக்களுக்கு என்னென்ன தேவை என்று அறிந்து செயல்படுத்தினார்கள். அதே வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் இந்த மக்களுக்கு என்ன தேவை என்று

அறிந்து, இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அம்மா நினைத்தார்களோ அதை அம்மாவினுடைய அரசு செயல்வடிவம் கொடுத்திருக்கிறது. குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை கொண்டு வந்து, கிராமத்திலுள்ள ஏரிகள், குளங்கள் குடிமராமத்து திட்டத்தின் மூலம் மக்களுடைய பங்களிப்புடன் அரசும் சேர்ந்து இந்த திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலுள்ள ஏரிகள், குளங்கள் அத்தனையுமே தூர்வார்ப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 1,519 ஏரிகளை தூர்வாரப்படுகின்றன. வண்டல் மண்ணை, விவசாயிகளுக்கு இலவசமாக அரசு வழங்குகிறது. விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு இடுகின்றபொழுது, அந்த இடத்திலே அவர்கள் செய்கின்ற பயிர் சாகுபடிகளுக்கு விளைச்சல் அதிகமாக கிடைக்கிறது. எனவே, விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏரிகள், குளங்கள் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்தப்படுவதால், பெய்கின்ற மழைநீர், ஏரிகளில், குளங்களில் சேமிக்கப்படுகின்றது. இந்தத் சிறப்பான திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று வைத்த கோரிக்கைகளை ஏற்று, குடிமராமத்துக்கென 300 கோடி ரூபாய் அளித்து, 2,065 ஏரிகள் நடப்பாண்டிலே தூர்வாரபட உள்ளன. இதன் மூலம் நிலத்தடி நீர் உயர்வதற்கு, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீர்வள, நிலவளத் திட்டங்களின் மூலம் 187 கோடி ரூபாய் செலவில், பணிகள் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன. இதனால், மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு, அதன்மூலம் இன்றைக்கு விவசாயிகளுக்கு நீர் கிடைப்பதற்கு அம்மாவினுடைய அரசு உருவாக்கியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரியலூர் மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம்.

தடுப்பணையைப் பொறுத்தவரை, மூன்றாண்டுகளிலே தடுப்பணை கட்டுவதற்காக 1,000 கோடி ரூபாய் அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்மூலமாக, ஆங்காங்கே உள்ள ஓடைகள், ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, நீர் சேமிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு நிலத்தடி நீர் உயர்வதற்கும், மக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்பதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில், விவசாயிகள் சிறப்பாக விவசாயம் செய்த காரணத்தினால், உணவு தானிய உற்பத்தியில் கடந்த ஐந்தாண்டுகளாக, இந்தியாவிலேயே, 100 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை படைத்த மாநிலம் தமிழ்நாடு தான். இந்திய அளவிலே உணவு தானிய உற்பத்தியிலே, அதிக தானிய உற்பத்தியைப் பெற்ற விருதைதமிழ்நாடு அரசு பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'கிரிஷ் கர்மான்' விருதை நான்கு முறை பெற்றிருக்கிறது!

கடுமையான வறட்சியின் காரணமாக, விவசாயிகள் பயிரிட்ட பயிர்கள் கருகியதால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

என்பதற்காக 2,247 கோடி ரூபாய் கொடுக்கபட்டிருக்கின்றது. இன்றைக்கு பெரும்பான்மையான விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள விவசாயிகளுக்கும் விரைவில், நிவாரணம் வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மா ஆட்சியின்பொழுது, மழை வந்தாலும் சரி, வெள்ளம் வந்தாலும் சரி, வறட்சி வந்தாலும் சரி, விவசாயிகள் பாதிக்கப்படும் பொழுதெல்லாம் நிவாரணம் வழங்கப்பட்டு வந்துள்ளது. அந்த வகையில் நிவாரணம் வழங்கிய ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாம்! விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற பொழுது, பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்துகிறது. இதுவரைக்கும், 1,882 கோடி ரூபாய், விவசாயிகளுக்கு பெற்றுத் தந்திருக்கிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை பத்திரமாக கிடங்கினில் சேமித்து வைப்பதற்கு, அம்மாவினுடைய அரசு எல்லா தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலும் கிடங்கினைக் கட்டியிருக்கிறது என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கிட்டத்தட்ட, அம்மாவினுடைய ஆட்சியில் 2011–2012 முதல் 2015–2016ஆம் ஆண்டு வரை 3,879 கிடங்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த கிடங்குகளிலே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொழுது, விளைபொருட்கள் விலை குறைவாக இருக்கும். விலை குறைவாக இருக்கின்றபொழுது, அந்த விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை அந்த கிடங்குகளில் வைத்து, குறைந்த வட்டியிலே கடன் பெற்று, விலை ஏறுகின்ற பொழுது விற்பனை செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு அளித்திருக்கின்றது. அதேபோல விலை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு விவசாயிக்கு ஒரு மரத்திற்கு, ஒரு வருடத்திற்கு 1,000 ரூபாய் தான் மரத்திலிருந்து வருமானம் கிடைக்கும். தென்னை சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அம்மாவினுடைய அரசு அந்த விவசாயிகளுக்கு, மேலும் கூடுதலாக வருமானம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, ஒரு மரத்திலிருந்து 5,000 ரூபாய் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் விதத்தில் 'நீராபானம்' என்ற பானத்தை தென்னை மரத்திலிருந்து எடுத்து விற்றுப் பயனடைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம், இயற்கை மரணம் அடையும் விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 10,000 ரூபாயை 20,000 ரூபாயாக, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு உயர்த்தி வழங்கியிருக்கிறது. ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் இதன் மூலம் பயனடைவார்கள்.

உயர்கல்வி, பள்ளிக்கல்வி, இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியிலேதான் தலைத்தோங்கி வருகின்றது. இன்றைக்கு மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, தமிழ்நாட்டில், கல்வியினுடைய வளர்ச்சி அபரிமிதமாக இருக்கின்றது. 2011 ஆம் ஆண்டு, தமிழகத்திலே உயர்கல்வி படிக்கின்றவர்களுடைய எண்ணிக்கை 21 சதவீதமாக இருந்தது, அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அம்மா ஆட்சிப் பொறுப்பேற்கும் பொழுது 2011இல் 100 க்கு 21 பேர் தான் உயர்கல்வி படிக்கின்ற எண்ணிக்கைஇருந்தது. ஆனால், அம்மா அவர்கள் பொறுப்பேற்றபிறகு, கல்வியில் அவர் எடுத்த நடவடிக்கை மற்றும் மேற்கொண்ட புரட்சிகரமானத் திட்டங்களின் காரணமாக இன்றைக்குப் படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. இந்திய அளவிலே 24.5 சதவீதம் தான் இருக்கிறது. ஆனால், அம்மாவினுடைய திட்டங்களினால், தமிழ்நாட்டில் 2016ஆம் ஆண்டுவரை உயர்கல்விச் சேர்க்கை அதிகரித்ததனால் 44.3 சதவீதம் பேர் உயர்கல்வி படிக்கின்றார்கள். இதற்கு என்ன காரணம் என்னவென்றால், படிக்கும் மாணவ மாணவர்களுக்குச் சீருடை வழங்கி, விலையில்லா நோட்டு புத்தம், கொண்டு செல்வதற்கு, பை, பள்ளிக்குச் செல்வதற்கு, சைக்கிள், அங்கே விஞ்ஞானக் கல்வி படிப்பதற்கு, கம்ப்யூட்டர் இவை போன்றவையும் வழங்கபபட்டதே! இந்தியாவிலேயே விலையில்லா கம்ப்யூட்டர் வழங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான்! வசதி படைத்த மாணவ மாணவிகள் 14,000 ரூபாய் செலவு செய்து, கம்ப்யூட்டர் வாங்கி, தொழில் கல்விக்குச் செல்ல முடிகிறது. ஆனால், நல்ல திறமை இருந்தும், கல்வி அறிவு இருந்தும், வசதி இல்லாத குடுபத்தில் பிறந்த மாணவ மாணவிகள் அந்தக் கல்விக்குச் செல்ல முடியாத சூழ்நிலை! ஆகவே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்கு சிந்தனையோடு, இதை உணர்ந்து, வசதியில்லாத ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, குடிசையில் வாழ்கின்ற மாணவ, மாணவிகள் கூட, உயர்கல்விக்கு செல்ல வேண்டுமென்ற உயர்நோக்கத்தோடு, நல்ல கல்வி அறிவை மாணவர்கள் பெறத் துணை நின்றார்கள்! அத்தகைய ஒரு முதலமைச்சர் இந்தியாவிலேயே அம்மா அவர்கள்தாம்! இன்னும் 10 ஆண்டுகாலம் கழித்துப் பார்த்தால், தமிழகம் ஒரு விஞ்ஞான உலகமாக அம்மாவின் திறமையால் மாற்றப்பட்டது என்று இந்த நாட்டுமக்கள் பாராட்டுவார்கள்! அம்மா கொடுத்த ஒவ்வொரு திட்டமும் உயிரோட்டம் உள்ள திட்டம்! யார் ஆட்சிக்கு வந்தாலும், அம்மாவிடைய திட்டத்தை நிராகரிக்க முடியாது.

அம்மாவினுடைய ஆட்சியிலே, ஏழை, எளிய மாணவர்கள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக கடந்த ஆறாண்டுக் காலத்திலே, அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி 21, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி 24, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி 16, பொறியியல் கல்லூரி 4, இப்படி 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்து மாணவர்கள் அந்தந்தப் பகுதியிலே உயர்கல்வி படிப்பதற்கு வழிவகை செய்த ஒரே தலைவி, புரட்சித்தலைவி அம்மா என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்!

அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் இந்த ஆண்டு, அறிவியல் கல்லூரி–8, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி–3, ஆக 11 கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றது. ஆக, இந்த கல்லூரிகள் மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி படிப்பதற்கு அடித்தளமாக அமைந்திருப்பது அம்மாவினுடைய அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம், ஒரே நாளில் 21,800 பள்ளி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு ஆணைகள் வழங்கி, சாதனை படைத்த முதலமைச்சர் நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஏனென்றால், அதற்கு முந்தைய அரசு, இன்றைக்குப் பள்ளிகளில் இருக்கின்ற காலிப்பணியிடங்களை நிரப்பவில்லை. அதனால், கல்வித்தரம் குறைந்தது. ஆனால், கடந்த 6 ஆண்டுகளில், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அத்தனை காலிப்பணியிடங்களையும் நிரப்பி ஒரே நேரத்தில் அவர்களுக்கு பணியாணை வழங்கிய பெருமையைப் பெற்றார் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, 2017–2018ஆம் ஆண்டு பட்ஜெட்டில், பள்ளிக்கல்விக்கு ஆண்டுக்கு 27,932 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, மற்ற துறையைக்காட்டிலும், கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது, அதிக நிதி ஒதுக்கீடு செய்து சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு என்று இந்த நூற்றாண்டு விழாவின் மூலமாக தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவைதவிர, 438 கோடி ரூபாய் செலவில், உயர்தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள், 60 கோடி ரூபாய் செலவில் அறிவுத்திறன் வகுப்பறைகள் மற்றும் நடப்பாண்டில் 391 கோடி ரூபாய் செலவில் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவையும் செய்யப்படுகின்றன.

அதேபோல, வீட்டுவசதித் திட்டத்தின் மூலமாக, இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில், ஏழை, எளியோருக்கு வீடுகட்டுகின்ற அற்புதமான திட்டத்தை மத்திய அரசுடன் இணைந்து செயலாற்றுவதற்காக, ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் வழங்கப்படுகின்றது. அம்மாவினுடைய அரசு, இந்தத் திட்டத்தில் கவனம் செலுத்தி, விண்ணப்பித்த ஏழை, எளிய மக்கள் அனைவருக்கும் வீடுகட்டுவதற்கு ஆணை வழங்கியுள்ளது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், இராமேஸ்வரம் கூட்டத்தில் பேசியபொழுது தமிழ் நாட்டிற்கு எத்தனை இலட்சம் வீடுகள் வேண்டுமானாலும், நான் தருகின்றேன்!” என்று பேசினார்.

நெசவாளிகளுக்கு விலையில்லா மின்கட்டணச் சலுகை, விசைத்தறி தொழில் செய்பவர்களுக்கு மின்கட்டணச் சலுகை, வறட்சிக் காலங்களில், கால்நடைகளுக்குக் குறைந்த விலையிலே பசுந்தீவனம் இவையாவும் அம்மாவினுடைய ஆட்சியில் வழங்கப்பட்டு வருகின்றது.

எதிர்க்கட்சியினர், பல்வேறு கூட்டங்களில், இந்த அரசு நாட்டு மக்களுக்கு என்ன செய்திருக்கின்றது என்று கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். மக்கள் அனைவருக்கும் தெரியும். பருவமழை பொய்த்ததின் காரணமாக, தமிழகத்திலே 140 ஆண்டு காலம் இல்லாத கடும் வறட்சி. அணைகளில், குளங்களில், ஏரிகளில் நீர் கிடையாது. நிலத்தடி நீர் 1,000 அடிக்கும் கீழ் சென்று விட்டது. எனவே, குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அம்மாவினுடைய அரசு தேவையான நிதியுதவி செய்து, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கையை மேற்கொண்டு தீர்வு கண்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு, இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, 15.08.2017 வரை, மாநிலம் முழுவதும் 6,872 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 33,139 திட்டப்பணிகளை தொடங்கி வைத்தும், 1,114 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4199 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்துள்ளது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2016–2017ஆம் ஆண்டில், 22,71,000 மக்கள் பயன்பெறும் வகையில் 960 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24க்கான கூட்டுக் குடிநீர் திட்டங்கள். மணல் குவாரிகளை அரசே இன்றைக்கு ஏற்று, நடத்தி வருகின்றது. அம்மாவினுடைய அரசு இந்த நடவடிக்கையை எடுத்து வருகிறது. அம்மா அவர்கள், தேர்தல் நேரத்திலே கருவுற்ற தாய்மார்களுக்கு வழங்கப்படும் நிதியை உயர்த்தி வழங்குவேன் என்று குறிப்பிட்டவாறு, இன்றைக்கு அம்மாவினுடைய அரசால், ரூபாய் 12,000–லிருந்து ரூபாய் 18,000ஆக உயர்த்தி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தியாவில், தமிழகத்தில் மட்டும் தான், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கருவுற்ற ஏழைப்பெண்களின் குழந்தைகள் நன்றாக, ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்பதற்காக, சிந்தித்து, சிந்தித்து, உருவாக்கிய உன்னதமான திட்டமே அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், 16 பொருட்கள் அடங்கிய ‘அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம்’ என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். குழந்தைகள் பிறந்தவுடனேயே நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற ஒரே அரசு, அம்மாவினுடைய அரசு தான்!

‘பொன்மனச்செம்மல்’ எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியிலும், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலும் முழுக்க, முழுக்க ஏழைகளுக்காக உருவாக்கப்பட்ட திட்டம், ஏழைகளின் பொருளாதாரத் தடையை நீக்கி, நேசக்கரம் நீட்டி, ஏழைப் பெண்களின் குடும்பத்தை வாழவைக்கும், ‘தாலிக்குத் தங்கம்’ வழங்குகின்ற திட்டம், 4 கிராம் தங்கத்திலிருந்து 8 கிராமாகவும், திருமண உதவித் திட்டம்

ரூபாய் 25,000/–லிருந்து ரூபாய் 50,000/– ஆகவும், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், தமிழ்நாட்டில் மட்டும்தான், அம்மாவினுடைய அரசு உயர்த்தியுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேலைவாய்ப்பற்றோருக்கு, உதவித் தொகையை இரட்டிப்பாக்கி, கடந்த 6 மாத காலத்தில் மட்டும் 57,000 பயனாளிகளுக்கு, ரூபாய் 13 கோடி வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைக்கு மாற்றாக, ‘ஸ்மாட் கார்டு’ திட்டம் அம்மாவினுடைய அரசிலே செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஏதாவது தொல்லை கொடுப்பதற்காக ஒரு சிலர் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட அண்ணா தி.மு.க. இன்றைக்கு, எதிரிகளால் பல்வேறு சங்கடங்களை அனுபவித்து, சோதனைகளைச் சந்தித்து, இந்த இயக்கத்தை, தமிழ்நாடு மக்களின் மனத்தில் மேம்படச்செய்து, தமிழர்களின் இதயத்தில் 11 ஆண்டுகாலம் நல்லாட்சி தந்தவர்கள் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து, பல்வேறு சோதனைகளைச் சந்தித்து, ஏச்சுக்கள், பேச்சுகள் அனைத்தையும் தாங்கிக் கொண்டு, வெற்றி கண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், வசதிபடைத்த மக்கள் அனுபவிக்கும் வசதிகளை, ஏழை, எளிய, நடுத்தர மக்களும் பெறவேண்டுமென்று மக்களின் ஆட்சி நடத்தியவர், மக்களின் இதயங்களில் இடம்பெற்றவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! இருபெரும் தலைவர்களின் ஆசியாலும், ஆன்மாவாலும் நடைபடுத்தப்படுகின்ற இந்த அரசையும், ஆட்சியையும், கட்சியையும் மக்களின் இதயத்திலிருந்து, ஒருபோதும் பிரிக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அரசு ஊழல் அரசு என்று பேசுகின்றார்கள். நேற்று வரை எங்களோடு இருந்தார்கள், ஆட்சியில் பங்கெடுத்தார்கள். திடீரென்று, இன்று எப்படி ஊழல் அரசு என்று குற்றம் சாட்டுகின்றார்கள் என்று அவர்களுக்குத் தான் தெரியும், அவர்களுடைய மனச்சாட்சிபடியே நாங்கள் விட்டுவிடுகின்றோம்.

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசால், சில திட்டங்கள் இன்றைக்கு நடைமுறைபடுத்தப்பட்டது

மேலும், புதிய, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அறிவிப்புகள்

- ❖ ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்கென கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு, நஷ்டஈடு வழங்குவது குறித்து ஆய்வு செய்ய, ஓர் உயர்மட்டக் குழு அமைத்து, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், விரைந்து நஷ்டஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- ❖ உடையார்பாளையம் வட்டம், வான்குடி கிராமத்தில் வெண்ணங்குழி ஓடையின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

- ❖ திருமானூர் ஒன்றியம், வாரணவாசி கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலையில், மருதையாற்றின் குறுக்கே கூடுதலாக ஒரு பாலம் அமைத்து, சீரான போக்குவரத்துக்கு வழிவகை செய்யப்படும்.

- ❖ அரியலூர் ஊராட்சி, இடையாத்தன்குடி கிராமத்தில், பெரிய திருக்கோணம் சாலையில் ஓர் உயர்மட்ட பாலம் கட்டப்படும்.

- ❖ அரியலூர் மாவட்டம், மணக்கால் கிராமத்தில், ஒரு கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்தப்படும்.

- ❖ அரியலூர் மாவட்டம், கல்லங்குறிச்சி கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும்.

- ❖ அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தைச் சார்ந்த பழமைவாய்ந்த, கரைவெட்டிப் பறவைகள் சரணாலயம் மேம்படுத்தப்பட்டு, பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள ஏரி தூர்வாரிப் புதுப்பிக்கப்படும்.

இந்த சீர்மிகு விழாவிற்காக ஒற்றுமையோடு உழைத்த கழகப் பிரதிநிதிகளுக்கும் கழகத் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும், பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
23.08.2017 அன்று அரியலூரில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

காஞ்சித் தலைவனின் இதயக்கனிக்கு காஞ்சி மாவட்டத்தில் நூற்றாண்டு விழா!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் அரசு, செயல்படுத்தி வரும் அரிய திட்டங்கள்!

தமிழ் மக்களின் இதயங்களில் நிறைந்திருக்கும் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

நீதியின் செங்கோல்! அன்பின் களஞ்சியம்! பண்பின் சிகரம்! கொள்கையின் கூடாரம்! கொடையின் இலக்கணம்! பாசத்தின் பாசறை! பொன்மனச்செம்மல்! பாரத ரத்னா! மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு.தனபால் அவர்களே! முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பெஞ்சமின் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வெங்கடேசன் அவர்களே! வாழ்த்துரை வழங்க அமர்ந்துள்ள காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கே. மரகதம் குமரவேல் அவர்களே! ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.என்.இராமச்சந்திரன் அவர்களே! தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்தன் அவர்களே! ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பழனி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே!

திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே! திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே! திரு.எஸ்.பி. வேலுமணி அவர்களே! திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! டாக்டர் வி. சரோஜா அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! திரு.ஆர்.காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே! டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! திரு. கே.சி.வீரமணி அவர்களே! திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. க. பாண்டியராஜன் அவர்களே! திரு.ஜி.பாஸ்கரன் அவர்களே! திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்களே! திருமதி எஸ்.வளர்மதி அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா.பொன்னையா அவர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! காஞ்சிபுரம் கிழக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களே! காஞ்சிபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வாலாஜாபாத் கணேசன் அவர்களே! காஞ்சிபுரம் மத்திய மாவட்டச் செயலாளர் திரு.ஆறுமுகம் அவர்களே! முன்னாள் அமைச்சர் திரு.சோமசுந்தரம் அவர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ, மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆன்மிகம், கல்வி, கலை, அரசியல் ஆகியவற்றால் உரமேற்றப்பட்டு, வளமாக்கப்பட்ட பூமி காஞ்சிபுரம். நகரங்களில் சிறந்தது "காஞ்சி நகரம்" எனப் பொருள்படும்படி "நகரேஷு காஞ்சி" என ஆன்றோர்கள் அழைத்தார்கள்.

காஞ்சிபுரம் இரண்டாம் நூற்றாண்டுக்கு முந்தைய பழைமை வாய்ந்த நகரம் என்று பதஞ்சலி முனிவர் எழுதியுள்ளார். தொண்டை மண்டலத்தின் தலைநகரமாகவும், அதன்பிறகு 9ஆம் நூற்றாண்டுவரை பல்லவர்களின் தலைநகரமாகவும், காஞ்சிபுரம் விளங்கியிருக்கிறது.

ஏழாம் நூற்றாண்டுக்கு முன் ராஜசிம்ம மன்னரால் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில் இந்த மண்ணுக்குப் பெருமை சேர்க்கிறது. அப்பர், சுந்தரர் மற்றும் சம்பந்தரால் பாடப்பெற்றது இந்தத் திருக்கோயில். 108 திவ்ய தேசங்களுள் ஒன்றான அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோவிலால் காஞ்சிபுரம் பெரும் புகழைப் பெற்றுள்ளது. இந்த திருக்கோயிலின் பெருமையை, 12 ஆழ்வார்களும் பாடியுள்ளார்கள். 19 பிரகார விமானங்கள், 400 தூண்கள், நூறுகால் மண்டபம், அழகிய சிற்பங்கள் ஆகியவற்றைக் கொண்ட இந்தத் திருக்கோயிலைப் பார்த்து வெளிநாட்டவர்கள் பெரும் வியப்படைகின்றனர்.

காஞ்சி காமாட்சி அம்மன் திருக்கோயில் சக்தி பீடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. காஞ்சி குமரக்கோட்டத்தில் உறையும் முருகனை அருணகிரிநாதர் பாடியுள்ளார். கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார், காஞ்சி குமரக் கோட்டத்தைச் சேர்ந்தவர்!

கருநாடக நவாபுகளால் கட்டப்பட்ட 300 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஜும்மா மசூதியும் காஞ்சிபுரம் மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கிறது. திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் திருக்கோயில் பக்தர்களை கவர்ந்திழுக்கும் புனித இடமாகக் கருதப்படுகிறது.

சான்றோர்களும், ஆன்றோர்களும் கல்விமான்களும் அதிகமாகப் பிறந்து வாழ்ந்த அறிவுபூமி இந்தக் காஞ்சிபுரம். காஞ்சியில் ‘கடிகா’ என்னும் கல்விப் பெருங்கூடம் இருந்ததையும், அசோகரின் ஸ்தூபி இருந்ததையும், சீனப்பயணி யுவான் சுவாங் எழுதியுள்ளார். நளவெண்பா எழுதிய புகழேந்திப் புலவர் காஞ்சிபுரம் மாவட்டத்துக்குச் சொந்தக்காரர்! 100 வயது வரை வாழ்ந்த காஞ்சி மடத்தின் 68ஆவது மடாதிபதி காஞ்சி சங்கராச்சாரியார் ஸ்ரீ சந்திரசேகர சுவாமிகள் இந்த மண்ணில் அறமாகவும் அருளாகவும் கலந்திருக்கிறார். வைணவம், சைவம், சமணம், பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகிய அனைத்து மதங்களையும் தன் குழந்தைகளாக அரவணைத்து அவற்றைப் பாதுகாக்கும் தாயாக விளங்குவது இந்த காஞ்சி மாவட்டம். 63 சிவனடியார்களின் வரலாறுகளைத் தொகுத்து ‘பெரிய புராணம்’ என்னும் காப்பியத்தை தமிழுக்கும், ஆன்மிகத்திற்கும் வழங்கிய சேக்கிழார் பெருமான் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் வாழ்ந்தவர்! 63 நாயன்மார்களில் திருக்குறிப்பு தொண்டை நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், கழற்சிங்கர் நாயனார் மற்றும் சாக்கிய நாயனார் ஆகிய நால்வரும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த சிவனடியார்கள்!

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசை ஆழ்வார், வேதாந்த தேசிகர் போன்ற வைணவ மகான்களை ஆன்மிக பலமாகக் கொண்ட பூமி, இந்தக் காஞ்சிபுரம்!

“வைணவப் புரட்சித்துறவி” என அழைக்கப்பட்ட ஸ்ரீராமானுஜர் இம்மாவட்டத்தைச் சேர்ந்த திருபெரும்புதூரில், ஆயிரம் வருடங்களுக்கு முன் அவதரித்தவர்!

நாலந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராக விளங்கிய தத்துவஞானி, தருமபாலர், சீனநாட்டில் புத்தத் திருமடம் அமைத்த போதிதர்மர் ஆகியோர் இங்கு பிறந்து உலகப் புகழ் பெற்றவர்கள்.

தான் வாழ்ந்த காலத்திலேயே தன் செல்வம் முழுவதையும், தர்ம கூடங்களும், கல்விக் கூடங்களும் கட்டுவதற்கு செலவு செய்த வள்ளல் பச்சையப்பர் வாழ்ந்த தர்ம பூமி, இந்தக் காஞ்சிபுரம்.

குடவோலை முறையில் தேர்தல் நடத்தி, கிராமத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் ஜனநாயக முறையை முதன்முறையாக இந்தியாவிற்கு அறிமுகம் செய்வித்த பெருமை இந்த மாவட்டத்தைச் சார்ந்த உத்திரமேரூருக்கு உண்டு.

உலக சுற்றுலாப் பயணிகளை பிரமிக்க வைக்கும் கல்லிலே கலை வண்ணம் கொண்ட மாமல்லபுரம் தமிழர்களின் கலை, ஓவியம், கட்டடக்கலை மற்றும் அவற்றின் நுணுக்கங்களை உலகம் அறியச் செய்து இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் பன்னாட்டு பயணிகளை கவர்ந்திருக்கும் சுற்றுலா மையமாக விளங்குவதுடன், பன்னாட்டுப் பறவைகளையும் கவர்ந்திழுக்கும் பறவைகளின் சரணாலயமாகத் திகழும் வேடந்தாங்கலையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

இத்தனை ஆன்மிக பலம் கொண்டதால்தான். காஞ்சிபுரத்தில் வாழ்ந்தாலே முக்தி கிடைக்கும் என்கிறார்கள்.

காஞ்சிபுரத்தை, ‘கோவில்களின் நகரம்’ என்று அழைப்பதைப் போலவே, ‘ஏரிகளின் மாவட்டம்’ என்றும் அழைக்கலாம்.

இந்த மாவட்டத்தில் மட்டும், சுமார் 2,000 ஏரிகள் உள்ளன. இங்கு நடைபெறும் விவசாயமும் ஏரிப் பாசனத்தையே நம்பி இருக்கிறது. இங்கு நான்காயிரத்துக்கும் மேலான குளங்களும், குட்டைகளும் உள்ளன.

அதிகமான கல்விச் சாலைகளையும், அதிகமான தொழிற்சாலைகளையும், அதிகமான பட்டு தயாரிப்புகளையும் கொண்ட மாவட்டம் இது.

‘காஞ்சிக்குப் போனால் காலாட்டிப் பிழைத்துக் கொள்ளலாம்’ என்ற பழமொழி, காலம் காலமாக வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கும் காஞ்சியில் நெசவுத் தொழில் பிரதான தொழிலாக நடந்து வருகிறது. இப்படி காஞ்சியின் பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆன்மிகப் பலமும், அறிவுப் பலமும் கொண்ட இந்த மண், அரசியல் பலத்திற்காக, பேரறிஞர் அண்ணா அவர்களை தோற்றுவித்து, உலக வரலாற்றில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பிடித்திருக்கிறது.

பகுத்தறிவு முளைத்தது ஈரோட்டில் என்றால், அது துளிர் விட்டு வளர்ந்தது காஞ்சிபுரத்தில் என்று உங்களோடு சேர்ந்து நானும் பெருமைப்பட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இதே காஞ்சிபுரத்தில் 08.02.2003 அன்று பேசும்போது, காஞ்சிக்கும் கழகத்துக்கும் உள்ள தொடர்பை மிகத் தெளிவாகக் கூறியிருந்தார்கள்.

"எந்தப் பெருமகனின் பெயரை நமது இயக்கத்தின் பெயரிலேயே வைத்திருக்கிறோமோ...... எந்தத் திருமகனின் திரு உருவத்தை நமது கழகக் கொடி தாங்கி கொண்டிருக்கிறதோ...... அந்தப் பெருமகன், அந்தத் திருமகன், பேரறிஞர் அண்ணா அவர்கள், பிறந்த பெருமைக்குரிய மண், இந்த மண். இதை நினைத்துப் பார்க்கும் போது காஞ்சிக்கும் நம்முடைய கழகத்திற்கும் உள்ள தொடர்பு எவ்வளவு வலிமையானது, எவ்வளவு பெருமையானது, எவ்வளவு அருமையானது" என பெருமிதத்துடன் குறிப்பிட்டார்கள்.

ஒரு சாமான்யனும் சரித்திரமாகலாம் என உலகிற்கு உணர்த்திய பேரறிஞர் அண்ணா அவர்களை பாராட்டுகிற நாம், பேரறிஞர் அண்ணா அவர்களையே உருவாக்கிய இந்த காஞ்சிபுரத்தையும் பாராட்டிட கடமைப்பட்டுள்ளோம்!

திராவிடக் கொள்கைகளைத் தமிழ் மண்ணில் தூவி, தமிழனை சுயமாகச் சிந்திக்க வைத்த பெருமை தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சாரும்.

தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சுயசிந்தனையும்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை திராவிட இயக்கத்தின்பால் ஈர்த்தது.

காங்கிரஸ் இயக்கத்திலிருந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், 1952ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அறிமுகமாகி, அவருடைய பேச்சாலும், எழுத்தாலும், சிந்தனையாலும் கவரப்பட்டுத் தன்னை ஒரு முழுநேர திராவிட இயக்கத் தொண்டனாக மாற்றிக் கொண்டார்கள்.

அதன்பிறகு, பேரறிஞர் அண்ணா அவர்களைத் தம் தலைவராக ஏற்றுக் கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், கழகப்பணியுடன் பொதுப்பணியும் ஆற்றத் தொடங்கினார்கள்.

திராவிட இயக்கத்தின் இதயத்துடிப்பாய்.... எதிர்காலமாய்.... மாறிய மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் 'இதயக்கனி'யாகவும் மாறி, தொண்டர்களின் உயிர் மூச்சாய் இன்றளவும் உள்ளார்!

தம் படங்களின் மூலம், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை வசனங்களாகவும், பாடல்களாகவும் மக்களிடம் எடுத்துச் சென்றவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

“நேற்று இன்று நாளை” என்ற திரைப்படத்தில் அண்ணாவைப் புகழ்ந்து, “நாட்டுக்காக உழைப்பதற்கே அண்ணா பிறந்தார் பொது நலத்தில்தானே நாள் முழுக்க கண்ணாயிருந்தார், ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம் பெருமையைத் தந்தார்; தன் இனிய குடும்பம் ஒன்றுக்குத்தான் வறுமையைத் தந்தார்” என்று பேரறிஞர் அண்ணாவைப் பற்றிப் புரட்சித்தலைவர் ஆழமாகப் பாடியிருப்பார்.

அதே பாடலின் தொடக்கத்தில் “தம்பி நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று அதை நான் உனக்கு சொல்லட்டுமா இன்று” என்றும் “நல்லவருக்கு வாழ்வு வரும் நாளை – இது அறிஞர் அண்ணா எழுதி வைத்த ஓலை”என்றும் பாடியிருப்பார்.

“நான் படித்தேன் காஞ்சியிலே நேற்று” என்றால் காஞ்சியில் பிறந்த கழகத் தலைவனிடம் தாம் கற்றுக்கொண்ட “கடமை, கண்ணியம், கட்டுப்பாடு” என்ற கோட்பாட்டைத் தான், அப்படி மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று புரட்சித்தலைவர் அவர்கள் 1967ஆம் ஆண்டு இதே காஞ்சிபுரம் மாவட்டம், பரங்கிமலைத் தொகுதியிலிருந்து முதன்முதலில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் பெயரால் தனிக் கட்சி தொடங்கி நடத்திய முதல் கூட்டம் இதே காஞ்சிபுரத்தில்தான் நடந்திருக்கிறது!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பாராட்டும்போது ‘பாரி வள்ளலுக்கு ஒரு பரம்புமலை, புரட்சித்தலைவருக்கு ஒரு பரங்கிமலை’ என்றும் “பேரறிஞர் அண்ணா அவர்களை பெற்றதாலும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை அரசியலுக்கு அறிமுகப்படுத்தியதாலும் காஞ்சிபுரம் கழகக் கண்மணிகளுக்குச் சொந்த மண்” என்றும் பாராட்டியுள்ளார்கள்.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியால், முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள நான்.... இந்த மண்ணில் இன்று நான் உங்களிடம் பேசிக்கொண்டு இருப்பதை, என் வாழ்நாளில் ஒரு மறக்க முடியாத நிகழ்வாகக் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், 1968ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது சென்னையில் இரண்டாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றது. அப்போது, சென்னை, அண்ணா சாலையில் கையை உயர்த்தி கம்பீரமாக நிற்கும் பேரறிஞர் அண்ணாவின் உருவச் சிலையைத் தனது சொந்தச் செலவில் நிறுவியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். சிலை வைப்பதற்காகப் பேரறிஞர் அண்ணாவைப் படம் எடுத்து வர ஒரு புகைப்படக் கலைஞரை, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அனுப்பி வைத்தார்கள்.

பேரறிஞர் அண்ணா ஐந்து விரல்களைக் காட்டி புகைப்படம் எடுக்கச் சொன்னார். அதற்கு 'அய்யா, உங்களை ஒரு விரல் காட்டித்தான் படம் எடுத்து வரச் சொன்னார்' என்றார் புகைப்படக் கலைஞர்.

'தம்பி ராமச்சந்திரன் சொன்னால் அதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கும்' என்று ஒரு விரல் காட்டி நின்றார், அண்ணா.

பிறகு மாண்புமிகு புரட்சித்தலைவரைப் பார்த்த போது, 'ஐந்து விரலைக் காட்டினால் நம் கழகத்தின் சின்னத்தைக் குறிக்கும், ஒரு விரலைக் காட்டினால் என்ன அர்த்தம் ?' என்று கேட்டார்.

'ஒன்றே குலம், ஒருவனே தேவன், என்ற உங்கள் பொன்மொழியை மக்கள் புரிந்து கொள்வார்கள்' என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மக்களுக்கான பொது தத்துவம்தான் முக்கியம் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனித நேயத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டினார்கள்.

இந்த மனித நேயம்தான் மாண்புமிகு புரட்சித்தலைவரை, 'மக்கள் திலகமாக' மாற்றியது ! அதனால்தான், 1965ஆம் ஆண்டு எங்க வீட்டுப் பிள்ளை படத்தின் வெள்ளி விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையில், "அரசியலில் பொறுப்பேற்றுச் செயல்பட்டால், அதிலும் எம்.ஜி.ஆர். அவர்கள், அவருடைய தனிமுத்திரையை பதிப்பார்" என்று அரசியல் ஆரூடம் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆரூடம்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை 1977இல் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆக்கியது.

இரும்புத்திரைக்குள் இருந்து கொண்டு வெளி உலகை எட்டிப்பார்க்காத திரைப்பட நடிகர்களில் முதன்முதலில் அந்த திரையைக் கிழித்துக் கொண்டு பொது மக்களைப் பார்த்த ஒரு மகத்தான நடிகர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்தான் என்பதை அப்போதே சுட்டிக்காட்டியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பிறகுதான், அவரைப் பின்தொடர்ந்து பல திரைக்கலைஞர்கள் அரசியலில் நுழைய ஆரம்பித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களைப் பார்த்துத்தான், பல நடிகர்கள், தாம் சம்பாதித்த பணத்தை மக்களுக்காகச் செலவு செய்ய ஆரம்பித்தார்கள்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்"என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தாரக மந்திரத்தை ஏற்று, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமது சம்பாத்தியத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தார்.

திராவிட இயக்கம் தமிழ் மண்ணில் வேரூன்றுவதற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் உழைப்பை மிக முக்கியமானதாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கருதினார்கள்.

“எம்.ஜி.ஆர் அவர்கள் தம் அன்பு முகத்தை ஊர் ஊராய் கிராமம் கிராமமாக காண்பித்தால் போதும், நாம் வெற்றி பெற்றுவிடுவோம்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிப்படையாகவே பேசினார்கள்.

அந்த அன்பு முகம்தான், 1967இல், பேரறிஞர் அண்ணா அவர்களை அரசு கட்டிலில் அமர வைத்து அழகு பார்த்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போல எதிர்காலத்தைக் கணிக்கும் தொலைநோக்குப் பார்வை கொண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதற்கு, அவருடைய “நம்நாடு” திரைப்படப் பாடல் அமைந்திருந்தது.

“வாங்கய்யா வாத்தியாரய்யா, வரவேற்க வந்தோமய்யா, ஏழைகள் உங்களை நம்பி, எதிர்பார்த்து நின்றோமய்யா” என்று பாடி, தமிழ்நாட்டுக்குத் தலைமை ஏற்க மாண்புமிகு புரட்சித்தலைவரை வரவேற்றார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவருக்குப்பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள், கழகத்தைக் காப்பாற்ற எத்தனை அவமானங்களையும், துன்பங்களையும் சந்தித்திருப்பார்கள் என்பது ஒவ்வொரு கழகத் தொண்டனுக்கும் தெரிந்திருக்கும்.

“எனக்குப் பிறகும் இந்தக் கழகம் 100 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி அதிகாரத்தில் இயங்கும்” என்பதை சுட்டிக்காட்டினார்கள் சட்டமன்றத்திலேயே.

பேரறிஞர் அண்ணாவின் உருவத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவரின் எண்ணத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உழைப்பில், கழகத் தொண்டர்களின் ஒற்றுமையில், இந்த ஆட்சி மேலும் வலிமை பெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்காகத்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் இந்த அரசு, அரிய பல திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாகத்தான், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிறைவடைந்த பல திட்டங்களைத் தொடங்கி வைப்பதிலும், பல புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதிலும், பல நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில், 10 இடங்களில் 16 கோடியே 10 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டடங்கள்; பேரூராட்சித்துறை சார்பில் மாடம்பாக்கம், பீர்க்கன்கரணை, திருநீர்மலை, மாங்காடு, உத்திரமேரூர், பெருங்களத்தூர், கருங்குழி,

ஆகிய இடங்களில் 27 கோடியே 24 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் செலவில், திருமண மண்டபம், நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்ற கட்டடங்கள்,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், கருங்குழி மற்றும் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிகளில் 13 கோடியே 15 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் செலவில், குடிநீர் வழங்கும் பணிகள் உட்பட, மொத்தம் 77 கோடியே 41 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 58 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில், 8 கோடியே 62 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், 17 பணிகள்; பொதுப்பணித்துறை சார்பில் படப்பை, பழவந்தாங்கல், பல்லாவரம், L.எண்டத்தூர் ஆகிய இடங்களில், 4 கோடியே 91 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 4 பணிகள்; நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள், ஆதிதிராவிட நலத்துறையின் சார்பில், 5 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் 8 பணிகள்; கல்வித்துறையின் சார்பில், 4 கோடியே 6 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 பணிகள்; 2 இலட்சத்து 70 ஆயிரத்து 458 மக்கள் பயனடையும் வகையில், 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காஞ்சிபுரம் நகராட்சிக்குத் திருவண்ணாமலை கூட்டுக்குடிநீர்த் திட்டத்திலிருந்து கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டம் என 32 கோடியே 34 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 37 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு மிகக் குறுகிய காலத்தில் செய்து முடித்த ஒருசில திட்டங்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு அம்மாவுடைய அரசு பொறுப்பேற்ற நாளில் இருந்து இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 7 ஆயிரத்து 301 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 ஆயிரத்து 191 திட்டப்பணிகளை தொடங்கி வைத்தும், 2 ஆயிரத்து 93 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 4 ஆயிரத்து 215 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்துள்ளேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், ‘பாரதரத்னா’ புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறுவதையொட்டி 24 ஆயிரத்து 269 பயனாளிகளுக்கு 166 கோடியே 2 இலட்சத்து 66 ஆயிரத்து 107 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கழகத்தின் தொடக்கப் புள்ளியாக இருந்த காஞ்சிபுரம் மாவட்டத்திற்குத் தனித்துவம் கொடுத்துத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேவையறிந்து இன்னும் பல திட்டங்களை இந்த அரசு வழங்க இருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காஞ்சித் தலைவனின் பெயரைத் தாங்கி வளர்ந்திருக்கிற இந்த மாபெரும் இயக்கத்தை எந்த சக்தியாலும் ஒடுக்கி விட முடியாது என்பதை நாங்கள் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த இயக்கத்தைப் பாதுகாக்க, கழகக் கண்மணிகள் அனைவரும் ஓரணியில் நிற்போம் என்றும் அதற்காக, எந்தத் தியாகத்தைச் செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றும், சுய நலத்திற்காக, கழகத்தைக் கூறுபோட ஒருக்காலமும் நாங்கள் சம்மதிக்க மாட்டோம் என்றும், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இந்தப் புனித மண்ணில் இருந்தபடி சபதம் ஏற்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், இன்றைக்கு ஏராளமான திட்டங்களை நாம் செயல்படுத்தி முடித்திருக்கின்றோம். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இருபெரும் தலைவர்களும் கண்ட கனவை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

கிராமம் செழிக்க வேண்டும். கிராமத்திலிருக்கின்ற ஏழை, எளிய, உழைப்பாளி, விவசாயி, விவசாயத் தொழிலாளி முன்னுக்கு வரவேண்டும், சமூகப் பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டுமென்று இரவு, பகல் பாராமல் இரண்டு பெரும் தலைவர்களும் உழைத்தார்கள். அந்த உழைத்த தலைவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுகின்ற விதமாக அம்மாவினுடைய அரசு செயல்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, இந்த மண்ணிலே தான், காஞ்சிபுரம் மாவட்டத்தில், முதன்முதலில் மணிமங்கலத்தில் குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை நாம் தொடங்கி வைத்தோம். இந்தத் திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். அதிகமாக ஏரி, குளங்கள் நிறைந்த மாவட்டம் காஞ்சிபுரம். கிட்டத்தட்ட, 2,000 ஏரிகளைக் கொண்ட மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம். 4,000 குளங்கள், குட்டைகள் இருக்கின்ற மாவட்டம். முழுக்க, முழுக்க இந்த மாவட்டத்திலிருக்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகள் அந்த நீரைப் பயன்படுத்தித்தான் விவசாயம் செய்கின்றார்கள், குடிநீருக்குத் தேவையான நீரைப் பெறுகின்றார்கள். ஏரிகள், குளங்கள், குட்டைகள் நிறைந்த இந்த மாவட்டத்திலே பருவமழை மூலம் பொழிகின்ற மழை நீர் முழுவதையும் சேமித்து வைப்பதற்காக, குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை இந்த மாவட்டத்திலே தொடங்கி வைத்திருக்கின்றேன் என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். அன்று துவக்கி வைக்கப்பட்ட அந்தத் திட்டம், இன்றைக்கு நிறைவு பெறவிருக்கின்றது. முதல் கட்டமாக ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளின் பங்களிப்புடன், அரசும் சேர்ந்து, 1,519 ஏரிகளைத் தூர்வாரும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பணிகள்

நிறைவுபெறவுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் திட்டத்தை மேலும் விரிவடையச் செய்து, அதன்மூலம் கிட்டத்தட்ட 2,065 ஏரிகள், ரூ.300 கோடி திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

விவசாயிகளுக்கு வண்டல் மண் ஒரு சிறந்த உரமாக இருக்கின்றது. விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு இடுகின்றபொழுது, அவர்கள் செய்கின்ற பயிர் சாகுபடிகளுக்கு, விளைச்சல் அதிகமாகக் கிடைக்கிறது. மண் பதப்படுத்தப்படுகின்றது. இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை, அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்கு அளித்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலமாக, 23 மாவட்டங்களில், 787 ஏரிகள், வாய்க்கால்கள், மதகுகள் புதுப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக, பொழிகின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு விவசாயிகள் பயன்பாட்டிற்கு வாய்ப்பாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டிலே ஓடைகள், ஆறுகளில் ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, பொழிகின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு, நிலத்தடி நீரை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக, மூன்றாண்டுகளில், ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு அம்மாவினுடைய அரசால் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு அதற்காக ரூ.350 கோடி ஒதுக்கீடு செய்து, தடுப்பணைகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளைப் பாதுகாத்து வைப்பதற்காக குடோன்கள் கட்டப்படுகின்றன. 2011ஆம் ஆண்டு முதல், 2016ஆம் ஆண்டு வரை, அம்மாவினுடைய அரசு பல்வேறு குடோன்களைக் கட்டி விவசாயிகளின் வாழ்க்கைக்கு உத்தரவாதத்தை அளித்திருக்கின்றது. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளுக்கு ஒரு சில காலக்கட்டத்தில் விலை குறைந்து விடுகின்றது. விலை குறைகின்றபொழுது, அந்த விவசாயி, விளைபொருளை அந்த குடோனில் வைத்து குறைந்த வட்டியிலே கடனைப் பெற்றுக்கொள்ளலாம். விலை உயரும்பொழுது, அதை விற்பனை செய்து, அவர்கள் இலாபம் ஈட்டிக்கொள்ளலாம். அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை அம்மா அவர்கள் விவசாயிக்கு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அம்மாவினுடைய ஆட்சியில் நிறைய திட்டங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு அவற்றைச் செயல்படுத்தியதின் விளைவாக 2011 முதல் 2016 வரை, நான்கு முறை தமிழ்நாடு 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிக அளவில், உணவு தானிய உற்பத்தி செய்து உயரிய சாதனை படைத்துள்ளது.

இதற்காக மத்திய அரசிடமிருந்து ஐந்து ஆண்டுகளில், 4 முறை 'கிரிஷி கர்மான்' விருது தமிழகம் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு 140 ஆண்டுக்காலம் இல்லாத கடுமையான வறட்சி நிலவியிருக்கிறது எனவே, இப்படிப்பட்ட வறட்சியான நிலையில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக, வறட்சியிலிருந்து விவசாயிகளை மீட்பதற்காக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இடுபொருள் மானிய நிவாரணமாக ரூ.2,247 கோடி வழங்க ஆணை பிறப்பித்து, விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல, புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக, இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பீட்டு திட்டத்தின் வாயிலாக, காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தந்து கொண்டிருக்கின்றோம். இதுவரை, ரூ.1,882 கோடி இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு பெற்றுத் தந்திருக்கின்றது. படிப்படியாக, வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருவதற்கு, அரசு உரிய நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, அம்மாவினுடைய அரசு விவசாயிகளுடைய நலன் காக்கின்ற அரசாக இருந்துகொண்டிருக்கின்றது என்று, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தென்னை விவசாயிகளுடைய வாழ்வு வளம்பெற, நீராபானம் தயாரிப்பதற்கும் அம்மாவினுடைய அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. இதனால் தென்னை பயிரிட்டுள்ள விவசாயிகள் இலாபம் அடைவார்கள் என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உழவர் பாதுகாப்புத் திட்டம் – இயற்கை மரணம் அடையும் விவசாயிகள் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை ரூ.10,000/–இல் இருந்து ரூ.20,000/–ஆக இன்றைக்கு உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல, ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, கல்வியை மையமாக வைத்துத்தான் இருக்கிறது. ஒரு நாடானாலும் சரி, மாநிலமானாலும் சரி அந்த மாநிலத்திலும், நாட்டிலும் எந்த அளவுக்கு கல்வி வளர்ச்சி இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் பொருளாதாரம் மேம்பாடு அடைய முடியும். இன்றைக்கு அப்படிப்பட்ட வளர்ச்சி அம்மாவினுடைய ஆட்சியிலே பார்க்க முடிகின்றது. ஆகவே, இன்று அம்மாவினுடைய ஆட்சியில்தான் உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. 2011ஆம் ஆண்டு அம்மா ஆட்சிப் பொறுப்பேற்கின்றபொழுது 100க்கு 21 பேர் உயர்கல்விப் படிப்பு படித்தார்கள். ஆனால், இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே புரட்சி செய்த காரணத்தினால், 2016ஆம் ஆண்டு உயர்கல்வி சேர்க்கை விகிதம் 44.3 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. 100க்கு 44.3 பேர் உயர்கல்வி படிக்கிறார்கள் என்று சொன்னால், 23.3 சதவீதம் இன்று உயர்ந்திருக்கிறது. அந்த அளவிற்கு, அம்மாவினுடைய ஆட்சியிலே கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள், கல்விக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்தார்கள். அதனால், கிராமத்திலே வாழ்கின்ற மாணவ, மாணவியரும் சரி, நகரத்திலே வாழ்கின்ற மாணவ, மாணவியரும் சரி, ஏழை

மாணவ, மாணவியர்களானாலும் சரி, அத்தனை பேரும் உயர்கல்வி படிக்கக்கூடிய எண்ணத்தை உருவாக்கிய முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு இதயத்தெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆறாண்டு காலத்திலே, 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். இன்றைக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி 21, பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி 24, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி 16, பொறியியல் கல்லூரி 4, இந்த ஆண்டு அரசு அறிவியல் கல்லூரி 8, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி 3 என்று பல கல்லூரிகளை உருவாக்கித்தந்த காரணத்தினால்தான் ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே படிக்கக்கூடிய வாய்ப்பை அம்மா அவர்களுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு நாடு பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்று சொன்னால், கல்வி முக்கியம். அந்தக் கல்வியை உயர்த்தி சாதனை படைத்த முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒரே நாளில் 21,800 பள்ளி ஆசிரியர்களையும் சென்னைக்கு வரவழைத்து வேலைவாய்ப்பு ஆணைகள் வழங்கி சாதனை புரிந்து சரித்திரம் படைத்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இவைதவிர, ரூ.438 கோடி செலவில், உயர்தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள், ரூ.60 கோடி செலவில் அறிவுத்திறன் வகுப்பறைகள் மற்றும்

நடப்பாண்டில் ரூ.397 கோடி செலவில் பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்படும்.

அதேபோல, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழைக் குடும்பத்தினருக்கு 2015 முதல், நடப்பாண்டு வரை, ரூ.11,457 கோடி செலவில், 3,28,000 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் வீடு கட்டுவதற்கு, ரூ.2,10,000/– மானியமாக மத்திய, மாநில அரசால் வழங்கப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களை நேரிலே சந்தித்து வலியுறுத்தியதின் காரணமாகப் பல்வேறு திட்டங்களில் மத்திய அரசின் உதவியைப் பெறுவதற்கு வழிவகுத்து, இதன் காரணமாகவே, இராமேஸ்வரத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில், தமிழகத்திற்கு எத்தனை இலட்சம் வீடுகள் கேட்டாலும் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே தெரிவித்தார்கள்.

நெசவுத்தொழில் நிறைந்த மாவட்டம் இந்த காஞ்சிபுரம் மாவட்டம். அந்த நெசவாளப் பெருமக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக, அம்மாவினுடைய அரசு மின்கட்டண சலுகை செய்த அரசு.

இந்த ஆண்டு, கிட்டத்தட்ட 68 சதவீதம் மழை குறைவாகப் பொழிந்ததன் காரணமாக, நிலத்தடி நீர் 1,000 அடிக்குக்கீழ்ச் சென்று விட்டது. கடுமையான குடிநீர்ப் பிரச்சினையை சமாளிப்பதற்காக, நிதி ஒதுக்கீடு செய்து, தேவையான இடங்களில் ஆழ்துளை கிணறுகள் அமைத்து உடனடியாக, தங்குதடையின்றி நீர் கிடைக்க வழி செய்து, குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

2016–2017ஆம் ஆண்டில், 28,71,000 மக்கள் பயன்பெறும் வகையில், 901 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 24 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

2016ஆம் ஆண்டு, தேர்தல் நேரத்தில், கழகத்தின் சார்பாக அம்மா அவர்களால் வழங்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ.12,000/–லிருந்து ரூ.18,000/– ஆக அம்மாவினுடைய அரசால் உயர்த்தி வழங்கப்படுகின்றது. வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், கருவிலேயே குழந்தை நன்றாக வளர வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு சிந்தித்து, 'சஞ்சீவி கிட்', 16 பொருட்களைக் கொண்ட 'அம்மா பரிசுப் பெட்டகம்' வழங்கி ஆட்சி செய்த அரசு, அம்மாவினுடைய அரசு. மக்களுக்குத் தேவையானதைப் பார்த்துப் பார்த்து, திட்டங்களைத் தந்த முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

வல்லரசு நாடுகளில்கூட இல்லாத அளவிற்கு, பள்ளியில் படிக்கின்ற ஏழைக் குழந்தைகளுக்கு, ரூ.14,000/– மதிப்பு கொண்ட மடிக்கணினியை வழங்கி, உயர்கல்வி கற்க வசதி செய்து கொடுத்த ஒரே முதலமைச்சர் இந்தியாவிலேயே புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான்! காலத்தால் அழிக்க முடியாத திட்டங்கள், உயிரோட்டமான திட்டங்களை உருவாக்கித் தந்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையாக, 57,000 பயனாளிகளுக்கு ரூ.13 கோடி வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைக்கு பதிலாக, 'ஸ்மார்ட் கார்டு' வழங்குவதற்கு, அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அம்மாவினுடைய அரசு சிறப்பான ஆட்சி தந்து கொண்டிருக்கின்றது. பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் மற்றும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கண்ட கனவை நனவாக்குவதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்ற அரசு, அம்மாவினுடைய அரசு.

இந்த அரசை எப்படியாவது வீழ்த்திவிடலாம் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். கொல்லைப்புறத்தின் வழியாக ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று கனவு கண்டால் ஒருபோதும் நடக்காது! பொன்மனச்செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் இந்த இயக்கத்தை உருவாக்குகின்றபோது, எவ்வளவு ஏச்சுக்களுக்கும், பேச்சுக்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளானார்கள் என்பது நம் அனைவருக்கும் தெரியும். அவர் இரத்தத்தைச் சிந்தி இந்த இயக்கத்தை உருவாக்கியிருக்கின்றார். அதைக் கட்டிக்காத்த பெருமை அம்மாவைச் சாரும். இரவு, பகல் பாராமல் உழைத்து, தம் உயிரையே இந்த மண்ணிலேவிட்டு, இந்த கழகத்திற்கும், ஆட்சிக்கும் தியாகம் செய்த ஒரே தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஆகவே, வாழ்நாள் முழுவதும் அந்த இருபெரும் தலைவர்களும் இந்த மக்களுக்காக உழைத்து இந்த இயக்கத்தையும், கட்சியையும் கட்டிக் காத்திருக்கின்றார்கள். அவர்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுவதே அத்தனை தொண்டர்களின் இலட்சியம், இலட்சியம் என்று இந்த நேரத்திலே சூளுரை ஏற்போம். எந்தத் தியாகத்தையும் செய்ய நாம் தயாராக இருக்கின்றோம். எத்தனை இடர்பாடுகளையும் தவிடுபொடியாக்கி அதைச் சாதித்துக்காட்டக்கூடிய ஆற்றலை, வலிமையை அவர்கள் நமக்குத் தந்துவிட்டு சென்றிருக்கின்றார்கள். ஆகவே, கனவு கண்டு கொண்டிருப்பவர்களுக்குச் சொல்லிக் கொள்கின்றேன், இந்த ஆட்சியையோ, கட்சியையோ அசைக்கவோ, ஆட்டவோ, ஒருக்காலும் முடியாது என்று இரண்டாவது முறையாகத் தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியை தக்கவைத்து, இன்றைக்கு ஒரு மகத்தான ஆட்சி நடந்து கொண்டிருக்கின்றது. எங்கே உழைப்பு இருக்கின்றதோ அங்கே உண்மை இருக்கும், அந்த உண்மை வெல்லும்,

வெல்லும்! நாம் எதற்கும் அஞ்சப்போவதில்லை. நம் இரு தலைவர்கள் காட்டிய பாதையில் நாம் சென்று கொண்டிருக்கின்றோம். நம்முடைய ஆட்சியும், கட்சியும் இந்த மண்ணிலே நிலைத்து நிற்கும்.

அறிவிப்புகள்

- காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள செங்கழு நீரோடை தெரு ''டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சாலை'' எனவும், கிழக்கு ராஜ வீதி ''டாக்டர் புரட்சித்தலைவி அம்மா சாலை'' எனவும் பெயரிடப்பட்டு அழைக்கப்படும்.
- காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கம், ''பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கம்'' என பெயர் மாற்றம் செய்யப்படும்.
- காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள திருப்புலிவனம் கிராமத்தில் இயங்கி வரும் உத்திரமேரூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ''புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி'' என பெயர் சூட்டப்படும்.
- காஞ்சிபுரம் அருகில், கீழ்கதிர்பூர் கிராமத்தில் காஞ்சிபுரத்திற்கென, புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.
- காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் மழைக்காலங்களில் வெள்ள நீர் பாலாறு வழியாக வீணாகக் கடலில் கலப்பதை தடுக்கும் பொருட்டு, பாலாற்றின் குறுக்கே, மதுராந்தகம் வட்டம், ஈசூர்–வள்ளிபுரம்; வாலாஜாபாத் வட்டம், வெங்குடி மற்றும் உள்ளாவூர்; திருக்கழுக்குன்றம் வட்டம், வாயாலூர்; செங்கல்பட்டு வட்டம், பழவேலி மற்றும் பாலூர்; காஞ்சிபுரம் வட்டம், வெங்கடாபுரம் ஆகிய ஏழு இடங்களில் தடுப்பணைகள் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- திருக்கழுக்குன்றம் வட்டம், நல்லாத்தூர் கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், திருக்கழுக்குன்றம் வட்டத்தில், வாயலூர் கிராமத்தின் அருகே நிலத்தடி நீர் மாசுபடாத வண்ணம் கடல்நீர் உள்புகாமல் தடுப்பதற்கு, தரைமட்ட தடுப்பணை கட்ட கோரிக்கை எழுந்துள்ளதால், விரிவான ஆய்வு மேற்கொண்டு தடுப்பணை கட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மீன்பிடித் துறைமுகங்கள் ஏதுமின்மையால், இம்மாவட்ட மீனவ மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், கழிவேலி பக்கிங்காம் கால்வாயின் முகத்துவாரத்தில் இரு பக்கங்களிலும் ஆலம்பரி குப்பம் மற்றும் அழகன் குப்பத்தில்

மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் ‘பாரத ரத்னா’ டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெறும் இவ்விடத்திற்கு அருகில் உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு ஒரு சிறப்பு உண்டு.

இப்பூங்கா மாண்புமிகு புரட்சித்தலைவர், ‘பாரத ரத்னா’ டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருக்கரங்களால் ரூ.7.3 கோடி செலவில் 24.07.1985ஆம் ஆண்டு தொடக்கி வைக்கப்பட்டது என்பதை இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மனிதர்கள் மட்டுமின்றி, விலங்குகளிடமும் அன்பு செலுத்தும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இப்பூங்காவிற்கு இருமுறை வருகை தந்து, இங்கு இயற்கையுடன் திறந்தவெளியில் சுதந்திரமாக உலாவும் விலங்குகளிடமும் அன்பு செலுத்தி, இங்கு உள்ள சிங்கக் குட்டிகளுக்கும், புலிக் குட்டிகளுக்கும் பெயர் சூட்டியதை நினைவு கூர்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தியாவில் முதன்மைப் பெற்று விளங்குகின்ற வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், மாண்புமிகு புரட்சித்தலைவர் ‘பாரத ரத்னா’ டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இன்று நடைபெற்ற மரம் நடும் விழாவில் பங்குபெற்று நாவல் மரக்கன்றினை நட்டுவைத்தேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழா சீரோடும் சிறப்போடும் இருக்க வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராமல் இந்தப் பணியினை மேற்கொண்ட மூன்று மாவட்டச் செயலாளர் அவர்களுக்கும், அருமை சகோதரர் திரு. சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களுக்கும், அருமை சகோதரர் திரு. வாலாஜாபாத் கணேசன் அவர்களுக்கும், அருமை சகோதரர் திரு. ஆறுமுகம் அவர்களுக்கும் அவரோடு இணைந்து பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், அவர்களோடு இணைந்து பணியாற்றிய அனைத்து அதிகாரிகளுக்கும், அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*

30.08.2017 அன்று, காஞ்சிபுரம் மாவட்டம் வண்டலூரில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

ஏழையின் சிரிப்பினிலே இறைவனைக் காணலாம் என்பதைப் பொருளாதாரக் கொள்கையாகக் கொண்ட ஏழை பங்காளனுக்குத் திருவள்ளூரில் நூற்றாண்டு விழா!

இந்தியாவிலேயே, தொழில்துறையில் முன்னணி மாநிலமாகத் திகழ்வது தமிழகம்!

உலகத் தமிழர்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்றிருக்கும் இதயதெய்வம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி, பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்த இனிய விழாவில், சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா.பெஞ்சமின் அவர்களே! மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்களே! வாழ்த்துரை வழங்கிய திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பி. வேணுகோபால் அவர்களே! அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோ. அரி அவர்களே! ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.என். இராமச்சந்திரன் அவர்களே!

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஜி. வெங்கடேஷ்பாபு அவர்களே! பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. பலராமன் அவர்களே! அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வி. அலெக்சாண்டர் அவர்களே! திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்களே! கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களே! பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.ஏ. ஏழுமலை அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு.திண்டுக்கல்சி.சீனிவாசன் அவர்களே! திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே! திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே! திரு. பி. தங்கமணி அவர்களே! திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களே! திரு. டி.ஜெயக்குமார் அவர்களே! திரு. சி.வி. சண்முகம் அவர்களே! திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! டாக்டர் வெ. சரோஜா அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு.கே.சி.கருப்பணன் அவர்களே! திரு.ஆர்.காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களே! டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜு அவர்களே! திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! திரு. கே.சி.வீரமணி அவர்களே! திரு. கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு. எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே! டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி. வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! திரு. சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்களே! திருமதி. எஸ்.வளர்மதி அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ. சுந்தரவல்லி அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அருள்மிகு வீரராகவப் பெருமாள் எழுந்தருளியிருக்கும் 108 திவ்ய தேசங்களில் ஒன்றான, இந்த திருவள்ளூரில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதை, நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். சங்க இலக்கியம் கூறும்

ஐந்து வகை நிலங்களில், நான்கு வகை நிலங்கள்; அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்த மாவட்டம் ஆன்மிக வழியில் வாழ்வியலைக் கூறும் மாவட்டமாகவும் திகழ்கிறது. மக்களின் சாதிபேதம் நீங்கிய நல்வாழ்விற்கு எடுத்துக்காட்டாக, முருகப்பெருமான் – குறமகள் வள்ளியை மணம் புரிந்தது இங்குள்ள திருத்தணியில்தான். ‘‘காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே’’, என்று வாழ்வியல் தத்துவத்தைக் கூறிய பட்டினத்தார் – இறை சித்தியடைந்தது இந்த திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவொற்றியூரில்தான். ‘‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’’, என்று ஜீவ காருண்யத்தை வள்ளல் வலியுறுத்திய சைவ சமயத்தின் புரட்சித்துறவி வள்ளல் இராமலிங்க அடிகளார், தாயாருடன் முதலில் வாழ்ந்த இடம், திருவள்ளூர் மாவட்டத்தில் பொன்னேரி – ‘‘என் அம்மையே’’ என்று இறைவனால் அழைக்கப்பட்ட காரைக்காலம்மையார், தலையால் நடந்து சென்று, இறைவனை தரிசித்தத் திருவாலங்காடு, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது.

63 நாயன்மார்களில் மூர்க்க நாயனார், கலிய நாயனார், பூசலார் நாயனார் ஆகியோர் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். காஞ்சி மன்னன் கார்கோடன் கட்டிய கற்கோயில் குடமுழுக்குக்கு செல்லாமல், அதே நாளில் பொருளாதார வசதியில்லாத பூசலார் மனத்தில் கட்டிய கற்பனைக் கோயிலின் குடமுழுக்குக்கு இறைவன் எழுந்தருளினார் என பெரிய புராணம் கூறுகிறது.

அந்தப் பூசலார் நாயனார் வாழ்ந்தது இந்த மாவட்டத்தில் உள்ள திருநின்றவூரில் என்பது நமக்கு பெருமை அல்லவா? திருக்கச்சி நம்பிகள், திருமழிசை ஆழ்வார், ஆகியோர் இம்மண்ணில் வைணவத்தை வளர்த்தவர்கள். தொழுவூர் வேலாயுத முதலியார் சன்மார்க்கத்தையும், வில்லியம் கவுடி கிருத்துவத்தையும், இந்த மாவட்டத்தில் வளர்த்தவர்கள். திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோயில், பெரியபாளையம் பவானியம்மன் கோயில், கோனேடம்பேட்டை துலுக்காணத்து அம்மன் கோயில், காட்டுப்பள்ளி முத்துமாரியம்மன் திருக்கோயில், காட்டூர் மகாலட்சுமி அம்மன் கோயில், திருவொற்றியூர் வடிவுடையம்மன் கோயில், போன்ற பல அம்மன் திருத்தலங்களைக் கொண்டு, பக்தர்களின் சரணாலயமாக திகழ்கிறது இந்த மாவட்டம்.

17ஆம் நூற்றாண்டின் இறுதியில், டச்சுக்காரர்களின் வாணிப இடமாக இருந்த பழவேற்காடும், இங்குள்ள பழவேற்காடு ஏரியும் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. இந்த மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்தது ஒரு ஏரி இருந்ததாக அறிய முடிகிறது. இந்த மாவட்டத்தில் மட்டும் 1,236 ஏரிகள் உள்ளன. பூண்டி ஏரி, புழல் ஏரி, மற்றும் பழவேற்காடு ஏரி, போன்ற பழம்பெரும், பரந்த ஏரிகளைக் கொண்ட மாவட்டம் இது. குறிப்பாக தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் முயற்சியால் அமைக்கப்பட்ட 125 சதுர மைல் பரப்பளவு கொண்ட பூண்டி ஏரி, புழல் ஏரி, போரூர் ஏரி மற்றும் பல ஏரிகளும் நேரடியாகவும், நிலத்தடி நீரை பாதுகாக்கும் விதத்திலும் சென்னைக்குத் தண்ணீர் வழங்கி வருகிறது.

ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி, இந்தியக் குடியரசு தலைவராக உயர்ந்த சர்வபள்ளி டாக்டர் இராதாகிருஷ்ணன் இந்த மாவட்டத்தில் உள்ள திருத்தணியில் கல்வி பயின்றவர். சென்னை ராஜதானியின் முதலமைச்சராக இருந்த முனுசாமி நாயுடு திருத்தணி வேலஞ்சேரியில் பிறந்தவர். முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் எம்.பக்தவச்சலம் அவர்கள் இந்த மாவட்டத்தில் உள்ள மீஞ்சூரில் பிறந்தவர். இந்த மாவட்டத்தில் பிறந்தும், வாழ்ந்தும் புகழ்பெற்றவர்களை வரிசையாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

திருவள்ளூர் மாவட்டம் ஒரு தொழிற்சாலை நகரமாகவும் திகழ்கிறது. இந்த மாவட்டத்தைச் சார்ந்த அம்பத்தூர் இந்தியாவின் மாபெரும் தொழில் நகரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இங்குள்ள தொழிற்பேட்டை தெற்காசியாவிலேயே மிகப்பெரியதாகக் கருதப்படுகிறது. இராணுவக் கவச வண்டி தயாரிக்கும் ஆவடி டாங்கி தொழிற்சாலையும் இங்குதான் உள்ளது. இந்த மகிழ்ச்சியான தருணத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை நாம் நினைவுகூற வேண்டும். காரணம்.. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் நிருவாகக் காரணத்திற்காக செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து, திருவள்ளூர் மாவட்டத்தை 01.01.1996 அன்று புதியதாக உருவாக்கினார்கள். திருவள்ளூர் மாவட்டம் இன்று தொழிற்சாலைகள் மற்றும் கல்விச்சாலைகள் நிறைந்த மாவட்டமாக இருப்பதற்கு முழு முதற்காரணம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும்தாம்! இத்தகைய மிகப்பெரிய மாற்றத்தையும், எழுச்சியையும் வழங்கிய இந்த இருபெரும் தலைவர்களையும் இந்த நேரத்தில் நன்றியோடு நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். திருத்தணியை தமிழ்நாட்டுடன் இணைக்கப் பாடுபட்ட சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி. அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவருக்கு மேலவைத் தலைவராகவும், பின்னர் தமிழ்வளர்ச்சி உயர்மட்டக்குழு தலைவராகவும் பதவி வழங்கி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெருமை கொண்டார்கள்!

பின்னாளில், திரு. ம.பொ.சி. அவர்கள் குடல் புண் நோயால் பாதிக்கப்பட்டபோது, அவரை மருத்துவமனையில் சேர்த்து, அறுவைச் சிகிச்சைக்கான ஏற்பாடுகளையும், செலவுகளையும் செய்து குணப்படுத்தி, கடும் வயிற்று வலியில் இருந்து திரு.ம.பொ.சி.யை மீட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். தமிழர் நலனுக்காகவும், நாட்டு நலனுக்காகவும் பாடுபட்ட தியாகிகளை மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஒரு காலமும் மறப்பதில்லை. இது பேரறிஞர் அண்ணா அவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கு கற்றுத் தந்த அரசியல் நாகரிகமாகும். மாண்புமிகு புரட்சித்தலைவர் என்ற ஒரு சக்திமானுக்கு தன் கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறுகிறார்கள் என்றால் . . . . அடுத்த சில நாட்களிலேயே ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் அது திரைப்பாடல்களாகவும், வசனங்களாகவும் சென்றுவிடும் என்ற பெரும் நம்பிக்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் மீது வைத்திருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தாம் ஆரம்பித்த புதிய கட்சிக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருநாமத்தைச் சூட்டியும், தம் கட்சியின் கொடியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவத்தைப் பொறித்தும் பேரறிஞர் அண்ணா அவர்களின் புகழை உலகத் தமிழர்களின் நெஞ்சில் நிரந்தரமாகப் பதிய வைத்தார்கள். மிக முக்கியமாக பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரசியல் நாகரிகமான "மக்கள் குரலே – மகேசன் குரல்" என்ற தத்துவமும், சமுதாய நாகரிகமான "ஏழையின் சிரிப்பினில் – இறைவனைக் காணலாம்" என்ற ஏழ்மை நிவாரணத் தத்துவமும், வாழ்வியல் கோட்பாடான "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற வேதமும் இன்றைக்கும், என்றைக்கும் தமிழ்ச் சமுதாயத்தில் வேரூன்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களே காரணமாக இருந்திருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பாசறையில் வந்த, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஒரு சமதர்மவாதி – சமத்துவக் கொள்கைக் கொண்டவர் என்பதை பல இடங்களில் நிரூபித்திருக்கிறார்கள். சமுதாயத்தின் உச்சத்தில் இருக்கும் பெரியவர்களையும், சமுதாயத்தின் கடைகோடியில் இருக்கின்ற சாமான்யனையும், ஒன்றாகவே மதிக்கும் பெருந்தன்மை கொண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

1978ஆம் ஆண்டு திருச்சி பாலக்கரையில் சுரங்கப்பாதை திறப்புவிழா நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஒரு ஓரத்தில் நின்றுகொண்டிருந்த அந்தப் பாலத்தைக் கட்டிய தலைமைக் கொத்தனாரை அழைத்து பாலத்தைத் திறக்க வைத்து அங்கு கூடியிருந்தவர்களை வியக்க வைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜிஆர். அவர்கள். கிண்டி சுரங்கப்பாதை திறப்புவிழாவின் போதும், அந்த சுரங்கப் பாதையை கட்டிய பொறியாளரை அழைத்து திறக்க வைத்தார்கள்.

உழைப்பாளர்களுக்கு முதன்மை இடம் கொடுத்து அவர்களை சிறப்பிக்கும் மனித நேயமிக்கத் தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். தன்னுடைய கார் ஓட்டுநராக இருந்த டி.என்.பாலு அவர்களை ஊக்கப்படுத்தி, கதை வசனகர்த்தாவாக ஆக்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த டி.என்.பாலு அவர்கள்தாம், பின்னாளில் திரைப்பட இயக்குநராகவும் உயர்ந்தார். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சாதாரண மக்களிடம் நன்றியுள்ளம் கொண்டவராக திகழ்ந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருமுறை ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தபோது அவருக்கு அவசரமாக இரத்தம் ஏற்றப்பட்டது. அவர் உயிர் பிழைத்து மறு ஜென்மம் எடுத்தார். இப்போது என் உடலில் ஓடும் இரத்தம் யாருடைய இரத்தம் என்று எனக்குத் தெரியாது – தன்னுடைய இரத்தம் எம்.ஜி.ஆராகிய என் உடலில்தான் ஏற்றப்பட்டிருக்கிறது என்று இரத்தம் கொடுத்தவர்களுக்கும் தெரியாது. எனவே, எனக்கு இரத்தம் கொடுத்து, நான் உயிர்வாழ்வதற்கு காரணமாக இருந்த அந்த நல்ல மனிதர்களுக்கு

காலமெல்லாம் நன்றி கூறும் விதமாகத்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தன் பேச்சின் தொடக்கத்தில் “என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புகளே” என்று கூறுவார். இந்த ஒற்றை வரியைக் கேட்பதற்கு ஒட்டு மொத்த தமிழகமே தவம் கிடந்தது.

கண்ணால் பார்க்காத மனிதர்களுக்கும் நன்றியுணர்வோடு இருக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களைப் போன்ற மாமனிதரை இனி இந்த உலகம் காணுமா என்பது தெரியவில்லை. சென்னை சட்டக் கல்லூரியில் ஒரு விழாவில் நடிகை ராஜசுலோசனாவின் நடனம், ஒரு 10 வயது சிறுமியின் நடனம், கல்லூரி மாணவர் ஒருவரது மிமிக்ரி ஆகியவை இடம் பெற்றன. நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். நிகழ்ச்சிகள் முடிந்து பரிசளிப்பு விழாவுக்காக மேடைக்கு வந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அதிர்ச்சி – காரணம், மேடையில் 2 பரிசுக் கோப்பைகள் மட்டுமே இருந்தன. “இவை யாருக்கு ?” என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்க, நடிகை ராஜசுலோசனாவுக்கும், “மிமிக்ரி” செய்த மாணவருக்கும், என்று சொன்னார்கள். “அப்படியானால், இந்த சின்னப் பொண்ணுக்கு என்ன பரிசு இருக்கிறது ?” என்று புரட்சித்தலைவர் அவர்கள் கேட்க, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் இருந்து பதில் எதுவும் இல்லை. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இரண்டு கோப்பைகளில் ஒன்றை ராஜசுலோசனாவுக்கும், மற்றொன்றை பத்துவயது சிறுமிக்கும் கொடுத்து விட்டு, “மிமிக்ரி” செய்த மாணவனுக்கு தன் கையில் கட்டியிருந்த விலையுயர்ந்த வெளிநாட்டு கைக்கடிகாரத்தை கழற்றி கொடுத்து அவருடைய பெருந்தன்மையை அந்த நேரத்திலே பகிர்ந்து கொண்டார். அந்த பத்து வயது சிறுமிதான் பின்னாளில் தமிழ்நாடே அம்மா என்று அன்போடு அழைத்து வரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள்.

வீரராகவப் பெருமாள் தானே தேடி வந்து மக்களுக்கு அருள் பாலிக்கின்ற ஊர் இந்த திருவள்ளூர் என்பதால் இது எவ்வளவு புண்ணியம் செய்த ஊராக இருக்க வேண்டும் என்று வியந்து, இந்த ஊரைத் தேடி வந்து, இங்குள்ள மக்களை மகிழ்விக்க பல்வேறு விலையில்லா திட்டங்களை, முதன்முதலில் இந்த மாவட்டத்தில்தான் 15.09.2011 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 04.09.2003 அன்று இந்த திருவள்ளூர் மாவட்டத்திற்கு வந்த போது “உங்கள் அன்பு சகோதரியாகிய நான் இங்கு வெறுங்கையோடு வரவில்லை, கை நிறையத் திட்டங்களோடு வந்திருக்கிறேன்”, என்று கூறி, அன்றைய தினம் 245 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைத் தொடங்கியும், அடிக்கல் நாட்டியும் வைத்தார்கள். அம்மா வழியில் நடக்கும், இந்த அரசும் இப்போது வெறுங்கையோடு இங்கு வரவில்லை. பல்வேறு நலத்திட்டங்களை வழங்குவதற்கும், நிறைவடைந்த பல திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்கும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதற்கும் – இங்கு வந்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையின் மூலம், 12 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள், 12 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கும்மிடிப்பூண்டியில் கட்டப்பட்ட சர்வதேச ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மைய கட்டடம் உட்பட, 50 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 42 பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

ஆட்ரம்பாக்கம் கிராமத்தில் கொசஸ்தலையாற்றின் நடுவில், 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள தடுப்பணை, பொதுப்பணித் துறை சார்பில், 12 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு துறைகளுக்காக கட்டப்பட உள்ள கட்டடங்கள், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் 56 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள பல்வேறு பணிகள் உட்பட, மொத்தம் 76 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 2,204 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 7 ஆயிரத்து 251 கோடி ரூபாய் மதிப்பிலான 33 ஆயிரத்து 248 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், 2 ஆயிரத்து 125 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 4 ஆயிரத்து 252 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம், 9 ஆயிரத்து 376 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 37 ஆயிரத்து 500 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில், ‘பாரத ரத்னா’ புரட்சித்தலைவர் அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறுவதை ஒட்டி, 36 ஆயிரத்து 851 பயனாளிகளுக்கு ஆயிரத்து 296 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அம்மாவின் அரசால் கடந்த 6 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டத் திட்டங்கள் பற்றி எடுத்துரைக்க வேண்டுமென்றால் நேரம் போதாது. எனவே, அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 30.01.2013 அன்று திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம், காட்டுப்பள்ளி கிராமத்தில் 3 ஆயிரத்து 375 கோடி ரூபாய் முதலீட்டில் கட்டப்பட்டுள்ள கப்பல் கட்டுமானத் தளம் மற்றும் துறைமுகம் திறந்து வைக்கப்பட்டது.

எண்ணூர் பகுதியில் ஏற்பட்ட எண்ணெய்க் கசிவு காரணமாக பாதிக்கப்பட்ட 30 ஆயிரம் மீனவ குடும்பங்களுக்கு, தலா ரூ.5,000 வீதம் ரூ.15 கோடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் குடிசைமாற்று வாரியம் சார்பாக 71 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் 1,024 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

54 கோடி ரூபாய் செலவில் போரூர் சந்திப்பில் மேம்பாலம் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கே மாண்புமிகு

அமைச்சர் திரு. பா.பெஞ்சமின் இங்கே குறிப்பிட்டார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்ந்த இல்லத்திற்கு அருகாமையில் வருகின்ற போரூர் பாலம், அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படவுள்ள சூழ்நிலையில், மாண்புமிகு அமைச்சர் பெஞ்சமின் அவர்களும், அவர்களோடு சேர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். இல்லத்திற்கு அருகிலே இந்த போரூர் பாலம் வருகிறது. ஆகவே, அவருடைய நினைவாக, அந்த பாலத்திற்கு 'பாரதரத்னா' புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மேம்பாலம் என்று பெயர் சூட்டவேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலே பெயர் சூட்டப்பட்டு, அந்தப் பாலம் மக்களுடைய பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

58 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் திருவொற்றியூர் மாட்டுமந்தை பகுதியில் மேம்பாலம் கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில், கடந்த 6 ஆண்டுகளில், 5 பொறியியல் கல்லூரிகள், ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி மற்றும் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடக்கப்பட்டுள்ளன. 'பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின்'கீழ், 111 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 6,578 வீடுகள் கட்டப்பட உள்ளன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 62 ஆயிரத்து 748 பயனாளிகளுக்கு 123 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

95 ஆயிரத்து 171 விவசாயிகளுக்கு 503 கோடியே 37 இலட்சம் ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. 69 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 10 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 103 தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் தொழில் நிறுவனங்கள் அதிக அளவில் ஏற்பட்டதன் பொருட்டு, தேவைப்படும் மின் நுகர்வு அதிகரித்துள்ளதால், அனைத்துத் தரப்பினரும் தடையற்ற மின்சாரம் பெறும் வகையில், திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிபூண்டி, பொன்னேரி, திருத்தணி, திருவள்ளூர் உட்பட அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் மின் விநியோகத்தை மேம்படுத்தும் வகையில் புதிய துணை மின்நிலையங்கள் மற்றும் புதிய மின்மாற்றிகள் 591 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான புதிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, இத்தனை அரியத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசு செய்திருக்கிறது என்பதை பொதுமக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆனால், சிலர் எதிர்க்கட்சிகளைப் போல குறை கூறுவதையே வாடிக்கையாக கொண்டிருக்கின்றனர். மக்களுக்கு எது தேவை, எது தேவையில்லையென்று என்னைப் போன்ற உழைப்பாளர் வர்க்கத்திலிருந்து வந்தவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும்.

Born with Golden Spoon என்பார்கள் – அதாவது வசதி வாய்ப்புகளுடன் பிறந்து, வளர்ந்து வந்தவர்களுக்கு ஏழை, எளிய – பாட்டாளி மக்களின் கஷ்டம் தெரியாது. இது தெரிந்துதான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சாதாரணக் குடிமகனையும் ஆட்சி பீடத்தில் அமர்த்தி, மக்கள் சேவை ஆற்ற வைத்தார்கள். இத்தகைய சாதனையை நிகழ்த்திய ஒரே தலைவி அம்மா அவர்கள்தாம்! இதைக் கூறுகிறபோது, எனக்கு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. மத்திய பிரதேசத்தில் உள்ள வீரசிங் என்ற மன்னன் நீதிநெறி தவறாதவர். ஆனால், இளவரசனோ மன்னருக்கு நேர் எதிரானவன். ஒரு நாள் இளவரசன் காட்டுக்கு வேட்டையாட சென்றபோது ஒரு துறவியை அம்பு எய்திக் கொன்றுவிட்டான். இதைக் கேள்விப்பட்ட மன்னன், மகன் என்றும் பாராமல் இளவரசனைக் கைது செய்யும்படி உத்தரவிட்டார்.

இளவரசனைக் கைது செய்து மன்னரின் முன்பு கொண்டு வந்து நிறுத்தினார்கள். மகனைப் பார்த்து மன்னன், "அந்தத் துறவியைக் கொன்றது நீதானே! என்று கேட்டார். "நான் கொலை செய்யவில்லை – என் வேட்டைக்கு இடைஞ்சலாயிருந்த துறவிக்கு தண்டனை கொடுத்தேன்", என்று இளவரசன் திமிராகவும், கர்வத்துடனும் பதிலளித்தான். மன்னர் பெரும் கோபம் கொண்டார்.

மன்னருடைய முகபாவம் கடினமாக மாறுவதைக் கண்ட அருகிலுள்ள அமைச்சர் பெருமக்கள், "மஹாராஜா, இளவரசருக்குக் கடுமையான தண்டனை எதையும் கொடுத்து விடாதீர்கள் – ஏனென்றால், உங்கள் சிம்மாசனத்துக்கு வாரிசாக வரப்போகிறவர் அவர்தான்" என்று இளவரசனுக்காக பரிந்து பேசினார்கள். "எந்தப் பாவமும் அறியாத ஒரு துறவியை, மன்னனின் மகன் என்கிற மமதையில் கொலை செய்துள்ளான்.

அது மட்டுமின்றி, தான் செய்த காரியத்தை நியாயப்படுத்தி வேறு பேசுகிறான். இப்படிப்பட்டவன் எப்படி இந்த சிம்மாசனத்துக்கு வாரிசாக முடியும்?'' என்று மன்னர் கேட்டார். ''மக்கள் மீது எனக்குள்ள சம நோக்கும், நீதியும் பிள்ளைப் பாசம் என்ற பெருமூச்சுப்பட்டு கருகிப் போய்விடக் கூடாது'' என்று கூறி, தன் மகன் தலையை வெட்டி வீழ்த்தி விட்டு அங்கிருந்தவர்களை நோக்கி, ''திமிர் பிடித்த என் மகன் போய்விட்டதால் சிம்மாசனத்துக்கு வாரிசு இல்லாமல் போய்விட்டது என்று யார் சென்னது? இந்த நாட்டிலே இருக்கும் ஒவ்வொரு குடிமகனும் அரச குமாரர்தான். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த சிம்மாசனத்தில் உட்கார தகுதியுண்டு'' என்று கூறினார்.

அந்த மாமன்னரின் மறு உருவமாகத் திகழ்ந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், தயவு தாட்சண்யம் காட்டாமல் தண்டிக்கக் கூடியவர். அந்த மன்னரைப்போல அரசியல் வாரிசை விரும்பாதவர். அதனால்தான் தனக்கு வாரிசாக எந்த ஒரு தனி மனிதரையும் அவர் சுட்டிக்காட்டவில்லை. தனக்குப்பிறகு இந்த ஆட்சி பீடத்தில் அமர்வதற்கு ஒரு கடைகோடித் தொண்டனுக்கும் உரிமை உண்டு என்பதை நிரூபித்தவர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அந்த சமதர்ம கொள்கைதான் என்னைப் போன்ற ஒரு விவசாயியின் மகனும் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்க வைத்திருக்கிறது என்பதை இந்த நூற்றாண்டு விழா மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, உண்மை, உழைப்பு, ஆளுமை கொண்ட யார் வேண்டுமானாலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் உயர்ந்த நிலைக்கு வரலாம் என்று உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே, தொழில் துறையில் அந்நிய நேரடி முதலீடு ஈர்ப்பதிலும், ஏற்றுமதி செய்வதிலும் முன்னணி மாநிலமாகத் திகழ்வது தமிழகம். தொடர்ந்து தொழில் துறையில், முதலீட்டாளர்கள் விரும்பும் முதன்மை மாநிலமாக உள்ளது தமிழகம். புரட்சித்தலைவி அம்மா ஆட்சி செய்த காலத்தில், தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி 2016இல் இந்தியாவிலேயே தமிழகத்தை மூன்றாவது இடத்திற்கு உயர்த்திய தலைவி, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து, முதன்முறையாக தமிழகத்தில் அம்மா அவர்கள் ஆட்சியில் தான் உலக முதலீட்டாளர் மாநாடு, 2015ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 தேதிகளில், சென்னையில் நடைபெற்றது. இதில் 1,200 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், 5,000 இந்திய பிரதிநிதிகளும் பங்கேற்றனர். ஒன்பது நாடுகள் கூட்டாளர்களாக இருந்து பணியாற்றினார்கள். இந்த மாநாட்டில், ரூ.2,42,160 கோடி மதிப்பிலான 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இந்த ஒப்பந்தங்களில், ரூ.62,838 கோடி மதிப்பீட்டில், 61 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை, 76,000க்கும் மேற்பட்ட நபர்கள் நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு

பெற்றுள்ளனர். மீதமுள்ள ஒப்பந்தங்களை துரிதப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரிய திட்டங்கள் தொடங்கிடும் நிலையில் அவற்றிற்கான கால அவகாசம் 7 முதல் 10 ஆண்டுகள்வரை இருப்பதால் ஒவ்வொரு ஆண்டும் இந்த திட்டத்திற்கான முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு அதிகரிக்கும். தமிழகத்தில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தூத்துக்குடி, சேலம், திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரி உட்பட பல மாவட்டங்களில் பரவலாக முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, சிபிசிஎல் விரிவாக்கம், கபூர் இமேஜிங், கல்ப் ஆயில் போன்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, பல்வேறு நிலைகளில் செயல்பட்டு வருகின்றன. இவ்விழா நடைபெறும் பொன்னேரியில் ஜப்பானிய நிறுவனமான சுபிடோமா மற்றும் இந்திய நிறுவனமான மகிந்திரா அண்டு மகிந்திரா நிறுவனங்கள் இணைந்து ரூ.925 கோடி முதலீட்டில் மிகப்பெரிய தொழிற்பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகின்றனர். இதன் மூலம் 15,000 பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2018ஆம் ஆண்டில், 2ஆவது முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதுதவிர, ஏற்கெனவே தமிழ்நாட்டில் இயங்கி வரும் 'ஹியுன்டாய் மோட்டார்ஸ்', 'ஃபோர்டு மோட்டார்ஸ்', 'ராயல் என்பீல்ட்' போன்ற பெரிய நிறுவனங்கள் விரைவில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம்; ஏரிகள், கல்விக்கூடங்கள் நிறைந்த மாவட்டம்; விவசாயிகள் நிறைந்த மாவட்டமாகவும் திகழ்கிறது. விவசாயிகள் பயனடைய வேண்டும் என்பதற்காக, அம்மாவினுடைய அரசு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தைத் தொடங்கி விவசாயிகள் பங்களிப்போடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். முதல் கட்டமாக, 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 1,519 ஏரிகளைத் தூர்வாரும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பணிகள் நிறைவுபெறவுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயிகள், ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகள் மூலமாக வண்டல் மண்ணை இலவசமாக எடுத்து, தங்கள் நிலங்களுக்கு இட்டு அதிக மகசூலைப் பெறக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பகுதியிலே, பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீர் இந்த திட்டத்தின் மூலமாக தூர்வாரப்படுவதால், ஏரிகள், குளங்கள், குட்டைகளில் அதிக நீர் சேமிக்க இயலும். விவசாயிகளுக்கு வண்டல் மண் ஒரு சிறந்த உரமாக இருக்கின்றது. விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு இடுகின்றபொழுது அவர்கள் செய்கின்ற பயிர் சாகுபடிகளுக்கு விளைச்சல் அதிகமாகக் கிடைக்கிறது. மண் பதப்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டத்தை மேலும் விரிவடையச் செய்து, கிட்டத்தட்ட 2,065 ஏரிகள், 300 கோடி ரூபாய் திட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, 23 மாவட்டங்களில் நீர்நிலை மேம்படுத்துவதற்காக நீர்வள, நிலவளத் திட்டத்தின் மூலமாக, பகுதி 2இன் மூலமாக, ரூ.787 கோடி மதிப்பீட்டில் 220 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்திலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நிலத்தடி நீரைச் செறிவூட்டும் ஆறுகளிலிருந்து, ஏரியில் இருக்கும் தண்ணீரை கொண்டு செல்லவும், புதிய தடுப்பணைகள், நிலத்தடி நீர் தடுப்புச் சுவர்கள் மற்றும் அணைக்கட்டுகள் மூன்றாண்டுகளில், ரூ.1,000 கோடி மதிப்பீட்டில், செயல்படுத்தப்பட உள்ளது. நடப்பாண்டில், 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தடுப்பணைகளும் மற்றும் நிலத்தடி நீர் தடுப்புச் சுவர்களும் 10 இடங்களில் அணைக்கட்டுகளும் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, வண்டல்மண் எடுக்கும் திட்டத்தின்கீழ், இதுவரை ஏறத்தாழ 1,249 ஏரிகளில் 18,533 விவசாயிகள், 15,35,704 பயனீட்டாளர்கள் வண்டல்மண் எடுத்து பயனடைந்துள்ளனர் என்ற செய்தியையும் சுட்டிக்காட்டத் கடமைப்பட்டுள்ளேன்.

2011–2012ஆம் ஆண்டில் இரண்டாம் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை, 4 முறை தமிழ்நாடு 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்து உயரிய சாதனை படைத்துள்ளது. இதற்காக மத்திய அரசிடமிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில், 4 முறை 'கிரிஷி கர்மான்' விருதுதையும் தமிழகம் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னை விவசாயிகள் பயன்பெற நீராபானம் தயாரிப்பதற்கும் அம்மாவினுடைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன்மூலம், தென்னை விவசாயிகளுடைய வருமானம் இரட்டிப்பாக உயர்ந்துள்ளது.

இன்றைக்கு, 140 ஆண்டுகாலம் இல்லாத கடுமையான வறட்சி நிலவியிருக்கிறது. பருவமழை பொய்த்து விட்டது. இதனால், விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை. பயிர் சாகுபடி செய்த அந்த பயிர்களெல்லாம் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் காய்ந்துப் போய்விட்டது. அப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளை கண்டறிந்து, அவர்களுக்காக, ரூ.2,247 கோடி வழங்க அம்மாவினுடைய அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அம்மாவினுடைய அரசு எடுத்து வரும் தொடர் முயற்சியினால் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், காப்பீடு செய்த விவசாயிகளுக்கு, ரூ.1,882 கோடி பயிர் காப்பீட்டுத் தொகை இன்றைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'உழவர் பாதுகாப்பு'த் திட்டத்திலே, இயற்கை மரணம் அடையும் விவசாயிகள் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை, ரூ.10,000/–இல் இருந்து

ரூ.20,000/–ஆக இன்றைக்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித்தரத்தை கொண்டு தான் ஒரு நாட்டினுடைய வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. இன்றைக்கு அப்படிப்பட்ட வளர்ச்சி அம்மாவினுடைய ஆட்சியிலே பார்க்க முடிகின்றது. ஆகவே, இன்று அம்மாவினுடைய அரசு, பள்ளிக்கல்வித் துறைக்கு முன்னுரிமை கொடுத்து, 2017–2018ஆம் ஆண்டிற்கு, 26,932 கோடியே 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தனியார் பள்ளி மாணவர்களுக்கு நிகராக அரசுப் பள்ளி மாணவர்களும் கணினி அறிவு பெற, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 438 கோடி ரூபாய் செலவில் உயர் தொழில் நுட்ப கணினி ஆய்வகங்கள் தொடங்க மற்றும் நடுநிலை பள்ளிகளுக்கு 60 கோடி ரூபாய் செலவில் அறிவுத் திறன் வகுப்பறைகள் மற்றும் நடப்பாண்டில் 391 கோடி ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்ய, அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையில், கடந்த ஆறாண்டுகளில், 39,412 ஆசிரியர் பணி நியமனங்களும், 4,362 ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கான நியமனங்களும் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின்கீழ், 15,169 பகுதிநேர ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு, கல்வித்தரத்தை உயர்த்திய அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் வெகு தொலைவில் பள்ளிக்குச் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்தில் இதுவரை 227 புதிய தொடக்கப்பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ரூபாய் 14,000 மதிப்பு கொண்ட மடிக்கணினி வழங்கப்பட்டு அறிவுபூர்வமான கல்வியை, இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விஞ்ஞான கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்காக மடிக்கணினியை நம்முடைய மாணவர்களுக்கு அளித்தார்கள். இந்தியாவிலேயே விலையில்லா மடிக்கணினி கொடுக்கின்ற ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். இன்னும் 10 ஆண்டுகாலம் கழித்து பார்த்தால், தமிழ்நாடு ஒரு விஞ்ஞான உலகமாக மாறியிருக்கும். அப்படிப்பட்ட அறிவுப்பூர்வமான கல்வியை, நம்முடைய மாணவர்களுக்கு அளித்து இன்றைக்கு நம்முடைய மாணவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மாணவர்களுடைய எதிர்காலத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, தொலைநோக்கு சிந்தனையோடு இந்த திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்திருக்கின்றார்கள். இப்படி பல்வேறு நலத்திட்டங்கள் பள்ளி மாணவர்களுக்கு அளித்ததன் விளைவாக, தொடக்க நிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கை, 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. ஆகவே, புரட்சித்தலைவி அம்மா, கல்வியிலே செய்த புரட்சி, சாதனை, மறுமலர்ச்சித் திட்டங்கள் விளைவாக,

மாணவர்களுடைய சேர்க்கை விகிதம் உயர்ந்திருக்கிறது! அதேபோல, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே, உயர்கல்வி படிக்கின்றவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. 2011ஆம் ஆண்டு அம்மா ஆட்சிப் பொறுப்பேற்கின்றபொழுது 100க்கு 21பேர் உயர்கல்வி படித்தார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்து, புரட்சி செய்த காரணத்தினால், தமிழகத்திலே, இன்றைக்கு உயர்கல்வி படிப்பவர்கள் 44.3 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்விப் படிப்புப் படிக்கக் கூடியவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்த மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆறாண்டு காலத்திலே, 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். அதேபோல அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசும், இந்த ஆண்டு 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்திருக்கின்றது. இன்றைக்கு ஏழை, எளிய, வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள் எல்லாம் இன்றைக்கு உயர்கல்விக்குச் செல்ல வேண்டுமென்றால், தனியார் கல்லூரியிலோ அதிகப் பொருட் செலவாகிறது. குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காகத்தான், அம்மாவினுடைய அரசு, அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளைக் கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் மக்களுக்குத் தங்குதடையில்லாமல் மணல் கிடைப்பதற்காக, அரசே ஏற்று நடத்துகின்றது. அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தை எய்திட, அதேபோல, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழைக் குடும்பத்தினருக்கு 2015–2016 ஆம் ஆண்டு முதல், நடப்பாண்டு வரை 11,457 கோடி ரூபாய் செலவில், 3,27,717 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழகத்திலே ஏழை, எளியோருக்கு விடுகள் இல்லை என்ற நிலையை மாற்றிட அம்மாவினுடைய அரசு இன்றைக்கு ஏற்றதொரு திட்டம் தீட்டி, மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறைப் பணியாளர் சேர்க்கைக்கு, ஒரு மருத்துவ தேர்வாணையம் அமைத்தது அம்மாவினுடைய ஆட்சியில் தான். இதன் பயனாக, கடந்த ஆறாண்டுகளில், மருத்துவர்கள் உட்பட மருத்துவம் சாராத தொழிலாளர்கள் 1,20,506 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அம்மாவினுடைய அரசு பல்வேறு திட்டப்பணிகளை, நாட்டுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 11 ஆண்டுகாலம் சிறந்த ஆட்சியைத் தமிழகத்திற்கு தந்தார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 16 ஆண்டுகாலம்

சிறப்பான ஆட்சியைத் தந்தார்கள். தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் இருபெரும் தலைவர்கள் 27 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்து, பல்வேறு திட்டங்களை நாட்டு மக்களுக்கு அளித்த ஆட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். தமிழகத்திலே, அதிக அளவிலே ஆட்சி செய்த அரசு அனைத்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இருபெரும் தலைவர்களாம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் இறைவனால் இந்த இயக்கத்திற்குக் கொடுக்கப்பட்ட கொடைகள். ஆகவே, இன்றைக்கு தெய்வமாக வாழ்கின்ற இருபெரும் தலைவர்களும் நம்முடைய ஆட்சிக்குத் துணை நிற்கின்றார்கள். ஒரு மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான், இறக்கின்றான், இடைப்பட்ட காலத்திலே, என்ன சாதனை செய்கின்றான் என்பதுதான் மக்கள் மனதிலே நிலைத்திற்கும்.

புரட்சித்தலைவர், பிறந்தார், வாழ்ந்தார், இறந்தார். அவர் இடைப்பட்ட காலத்திலே செய்த சாதனை மக்கள் மனதிலே இன்றைக்கும் குடிகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தம் வாழ்நாள் முழுவதும் மக்களுக்காக உழைத்த மாமணி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்! இப்படி அம்மா வழியில் நடக்கும் இந்த அரசை. இன்றைக்கு கவிழ்க்கப் பார்க்கிறார்கள். ஏதாவது ஒரு வழியிலே, இந்த ஆட்சியை கவிழ்க்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள். இங்கே இருக்கின்ற தொண்டர்கள் இருக்கின்றவரை ஒரு போதும் ஆட்சியைத் தொட்டுக்கூட பார்க்க முடியாது! ஏனென்றால், இருபெரும் தலைவர்களும் தெய்வமாக இருந்து, இந்த ஆட்சியைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆசியும், அன்பும், ஆன்மாவும் இந்த இயக்கத்தைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலே 70 சதவீதத்திற்கு மேல் உள்ள விவசாயிகளுடைய நிலைகளை உயர்த்துவதற்குப் பாடுபட்டவர்கள், இந்த இருபெரும் தலைவர்களும். கிராமத்திலே சாதாரண ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவியர்கள் கூட, உயர்ந்த நிலைக்கு வரமுடியும் என்ற நிலையை உருவாக்கியவர் இந்த இருபெரும் தலைவர்கள். இந்த இருபெரும் தலைவர்களால்தான், இன்று தமிழகம் தலைநிமிர்ந்து இருக்கிறது! இருபெரும் தலைவர்களுடைய உழைப்பு நிலைத்து நிற்கின்ற வரை, இந்த ஆட்சியையோ, கட்சியையோ, யாரும் தொட்டுப் பார்க்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றேன்.

பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் அவர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் என்னிடத்திலே வைத்தார்கள்.

அறிவிப்புகள்

❖ அறுபடை வீடுகளில் ஒன்றான, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அமைந்துள்ள திருத்தணி நகராட்சியில், தினந்தோறும் சுமார் 12 ஆயிரம் நபர்களுக்கு மேல் வந்து செல்வதாலும், பக்தர்கள் வருகை நாளுக்கு நாள் அதிகமாவதாலும் தனியார்–பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP) புதிய பேருந்து நிலையம் திருத்தணி நகராட்சியில் அமைக்கப்படும்.

❖ திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொன்னேரி பேரூராட்சிப் பகுதி மிக விரைவாக வளர்ந்து வரும் அதிக மக்கள் தொகை கொண்ட பகுதியானதால், பொது மக்கள் பயன்பெறும் வகையிலும், பொது சுகாதாரத்தை பேணிக்காக்கும் வகையிலும், பொன்னேரி பேரூராட்சியில் புதியதாக பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படும்.

❖ திருவள்ளூர் மாவட்டத்தில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டு தற்போது வாடகை கட்டடத்தில் இயங்கிவரும் ஆவடி மற்றும் மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம் மற்றும் வட்டாட்சியருக்கான குடியிருப்பும் கட்டப்படும்.

❖ திருவள்ளூர் நகரைச் சுற்றிலும் உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களில் இருந்தும், இரயில் நிலையத்திலிருந்தும் தினமும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒரே பிரதான சாலை வழியாகப் பயணிக்க நேரிடுகிறது. இதன் காரணமாக, பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடும் போக்குவரத்து நெரிசலால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பொதுமக்களின் நலன் கருதி, திருவள்ளூர் நகரைச் சுற்றி ஈக்காடு சொசைட்டி நகர் முதல் காக்களூர் சாலை வரை, 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மாற்றுப்பாதை அமைக்கப்படும்.

❖ சென்னைக்கு மிக அருகில் அமைந்துள்ள, வேகமாக வளர்ந்து வரும் திருவள்ளூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 15 ஊராட்சிகளில், பொதுமக்கள் பயன்பெறும் வகையில், 5 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 22 சாலைகள் தார் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

❖ திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம் தண்டுரை கிராமத்திலுள்ள (பட்டாபிராம்) தமிழ்நாடு அரசின் 'சதர்ன் ஸ்ட்ரக்சுரல் லிமிடெட்' நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் ஒரு பல்நோக்கு தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்படும்.

❖ திருவள்ளூர் மாவட்டத்தில், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி மற்றும் திருவொற்றியூர் ஆகிய மூன்று வட்டங்களின் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில், பொன்னேரி வட்டம், பொன்னேரி பகுதியில் மீனவ சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக அமைக்கப்பட்டுள்ள மீன்வளக்

கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு, 'பாரத ரத்னா' டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயர் சூட்டப்படும்.

❖ திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் பள்ளிப்பட்டு வட்டத்திலிருந்து ஆர்.கே. பேட்டை பகுதியைப் பிரித்து புதிய வட்டம் உருவாக்க விடுத்த கோரிக்கையினை அரசு பரிசீலித்து ஆவன செய்யும்.

“இதயத்தெய்வம் நமது அண்ணா தோன்றினார் – அவர் என்றும் வாழும் கொள்கை தீபம் ஏற்றினார்– அந்த ஒளி காணலாம் – சொன்ன வழி போகலாம் – நாளை வரலாறு – நமக்காக உருவாகலாம் – ஒன்றே குலம் என்று பாடுவோம்! ஒருவனே தேவனென்று போற்றுவோம்!” – என்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல் வரிகளையே வேதவாக்காகக் கொண்டு கழகக் கண்மணிகள் தியாக உணர்வோடு மக்களுக்காக உழைத்து, பேரறிஞர் அண்ணாவின் வழியில், மாண்புமிகு புரட்சித்தலைவரின் பொன்மொழி போற்றி, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சி தொடரப் பாடுபட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்த பிரம்மாண்ட விழா இங்கே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாப் பொதுக்கூட்டம் அன்று! இது ஒரு மாநாடு போலக் காட்சியளிக்கிறது; எங்கு பார்த்தாலும் மக்கள் வெள்ளம் அலை மோதுகின்றது! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்துவதற்குப் பாடுபட்ட மாண்புமிகு அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்களும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுமாகிய திரு. பி. பலராமன் அவர்களுக்கும், திரு. வி. அலெக்சாண்டர் அவர்களுக்கும், விழாச் சிறப்பாக நடைபெற இவர்களுடன் சேர்ந்து உழைத்திட்ட இம்மாவட்ட அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்களுக்கும், திருவள்ளூர் மாவட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இவர்கள் அனைவரும் இணைந்து பணியாற்றியதன் விளைவாக, இந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா ஒரு மாநாடு போல் காட்சியளிக்கிறது.

அவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, காலம் நேரம் பாராமல், இவ்விழாவை மாநாடு போல நடத்திய அரசு அதிகாரிகளுக்கும், மற்றும் அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்! நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

03.09.2017 அன்று, திருவள்ளூரில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற அண்ணாவின் ஆன்மீக நாத்தீகத்தைப் போதித்த புரட்சித்தலைவருக்குப் பெரியாரின் ஈரோட்டில் நூற்றாண்டு விழா!

மக்கள் தொண்டனாகச் சேவை செய்தவர்!

இதயத்தெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, திராவிட இயக்கங்களின் தொடக்கப்புள்ளியான ஈரோடு மாவட்டத்திற்கு வந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே! மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி.கருப்பணன் அவர்களே! வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே! வாழ்த்துரை வழங்கிய ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வகுமார சின்னையன் அவர்களே! திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. வி.சத்தியபாமா அவர்களே! நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.கோபால

கிருஷ்ணன் அவர்களே! ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.வி.இராமலிங்கம் அவர்களே! பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் திரு. தோப்பு என்.டி.வெங்கடாசலம் அவர்களே! ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். தென்னரசு அவர்களே! மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. வே.போ. சிவசுப்பிரமணி அவர்களே! அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்களே! பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. ஈஸ்வரன் அவர்களே! காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே! திரு. செல்லூர் கே. ராஜூ அவர்களே! திரு. பி. தங்கமணி அவர்களே! திரு.எஸ்.பி. வேலுமணி அவர்களே! திரு.டி.ஜெயக்குமார் அவர்களே! திரு. சி.வி. சண்முகம் அவர்களே! திரு. கே.பி.அன்பழகன் அவர்களே! டாக்டர் வி.சரோஜா அவர்களே! திரு. எம்.சி.சம்பத் அவர்களே! திரு. ஆர்.காமராஜ் அவர்களே! திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே! டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே! திரு. கடம்பூர் ராஜூ அவர்களே! திரு.ஆர்.பி. உதயகுமார் அவர்களே! திரு. வெல்லமண்டி என்.நடராஜன் அவர்களே! திரு. கே.சி.வீரமணி அவர்களே! திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்களே! திரு. பா.பெஞ்சமின் அவர்களே! டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்களே! டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே! திருமதி. வி.எம்.ராஜலட்சுமி அவர்களே! திரு. க. பாண்டியராஜன் அவர்களே! திரு. ஜி.பாஸ்கரன் அவர்களே! திரு.சேவூர் எஸ்.இராமச்சந்திரன் அவர்களே! திருமதி. எஸ்.வளர்மதி அவர்களே! திரு. பி. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் எஸ். பிரபாகர் அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக் கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

அறியாமையாலும், பகுத்தறிவு இன்மையாலும் இருண்டு கிடந்த தமிழ் மண்ணிற்கு வெளிச்சம் தர வெளிவந்த பகலவன் தந்தை பெரியார் அவர்கள் தோன்றியது இந்த ஈரோட்டு மண்ணில்தான். அதனால்தான், அன்றிலிருந்து இன்று வரை, கொங்கு

மண்டலத்தின் மையப் புள்ளியாக விளங்கும் இந்த ஈரோடு, திராவிட இயக்கத்தின் வேராக விளங்கி வருகிறது.

திராவிட இயக்க வரலாற்றின் தொடக்கமாகத் திகழும் இந்த ஈரோட்டில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெறுவது மிகப்பொருத்தமானது என்பதை உறுதி செய்யும் வகையில் ஒரு வரலாற்று நிகழ்வை இந்த இனிய விழாவில் நினைவுகூற விரும்புகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மூதாதையர்கள் இந்த கொங்கு சீமையை பூர்வீகமாகக் கொண்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் முன்னோர்கள் இங்குள்ள காங்கேயத்திலிருந்துதான் மருதூருக்கு குடிபெயர்ந்திருக்கிறார்கள், என்பது ஒரு வரலாறு.

பல்வேறு குடும்பச் சூழலின் காரணமாக திரு.கோபாலன் தன் குடும்பத்தோடு இலங்கை கண்டிக்குச் சென்று அங்கு துணை நீதிபதியாகப் பணிபுரிந்திருக்கிறார்.

அங்குதான் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திரு.கோபாலனுக்கும், அன்னை சத்தியபாமாவுக்கும், 5வது மகனாக 1917 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் தேதி பிறந்துள்ளார். விதியின் கோர விளையாட்டால் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தந்தை கண்டியில் மரணம் அடைய, அந்த குடும்பம் இங்குள்ள கும்பகோணத்தில் வந்து குடியேறியிருக்கிறது.

ஆக, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் முன்னோர்கள் கொங்குச் சீமைக்கு சொந்தக்காரர்கள் என்பதால், இந்த நூற்றாண்டு விழா இந்த ஈரோட்டில் நடைபெறுவது மிகப் பொருத்தமானதாக நான் கருதுகிறேன்.

தீந்தமிழ்க் காவியமாகவும், எழுச்சிமிகு ஆளுமையாகவும் திகழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், ஈரோட்டில் சில வருடங்கள் தந்தை பெரியாருடன் தங்கி, ‘விடுதலை’ பத்திரிகைக்காக எழுதி வந்தார்கள்.

அன்று ஈரோட்டில் பேரறிஞர் அண்ணா பிடித்த அந்த எழுதுகோல்தான், தமிழ்நாட்டின் வரலாற்றைப் புரட்டிப் போட்டது! ஆக, இந்த ஈரோடு, திராவிட இயக்க வரலாற்றில், முதல் மூன்று அத்தியாயங்களாகத் திகழ்ந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆகியோருடைய வாழ்க்கையோடு தொடர்புடைய மாவட்டமாகத் திகழ்ந்திருக்கிறது.

இதைத்தவிர பல்வேறு சிறப்புகளைப் பெற்றது இந்த மாவட்டம். இந்திய விடுதலைக்காகப் போரிட்டு, ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்ட தீரன் சின்னமலை என்ற வரலாற்று நாயகனைப் பெற்றது இந்த ஈரோடு.

இன்றும் என்றும் மக்கள் நினைவு கூரும் வகையில், தீரன் சின்னமலை பிறந்த ஈரோடு ஓடாநிலையில், அரசு மணிமண்டபமும், அவர் தூக்கிலிடப்பட்ட சேலம் சங்ககிரியில் நினைவுச் சின்னமும் அமைத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தேச விடுதலைக்காக, ஆங்கிலேயரை எதிர்த்து வீதி வீதியாகச் சென்று வீர முழக்கமிட்டு, கடுமையாகத் தாக்கப்பட்டு, தரையில் வீழ்ந்து உயிருக்கு போராடியபோதும் தன் கையில் வைத்திருந்த தேசியக் கொடியை மட்டும் தரையில் சாயவிடாமல் தூக்கி நிறுத்தியபடியே, உயிர் நீத்த திருப்பூர் குமரன் பிறந்த தியாக பூமியான சென்னிமலை, இந்த ஈரோட்டுக்குச் சொந்த மலையாகத் திகழ்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த அம்மாவின் அரசு, திருப்பூர் குமரனின் வீரத்தையும் தீரத்தையும் போற்றும் வகையில் அவர் பிறந்த ஊரில், அவர் பிறந்த தினத்தை 04.10.2017 முதல் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாட ஆணை பிறப்பித்துள்ளதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நதிகள் இணைப்புக்கு முன்னோடியாக திகழ்ந்த காளிங்கராயன் அவர்களை மண்ணின் மைந்தனாகப் பெற்றது இந்த ஈரோடு மாவட்டம். பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே, தொழில்நுட்ப அறிவும், தொலைநோக்குப் பார்வையும் கொண்டவர் காளிங்கராயன் என்பதை, ஈரோட்டில் அவர் வெட்டிய கால்வாய்களைப் பார்த்தே நாம் தெரிந்து கொள்ளலாம்.

அவரை நினைவுகூரும் வகையில், ஈரோட்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால், 2016ஆம் ஆண்டு, காளிங்கராயனுக்கு மணிமண்டபமும் 6 அடி உயரத்தில் முழு உருவச்சிலையும் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் அவை திறந்து வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

காளிங்கராயன் பெயரில் விருந்தினர் மாளிகை ஒன்று பொதுப்பணித்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ளதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். உலகத்தையே வியக்க வைத்த மாபெரும் கணிதமேதை ஸ்ரீனிவாச ராமானுஜன் அவர்கள், இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்! கணீர் என்ற குரலில் பக்தி பரவசமூட்டும் பாடல்களை மேடைகள் தோறும் பாடி வந்த அவ்வையின் மறுஉருவம் திருமதி.கே.பி. சுந்தராம்பாள் அவர்கள், ஈரோடு மாவட்டம், கொடுமுடியில் பிறந்தவர்தாம்! ஈரோடு, தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம். விசைத்தறி, கைத்தறி தொழில்கள், இங்கு அதிகமாக நடைபெறுவதால் இது ‘ஜவுளி மாநகரமாக’வும் திகழ்கிறது.

இந்த ஈரோடு மாவட்டம் பருத்தி விளைச்சலுக்கு ஏற்ற மண்ணாக இருக்கிறது. ஈரோடு மஞ்சள் உற்பத்தியில் முக்கிய மையமாகத் திகழ்வதால் இது ‘மஞ்சள் மாநகரம்’ என்றும் அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள வனக்கோட்டங்களில் ஈரோடு மாவட்ட வனக்கோட்டம் மிகப்பெரியதாகும்.

தமிழ்நாட்டில் கிடைக்கும் மொத்த சந்தனத்தில், மூன்றில் ஒரு பங்கு, ஈரோடு மாவட்டத்திலிருந்துதான் கிடைக்கிறது. ஊத்துக்குளி வெண்ணெய் மற்றும் காங்கேயம், பர்கூர் காளைகள் ஆகியவற்றுக்கும் இந்த ஈரோடு மாவட்டம் பெயர் பெற்றதாகும்.

பெரும்பள்ளம் ஓடை, பிச்சைக்காரன் ஓடை ஆகிய இரண்டு ஓடைகளுக்கு நடுவே அமைந்துள்ளதால் இந்த ஊரை ஈரோடை என்று அழைத்தார்கள். அது காலப்போக்கில் ஈரோடு என்று மருவி விட்டதாக அறிய முடிகிறது.

பண்ணாரி மாரியம்மன் கோயில், பவானி சங்கமேஸ்வரர் கோயில், சென்னிமலை முருகன் கோயில், கொடுமுடி வீரநாராயண பெருமாள் கோயில், பாரியூர் அம்மன் கோயில், சிவன்மலை கோயில், பெரிய மாரியம்மன் கோயில், திண்டல்மலை முருகன் கோயில் ஆகிய பல திருக்கோயில்களைக் கொண்டு ஆன்மிக மணம் கமழும் மாவட்டமாகவும் ஈரோடு விளங்குகிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க ஈரோட்டை, தம் தாய் வீடாகக் கொண்ட தந்தை பெரியாரின் கொள்கைகளையும், தந்தை பெரியார் அவர்களின் முதன்மைத் தொண்டராக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் கோட்பாடுகளையும், உலகம் அறியச் செய்த பெருமை இன்றைய வரலாற்று நாயகனாகவும், நூற்றாண்டுவிழா நாயகனாகவும் திகழ்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உண்டு.

உதாரணத்திற்குத் தந்தை பெரியாரின் சாதி ஒழிப்புக் கொள்கையை, திரைப்படப் பாடல்களிலும், திரைக்கதை வசனங்களிலும் அதிகமாக பயன்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தாம்!

பெரியாரின் சாதி மறுப்புக் கொள்கையை, அவருடைய முதன்மைத் தொண்டராக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற புதிய வேதமாக உலகுக்குச் சொன்னார்கள்.

அந்த வேதத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் **'ஒன்றே குலம் என்று பாடுவோம், ஒருவனே தேவன் என்று போற்றுவோம்'** என்று தம் படத்தில் பாடலாகப் பிரதிபலித்தார்கள்.

தந்தை பெரியார் அவர்கள், தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த, வாழ்நாள் முழுவதும் உழைத்த உழைப்பையும், அதனால் அவர்கள் அடைந்த கவலையையும் தம் பாடலின் வழியாகச் சொன்னவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

'மனுஷனை மனுஷன் சாப்பிடராண்டா தம்பிப் பயலே, இது மாறுவது எப்போ, தீருவது எப்போ நம்ம கவலே' என்று தந்தை பெரியார் அவர்களின் கவலையை

மக்களுக்கு உணர்த்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய ஒரு புரட்சிகரமான கருத்தை, எந்த ஒளிவும் மறைவும் இல்லாமல், யாருக்கும் பயப்படாமல் சொல்லும் தந்தை பெரியார் அவர்களின் துணிவை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இயல்பாகவே பெற்றிருந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1979–ல், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, பெரியாரின் நூற்றாண்டு விழாவை, தமிழ்நாடு முழுவதும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடினார்கள். தந்தை பெரியார் அவர்களின் தமிழ் எழுத்து சீர்திருத்தத்தைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டின் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடித்தார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதைப்போல மாவட்டத் தலைநகரங்களில், பெரியார் நினைவுத் தூண்களை நிறுவினார். தந்தை பெரியார் கருத்துகள் அடங்கிய 'புரட்சி மொழிகள்' நூல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில்தான் வெளியிடப்பட்டது.

தஞ்சையில், பெரியார் நூற்றாண்டு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியையும் உருவாக்கினார். திராவிட இயக்கத்தின் 4ஆம் அத்தியாயமாகத் திகழும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், முதல் அத்தியாயமாகத் திகழும் தந்தை பெரியார் அவர்களின்மீது அதிக மரியாதை வைத்திருந்தார்கள்.

1994ஆம் ஆண்டு, செப்டம்பர் 8ஆம் நாள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் "பெரியார் விருது" ஏற்படுத்தப்பட்டு, சமூக நீதிக்காக பாடுபடுபவர்களுக்கு அந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மக்கள் தொண்டனாக, மக்களோடு மக்களாகக் கலந்து, மக்கள் சேவை செய்ததால்தான், குடிசையில் வாழ்கிறவர்களிலிருந்து கோபுரத்தில் வாழ்கிறவர்கள் வரை அவர்மீது அளவுகடந்த பாசமும் பற்றும் வைத்திருந்தார்கள். உதாரணத்திற்கு ஒரு நிகழ்வை இங்கே சுட்டிக் காட்டுகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், குறவர்கள் மீது அளவுகடந்த அன்பும், பாசமும் வைத்திருந்தார். அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மீதும் குறவர்களும் தீவிரப் பாசம் வைத்திருந்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு ஒரு சிறு துன்பம் என்றாலும், நரிக்குறவர்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்கள்!

அதன் தாக்கம்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் குறவனாகவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் குறத்தியாகவும்

வேடமேற்று நடித்த ஒளிவிளக்கு படத்தில் வரும் ஒரு பாடலில் ... ‘‘எல்லோருக்கும் நல்லவரா இருப்போமுங்க எங்க கொள்கையிலே எந்நாளும் மாறமாட்டோம்; நரிக்கொம்பு வித்தாலும் விப்போமுங்க, ஆனா, நரி போல வஞ்சனைகள் செய்யமாட்டோம்’’ என்று குறவர் சமூகத்தின் உயர்ந்த குணாதிசயங்களை பாடி இருப்பார்கள்.

அதனால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தங்கள் சமுதாயத்தின் ஒளிவிளக்காக குறவர்கள் இன்றளவும் நினைக்கிறார்கள்.

ஒரு திரைப்படத்தில் வில்லனாக நடிக்கும் திரு. நம்பியார் அவர்கள், திரு. எம்.ஜி.ஆர், அவர்களைக் கொல்ல துப்பாக்கியை வைத்துக் கொண்டு அலைவார்.

ஒரு கட்டத்தில் திரு. எம்.ஜி.ஆரை, திரு. நம்பியார் சுடும்போது, தியேட்டரில் ‘டுமீல்’ என்று பெரிய சத்தம் கேட்டு படம் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர்கள் அதிர்ச்சியுற்றார்கள்!

காரணம், தங்கள் இதய தெய்வமான புரட்சித்தலைவரைக் கொல்லத் துடிக்கும் திரு. நம்பியாரை நரிக்குறவர் குருவி சுடும் துப்பாக்கியால் திரையைப் பார்த்துச் சுட்டுவிட்டார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், அவர்கள் மீது இருந்த கண் மூடித்தனமான பாசத்தால், பற்றால், அது திரை, அதில் திரு. நம்பியாரும் திரு. எம்.ஜி.ஆர் அவர்களும் நடிக்கிறார்கள் என்பதைக் கூட அறியாமல், அந்த குறவர் திரையில் வந்த திரு. நம்பியாரைச் சுட்டுவிட்டார்.

அந்த அளவிற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின்மீது ஏழை, எளிய, சாமானிய மக்கள் அதீத பாசம் வைத்திருந்தார்கள்.

1965 ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் அந்தமானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, அந்த ஊர் மக்களின் வேண்டுகோளை ஏற்று 'பணத்தோட்டம் எம்.ஜி.ஆர்.ரசிகர் மன்றம்' என்ற அமைப்பைத் தொடங்கி வைத்தார்கள்.

அந்தக் காலக்கட்டத்தில் நாட்டின் பிரதமர், ஒரு நடிகருக்கு ரசிகர் மன்றம் திறந்து வைத்திருக்கிறார் என்றால் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் செல்வாக்கு எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்பது புலப்படும்.

அமெரிக்காவில் மருத்துவமனையில் படுத்துக்கொண்டே, தமிழ்நாட்டு சட்டமன்ற தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட்டு, வாகை சூடிய ஒரே மக்கள் தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தாம்!

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்—அது முடிந்த பின்னாலும் என் பேச்சிருக்கும்" என்று அவர் தம்மைப் பற்றி பாடிய பாடல், எத்தனை உண்மை என்பதை இன்று நாம் உணர்கின்றோம்.

ஒரு மனிதன் உடலளவில் மறைந்து 30 வருடங்கள் கழித்தும், அவருடைய பெயர் இந்த மண்ணில், மக்கள் மனதில் தினமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்றால், அது இந்த உலகத்தில் வேறு யாருக்கும் கிடைக்காத பாக்கியமாகத்தான் கருதப்பட வேண்டும்.

அதற்கு இந்த ஈரோடு மக்களைப் போன்றவர்கள், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீதும் அவர்களுடைய அரசியல் வாரிசாக அவதாரம் எடுத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீதும் வைத்திருந்த நம்பிக்கைதான் காரணம்.

அந்த நம்பிக்கையின் விளைவாகத்தான், வெளிப்பாடு தான், உங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல, 2016 சட்டமன்றத் தேர்தலில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இந்த ஈரோடு மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை நிறுத்திவைத்து, உங்களுடைய மகத்தான ஆதரவின் பேரில், அத்தனை இடங்களிலும் வெற்றி பெற்று, நூற்றுக்கு நூறு சதவீதம் வெற்றி பெற்ற மாவட்டம் ஈரோடு மாவட்டம் என்ற பெருமையை எங்களுக்கு அளித்ததை, இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அம்மாவினுடைய கோட்டையாகவும், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் அவர்களுடைய கோட்டையாகவும் இந்த ஈரோடு மாவட்டம் திகழ்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்!

ஈரோடு மாவட்டத்தின் வளர்ச்சியில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குத் தனிப்பட்ட அக்கறை இருந்தது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஈரோடு மாவட்டத்திற்குச் சிறப்பானத் திட்டங்களை வழங்கினார்கள்.

அம்மா வழியில் தொடரும் இந்த அரசும், ஈரோடு மாவட்டத்திற்கு பல அரிய திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. ஈரோடு மாவட்டத்தில், 52 ஆயிரத்து 994 விவசாயிகளுக்கு 319 கோடியே, 17 இலட்சம் ரூபாய், விவசாயக் கடன், கூட்டுறவு வங்கிகள் மூலமாகத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும், 1 இலட்சத்து 33 ஆயிரத்து 880 விவசாயிகளுக்கு, இடுபொருள் மானியமாக, 59 கோடியே 40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. குடிமராமத்து திட்டத்தின்கீழ், 63 பணிகள், 4 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில், 18 ஆயிரத்து 733 விவசாயிகளுக்கு, 13 இலட்சத்து 94 ஆயிரத்து 711 கனமீட்டர் வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தற்போது இயங்கி வரும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தில், போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால், இங்கே இருக்கின்ற பல அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். அவர்கள் கோரிக்கைகளை ஏற்று, அங்கே கூடுதல் கட்டடம் கட்டுவதற்காக இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கட்டடம் 52 கோடியே, 96 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈரோடு மாநகராட்சியின் குடிநீர் அபிவிருத்தித் திட்டப்பணிகள், ரூபாய் 508 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டில், 11.06.2017 அன்று, அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறன. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்.

ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, கருமாண்டி செல்லி பாளையம், பள்ளபாளையம், காஞ்சிக்கோயில், நல்லாம்பட்டி, பெத்தாம்பாளையம், குன்னத்தூர், ஊத்துக்குளி ஆகிய 8 பேரூராட்சிகள் மற்றும் பெருந்துறை, சென்னிமலை, ஊத்துக்குளி ஒன்றியங்களைச் சார்ந்த 993 ஊரகக் குடியிருப்புகளுக்கு, பவானி ஆற்றிலுள்ள கொடிவேரி அணையை நீராதாரமாகக் கொண்டு, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்டம், 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டில், இதற்கான பணிகள் தொடங்கப்படும். இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, நான் குறிப்பிட்ட இடங்களில் பாதுகாக்கப்பட்ட நீர் உங்களுக்குத் தங்குதடையின்றி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, உங்களுடைய கனவுத் திட்டமான அத்திக்கடவு–அவிநாசித் திட்டத்தை புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே அறிவித்தார்கள். நீண்டகாலமாக கோயமுத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளெல்லாம் அத்திக்கடவு–அவிநாசி திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். அம்மா அவர்கள், அந்த கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆணையிட்டார்கள். அம்மாவினுடைய ஆணையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, செயல்படுத்த இருக்கின்றது என்ற செய்தியை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில், 9 வட்டங்களில் உள்ள 30 பொதுப்பணித்துறை ஏரிகள், 41 ஒன்றிய ஏரிகள் மற்றும் 630 குளம் குட்டைகள் பயன்பெறும் .

இத்திட்டத்தின் மூலம், ஈரோடு மாவட்டத்தில் உள்ள 6 பொதுப்பணித்துறை ஏரிகள், 12 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 246 குளம் குட்டைகளை, நீர் நிரப்புவதன் மூலம் 54 கிராமத்திற்கு உட்பட்ட நிலத்தடி நீர், செறிவூட்டப்பட்டு பாசன வசதி பெறும்.

ஈரோடு நகரப்பகுதியில், ஈரோடு – பெருந்துறை – காங்கேயம் சாலையில், அரசு பொது மருத்துவமனை சந்திப்பில், சாலை மேம்பாலப் பணிக்கு, ரூபாய் 58 கோடியே 54 இலட்சம் மதிப்பில், 11.06.2017 அன்று, அடிக்கல் நாட்டப்பட்டு, பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இங்கே இருக்கின்ற உங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஈரோடு நகரத்திலே, போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைக்க வேண்டும் என்பதற்காக, ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் சாலையில், காளிங்கராயன் இல்லத்திலிருந்து, திண்டல் மேடு வரை, 5.40 கிலோமீட்டர் நீளத்திற்கு, ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அதனையும் அம்மாவினுடைய அரசு, 300 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பள்ளிப்பாளையத்தையும், ஈரோடு நகரத்தையும் இணைக்கும் வகையில், ரூபாய் 29 கோடியே 90 இலட்சம் மதிப்பில், காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்திற்கு, அணுகுச் சாலை அமைக்கும் பணி வெகுவிரைவில் முடிவு பெறும்.

ஈரோடு மாவட்டத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக, பெருந்துறை 'சிப்காட்' வளாகத்தில், புதியதாக ஒரு மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம், ஒரு தொடர் சுற்றுப்புற காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையம், ஆகியவை சுமார் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காளிங்கராயன் வாய்க்கால் நீரின் தன்மையைத் தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், தொடர் நீர்த் தரக் கண்காணிப்புக் கருவிகள் இரண்டு இடங்களில், ரூபாய் 75 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளன.

இது போன்று, காவிரி ஆற்றின் நீர்த் தன்மையைத் தொடர்ந்து கண்காணிப்புச் செய்வதற்கு, மூன்று இடங்களில் தொடர் நீர்த் தரக் கண்காணிப்புக் கருவிகள் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், ஈரோடு மாவட்டத்திலுள்ள ஏரி, குளங்களுக்குச், சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு, மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து, இன்று, 12 துறைகள் மூலம், 65 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்ட 66 முடிவுற்ற பணிகளை நான் இன்று தொடங்கி வைத்துள்ளேன்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில், 129 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், துணை மின் நிலையங்கள் உட்பட, 334 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் மற்றும் பெருந்துறை பேரூராட்சி பகுதிகளில் 54 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப்பணி உட்பட 584 கோடியே 24 இலட்சம் மதிப்பிலான 55 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

ஈரோடு மாவட்டத்தில், 13 துறைகளின் சார்பில், 102 கோடியே 29 இலட்சத்து 97 ஆயிரத்து 426 ரூபாய் மதிப்பீட்டில், 12 ஆயிரத்து 342 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இந்த அரிய திட்டங்களின் அருமை பெருமைகளை, மக்களாகிய நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள்! ஒரு சிலர் மட்டும், அதைப் பாராட்ட மனமில்லாமல் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்!

அவர்களுடைய பேச்சை, ஒரு காலமும் மக்கள் செவிமடுக்க மாட்டார்கள். அவர்களுடைய பேச்சு அவர்களையே ஒரு நாள் அவமானப்படுத்திவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை கூறுகின்றபோது, கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஓர் இசைக் கலைஞனை வண்டியில் ஏற்றி, கச்சேரிக்கு அழைத்துச் செல்லும் ஒரு குதிரைக்கு, ஓர் அபரிமிதமான ஆசை வந்தது. இந்த வித்வானைப் போல தானும் பாட்டுப்பாடி ..... எல்லாருடைய பாராட்டு, பொன்னாடை, மலர் மாலைகள் பெற வேண்டும் என்று எண்ணியது.

எனவே, வித்வானுக்கு கச்சேரி இல்லாத நாட்களில் அருகிலுள்ள காட்டுப் பகுதிக்குச் சென்று கனைத்துக் கனைத்துத் தன் குரலுக்கு மெருகேற்றிக் கொண்டிருந்தது. வித்தியாசமான குரலைக் கேட்டு, குதிரையை நோக்கி வந்த நரி, குதிரையிடம், “குதிரையாரே! இப்படிப்பட்ட ஓர் இனிமையான குரலை என் வாழ்நாளில் கேட்டதே இல்லை! இந்தக் காட்டில் பல மிருகங்கள் தங்களுடைய குரல்தான் மிகவும் இனிமையானது என்ற மமதையில் இருக்கின்றன. நீ காட்டுக்குள் வந்து, உன் குரல் இனிமையைக் காட்டினால், உன்னிடம் போட்டி போட முடியாது என்று எண்ணி அனைத்து மிருகங்களும் ஓட்டம் பிடிக்க ஆரம்பிக்கும்! அதைக் கொண்டே உன் குரல் எத்தனை இனிமை என்பதை நீ தெரிந்து கொள்வாய்” என்றது. நரி தன்னைப் புகழ்வதைக் கேட்டு, குதிரை மகிழ்ந்தது. நரி சொன்னதைப் போலவே, குதிரை காட்டுக்குச் சென்று சப்தம்போட்டு, விதவிதமாக கனைத்தது. அப்படிப்பட்ட மோசமான, விகாரமான குரலை அதுவரை கேட்டிராத காட்டு விலங்குகள் பயந்துபோய் தம் இருப்பிடத்திலிருந்து வெளியேறத் தொடங்கின.

அதை எதிர்பார்த்துப் பதுங்கியிருந்த நரி, அந்த விலங்குகளை ஒவ்வொன்றாக அடித்து சாப்பிட்டது. ஒரு கட்டத்தில் அலுத்துப்போன நரி, குதிரையிடம் பாட்டை நிறுத்தச் சொன்னது.

பிறகு குதிரை, நரியிடம் வந்தபோது அங்கு ஏகப்பட்ட விலங்குகள் செத்துக் கிடந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தது. “குதிரையாரே, இவையெல்லாம் உன்னோடு மோதுவதற்கு பயந்து தற்கொலை செய்து கொண்டன’’ என்று நரி சமாளித்தது.

அதையும் அந்த குதிரை நம்பி, தனக்குத் தானே பெருமைப்பட்டுக் கொண்டது. ”குதிரையாரே, நான் சொல்கின்ற போதெல்லாம் நீ இப்படி வந்து உன் குரல்

இனிமையைக் காட்டு" என்று நரி கூறவே, குதிரை அதற்கும் ஒப்புக்கொண்டு, இனிமேல் கச்சேரிக்கு தானே போய் பாடி விடலாம் என்ற கனவில் வீட்டை நோக்கி நடந்தது.

எந்த இரையும் கிடைக்காதபோது, இந்த குதிரையை அடித்து உண்ணலாம் என்ற நரியின் சூழ்ச்சியை அந்த குதிரை அறியப் போவதில்லை. இப்படித்தான், பலர் தன் பேச்சால் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை உணராமல், வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தப் பேச்சால் மக்களுக்கு எந்தப் பயனும் விளையப் போவதில்லை என்பதை இக்கூட்டத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயத்தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விவசாயத்தையும், தொழிலையும் இரு கண்களாக பாவித்தார்கள். ஆகவே, எந்த ஒரு நாட்டில் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றதோ அந்த நாடு பொருளாதாரத்தில் முன்னுக்கு வரும். தமிழகத்தைத் தொழிற்சாலை வளமிக்க மாநிலமாக உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எண்ணி, சென்னையில் உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி, அதிலே 2,42,160 கோடி ரூபாய் முதலீட்டில் 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் முதலீட்டை ஈர்த்த தலைவி புரட்சித்தலைவி அம்மா என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிகாலத்தில் தான், பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வெற்றி கண்டு இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனக்கு முன்னாலே, உங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் மதிப்பிற்குரிய திரு. கே.சி. கருப்பணன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். குடிமராமத்து திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் பேசலாம் என்று நினைத்தேன். அவரே பேசி ஆரம்பித்துவிட்டார். முதன்முதலாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கும்பொழுதே, ஈரோட்டில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் தாம் இந்தத் திட்டத்தை உருவாக்கிக் கொடுங்கள் என்று கேட்டார்கள். கோரிக்கை வைத்த மாவட்டம் இந்த ஈரோடு மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் மாவட்டம் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே இருக்கின்ற விவசாயிகள், ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகள் மூலமாக வண்டல் மண்ணை, அள்ளினால் ஏரிகள் ஆழமாகும், பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை ஏரிகள், குளங்கள், குட்டைகளில் அதிகளவில் சேமிக்க இயலும். விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை அவர்களுடைய நிலத்திற்கு இடுகின்றபொழுது, மண் பதப்படுத்தப்பட்டு, அவர்கள் செய்கின்ற பயிர் சாகுபடிகளுக்கு விளைச்சல் அதிகமாக கிடைக்கும் என்ற அற்புதமான கருத்தை சொன்னார்கள். அந்தக் கருத்தின்

அடிப்படையிலே, குடிமராமத்து என்ற திட்டத்தைப் உருவாக்குவதற்குக் காரணமாக இருந்த மாவட்டம் ஈரோடு மாவட்டம் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

நிலத்தடி நீர் தான் விவசாயிகளுக்குப் பிரதானம். ஒரு மனிதனுக்கு உயிர் எப்படியோ, அதுபோல நிலத்தடி நீர் இருக்கின்றது. நிலத்தடி நீரை உயர்த்தவேண்டுமென்பதற்காக, ஆங்காங்கே இருக்கின்ற ஒடைகள், ஆறுகளில், தடுப்பணை கட்டி பொழிகின்ற மழைநீரைத் தேக்கிவைப்பதற்காக, மூன்றாண்டுகளில் ரூபாய் 1000 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்த அரசு அம்மாவினுடைய அரசு.

இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்காலம்தான் விவசாயிகளுக்குப் பொற்காலமாக இருந்தது. 2011–2012ஆம் ஆண்டில், இரண்டாம் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2011ஆம் ஆண்டு முதல், 2016ஆம் ஆண்டு வரை, 4 முறை, 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்து, தமிழ்நாடு உயரிய சாதனை படைத்துள்ளது. இதற்காக, மத்திய அரசிடமிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகம் 4 முறை ‘கிரிஷி கர்மான்’ என்ற உயர்ந்த விருதைப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னை விவசாயிகள் பயன்பெற நீராபானம் தயாரிப்பதற்கும் அம்மாவினுடைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதன் மூலம் தென்னை விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தில், இன்றைக்குப் பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாக, 140 ஆண்டுக்காலத்தில் இல்லாத கடுமையான வறட்சி, தற்போது நிலவி வருகிறது! இதனால், அணைகள், ஏரிகள், குளங்களிலே போதிய நீர் இல்லை! குடிப்பதற்குக்கூட நீர் இல்லை; சில இடங்களில், 1,000 அடி ஆழத்திலும் தண்ணீர் கிடைப்பதில்லை! இந்த மாவட்டம் கால்வாய் பாய்கின்ற மாவட்டம். ஆகவே, பாசனம் பெறுகின்ற பகுதிகளில் எல்லாம் தென்னை மரங்கள் பட்டுப்போய் விட்டன. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, 2,247 கோடி ரூபாய் வழங்கிய அரசு, அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்!

அதேபோல, அப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சாகுபடி செய்த அந்தப் பயிர்களெல்லாம் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் காய்ந்து போய்விட்டன. அப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, அம்மாவினுடைய அரசு எடுத்து

வரும் தொடர் முயற்சியினால், 'புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்', காப்பீடு செய்த விவசாயிகளுக்கு 1,882 கோடி ரூபாய் பயிர்க் காப்பீட்டுத் தொகை இன்றைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எஞ்சியிருக்கின்ற விவசாயிகளுக்கும் அதனைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்திலே, இயற்கை மரணம் அடையும் விவசாயிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.10,000/-த்தில் இருந்து ரூ.20,000/-ஆக, இன்றைக்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித்தரத்தைக் கொண்டுதான் ஒரு நாட்டினுடைய வளர்ச்சி கணக்கிடப்படுகிறது. இன்றைக்கு அப்படிப்பட்ட வளர்ச்சி அம்மாவினுடைய ஆட்சியிலே பார்க்க முடிகின்றது. ஆகவே, இன்று அம்மாவினுடைய அரசு, பள்ளிக்கல்வித் துறைக்கு முன்னுரிமை கொடுத்து, 2017–2018ஆம் ஆண்டிற்கு, 26,932 கோடியே 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தனியார் பள்ளி மாணவர்களுக்கு நிகராக அரசுப் பள்ளி மாணவர்களும் கணினி அறிவு பெற, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 438 கோடி ரூபாய் செலவில், உயர் தொழில் நுட்ப கணினி ஆய்வகங்கள் தொடங்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 60 கோடி ரூபாய் செலவில், அறிவுத் திறன் வகுப்பறைகள் மற்றும் நடப்பாண்டில் 391 கோடி ரூபாய் செலவில், உள்கட்டமைப்பு வசதிகள் செய்ய அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பள்ளிக் கல்வித் துறையில், கடந்து ஆறாண்டுகளில், 39,412 ஆசிரியர் பணிநியமனங்களும், 4,362 ஆய்வக உதவியாளர் பணியிடங்களும் மற்றும் அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ், 15,169 பகுதிநேர ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு, கல்வித்தரம் உயர்த்தப்பட உதவிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்கள் வெகு தொலைவில் பள்ளிக்கு செல்வதை தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்தில் இதுவரை, 227 புதிய தொடக்கப்பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இப்படி பல்வேறு நலத்திட்டங்கள், பள்ளி மாணவர்களுக்கு அளித்ததன் விளைவாக, தொடக்க நிலை கல்வியில் மாணவர் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலை கல்வியில் மாணவர் சேர்க்கை 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளன. அதேபோல, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே, உயர்கல்வி படிக்கின்றவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் தம்முடைய ஆட்சியில், உயர்கல்விக்கு முக்கியத்துவம் அளித்து, ஆறாண்டு காலத்தில், 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். 2011ஆம் ஆண்டு, அம்மா

ஆட்சிப் பொறுப்பேற்கின்றபொழுது, 100க்கு 21 பேர் உயர்க்கல்வி படித்தார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே அதிக நிதி ஒதுக்கீடு செய்து, புரட்சி செய்த காரணத்தினால், தமிழகத்திலே இன்றைக்கு உயர்கல்வி படிப்பவர்கள் 100க்கு 44.3 ஆக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கக்கூடியவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்த மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை பெற்றுள்ளது. அதேபோல, அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசும் இந்த ஆண்டு 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றது. அதேபோல, கோபிசெட்டிப்பாளையத்தில் ஒரு கல்லூரி இந்த ஆண்டு திறக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தை எய்திட, அதேபோல, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழைக் குடும்பத்தினருக்கு 2015–2016ஆம் ஆண்டு முதல், நடப்பாண்டு வரை, 11,457 கோடி ரூபாய் செலவில், 3,27,717 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழகத்திலே ஏழை, எளியோருக்கு வீடுகள் இல்லை என்ற நிலையை, மாற்றியமைத்து அனைவருக்கும் வீடு கிடைத்திட அம்மாவினுடைய அரசு இன்றைக்கு ஒரு திட்டத்தை உருவாக்கி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், கோயம்புத்தூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு, ஈரோடு மாவட்டமாக உருவாக்கப்பட்டது. அவர் ஆட்சியின்போது இந்த மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தார். அதேபோல, இந்த ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உழைப்பாளிகள். பிரதானத் தொழிலாக இருப்பது விவசாயம், ஜவுளித் தொழில். ஆக, இரண்டு தொழில்களும் செழிக்க இந்த அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த ஈரோடு மாவட்டம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய கோட்டை, கோட்டை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான சோழநாடு பகுதியில் புறநகர் பஸ் நிலையம் அமைக்க அரசால் பரிசீலிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவினுடைய ஆட்சி தொடரவேண்டும். சிலபேர் இந்த ஆட்சிக்கு நெருக்கடி கொடுக்கப் பார்க்கின்றார்கள். அம்மாவின் ஆத்மா அவர்களைச் சும்மா விடாது. அவர்களின் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது. அனைத்திந்திய அண்ணா திராவிட கழகத்தில் ஒன்றரை கோடி தொண்டர்கள் இருக்கின்றார்கள். அத்தனைபேரும்

சிப்பாயாக இருக்கின்றார்கள். இது தொண்டர் பலம் இருக்கின்ற, வலிமை சேர்க்கின்ற இயக்கமாக இருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த எஃகு கோட்டையை எவராலும் அசைக்கவோ, அழிக்கவோ முடியாது என்பதையும் இந்த நேரத்திலே ஆணித்தரமாகப் பதிவு செய்கிறேன். இந்த, அம்மாவினுடைய அரசு மக்களுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கின்ற அரசாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி மிகச்சிறப்பாக பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஈரோட்டிலே, சீரும், சிறப்புமாக கொண்டாடுவதற்கு உறுதுணையாக இருந்து, இந்த மண்ணின் மைந்தராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களுக்கும், அதேபோல அவருக்கு உறுதுணையாக விளங்கிக் கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு கே.சி.கருப்பணன் அவர்களுக்கும் அவர்களோடு இணைந்து பணியாற்றியுள்ள மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் திரு கே.வி.இராமலிங்கம் அவர்களுக்கும், மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் திரு. தோப்பு என்.டி.வெங்கடாசலம் அவர்களுக்கும், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. வே.போ.சிவசுப்பிரமணி அவர்களுக்கும், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு கே.ஆர்.ராஜா அவர்களுக்கும், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சு.ஈஸ்வரன் அவர்களுக்கும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.தென்னரசு அவர்களுக்கும் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றிய அத்தனை கழக உடன்பிறப்புகளுக்கும், அரசு அலுவலர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்!

அறிவிப்புகள்

- தற்போது, பூனாட்சி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான அந்தியூர், கோனேரிப்பட்டி மற்றும் சென்னம்பட்டி ஆகிய இடங்களுக்கு 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையங்களிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. பூனாட்சியில் அமைந்துள்ள ஸ்பேக் குச்சி கிழங்கு மில் அருகில், மின் விநியோகத்தை மேம்படுத்தும் பொருட்டும் மற்றும் பெருகி வரும் மின் பளுவை கருத்தில் கொண்டும், பூனாட்சி கிராமத்தில் உள்ள, 1.22 ஏக்கர் நிலத்தில், ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்படும்.

- ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள சிக்கய்யநாயக்கர் கல்லூரியானது இந்த மாவட்டத்திலேயே முதன் முதலாக தொடங்கப்பட்ட மிகப் பழமையான கல்லூரியாகும். இக்கல்லூரியை அரசே ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

- ஈரோடு இரயில் நிலையத்திலிருந்து, ஆனைக்கல்பாளையம் ரிங் ரோடு வரையிலான சாலையில், கி.மீ 4/6 முதல் கி.மீ 8/2 வரை உள்ள சாலையை மையத்தடுப்புடன் கூடிய நான்கு வழிப் பாதையாக அகலப்படுத்தப்படும்.

- ஈரோடு மாவட்டத்தில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஒரு மாநகராட்சி, நான்கு நகராட்சி மற்றும் 42 பேரூராட்சிப் பகுதிகளில் 2015–2016 முதல், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் கட்டி வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், 7,500 வீடுகள் கட்ட, ஆணைகள் வழங்கப்படும்.

- அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பட்லூர், மாத்தூர் ஊராட்சிகளுக்கு ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பாட்டில் இருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை அபிவிருத்தி செய்து, மேற்படி ஊராட்சி பகுதியிலுள்ள 58 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, மயிலம்பாடி ஊராட்சி பயன் பெறும் வகையில், ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள வரதநல்லூர் மற்றும் 53 ஊராட்சி குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை அபிவிருத்தி செய்து மேற்படி ஊராட்சியைச் சேர்ந்த 54 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பாண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

- பர்கூர் மலையிலுள்ள மணியாச்சி பள்ளித்திலிருந்து, தண்ணீரை புனல் வழியாக, அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணைக்கு கொண்டு வருவதற்கு முதற்கட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- அந்தியூர் நகரத்தில் போக்குவரத்து நலன் கருதியும் பொதுமக்களில் பாதுகாப்பு கருதியும் வாகன ஓட்டிகள் சீராகச் செல்லவும், அந்தியூர் பிரதான சாலையில் மையத் தடுப்புச் சுவர் அமைக்கப்படும்.

- மக்கள் அனைவரும் உரிய காலத்தில் உயர் சிகிச்சை பெற ஏதுவாக, ஈரோட்டில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் உயர் சிகிச்சை பிரிவு, JICA நிதியுவியுடன் அமைக்கப்படும்.

- ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான மருத்துவக் கல்லூரியை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழுள்ள மருத்துவக் கல்வி இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்ற பரிசீலிக்கப்படும்.

- ஈரோட்டிலிருந்து, அக்ரஹாரம் பவானி சாலை உள்ளிட்ட தொப்பூர்– மேட்டூர் – பவானி சாலையை, நான்குவழிச்சாலையாக அகலப்படுத்த தேசிய

நெடுஞ்சாலை அலகில், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையை நான்குவழிச்சாலையாக அகலப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

❖ பவானி நகரத்திற்கு 8.184 கி.மீ நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும் நில எடுப்பிற்காகவும் ரூ.7.16 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்போது, நில ஆர்ஜிதம் செய்யும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. நில எடுப்புப் பணிகள் முடிவடைந்தவுடன், புறவழிச் சாலை அமைக்கப்படும்.

❖ அந்தியூர் – அம்மாப்பேட்டை சாலையில் 11 கி.மீ நீளச் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி, மத்திய சாலை நிதி திட்டத்தின்கீழ், ரூ.10 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

❖ கோபி முதல் சித்தோடு வரை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

❖ மேட்டுப்பாளையம் முதல் சத்தி வரையிலும், சத்தி முதல் அத்தானி வழியாக பவானி வரை உள்ள சாலையும் தேசிய நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்.

❖ பவானி–ஈரோடு–கரூர் சாலையினை, தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி மேம்படுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ ஈரோடு மாவட்டத்தின் முக்கிய பணப் பயிரான மஞ்சள், தற்போது கருமாண்டி செல்லிப்பாளையம், செம்மாம்பாளையம், ஈரோடு மற்றும் கோபிசெட்டிப்பாளையம் ஆகிய நான்கு இடங்களில், மறைமுக ஏல முறையின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இந்த மறைமுக ஏல முறையினை நவீனப்படுத்தும் விதமாக, 08.03.2017 முதல் மின்னணு முறை வணிகத்திற்கான மென்பொருள், சோதனை அடிப்படையில், பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலமாக நடைபெற்று வருகிறது. இந்த மின்னணு முறை வணிகம், மாவட்டத்திலுள்ள அனைத்து ஏல மையங்களையும் ஒரே மென்பொருளின்கீழ், ஒருங்கிணைத்து (Unified Market Platform), ஒரே நேரத்தில், மின்னணு ஏல முறையை நடைமுறைப்படுத்தி, காலை 9 மணி முதல் 11.30 மணி வரை (மின்னணு ஏல காலம்) ஏலம் நடத்திட, அரசு பரிசீலனை செய்யும்.

வீரமும் ஈரமும் கொண்ட வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆருக்கு விடுதலைக்கு வித்திட்ட வீரமண் வேலூரில் நூற்றாண்டு விழா

ரூ.600 கோடியில் தென் பெண்ணையாறு – பாலாறு இணைப்புத் திட்டம்!

இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பு ஏற்று தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! எழுச்சியுரை ஆற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! எழுச்சிமிகு நிகழ்ச்சியிலே சிறப்பான உரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! இந்த விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் திரு. கே.சி.வீரமணி அவர்களே! மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபில் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.இரா. வெங்கடேசன் அவர்களே! அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கோ.அரி அவர்களே! திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. ஆர்.வனரோஜா அவர்களே! அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சு.இரவி அவர்களே! கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.லோகநாதன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள வேலூர் மாவட்ட

ஆட்சித்தலைவர் திரு. சி.அ. ராமன் அவர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொதுவாழ்க்கையைப் பாராட்டி, பல காலங்களில் பல தலைவர்கள் சிறந்த பட்டங்களை வழங்கி அழைத்திருக்கிறார்கள்.

1958இல் முன்னாள் அமைச்சர் திரு. சி.சுப்பிரமணியன் அவர்கள், 'நடிக மன்னர்' என்றும்; 1964இல் நீதிபதி ராஜமன்னார் அவர்கள், 'கலை மன்னர்' என்றும், எழுத்தாளர் திரு. தமிழ்வாணன் அவர்கள் 'மக்கள் திலகம்' என்றும், 1960இல் நெல்லை மாவட்ட நகராட்சி மன்றம் 'வாத்தியார்' என்றும், விழுப்புரம் முத்தமிழ் மன்றத்தினர் 'கலை அரசர்' என்றும் இன்னும் இவைபோன்ற எத்தனையோ பட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கிடைத்திருந்தாலும் 'புரட்சித்தலைவர்' என்ற பட்டமும் 'பொன்மனச் செம்மல்' என்ற பட்டமே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகவும் பொருத்தமாக அமைந்துவிட்டன.

'பொன்மனச் செம்மல்' என்ற அந்த வரலாற்று சிறப்பு மிக்க பட்டத்தை வழங்கிய திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் வேலூர் மாவட்டத்தில் பிறந்தவர்.

அதனால்தான், வாரியார் பிறந்த இந்த மாவட்டத்திற்கு நன்றி பாராட்டும் விதமாக, 1981ஆம் ஆண்டு, மதுரைத் தமிழ்ச்சங்கம் தமக்கு வழங்கிய மீனாட்சி சுந்தரேஸ்வரர் சிலையை, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வேலூரில் உள்ள ஜலகண்டேஸ்வரர் கோயிலுக்கு அன்பளிப்பாக வழங்கி விட்டாரோ என எண்ணத் தோன்றுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திரைப்பட வாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும் எத்தனையோ வசனங்களைப் பேசியிருக்கலாம். அவற்றில் பல வசனங்கள் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கின்றன.

ஆனாலும் கழகத் தொண்டர்களை உற்சாகப்படுத்தக்கூடிய, கழகத் தலைவர்களை ஊக்கப்படுத்தக்கூடிய, ஒரு வசனம் இந்த வேலூரில்தான் அரங்கேறியது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, 1979இல் செப்டம்பர் 14ஆம் தேதி, அண்ணாவின் பிறந்த நாளுக்கு முந்தைய தினம் வேலூரில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியபோது, "அ.தி.மு.க.வின் கொடி இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு உயரத்தில் பறக்கும்" என்று முழங்கினார்கள். அது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் சரித்திர முழக்கம்!

அவரது முழக்கத்தை மெய்யாக்கும் வகையில், கழகத் தொண்டர்கள் நாம் அனைவரும் ஒன்றாக இருந்து, இந்த இயக்கத்தையும், அரசையும் கட்டிக் காக்கும் விதமாகச் செயல்பட வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உடன்பிறப்புகளாகிய கழகத் தொண்டர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

வீரமும் விவேகமும் செறிந்த வேலூர் மண்ணால்தான், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் இதயத்திலிருந்து இப்படிப்பட்ட ஒரு முழக்கத்தை வெளிக் கொண்டுவர முடியும். அதனால்.. அ.தி.மு.க.வின் வேதம் பிறந்த இடம் இந்த வேலூர் என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய விடுதலைக்கு வேராகத் திகழ்ந்த இந்த வேலூர் மண், வீரத்திருமகன்களைப் பெற்ற தியாகத் திருநகராகத் திகழ்வதை உலகம் அறியும். நாட்டுக்காக உழைத்த நல்லவர்களைப் போற்றும் பொன்மனம் கொண்ட தலைவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை இங்கே கொண்டாடுவது மிகப் பொருத்தமாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

தமிழில் ‘வேல்’ என்பது இந்து மதக்கடவுள் முருகனின் ஆயுதத்தைக் குறிக்கும் சொல். ஒரு பழங்குடியின வேட்டைக்காரனாக, தீய சக்திகளை அழிப்பதற்காக தாமரைக்குளத்தில் முருகக்கடவுள் வேலுடன் தோன்றிய ஊர் என்பதால் “வேலூர்” என்று மக்களால் அழைக்கப்படுகிறது.

வேலூர் என்றால் உடனே நம் நினைவுக்கு வருவது வேலூர் கோட்டைதான். 16ஆம் நூற்றாண்டில், விஜயநகர மன்னர்களின் பிரதிநிதியாக விளங்கிய சின்ன பொம்மு நாயக்கர் என்ற ஒரு சிற்றரசர்தான் இந்த பெரிய கோட்டையை கட்டியிருக்கிறார்.

அதன்பிறகு, ஆற்காடு நவாப், பிஜப்பூர் சுல்தான், மராட்டியர்கள், தில்லி சுல்தான், ஆங்கிலேயர்கள் என பலர் இந்தக் கோட்டையில் இருந்தபடி ஆண்டிருக்கிறார்கள்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த வேலூரை, இடைக்காலச் சோழர்கள், பிற்காலச்சோழர்கள், விஜயநகரப் பேரரசு, இராஷ்டிரகூடர்கள், பல்லவர்கள், முகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் ஆண்டிருக்கிறார்கள்.

1806–ஆம் ஆண்டு, இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் இந்த வேலூர் வீரத் திருமண்ணிலிருந்துதான், சிப்பாய்க் கலகமாகத் தொடங்கியது.

பிறகுதான், இந்தியா முழுவதும் சுதந்திரத் தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

வேலூர் கோட்டையிலிருந்த தென்னிந்திய சிப்பாய்கள் ஆங்கிலேயரின் அடக்குமுறைகளை எதிர்த்து, வெகுண்டெழுந்து நூற்றுக்கணக்கான ஆங்கிலேய அதிகாரிகளைக் கொன்று குவித்தனர். அதற்குப் பழி தீர்க்கும் வகையில், ஆங்கிலேயர்கள் நூற்றுக்கணக்கான இந்திய சிப்பாய்களைக் கொடூரமாகச் சுட்டுக் கொன்றனர்.

சுதந்திர வேள்விக்கான இந்த வேலூரில்தான் முதல் விதை விதைக்கப்பட்டது. இந்த வரலாற்று நிகழ்வின் நினைவாக, இந்திய அரசு 2006ஆம் ஆண்டு அஞ்சல்தலை வெளியிட்டு, வீர மரணம் அடைந்த வீரர்களையும் வீர மண்ணாகிய வேலூரையும் பெருமைப்படுத்தியுள்ளது.

சிப்பாய்க் கலகம் நடைபெற்ற ஜூலை மாதம் 10ஆம் நாளில், ஒவ்வொரு ஆண்டும் இங்கே அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூணுக்கு, மலர் வளையம் வைத்து மரியாதை செய்யப்படுகின்றது.

இந்தியா சுதந்திரம் அடைந்த 1947ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15ஆம் நாள், முதன்முதலில் செங்கோட்டையில் ஏற்றப்பட்ட மூவண்ணக் கொடி நெய்து அளித்த மாவட்டம் இந்த வேலூர் மாவட்டம் ஆகும்.

1866ஆம் ஆண்டு, நவம்பர் 12ஆம் நாள் உருவாக்கப்பட்ட வாலாஜா நகராட்சிதான் தமிழ்நாட்டின் முதல் நகராட்சியாகும்.

இந்த வேலூர் மண்ணிற்கு வந்தபிறகு, இங்கிருக்கும் கிறித்துவ மருத்துவக் கல்லூரி உருவான தியாக வரலாற்றை நினைவுகூறாமல் இருக்க முடியாது. 1870ஆம் ஆண்டு திண்டிவனத்தில், மருத்துவச் சேவை புரிந்து வந்த தனது தந்தையைப் பார்க்க அமெரிக்காவிலிருந்து வந்த 20 வயது இளம் நங்கை, ஐடா ஸ்கடர், இங்குள்ள பெண்கள், போதுமான மருத்துவ வசதியில்லாமல் அவதிப்படுவதைப் பார்த்து, வேதனைப்பட்டு, அமெரிக்கா திரும்பி மருத்துவம் பயின்று, ஏராளமான நிதி வசூலித்துக் கொண்டு மீண்டும் இந்தியா திரும்பி சிறியதாக உருவாக்கிய மருத்துவக் கல்லூரிதான் இன்றைய சி.எம்.சி.யாக, ஆசியாவிலேயே மிகப் பெரிய மருத்துவமனையாக வளர்ந்துள்ளது. இவர்தான் 1952ஆம் ஆண்டு, உலகின் தலைசிறந்த மருத்துவர்களில் ஒருவராக தேர்வு செய்யப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டார்.

அமெரிக்காவிலிருந்து வந்து, நம் நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்த தியாகச்செம்மல், ஐடா ஸ்கடர் அம்மையாரின் இதயமாக இயங்கிக் கொண்டிருக்கிற இந்த வேலூர் மருத்துவக் கல்லூரியின் வரலாற்றையும், அதன் அடிநாதமாக இருக்கின்ற ஐடா ஸ்கடர் அம்மையாரின் தியாகத்தையும் இன்றைய இளம் மருத்துவர்கள் ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வேலூர் வீரத்தின் விளைநிலம் மட்டுமன்று; அஃது ஆன்மிகமும் அறமும் கலந்த பூமியாகவும் திகழ்கிறது. பாலாறு ஓடும் இந்த வேலூர் மாவட்டம் விவசாயமும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளும் நிறைந்த மாவட்டம் ஆகும்.

நம் நாட்டில் ஏற்றுமதியாகும் தோல் பொருட்களில் 37 விழுக்காடு வேலூரில் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், 1898ஆம் ஆண்டு, வேலூரில் உள்ள ஊரிசுக் கல்லூரியில் கல்வி பயின்றார்.

இந்த ஊரிசுக் கல்லூரியில்தான், மிசோரம் மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் டாக்டர் ஆ.பத்மநாபன் அவர்கள் பயின்றார்கள். தமிழ் உலகம் போற்றும் தமிழறிஞர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள், வேலூர் மாவட்டத்திலுள்ள வேலம் என்ற ஊரில் பிறந்தவர்.

தமிழ் சினிமாவின் தந்தை எனப் போற்றப்படும் பி.நடராஜ முதலியார் அவர்கள், பிரபல பின்னணி பாடகி வாணி ஜெயராம், எத்திராஜ் கல்லூரி நிறுவனர் வி.எல். எத்திராஜ் ஆகியோர் இந்த மாவட்டத்தில் பிறந்தவர்கள் தாம்.

2014ஆம் ஆண்டு, காமன்வெல்த் விளையாட்டில், பளுதூக்கும் பிரிவில் தங்கம் வென்ற சதீஷ் சிவலிங்கம், வேலூரின் மைந்தரே! அவருக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 50 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள்.

இப்படி வேலூர் மாவட்டத்தின் பெருமைகளை சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனை பெருமைகளுக்கும் முத்தாய்ப்பாக இருப்பது வேலூர் மாவட்டத்தின் வீர வரலாறுதான்.. தியாகச் சீலர்களைப் போற்றும் பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவுகள் ஒன்றிரண்டை, உங்களோடு பகிர்ந்து கொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன்.

ஒரு நாட்டின் மீது இயல்பாகவே பற்று கொண்ட ஒரு தலைவரால்தான், தன்னலம் கருதாமல் நாட்டுக்காக உழைக்கும் மற்ற தலைவர்களை சிறப்பிக்க முடியும் என்பதற்கு,

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உதாரணமாகத் திகழ்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், நாடகத்தில் நடிக்கும்போது எதிர்காலத்தில் தாம் ஒரு மக்கள் தலைவராக மாறிவிடுவோம் என்று அறவே எண்ணியிருந்திருக்கமாட்டார்! ஆனாலும், 1957ஆம் ஆண்டு, திருச்சி தேவர் மன்றத்தில் எம்.ஜி.ஆர். நாடக மன்றத்தின் 'இன்பக் கனவு' நாடக அரங்கேற்ற விழா நடைபெற்றது.

இதில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலான, 'நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழில் ஒழுகும்' என்ற மனோன்மணியம் சுந்தரனார் அவர்களுடைய பாடலைத் தம் நாடகத்தில் முதன் முதலாகப் பயன்படுத்திக் காட்டினார் மக்கள் திலகம்.

இன்னொரு சம்பவத்தையும் இங்கே நான் நினைவுகூர விரும்புகின்றேன். சுதந்திரப் போராட்டத் தியாகி ஜீவானந்தம் வறுமையில் வாடுவதாக அறிந்து, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், யாருக்கும் எந்தவித முன்னறிவிப்பும் செய்யாமல், தாம்பரத்திலுள்ள தியாகி ஜீவானந்தம் அவர்களுடைய வீட்டிற்குச் செல்கிறார்.

மழைவெள்ளத்தால் மூழ்கியிருந்த மண்சாலைகளைக் கடந்து, தியாகி ஜீவானந்தம் குடியிருந்த குடிசைக்குள் நுழைந்து, தியாகி ஜீவானந்தத்தை சந்திக்கிறார். 'ஜீவா' இன்னும் எவ்வளவு நாள் இப்படி துயரப்படபோகிறீர்கள், ஒரு சிறிய வீடு கட்டிக் கொள்ளலாமே! என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கூறவே, "எல்லாருக்கும் வீடு வரும் போது நானும் வீடு வாங்கிக் கொள்கிறேன்" என்கிறார் தியாகி ஜீவா.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தியாகி ஜீவாவைப் பிடிவாதமாக சம்மதிக்க வைக்கிறார். அப்போது தியாகி ஜீவா கூறுகிறார்.

'நகம் முளைத்த நாள் முதலாய் உள்ளங்கால் வெள்ளெலும்பு தேய்ந்ததுதான் மிச்சம். ஜெயில், இல்லையேல் இரயில் என்றாகி விட்டது. எனக்கென்று ஒரு வீடு கட்ட வேண்டும் என்று இந்த நாட்டில் எவராவது நினைத்தார்களா? அந்த எண்ணம் எம்.ஜி.ஆர். ஒருவருக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது' என்று உணர்ச்சிபடப் பேசினார்.

எனக்காக வேண்டாம், நான் படித்த புத்தகங்களைப் பாதுகாக்க, ஒரு பாதுகாப்பான வீடு போதும் என்று கூறவே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தியாகி ஜீவானந்தம் அவர்களுக்குத் தாம்பரத்தில் வீடு கட்டிக் கொடுத்தார்.

ஜீவானந்தம் அவர்கள் ஒரு மாற்றுக் கட்சிக்காரர் என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு காலமும் நினைக்கவில்லை. தம் வாழ்நாள் முழுவதும் நாட்டுக்காக உழைக்கும் ஒரு தியாகச் சீலர். அதனையே தியாகி ஜீவா அவர்களின் அடையாளமாகக் கொண்டுதான், அவருக்கு உதவி செய்தார். திரு. ஜீவானந்தம் அவர்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

கட்டித் தந்த வீடு, இன்றும் தாம்பரத்தில் அந்த இருபெரும் தலைவர்களையும் நினைவுப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இன்னொரு சம்பவத்தையும் இங்கே நினைவு கூர விரும்புகின்றேன். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்தபோது, தமிழக அரசு,தியாகி கக்கன் அவர்களுக்கு இலவச வீடும், பேருந்தில் செல்ல இலவசப் பயணச்சீட்டும், இலவச மருத்துவ சிகிச்சையும் மாதம் ரூ.500/– ஓய்வு ஊதியமும் கொடுத்தார். 1980ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மதுரையிலுள்ள அரசு மருத்துவமனையில் இருந்த தியாகி கக்கனுக்கு, தனியறை வசதியும், தகுந்த உயர்தர மருத்துவமும் கிடைக்க அப்போதே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

இப்படி நம் தாய்த் திருநாட்டிற்காக உழைத்த மாமனிதர்களை, தாம் நடிகராக இருந்தபோதும் சரி; முதலமைச்சராக இருந்தபோதும் சரி; ஓடோடிச் சென்று ஆதரித்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்!

வெள்ளையர் ஆட்சிக்கு எதிராகப் போராடி சுதந்திரம் பெற்ற நோக்கமே, ஏற்றத் தாழ்வுகள் நீங்கி, “எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என்ற அடிப்படையில் சுதந்திரமாக இருப்பதற்குத்தான். சுதந்திர தினமான ஆகஸ்ட் 15–ஆம் தேதி, வேறுபாடு இல்லாமல் அனைவரும் சமமாக அமர்ந்து சாப்பிடும் வகையில், தமிழகத்தில் கோயில்களில் சமபந்தி விருந்தை அறிவித்து, அதனைச் செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

20ஆம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உருவாக்கிய இந்தக் கட்சியின் கொடி, அவர் இதே மண்ணில் கூறியதைப் போலவே, இன்னும் ஆயிரம் ஆண்டுகள் உயர்ந்து பறக்கும் என்பதை ஒவ்வொரு கழகத் தொண்டனும் உணர்ந்து உழைக்க வேண்டும்.

அதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் மாண்புமிகு அம்மாவின் அரசில் செயல்படுத்துகின்ற திட்டங்கள் அனைத்தையும் சமுதாயத்தில் கடைகோடியில் இருக்கின்ற மக்கள் வரை கொண்டு சேர்க்க வேண்டும்.

அதுதான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், நீங்கள் காட்டுகின்ற நன்றிக் கடனாக நான் நினைக்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 7 ஆயிரத்து 754 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 33 ஆயிரத்து 440 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், 2 ஆயிரத்து 786 கோடியே

12 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 511 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம், 10 ஆயிரத்து 540 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 39 ஆயிரத்து 951 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடக்கும் இந்த அரசு, நீங்கள் எல்லோரும் மகிழும்படியான நலத் திட்டங்களை இந்த விழாவில் தரவிருக்கிறது.

இன்று, 66 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 61 கட்டடங்களைத் திறந்து வைத்துள்ளேன். மேலும் மாவட்ட இளைஞர்களின் மேம்பாட்டிற்கென, வாணியம்பாடியில் ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையத்தையும் திறந்து வைத்துள்ளேன்.

ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் சார்பில், 12 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டப்பட உள்ள 8 கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்று, இந்த மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில், 34,170 பயனாளிகளுக்கு 275 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நலத் திட்ட உதவிகள் வழங்கியுள்ளேன்.

இந்த அரசு, கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த சாதனைகளைச் சொல்வதென்றால் நாட்கள் போதாது. ஆயினும், நேரம் கருதி ஒரு சிலவற்றை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய விவசாயக் கடன், 333 கோடியே 95 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், இம்மாவட்டத்தில், 79,318 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

மகசூல் பாதித்த 12,809 விவசாயிகளுக்கு, 4 கோடியே 28 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. காவல் துறையின் சார்பில், 56 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.

12 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பாலங்கள் மற்றும் சாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. குடிமராமத்து திட்டத்தின்கீழ், வேலூர் மாவட்டத்தில், 34 ஏரிகள், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக, 63 ஏரிகள், 12 கோடி ரூபாய் செலவில் புனரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேலூர் மாவட்டத்தில் உள்ள 401 ஏரிகளிலிருந்து, 4.48 இலட்சம் கன மீட்டர் வண்டல் மண் எடுத்து, 5,179 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். பொதுப்பணித் துறை சார்பில், 37 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில், 75 ஏரிகள், 3 அணைக்கட்டுகள் மற்றும் 107.24 கி.மீ. நீர்வரத்து வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு

மின்பகிர்மான கழகத்தின் சார்பில், 51 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தின் சார்பில், 156 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 7 மின் விரிவாக்கத் திட்டம், 45 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த, பணிகள் துவக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 743 கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த 6,109 குக்கிராமங்களில், 217 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12 ஆயிரத்து 295 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், 351 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்கு, சூரிய மின் சக்தியுடன் கூடிய 20 ஆயிரத்து 544 பசுமை வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன மற்றும் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 324 கோடி ரூபாய் செலவில், 29 ஆயிரத்து 577 வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.

சுமார் 235 கோடி ரூபாய் செலவில் வேலூர் மாநகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மத்திய/மாநில அரசின் பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 2019ல் இப்பணிகள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

சுமார் 51 கோடி ரூபாய் செலவில் ஆம்பூர் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மத்திய/மாநில அரசின் பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றன.

ஜூன் 2019ல், இப்பணிகள் முடிக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். வேலூர் மாவட்டம் ஆம்பூர் நகராட்சியில், 250 கோடி ரூபாய் செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

14 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் வேலூர் மாவட்டத்தில் 2 புதிய பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், கஜல்நாயக்கன்பட்டி மற்றும் ஆட்டுப்பாக்கத்திலும் தொடங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழி நடக்கும் இந்த ஆட்சியிலும், வேலூர் மாவட்டத்திற்குப் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை வழங்கியிருக்கிறோம்.

அவற்றையெல்லாம் முழுமையாக கூற வேண்டுமென்றால் இன்றைய நாள் போதாது. இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம், இத்தனை காலம் இதற்கு முன்னால் ஆண்ட கட்சிகள் செயல்படுத்தி இருக்கிறதா என்பதை ஒப்பிட்டுப் பார்த்தால் மக்களுக்குத் தெரியும்.

எட்டாத கனிக்கு, ஏப்பம் விடுபவர்கள், ஆசையை மட்டும் மனதில் வளர்த்துக் கொள்வதால், எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. “வானத்தை வில்லாக வளைப்பேன்! பூமியைப் பந்தாக உதைப்பேன்! கடலை ஒரே மூச்சில் குடிப்பேன்!” என்றெல்லாம் வாய் ஜம்பம் பேசிக்கொண்டிருப்பவர்களை இந்த உலகம் ஏற்றுக் கொள்ளாது.

பேச்சைக் குறைத்துக் கொண்டு, செயலில் இறங்கியிருக்கும் எங்களைப் பார்த்தாவது அவர்கள் திருந்தவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதைக் கூறுகிறபோது, கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. சரியாக நடக்கக் கூட தெரியாத ஆமை ஒன்று, தரையில் வேகமாக ஓடும் விலங்குகளையும், வானத்தில் சுதந்திரமாக பறக்கும் பறவைகளையும் கண்டு, பொறாமைப்பட்டு, தன்னால் இப்படி இருக்க முடியவில்லையே என எப்போதும் புலம்பிக் கொண்டே இருக்கும்.

ஒருநாள், அந்த ஆமை ஒரு ஏரிக்கரையில் படுத்துக் கொண்டு, காற்று வாங்கிக் கொண்டிருந்தது. அப்போது வானத்தில் வட்டமடித்துக் கொண்டிருந்த கழுகை செய்கையால் அழைத்து, தன் ஆசையைப் பற்றிக் கூறி புலம்பியது. "ஆமையே, புலம்புவதை நிறுத்து, உன் ஆசையை – நான் இப்போது நிறைவேற்றுகிறேன்", என்றபடி அருகில் கிடந்த மூங்கில் தடியை எடுத்து வந்து, "ஆமையே இதன் ஒரு முனையை நீ வாயால் கவ்விப் பிடித்துக்கொள், மறுமுனையை நான் கவ்விப் பிடித்துக்கொண்டு வானத்தில் பறப்போம். அப்போது நீ வானமண்டலம் முழுவதையும் சுற்றிப் பார்க்கலாம்", என்று கழுகு கூறியது.

இதைக் கேட்ட ஆமைக்கு பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. கழுகு கூறியது போலவே மூங்கிலின் ஒரு முனையை ஆமை பிடித்துக் கொண்டு, கழுகுடன் வானத்தில் பறக்க ஆரம்பித்தது. மேலே, மேலே உயரமாக பறக்க வேண்டுமெண்டுமென்று ஆசைப்பட்ட ஆமைக்கு, ஒரு கட்டத்தில் வானவெளியில் இருக்கும் சந்திரனுக்கும் செல்ல வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது.

தான் மூங்கிலை கவ்விப் பிடித்திருக்கிறோம் என்பதை மறந்து, தன் ஆசையை கழுகிடம் கூறுவதற்காக வாயைப் பிளந்தது. அவ்வளவுதான், ஆமை வானத்திலிருந்து பூமியை நோக்கி அந்தரத்தில் விழுந்து கொண்டிருந்தது. ஆமை கழுகை நோக்கி, "என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று!" எனக் கதறியது.

"ஆமையே, நீ உன் தகுதியை மீறி, இருப்பதை விட்டு பறப்பதற்கு ஆசைபட்டால், இந்த கதிதான் ஏற்படும். இந்த உண்மையை நீ கீழே விழுந்து பிழைத்துக் கொண்டால், மற்ற உயிரினங்களிடமும் கூறு" என்றபடி, கழுகு பறந்து விட்டது. இந்தக் கதையில் வருவதைப் போல, தன் தகுதிக்கு மேல் ஆசைபடுபவர்களுக்கும், பேராசை பிடித்து பதவிக்கு அலைபவர்களுக்கும் ஆமைக்கு நேர்ந்த கதி தான் ஏற்படும்.

தமிழகத்திலே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 16 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியைத் தந்தார்கள். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 11 ஆண்டுகாலம் சிறந்த ஆட்சியை தமிழகத்திற்குத் தந்தார்கள். தமிழகத்திலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் இருபெரும் தலைவர்கள், 27 ஆண்டுகாலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்து பல்வேறு திட்டங்களை,

ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியிலே இருக்கின்ற மக்களுக்கு வாரி வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசும், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அரசும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். இருபெரும்தலைவர்களும் விட்டுச்சென்ற பணியை, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டு வருகின்றது. இதை பொறுத்துக்கொள்ள முடியாத சிலபேர் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கின்றார்கள், ஏதேதோ புலம்பிக்கொண்டிருக்கின்றார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான், எண்ணிலடங்காத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றோம். கிராமத்திலே ஒரு பசுமைப் புரட்சி ஏற்படுகிறதென்று சொன்னால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைதான் காரணம். விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்த அரசு, அம்மாவினுடைய அரசு! அப்படிப்பட்ட அம்மாவினுடைய அரசைத் தொடர்ந்து இயக்கிவருவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருப்பது தமிழ்நாடு என்பதை, இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியாவிலேயே, தொழில் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதிலும், ஏற்றுமதி செய்வதிலும் முன்னணி மாநிலமாகத் திகழ்வது தமிழகம். தொடர்ந்து, தொழில் துறையில் முதலீட்டாளர்கள் விரும்பும் முன்னணி மாநிலமாக உள்ளது தமிழகம். புரட்சித்தலைவி அம்மா ஆட்சி செய்த காலத்தில், தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி, 2016இல், இந்தியாவிலேயே, தமிழகத்தை மூன்றாவது இடத்திற்கு உயர்த்திய தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மாநிலத்தினுடைய

பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சியை மையமாகக் கொண்டுள்ளது. அப்படிப்பட்ட வளர்ச்சி கண்ட மாநிலம் தமிழ்நாடு அந்தப் பெருமைக்குரியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்!

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து, முதன்முறையாக, தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில்தான், உலக முதலீட்டாளர் மாநாடு 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 தேதிகளில் சென்னையில் நடைபெற்றது. இதில் 1,200 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், 5,000 இந்தியப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். ஒன்பது நாடுகள் கூட்டாளர்களாக இருந்து பணியாற்றினார்கள். இந்த மாநாட்டில், 2,42,160 கோடி ரூபாய் மதிப்பிலான, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அம்மா இருக்கின்றபொழுது போடப்பட்டன என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த 98 ஒப்பந்தங்களின் மூலமாக, ரூபாய் 62,838 கோடி மதிப்பீட்டில், 61 திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை, 76 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள், நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மீதமுள்ள ஒப்பந்தங்களைத் துரிதப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொழில் துறையில், ஒரு நாடு முன்னேற வித்திட்டு, அதன் அடித்தளமாக விளங்கிய முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாம்!

விவசாயிகள் பயனடைய வேண்டும் என்பதற்காக, அம்மாவினுடைய அரசு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தைத் தொடங்கி, விவசாயிகள் பங்களிப்போடு, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகளில் உள்ள வண்டல் மண்ணை, விவசாயிகள் இலவசமாக எடுத்து, தங்கள் நிலங்களுக்கு இட்டு அதிக மகசூலைப் பெருக்குவதற்கு, அம்மாவினுடைய அரசு, திட்டமிட்டு 1,519 ஏரிகளைத் தூர்வாரும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பணிகள் நிறைவுபெறவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலமாகத் தூர்வாரப்படுவதால், இந்தப் பகுதியிலே பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை, ஏரிகள், குளங்கள், குட்டைகளில் அதிக அளவில் சேமிக்க இயலும். நிலத்தடி நீர் உயர்வதால், விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படுகின்றது. இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்யவேண்டுமென்ற கோரிக்கைகளை ஏற்று, மேலும், ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில், கிட்டத்தட்ட, 2,065 ஏரிகள் இத்திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை, மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நிலத்தடி நீரைச் செறிவூட்டவும், ஆறுகள் மற்றும் ஏரிகளிலிருந்து தண்ணீரைக் கொண்டு செல்லவும், புதிய தடுப்பணைகள், நிலத்தடி கீழ் தடுப்புச் சுவர்கள் மற்றும் அணைக்கட்டுகள், ஆகியவை ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில், 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ளன. நடப்பாண்டில், ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில்,

தடுப்பணைகள் கட்டப்பட்டு, நிலத்தடிநீர் உயர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2011–2012ஆம் ஆண்டில், இரண்டாம் 'பசுமைப் புரட்சி' அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2011ஆம் ஆண்டு முதல், 2016ஆம் ஆண்டு வரை, நான்கு முறை, 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்து, தமிழ்நாடு உயரிய சாதனை படைத்துள்ளது. இதற்கென, மத்திய அரசிடமிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகம் நான்கு முறை, “கிருஷி கர்மான்” விருதினைப் பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வேலூர் மாவட்டத்தைப்போல, தமிழ்நாடு முழுவதும் கடுமையான வறட்சி. பருவமழை பொழியாததன் காரணமாக, நிலத்தடி நீர் 1,000 அடி ஆழத்திற்கும் கீழ்ச் சென்றதால், தமிழகத்தில் 140 ஆண்டுகாலம் இல்லாத வறட்சியின் காரணமாக, விவசாயிகள், விவசாயம் செய்யமுடியாத ஒரு சூழ்நிலை. பயிர் சாகுபடி செய்த அந்த பயிர்களெல்லாம் தண்ணீர் இல்லாமல் வறண்டு, கருகிவிட்டன. அப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு இடுபொருள் மானியமாக ரூபாய் 2,247 கோடி, நிவாரணம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், இயற்கை மரணம் அடையும் விவசாயிகளின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூபாய் 10,000/-லிருந்து ரூபாய் 20,000/-மாக உயர்த்தி வழங்கிய அரசு, அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, கல்வியிலே ஒரு புரட்சியையும், ஒரு மறுமலர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக, என்றைக்கும் இல்லாத அளவிற்கு கல்விக்காக, 2017–2018–ஆம் ஆண்டிற்கு, ரூபாய் 26,932 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது. அனைத்துத் துறைகளைக்காட்டிலும், கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு முன்னோடி மாநிலமாகத் திகழ்வது, தமிழகம் தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தனியார் பள்ளி மாணவர்களுக்கு நிகராக, அரசுப் பள்ளி மாணவர்களும் கணினி அறிவு பெற, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், ரூபாய் 438 கோடி செலவில் உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகங்கள் தொடங்கவும் மற்றும் நடுநிலை பள்ளிகளுக்கு ரூபாய் 60 கோடி செலவில் அறிவுத் திறன் வகுப்பறைகள் மற்றும் நடப்பாண்டில் ரூபாய் 391 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்யவும் நடவடிக்கை ஏற்படுத்தப்படும். பள்ளிக் கல்வித் துறையில், கடந்த ஆறாண்டுகளில், 39,412 ஆசிரியர் பணிநியமனங்களும், 4,362 ஆய்வக உதவியாளர் பணியிடங்களும் அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ், 15,169 பகுதிநேர ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் வெகு தொலைவில் பள்ளிக்குச் செல்வதைத் தவிர்க்கும் பொருட்டு, தமிழகத்தில் இதுவரை 227 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, இந்தியாவில் மட்டுமல்ல, வல்லரசு நாடுகளில்கூட இல்லாத அளவிற்கு, அரசுப் பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற ஏழை மாணவர்களுக்கு ரூபாய் 14,000 மதிப்பு கொண்ட மடிக்கணினி வழங்கப்பட்டு அறிவுப்பூர்வமான கல்வியை, இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு, நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விஞ்ஞானக் கல்வி கொடுக்க வேண்டும், தமிழகத்தை விஞ்ஞான மாநிலமாக உருவாக்க வேண்டுமென்பதற்காக மடிக்கணினியை அளித்தார்கள்.

இப்படிப் பல்வேறு நலத்திட்டங்களைப் பள்ளி மாணவர்களுக்கு அளித்ததன் விளைவாக, தொடக்கநிலைக் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலைக் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. ஆகவே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கல்வியிலே செய்த புரட்சி, சாதனை, தீட்டிய மறுமலர்ச்சித் திட்டங்கள் ஆகியவை மாணவ சமுதாயத்திற்கு வலிமை சேர்த்ததின் விளைவாக, மாணவர்களுடைய சேர்க்கை விகிதம் உயர்ந்திருக்கிறது.

ஏழை, எளிய, வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள் எல்லாம் இன்றைக்கு உயர்கல்விக்குச் செல்ல வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆறாண்டுக் காலத்திலே, 65 கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். அதேபோல, அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசும், இந்த ஆண்டு 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்து, ஏழை, எளிய, வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே கல்வி கற்பதற்கு சிறந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அதுமட்டுமல்ல, இந்தப் பகுதியிலே, தென்பெண்ணையாறு, பாலாறு இணைப்புத் திட்டம் ரூபாய் 660 கோடி மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்த, மத்திய அரசிடம் ஒப்புதல் பெற, அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இன்னும் குறுகிய காலத்தில், தென்பெண்ணையாறு, பாலாறு இணைப்பு திட்டத்தை நிறைவேற்றி, இந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான நீரினை வழங்குவதற்கு, அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, வேலூர் மாவட்டம் வறண்ட மாவட்டமாகக் காட்சியளிக்கின்றது. ஆகவே இந்த வறண்ட மாவட்டத்தினை, பசுமையான மாவட்டமாக மாற்றுவதற்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நீர் கிடைப்பதற்கு,

வேளாண்பெருமக்கள் என்றென்றைக்கும் வேளாண் தொழில் சிறந்து விளங்குவதற்கு, வேலூர் மாவட்டத்திற்கு, பசுமை புரட்சியை உருவாக்கிடும் விதமாக, கோதாவரி, கிருஷ்ணா, பாலாறு இணைப்புத் திட்டம் உருவாக்குவதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்பதனைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அறிவிப்புகள்

❖ மேட்டூர் அருகே, காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, வேலூர் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சிகள் மற்றும் 4,917 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் தேவையினை முழுமையாகத் தீர்க்கும் வகையில், திருவண்ணாமலை – வேலூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், வேலூர் மாவட்டத்திலுள்ள 21 இலட்சத்து 47 ஆயிரம் மக்களும், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 25 இலட்சத்து 91 ஆயிரம் மக்களும், மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 2 இலட்சத்து 70 ஆயிரத்து 458 மக்களும் பயன் பெறுவார்கள்.

❖ வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டத்தில் அமைந்துள்ள ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்க அணை, சுற்றுலாப் பயணிகளும், பொது மக்களும் கண்டு களித்து இன்புறும் வகையில், சுற்றுலாத் தலமாக மேம்பாடு செய்யப்படும். இது தொடர்பான பணிகள், இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ மாதனூர் ஒன்றியம் பாலூரில் புதியதாக திறக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு, ‘புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி’ என பெயர் சூட்டப்படும்.

❖ அரக்கோணம் மற்றும் நெமிலி ஆகிய இரு வட்டங்களையும் இணைத்து அரக்கோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய வருவாய்க் கோட்டத்தை உருவாக்க வேண்டும் என்று அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். இரவி அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார். இக்கோரிக்கையை, அரசு கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே, தமிழ்நாடு வெடிமருந்துத் தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்களது கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு சில சலுகைகளை அறிவித்துள்ளது. ஜனவரி 2017 முதல், ஆகஸ்ட் 2017 வரை உள்ள சம்பள நிலுவைத் தொகையை, விதிகளுக்கு உட்பட்டு மிகவிரைவில் வழங்கும்.

தற்சமயம், மாற்றுப் பணியில், 60 தொழிலாளர்களுக்குப் பணிமாற்றம் அரசு பொது நிறுவனங்களில் செய்யப்பட்டுள்ளது. மேலும், மாற்றுப் பணியில் செல்ல விருப்பம் உள்ள மற்ற தொழிலாளர்களுக்கும், மாற்றுப் பணியில் அரசு பொது நிறுவனங்களில் தொடர்ந்து பணி வழங்கப்படும்.

பணிக்கொடை சட்டத்தின் அடிப்படையில் மீதமுள்ள தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் முழுமையான பணிக்கொடை, ஈட்டிய விடுப்புக்கான பணத்தொகை மற்றும் வருங்கால வைப்புநிதித் தொகை வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டு விழா, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நாம் எடுக்கின்ற நன்றி விழாவாக இருக்கும்.

இன்றைக்கு வேலூரில் நடைபெறும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா, மக்கள் வெள்ளம் நிறைந்த கூட்டமாக காட்சியளிக்கிறது.

இந்த நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் அன்று; ஒரு மாநாடு போல காட்சியளிக்கிறது என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விழாவினை சிறப்பாக நடத்திட ஏற்பாடு செய்த மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களுக்கும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நீலோபர் கபில் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.அரி அவர்களுக்கும், திருமதி வனரோஜா அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இரவி அவர்களுக்கும், லோகநாதன் அவர்களுக்கும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவினை முடித்து, வாகனத்தில் செல்பவர்கள் பத்திரமாக செல்ல வேண்டும் என்ற வேண்டுகோளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு உங்களின் சேவகனாகத் தொடர்ந்து பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

இந்த விழாவினைச் சிறப்பாக நடத்திட ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றும் அரசு அலுவலர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
09.09.2017 அன்று, வேலூரில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

தர்மம் தலைகாக்கும் என்ற பொன்மொழியின் புகழ் உருவம், பொன்மனச் செம்மலுக்கு நாமக்கல்லில் நூற்றாண்டு விழா

தர்மத்தின் மறுபெயர் புரட்சித்தலைவர்!

நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இதயத்தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சுவைத்தால் இனிக்கும் கொல்லிமலைத் தேனையும் நினைத்தாலே இனிக்கும் கொங்கு தமிழையும் கொண்ட நாமக்கல் மாவட்டத்தில், சீரும் சிறப்புமாக நடைபெறும் மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு, பாசத்திற்குரிய மக்களாகிய உங்களை நேரில் கண்டு நலத்திட்டங்களை வழங்குவதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்களே! மாண்புமிகு சமூகநலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வெ. சரோஜா அவர்களே! வரவேற்புரையாற்றிய தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே! வாழ்த்துரை வழங்கிய நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களே!

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.செல்வக்குமார சின்னையன் அவர்களே! நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு.கே.பி.பி.பாஸ்கர் அவர்களே! சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.சந்திரசேகரன் அவர்களே! திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பொன்.சரஸ்வதி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.ஆசியா மரியம் அவர்களே! இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நாமக்கல் மாவட்டம், பல்வேறு பெருமைகளைத் தாங்கி உழைப்பால் உயர்ந்த உன்னத மாவட்டமாக திகழ்கிறது. உயரமான நாமகிரி குன்றும், அதன் உச்சியில் தலையாக விளங்கும் கோட்டையும், குகைக்கோயிலும், கோயிலுக்கு முன்னால் விசுவரூபம் எடுத்து நின்று அருள்பாலிக்கும் ஆஞ்சநேயரும், இராமலிங்கம்பிள்ளையின் நறுக்கான கவிதைகளும், நாமக்கல் மாவட்டத்தின் பெருமைகளைக் கூறும் அடையாளங்களாகத் திகழ்கின்றன.

'நாமகிரி' என்று அழைக்கப்பட்ட மிகப்பெரிய ஒற்றைப் பாறையைக் கொண்டுதான் 'நாமக்கல்' என்ற பெயர் உருவாகியிருக்கிறது. இந்தப் பாறையில் அமைந்துள்ள கோட்டையைக் கட்டியவர் இராமச்சந்திர நாயக்கர் ஆவார்.

12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அரப்பளீஸ்வரர் ஆலயமும், ஆகாச கங்கை அருவியும், கொல்லிமலையின் அழகை அதிகப்படுத்துகின்றன கடையேழு வள்ளல்களில் ஒருவரான "ஓரி" மன்னர் இந்த கொல்லிமலையை ஆண்டிருக்கிறார்.

சித்தர்களாலும், பக்தர்களாலும் சூழப்பட்ட நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில், கொங்கு நாட்டிலுள்ள 7 சிவஸ்தலங்களில் ஒன்று.

இனிக்க இனிக்கப் பேசி எல்லோரையும் கவர்ந்த மூத்த தமிழறிஞர் கி.வ. ஜகந்நாதன் பிறந்த மோகனூர் இந்த நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்தது.

நாமக்கல் என்றால், கொல்லிமலை எப்படி நினைவுக்கு வருமோ, அதைப்போல.. கோழி முட்டை உற்பத்தியும் நினைவுக்கு வரும்.

முட்டை உற்பத்தியில் நாமக்கல் மாவட்டம் இந்தியாவில் இரண்டாம் இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த முட்டை உற்பத்தியில் நாமக்கல் மாவட்டம் 90 விழுக்காட்டை பூர்த்தி செய்கிறது. அதனால்தான் நாமக்கல்லை.. 'முட்டை நகரம்' என்று அழைக்கிறார்கள்.

மலைகளாலும், குன்றுகளாலும் சூழப்பட்ட நாமக்கல் மாவட்டத்தில், விவசாயத்தை மட்டுமே நம்பியிராமல், கோழிப் பண்ணைகளை, தொழிற் சாலைகளைப் போல் அமைத்து, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகிறார்கள். அதைப் போன்றே, ஆழ்துளைக் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் (Rigs) இந்த மாவட்டத்தில் தான் மிக அதிகமாக உள்ளன.

அடுத்தது நாமக்கல் என்று சொன்னால் லாரி தான் நினைவுக்கு வரும். லாரி இல்லாத வீடே இல்லை. ஆகவே, பிரதான தொழிலாக இருப்பது லாரி தொழில். கிட்டத்தட்ட, 60,000 லாரிகள் நாமக்கல்லில் இருக்கிறது. ஆகவே, இது தொழில்வளம் மிக்க மாவட்டம் என்பதை நினைவுகூற விரும்புகிறேன்.

இருக்கும் இயற்கை வளங்களைக் கொண்டு, கடின உழைப்பாலும், தொழில் முனைவோரின் புதிய முயற்சியாலும், முன்னேற்றப் பாதையில் நாட்டைக் கொண்டு செல்வதில் இம்மாவட்ட மக்களுக்கு நிகர் அவர்களே. இச்சிறப்புகளைக் கொண்ட உங்களைச் சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

இந்த நாமக்கல் மண்ணில் உங்கள் எதிரே நின்று பேசும் போது.. 1985ஆம் ஆண்டு இதே நாமக்கல்லில் நடந்ததாக சொல்லப்பட்ட ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமது துணைவியார் திருமதி ஜானகி அம்மாள் அவர்களுடன் ஒரு சட்டமன்ற உறுப்பினரின் திருமணத்திற்கு வந்திருந்தபோது, திருமண வீட்டு வாசலில் ஒரு கழகத் தொண்டர் தனக்கும் புரட்சித்தலைவர் அவர்கள் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று கையில் தாலியுடன் பிடிவாதமாக நின்றிருக்கிறார்.

திருமண வீட்டு வாசலில் வந்திறங்கிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் இந்தத் தகவலை அப்போதைய அமைச்சர் திரு.முத்துசாமி அவர்கள் கூறியிருக்கிறார்.

அந்த தொண்டரை உடனே வரச்சொல்லி, அந்த தொண்டரின் திருமணத்தையும் அதே மேடையில் நடத்தி வைத்தார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

சட்டமன்ற உறுப்பினர் தம்பதிக்குக் கொண்டு வந்திருந்த இரண்டு பரிசுகளில், ஒன்றை அந்தத் தொண்டரின் தம்பதிக்கு வழங்கினார்கள்.

அதை வாங்க மறுத்த தொண்டன், ‘வேண்டாம் தலைவரே!’ நீங்கள் தாலி எடுத்துக் கொடுத்ததே எனக்கு விலை மதிப்பற்ற பரிசு, அது போதும்’ என்கின்றார். அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், ‘எனக்கு நீயும் ஒன்றுதான், இந்த சட்டமன்ற உறுப்பினரும் ஒன்றுதான்’ என்று சொல்லி பரிசை வழங்கியிருக்கிறார்கள்.

நாமக்கல் மாவட்ட கழகத் தொண்டர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மீதும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மீதும் மிகுந்த பாசம் வைத்திருந்தார்கள். இன்றும் அவர்கள் பாசம் மாறாமல் அப்படியேதான் இருக்கிறார்கள் என்பதை இக்கூட்டத்தின் வாயிலாக நான் உணர்கிறேன்.

பேறறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்ட ஒரு பொதுக்கூட்டத்தில் நடந்த ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது.

பேறறிஞர் அண்ணா அவர்கள், கையை ஊன்றிக் கொண்டு மேடையில் பேசுவதற்கு வசதியாக, ஒரு சிறிய மேசை போட்டிருந்தார்கள். அது அவர்களுடைய முகத்தை மறைப்பதாக எதிரே இருந்த தொண்டர்கள் தெரிவிக்கவே, மேடையில் இருந்த ஒரு தொண்டர் ஓடிப்போய் ஒரு கள்ளிப்பெட்டியை அண்ணா அவர்களின் காலடியில் போட்டார்.

அந்தப் பெட்டியில் ஏறிய பேறறிஞர் அண்ணா அவர்கள், ஒலிபெருக்கியில் எதிரே இருந்தவர்களைப் பார்த்து, ‘இப்போது, நான் உயர்ந்து விட்டேனா?’ என்றதும் தொண்டர்கள் ‘ஆமாம்’ என்றார்கள்.

“தொண்டர்களால் உயர்ந்தவன் நான்” என்று பேறறிஞர் அண்ணா பேச்சைத் தொடங்கிய போது, கூட்டம் கைதட்டி வாழ்த்தியது. எனவே, அ.தி.மு.க. தொண்டர்கள் கழகத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் என்பதை பல சந்தர்ப்பங்களில் நிரூபித்திருக்கிறார்கள். அதனால்தான் எந்த சக்தியாலும் இந்த கோட்டையை நெருங்க முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நரிகள் ஊளையிட்டு நாமக்கல் மலை விழுந்து விடாது. நயவஞ்சக எண்ணம் கொண்டவர்களால் இந்த அரசை அசைக்க முடியாது. எங்கள் வலிமையும், உங்கள் வலிமையும், தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக போராடுபவர்களை வீழ்த்தும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டாகக் கொண்டு மாநிலம் முழுவதும் சென்று பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசைக் குறை கூறுபவர்கள், காலத்தின் சக்கரத்தில் சிக்கி அழிவார்கள்!

சுயநலம்.. சுயநலம்.. சுயநலம் மட்டும்தான் அவர்களின் வாழ்க்கை என்றாகி விட்டபிறகு, மக்கள் நலம் பற்றி அவர்கள் நினைப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறு!

இந்தக் கழகம், 1½ கோடி தொண்டர்களின் இதயங்களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு எஃகு கோட்டை. இந்த எஃகு கோட்டைக்குள் அந்நிய எறும்புகூட நுழைந்துவிட முடியாது. தீய சக்திகள் இந்தக் கோட்டையை ஒன்றும் செய்துவிடமுடியாது. அ.இ.அ.தி.மு.க. தர்மத்தால் கட்டமைக்கப்பட்ட ஓர் இயக்கம்.

தந்தை பெரியாரை “தொண்டு செய்த பழுத்த பழம்” என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியதைப் போல, தர்மம் செய்து, வள்ளல் என்று பெயரெடுத்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வளர்த்த இயக்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம்.

எனவேதான், ‘செய்த தர்மம் தலைகாக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்! கூட இருந்தே குழி பறித்தாலும், கொடுத்தது காத்து நிற்கும்!” என்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தர்மத்தின் பயனை உலகுக்குச் சொன்னார்கள்.

தர்மத்தின் மறுபெயர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஒருவர்தாம் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழமாக பதிந்திருந்ததை ஒரு சம்பவத்தின் மூலம் கூறினால் உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று கருதுகிறேன்.

நகைச்சுவை நடிகர்கள் திரு.நாகேஷ் அவர்களும் திரு.பாலாஜி அவர்களும் ஒரு படப்பிடிப்பிற்காகக் காரில் சேலம் போய்க் கொண்டிருந்தார்கள் தண்ணீர் தாகம் எடுத்தது. சாலை ஓரம் இருந்த ஒரு குடிசை வீட்டில் காரை நிறுத்தி, அங்கிருந்த ஒரு பாட்டியிடம் தண்ணீர் கேட்டார்கள். பாட்டி ஒரு செம்பு நிறையத் தண்ணீர் கொடுக்க, தாகம் தீர்த்துக் கொண்டு, திரு. பாலாஜி அவர்கள் அந்த பாட்டிக்கு நூறு ரூபாய் பணத்தை அன்பளிப்பாகக் கொடுத்திருக்கிறார். அப்போது 100 ரூபாய் பெரிய பணம்.

ஆச்சரியத்துடன் அந்த பணத்தை திருப்பி திருப்பி பார்த்த அந்தப் பாட்டி, கடைசியில் திரு.பாலாஜியைப் பார்த்து என்ன சொன்னார் தெரியுமா ?

‘மகராசன், எங்கள் எம்.ஜி.ஆர். வாழ்க’ என்று கையை தலைமேல் தூக்கி வணங்கினார். எம்.ஜி.ஆர். என்ற ஒரு மனிதன் மட்டும்தான் முன்பின் தெரியாத ஏழை எளியவர்களுக்கு தர்மம் செய்வார், என்ற கருத்து மக்கள் மனதில் அழிக்க முடியாமல் பதிந்திருந்தது.

அதனால்தான் தர்மம் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் நம் மக்களுக்கு அவர்கள் எல்லோருமே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். – ராகவே தெரிந்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழியில் வந்த நாங்களும் நீங்களும் நல்லவர்கள்தான் என்பதை உலகம் உணர்ந்துள்ளது.

அரசு செயல்படுத்தும் திட்டங்களால் ஏழை, எளியோர் முழுமையாகப் பலனடைய வேண்டும் என்று எண்ணியவர்கள் நமது தலைவர்களான மாண்புமிகு புரட்சித்தலைவர்

எம்.ஜி.ஆர். அவர்களும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும். அதைத்தான், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு தீட்டும் திட்டங்களும், நீதி, நேர்மை தர்மத்தின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.

இப்போது இந்த இனிய விழாவில் கூட, அத்தகைய சிறப்பான திட்டங்களை உங்களுக்கு வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இன்று, 382 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கட்டப்பட்டுள்ள 32 பணிகளை நான் தொடங்கி வைத்துள்ளேன்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில் 103 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 8 பணிகள், 185 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நாமக்கல் நகராட்சி மற்றும் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு, காவிரியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் உட்பட 332 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 36 பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்று இந்த மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில், 29 ஆயிரத்து 39 பயனாளிகளுக்கு, 188 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், நலத் திட்ட உதவிகள் வழங்க உள்ளேன்.இந்த அரசு, கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த சாதனைகளை சொல்வதென்றால் நாட்கள் போதாது.

ஆயினும், நேரம் கருதி, நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் ஒரு சிலவற்றை பற்றி மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய விவசாயக் கடன் 231 கோடியே 69 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம், 46 ஆயிரத்து 628 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

2 இலட்சத்து 40 ஆயிரத்து 521 விவசாயிகளுக்கு, ஆயிரத்து 346 கோடியே 59 இலட்சம் ரூபாய் பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் பாதித்த ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 759 விவசாயிகளுக்கு, 57 கோடியே 16 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகத்தின் சார்பில், 151 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

பள்ளிக்கல்வித் துறை சார்பில், 64 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 44 ஆயிரத்து 229 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளது.

‘டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்கீழ், 89 ஆயிரத்து 177 கர்ப்பிணி தாய்மார்களுக்கு, 79 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

நாமக்கல், திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம், இராசிபுரம் ஆகிய நகராட்சிகளில் 594 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலைத் துறை, சார்பில் 673 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஆயிரத்து 502 கிலோமீட்டர் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையின்கீழ், 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 6 ஆயிரத்து 903 பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

‘இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்’தின் கீழ், 136 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 11 ஆயிரத்து 371 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

‘தாய்’ திட்டத்தின் கீழ், 114 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6 ஆயிரத்து 351 பணிகள் எடுக்கப்பட்டு, 6 ஆயிரத்து 147 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

குடிமராமத்து திட்டத்தின்கீழ், 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 13 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பாரதப் பிரதமரின் ‘அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்’தின்கீழ், 236 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 7 ஆயிரத்து 820 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 33 ஆயிரத்து 501 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், 2 ஆயிரத்து 798 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 519 பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியும் உள்ளது.

ஆக மொத்தம், 10 ஆயிரத்து 618 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 40 ஆயிரத்து 20 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரை உலகத்திலும் சரி! அரசியல் உலகத்திலும் சரி! இந்த நூற்றாண்டு விழாவின் நாயகன், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப்போல் ஒரு மனிதரை, இனி நாம் காண்பது அரிது. ஆனால், அவர் செய்த தொண்டுகள், தர்மங்கள் அனைத்தும் இப்போதும், எப்போதும் நம் கண் முன்னால் நிற்கும்.

அத்தகைய தொண்டுகளை மக்கள் மனத்திலிருந்து அகற்ற பலர் முயற்சிக்கலாம். அந்த முயற்சி, ஒரு காலமும் வெற்றி அடையாது. வாழையடி வாழையாக, இந்த இயக்கம் வளர்ந்து கொண்டேயிருக்கும்!

இந்தக் கழகத்தில் மட்டும்தான், தொண்டர்களும் தலைவர்களாக முடியும். அதற்குத் தேவை, உண்மை, உழைப்பு, தன்னம்பிக்கை. இதைக் கூறுகிறபோது கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு நாட்டை ஒரு மகாராஜா மிகச் சிறப்பாக ஆண்டு வந்தார். எழை, எளிய மக்களுக்கெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுத்து, வறுமை இல்லாத நாடாகத் தம் நாட்டை வழிநடத்திய அந்த மகாராஜாவிற்கு ஒரு கவலை இருந்தது.

அவருக்கு வாரிசுகள் கிடையாது. தனக்குப் பின்னால், இந்த நாட்டையும் நல் ஆட்சியையும் யாரிடம் ஒப்படைக்கப்போவது என்கிற கவலை அந்த மன்னரை ஆட்டிப் படைத்தது. வெகுநாள் யோசித்து, அந்த மகாராஜா ஒரு திட்டத்தை வகுத்தார். அடுத்த நாள் மக்களிடையே ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த நாட்டை எனக்குப் பின்னால் ஆட்சி செய்ய வருபவர்கள் தங்கள் பெயரை அரண்மனையில் வந்து பதிவு செய்யலாம் என்றார். அப்படிப் பதிவு செய்பவருக்கு மன்னனாக முடிசூட்டப்படும் என்றார்.

அவர் ஐந்து வருடம் இந்த நாட்டை ஆட்சி செய்யலாம். ஆனால், சரியாக ஐந்து வருடம் நிறைவுற்றவுடன் அவர் இந்த நாட்டுக்கு வெளியே இருக்கக்கூடிய தனித்தீவில் கொண்டு போய் இறக்கி விடப்படுவார். அங்கே, மிக பயங்கரமான விலங்குகளும், விஷம் கொண்ட பாம்புகளும், உயிரைப் பறிக்கும் சுனைகளும் இருக்கின்றன.

அங்கே கொண்டு போய் இறக்கிவிடப்படும் அவர்கள், அந்தத் தீவுக்கு இரையாக வேண்டி வரும் என்று மகாராஜா அறிவித்தார். இதென்னடா வம்பு என்று மன்னராவதற்கு ஆசைப்பட்டவர்களும், பயத்தில் அஞ்சி ஒதுங்கிக் கொண்டனர்.

ஓரிருவர் மட்டும் ஐந்தாண்டு காலம் மன்னனாக இருக்கிறபோதே மகாராஜாவின் மனசை மாற்றிவிடலாம் என்று நினைத்து முடிசூட்டிக் கொள்ள முன்வந்தனர். ஐந்தாண்டுக் காலம் அரசாட்சி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் மகாராஜாவை மனம் மாற்றிட எவ்வளவோ யோசித்தார்கள்.

ஆனால், அது நடக்கவில்லை. ஐந்தாண்டுக் காலம் நிறைவுற்றதும், அந்த மன்னர் ஒரு தனிப்படகில் ஏற்றப்படுவதும், தொலைவில் உள்ள பயங்கரமான அந்த தீவில் கொண்டுபோய் அவர் தள்ளிவிடப்பட்டு, கொடிய விலங்குகளுக்கு இரையாவதும் வாடிக்கையாகிப் போனது.

இவ்வாறு இருக்கையில், அடுத்தடுத்த காலங்களில் மகாராஜா வைத்த சோதனைக்கு ஒருவரும் முன்வரவில்லை.

ஆனால், ஒரு இளைஞன் மட்டும் மகிழ்ச்சியோடு வந்து, நாட்டின் தலைமை பீடத்தை ஏற்றான். ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்தான்.

அவன் ஒருநாள்கூட தனக்கு மன்னனாகும் வாய்ப்பைத் தந்த மகாராஜாவைப் போய் பார்க்கவில்லை. என்னை தீவுக்கு அனுப்பி விடாதீர்கள் என்று ஒரு நாளும் விண்ணப்பம் வைத்ததும் இல்லை, கெஞ்சியதும் இல்லை.

நல்ல மன்னன், நல்ல நிர்வாகி என்ற பெயரைப் பெற்றான். ஐந்தாம் ஆண்டு நிறைவுறும் காலம் வந்தபோது, மக்களெல்லாம் கவலையடையத் தொடங்கினர். ஒரு வழியாய் ஐந்தாண்டு காலம் நிறைவடைந்ததும், அந்த மன்னனும் தனிப்படகிலே ஏற்றப்பட்டான்.

நாட்டு மக்களெல்லாம் துயரத்தில் கண்ணீர் வடித்தனர். ஆனால், படகில் ஏற்றப்பட்ட மன்னனோ, பதற்றப்படுவதற்கு மாறாக, மகிழ்ச்சியாகக் காணப்பட்டான். சிரித்துக் கொண்டே இருந்தான்.

மகாராஜாவுக்கு ஒரு சந்தேகம் வந்தது. ஐந்து வருடம் மன்னனாக மகிழ்ச்சியோடு வலம் வந்தவர்கள், தீவுக்குப் புறப்படுகிறபோது, தேம்பித், தேம்பி அழுவதைப் பார்த்திருக்கிறேன்.

ஆனால், இவன் மட்டும் சிரித்துக் கொண்டே புறப்படுகிறானே என்று ஐயப்பட்ட மகாராஜா, அதை அவனிடமே கேட்கலாம் என்று படகில் அமர்ந்திருந்த, மன்னனைப் பார்த்து "உனக்குப் பயமாய் இல்லையா? அரண்மனை வசதிகளோடு, ஆயிரமாயிரம் ஆட்சிப் பணியாளர்களோடு, செங்கோல் செலுத்திய நீ, கொடிய விலங்குகளின் கோரப்பசிக்கு இரையாகப் போவதை நினைத்து, வருத்தப்படவில்லையா?" என்று கேட்டார்.

அதற்கு, அந்த மன்னன் "இல்லை மகாராஜா, எனது இந்த ஐந்தாண்டு கால ஆட்சியில், நான் நமது நாட்டை மட்டுமல்ல, கொடிய விலங்குகள் இருந்த அந்தத் தீவையே பண்படுத்தி, அங்கும் கோட்டைகள் கட்டி, விளைநிலங்களாக அவற்றை பண்படுத்தி, அங்கும் உழைப்பாளிகளை கொண்டுபோய் குடியமர்த்தி, இந்த ஐந்தாண்டு காலத்தில் நமது நாட்டோடு சேர்த்து, அந்த தீவையும் மக்கள் வசிப்பதற்கு ஏற்ற மாட மாளிகையோடு கூடிய அழகிய குட்டி நகரமாக நான் மாற்றி விட்டேன்.

அதனால், இப்போது நான் அங்கு சென்றாலும், இங்கு செய்து வந்த சேவையை தொடரத்தான் போகிறேன்" என்று சொல்ல, அந்த மகாராஜா ஓடிவந்து, அந்த மன்னரை கட்டி அணைத்து, ஆனந்த கண்ணீரால் ஆசீர்வாதம் செய்தார்.

உன்னைப்போன்ற ஒரு சாதுர்யமான சேவையாளரிடம்தான் இந்த நாட்டை ஒப்படைக்க நான் காத்திருந்தேன். அது நிறைவேறிவிட்டது என்று சொல்லி மகிழ்ந்தார்.

ஆம், தொண்டு நோக்கம் என்பது தூய்மையானதாகவும், விவேகம் நிறைந்ததாகவும் இருந்து விட்டால், எதனை நினைத்தும், யாரை நினைத்தும் அச்சப்பட அவசியமில்லை.

நமக்குத் தண்டனை என்று நினைத்து, பிறர் செய்யக்கூடிய தீங்குகளைக் கூட நமக்கான வாய்ப்புகளாக மாற்றி விட முடியும்.

நம்மை நோக்கி வீசப்படும் கற்களை கூட, நமக்கான படிக்கட்டுகளாக மாற்றிக் காட்ட முடியும் என்பதை, இந்த உழைப்பாளர் பூமியில் இருந்து தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

முன்னோர்கள், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்று சொன்னார்கள், அதை நிறைவேற்றிய இருவர், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தாம். பேரறிஞர் அண்ணா கண்ட கனவை, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடர்ந்தார், அதற்குப்பிறகு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தினார். ஆனால், இயற்கை, அம்மாவை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. இருந்தாலும், இருபெரும் தலைவர்கள் கண்ட கனவை ஒவ்வொன்றாக, இந்த அரசால் நிறைவேற்றப்படும் என்பதை, நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருபெரும் தலைவாகள் செய்த சாதனைகள் எண்ணிலடங்காதவை. எத்தனையோ முதலமைச்சர்கள் ஆண்டிருக்கலாம். ஆனால், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில்தான், எண்ணற்ற திட்டங்களை, இந்த நாட்டு மக்களுக்கு அள்ளி, அள்ளிக் கொடுத்தார்கள். அவர்கள் செய்த சாதனைகள் ஏராளம். அதன் காரணமாகத்தான் இன்றைக்குத் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்களை எண்ணிப் பார்க்க வேண்டும். குடும்ப ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. மக்களைப் பற்றி சிந்திப்பதற்கே நேரம் கிடையாது. அவர்கள் தம் குடும்பத்தைப் பற்றித்தான் சிந்திப்பார்கள். மத்தியிலே ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் ஆதரவைபெற்ற கட்சி அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாம் விரும்பும் துறைகளையும் பெற்று அமைச்சராக முடியும். வேறு எவரும் ஆக முடியாது! அவர் மட்டுமல்ல, அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களும் அப்படித்தான்! வாரிசு அரசியல்தான் அங்கே இருக்கும்! ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்தபோது, கீழே அமர்ந்திருக்கின்ற தொண்டன்கூட, இந்த அரியணையிலே அமரக்கூடிய சாதனையைச் செய்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஒரு சாதாரண தொண்டன்கூட உயர்ந்த நிலைக்கு வரமுடியும் என்ற ஏற்பாட்டைச் செய்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். உழைப்பவருக்கு இடம் கொடுத்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இந்த இயக்கத்திலே உண்மையாக, விசுவாசமாக இருந்தவர்களைத்தாம், எந்தப் பதவியும் தானாகத் தேடிவரும் என்ற நிலைப்பாட்டை புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டினார்கள். ஆகவே, அப்பேர்பட்ட ஆட்சியை, எனக்கு முன் துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் குறிப்பிட்டார்கள், ஒரு சிலர் புறப்பட்டுவிட்டார்கள், இந்த ஆட்சியைக் கலைத்து விடலாம், இந்தக் கட்சியைக் கைப்பற்றி விடலாம் என்று கனவு காண்கின்றார்கள். அவர்கள் காண்பதெல்லாம் பகல் கனவு. அது ஒருக்காலும் முடியாது. இங்கே அமர்ந்திருக்கின்ற தொண்டர்கள் இருக்கும்வரை, இந்த இயக்கத்தை தொட்டுக்கூடப் பார்க்க முடியாது. ஆகவே, இந்த ஆட்சியையும், கட்சியையும் கட்டிக்காத்து, ஓர் அரணாகக் காப்பவர்கள் இங்கே இருக்கின்ற தொண்டர்கள். இவர்கள், ஒரு சிலரைப்போல எட்டப்பர்கள் அல்ல. இவர்கள் உடலில் ஓடுகின்ற இரத்தம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இரத்தம்! ஒரு சொட்டு இரத்தம் இருக்கின்றவரை, இந்த ஆட்சியையும், கட்சியையும் கட்டிக்காப்பார்கள். நாமும் நம்புவது, இங்கே அமர்ந்திருக்கின்ற பொதுமக்களையும், தொண்டர்களையும்தாம்!

ஆனால், ஒரு சிலர் திமுக–வை நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆட்சியைக் கலைத்துவிடலாம், கட்சியை உடைத்துவிடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு, சேராதவர்களோடு சேர்ந்திருக்கின்றார்கள். பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், யார் தீய சக்தி, யாரோடு சேரக்கூடாது என்று எண்ணினார்களோ,

அவர்களோடு போய்ச் சேர்ந்திருக்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு இந்த கட்சி, ஆட்சியைப் பற்றிக் கவலையில்லை. ஏனென்றால், இதயத்தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே, அவர்களை நீக்கி வைத்திருந்தார்கள்! அதற்கு இந்த இயக்கத்தின் மீதோ அல்லது இந்த கட்சியின் மீதோ பற்று, பாசம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. அதை நாம் நினைப்பது சரியில்லை. அவர்கள் எண்ணமும் அப்படித்தான் இருக்கும். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம், ஆண்டவன் தக்க தண்டனை கொடுப்பான்! ஆண்டவன் என்பது, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் !

இந்த ஆட்சி எத்தனை நாள் இருக்குமென்று சிலர் பேசினார்கள். இந்த ஆட்சி ஏற்பட்டபொழுது, முதன்முதலில், பட்ஜெட் கூட்டம் வரை இந்த ஆட்சி தாக்குப்பிடிக்குமா என்று பேசினார்கள். பட்ஜெட் கூட்டம் சிறப்பாக முடிந்தது. அதற்குப்பிறகு, மானியக் கோரிக்கையை முழுமையாக நிறைவேற்றுவார்களா ? அல்லது இடையிலே சென்று விடுவார்களா ? என்று சந்தேகத்தை எழுப்பி மக்களைக் குழப்பினார்கள். அதுவும் சிறப்பாக நடந்து முடிந்தது. அதற்குப் பிறகு, இப்பொழுது இந்த ஆட்சி மோசமான ஆட்சி என்று பேசுகின்றார்கள். இந்த ஆட்சியில் என்ன குறை கண்டுபிடித்தீர்கள், சொல்லுங்கள். மக்களுக்குத் தேவையான திட்டங்கள் அனைத்தும் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் செய்யாத திட்டங்களையெல்லாம் நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

குடிமராமத்து என்னும் திட்டம் விவசாயிகளின் கனவுத் திட்டம். இந்த நாமக்கல் மாவட்டம், விவசாயமும் தொழிலும் நிறைந்த மாவட்டம். இரவு, பகல் பாராமல் விவசாயிகள், இரத்தத்தை மண்ணிலே சிந்தி உழைக்கின்ற மாவட்டம் இந்த நாமக்கல் மாவட்டம். இந்த மாவட்டத்தில் விவசாயம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா கண்ட கனவை நனவாக்க வேண்டுமென்பதற்காக, குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தைத், தொடங்கி, அதனை விவசாயிகள் பங்களிப்போடு, நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முதற்கட்டமாக, ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, 1,519 ஏரிகளில் உள்ள வண்டல் மண்ணை, விவசாயிகள் இலவசமாக எடுத்து, தங்கள் நிலங்களுக்கு இட்டு, அதிக மகசூலைப் பெருக்குவதற்கு அம்மாவினுடைய அரசு மேற்கொண்டுள்ள பணிகள் நிறைவுபெறவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலமாக தூர்வாரப்படுவதால், இந்தப் பகுதியிலே பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை, ஏரிகள், குளங்கள், குட்டைகளில் அதிக அளவில் சேமிக்க இயலும். நிலத்தடி நீர் உயர்வதால், விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படுகின்றது. இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை, இந்த அரசு நிறைவேற்றியிருக்கின்றது. இதில் என்ன குறை கண்டீர்கள் ? தேடித்தேடிப் பார்த்தார்கள், ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏதாவது ஒரு போராட்டத்தை அறிவித்து, அதன் மூலமாக இந்த ஆட்சிக்கு இடையூறு கொடுக்க வேண்டும், ஒரு

குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். ஒருபோதும் அது நடக்காது.

இந்த நாமக்கல் மாவட்டம், கல்வி மாவட்டம். கல்லூரிகள் நிறைந்த மாவட்டம். வேறு எந்த மாவட்டத்திலும் இவ்வளவு கல்லூரிகளோ, பள்ளிகளோ கிடையாது. தமிழகத்திலுள்ள மாணவர்கள் எல்லாம் இங்கே வந்துதான் படிக்கின்றார்கள். அப்படிக் கல்வி நிறைந்த, சிறந்த மாவட்டமாக விளங்குவதற்கு, மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏராளமான திட்டங்களை வாரி, வாரி வழங்கினார்கள். இன்றைக்கு ஏழை மாணவன்கூட, உயர்ந்த கல்வி பெறமுடியும். ஏழை மாணவர்களுக்கு, ரூபாய் 14,000 மதிப்பு கொண்ட மடிக்கணினி வழங்கப்பட்டு அறிவுப்பூர்வமான கல்வியை இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில், எந்த மாநிலத்திலும் கிடையாது, உலகளவில்கூட கிடையாது, வல்லரசு நாட்டில்கூட அளிக்கப்படவில்லை. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு, நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விஞ்ஞானக் கல்வி கொடுக்க வேண்டும், தமிழகத்தை விஞ்ஞான மாநிலமாக உருவாக்க வேண்டுமென்பதற்காக மடிக்கணினியை அளித்தார்கள். இந்த நூற்றாண்டு அல்ல, அடுத்த நூற்றாண்டு வந்தாலும், பெயர் சொல்கின்ற திட்டம் இந்தத் திட்டம் என்பதை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவினுடைய ஆட்சியில்தான், ஆறாண்டுகளில் 39,412 ஆசிரியர் பணிநியமனங்களும், 4,362 ஆய்வக உதவியாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின்கீழ் 15,169 பகுதிநேர ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏழை, எளிய மாணவர்கள் உயர்கல்வி கற்க, ஆறாண்டுக் காலத்திலே, 65 கல்லூரிகளை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி கற்கக்கூடிய நிலை, தமிழகத்தில்தான் இருக்கின்றது! வேறு எந்த ஆட்சியிலும், மாநிலத்திலும் இவ்வளவு கல்லூரிகள் தொடங்கப்பட்ட வரலாறு கிடையாது !

அதேபோல, அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசும், இந்த ஆண்டு 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்து, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, சமூகத்திலே பொருளாதாரத்தில் பின்தங்கிய வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்பதற்குச் சிறந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பில் ஏறியபோது, உயர்கல்விப் படிப்புப் படிப்பவர்கள் எண்ணிக்கை 21 சதவீதமாக இருந்ததை, அவர்களின் முயற்சி, புரட்சியின் காரணமாக, 44.32

சதவீதமாக உயர்த்தியதால் இந்திய அளவிலேயே, இன்று உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை தமிழகத்திலே அதிகரித்திருக்கின்றது!

2011–2012ஆம் ஆண்டில் இரண்டாம் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை, நான்கு முறை, 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்து, தமிழ்நாடு உயரிய சாதனை படைத்துள்ளது! இதற்கென, மத்திய அரசிடமிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகம் நான்கு முறை "கிருஷி கர்மான்" விருதினைப் பெற்றுள்ளது என்பதை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2011இல் அம்மா அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது, கடுமையான மின்பற்றாக்குறை இருந்ததை, "நான் ஆட்சிப்பொறுப்பேற்று, மூன்றாண்டு காலத்தில் தமிழகத்தை மின்வெட்டு இல்லாத மாநிலமாக மாற்றிக்காட்டுவேன்!" என்று சூளுரைத்து, மின்வெட்டில்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டினார்கள். இதனால், தொழில்வளம் பெருகும். சமூகப் பொருளாதாரம் உயர்வடைவதற்கு அம்மா எடுத்த நடவடிக்கைதான் காரணம் என்பதை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பாரதப் பிரதமர் அவர்கள், தமிழகத்தில் ஜப்பான் நாட்டு உதவியுடன் தொழில் நகரம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்திருக்கின்றார்கள். "மத்திய அரசுக்குக் கூஜா தூக்குகின்றார், மத்தியிலே அடிமையாகிவிட்டார்கள்!" என்றெல்லாம் பேசுகின்றார்கள். நாங்கள் அடிமையாகவுமில்லை; கூஜா தூக்கவுமில்லை! மத்திய அரசோடு இணக்கமாக இருக்கின்றோம்! அவ்வாறு இருந்தால்தான், தமிழகத்திற்குத் தேவையான திட்டங்கள் கிடைக்கும். நாம் போடுகின்ற திட்டங்களுக்கு அனுமதி கிடைக்க வேண்டும், தேவையான நிதி கிடைக்க வேண்டுமென்பதற்காக, மத்திய அரசோடு இணக்கமாக இருந்து வருகிறோம். அந்த அடிப்படையிலே, தமிழக அரசு, மத்திய அரசோடு இணக்கமாக இருக்கின்றது. அதன் காரணமாகத்தான், நம்முடைய ஏழை, எளியோருக்கு வீடு கட்டுவதற்கு மத்திய அரசும், மாநில அரசும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. அதன் வாயிலாக, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் மறைந்த அப்துல்கலாம் அவர்கள் நினைவிடத்தைத் திறப்பதற்காக, இராமேஸ்வரம் வந்திருந்தபொழுது, தமிழக அரசுக்கு எவ்வளவு, எத்தனை இலட்சம் வீடுகள் வேண்டுமானாலும் வழங்கி ஏழைகளுக்கு உதவுவேன் என்று சொன்னார்கள்.

அதேபோல், தமிழகம் தொழில் நகரமாக மாறி, படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கின்றோம். அம்மா அவர்கள் கொடுத்த வாக்கினை நிறைவேற்ற, நாங்கள் பாரதப் பிரதமரிடத்தில் கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று, தமிழகத்தில் தொழில் நகரம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை தந்திருக்கின்றார்கள்.

இவையெல்லாம் சாதனைகள் அல்லவா ? நீங்கள் என்ன செய்தீர்கள் ? 14 ஆண்டுகாலம் மத்தியிலே ஆட்சி, அதிகாரத்திலே இருந்தீர்கள், பாரதீய ஜனதா கட்சியோடு முதலில் கூட்டணி வைத்தீர்கள், வலுவான, வளமான இலாக்காக்களை எல்லாம் கேட்டுபெற்றீர்கள். தமிழ்நாட்டிற்கு என்ன செய்தீர்கள் ? எதுவும் செய்யவில்லை. பேரன் அமைச்சராக வேண்டும், மகன் அமைச்சராக வேண்டுமென்றுதான் நினைத்தீர்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று நினைத்துப் பார்த்தீர்களா ? நினைத்துப் பார்க்கவில்லை. அதற்குப்பிறகு, வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தது, அங்கேயும் சென்று கூட்டுச் சேர்ந்து 14 ஆண்டுகாலம், மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தீர்கள். காவிரி நதிநீர்ப் பிரச்சினை, காவிரி மேலாண்மை வாரியம், முல்லைப்பெரியாறு, பாலாறு நதிநீர்ப் பிரச்சினை பற்றிப் பேசினீர்களா ? எதற்காவது நடவடிக்கை எடுத்தீர்களா ? முயற்சி செய்தீர்களா ? எதுவும் செய்யவில்லை ! தன்னுடைய குடும்பம் வளமாக இருந்தால்போதும் என்றுதானே நினைத்தீர்கள். ஆனால், நாம் அப்படியல்ல, தமிழகம் வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போட வேண்டும், தமிழக மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை மத்திய அரசுக்குத் தெரிவித்து அதைப் பெறுகின்ற அரசு அம்மாவினுடைய அரசென்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கின்றேன். உங்களைப்போல் மத்தியிலே ஆட்சி, அதிகாரத்திலே இருந்திருந்தால் தமிழகத்தை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியிருப்போம். புதிய, புதிய தொழிற்சாலையை ஏற்படுத்தியிருப்போம். தமிழகம் வளமிக்க பூமியாக மாற்றப்பட்டிருக்கும். ஆனால், அந்த வாய்ப்பு எங்கள் இயக்கத்திற்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும், இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங்களைக் கொண்டு வருவதற்கு முயற்சி மேற்கொள்வோம் என்பதை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் நிறைய திட்டங்களை நிறைவேற்றி இருக்கின்றோம்.

திருச்செங்கோடு என்றால் Rigs ஞாபகத்திற்கு வரும். அங்கு Rigs தொழில் அதிகமாக உள்ளது.

நாமக்கல் என்றால் முட்டை மற்றும் லாரி ஞாபகத்திற்கு வரும். ராசிபுரம் என்றால் ‘சேகோ’ தொழிற்சாலைகள் ஞாபகத்திற்கு வரும். ஜவ்வரிசி தயாரிக்கின்ற ஆலைகள் அதிகமாக உள்ளன. சேந்தமங்கலம் என்றால் கொல்லிமலை ஞாபகத்திற்கு வரும்.

ஆகவே, இந்த பகுதி முழுவதும் வளமான பகுதியாக இருக்கிறது என்பதை, இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாமக்கல் மாவட்டத்திற்குப் பல்வேறு பணிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்போதே அறிவித்தார்கள். நாமக்கல் – திருச்சி நான்கு வழிச்சாலை. இன்றைக்கு நாமக்கல்லிருந்து, திருச்சி வரை செல்வதற்கு தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்துவதற்கு அம்மாவினுடைய

அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டு, அந்த சாலை நான்கு வழிச்சாலையாக தரம் உயர்த்தப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செங்கோடு புறவழிச்சாலை நிலம் எடுக்கும் பணிகள் நிறைவடைந்தவுடன், அந்தச் சாலை அமைக்கப்படும். திருச்செங்கோடு சுற்றுச்சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வெள்ளகோவில் பள்ளிப்பாளையம் சாலை நான்கு வழிச்சாலையாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாமக்கல் புறவழிச்சாலையைப் பொறுத்தவரை, நிலம் எடுப்புப் பணிகள் முடிவடைந்தபின் சாலை அமைக்கும் பணிகள் தொடரும். நாமக்கல்லில் நிலம் எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் பணி முடிந்த பிறகு புறவழிச்சாலை அமைக்கப்படும்.

நாமக்கல் பேருந்து நிலையப் பணியை, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பணி விரைவில் தொடங்கப்படும் என்ற செய்தியையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செங்கோடு – சங்ககிரி – ஓமலூர் சாலை, பல்வழிச்சாலையாக TNRS திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

திருச்செங்கோடு – பரமத்தி சாலை அகலப்படுத்தும் பணிகள் மிக விரைவில் நிறைவேற்றப்படும்.

திருச்செங்கோடு – ராசிபுரம் – மல்லிக்கரை சாலை அகலப்படுத்தும் பணிகள் விரைவில் முடியும் தருவாயில் உள்ளன.

நாமக்கல் – திருச்செங்கோடு மற்றும் மோகனூர் – நாமக்கல் சாலை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு என்னால் திறந்து வைக்கப்பட்டது.

பள்ளிப்பாளையம் காவேரி ஆற்றின் குறுக்கே, 30 கோடி ரூபாய் செலவில் நடைபெறும் பாலப்பணிகள், இம்மாத இறுதியில் முடிவடையும் நிலையில் உள்ளன. பள்ளிப்பாளையம் காகித ஆலை அருகில், 44 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் இரயில்வே உயர்மட்ட பாலப்பணிகள், நெடுஞ்சாலைப் பணிகள் முடிவடைந்தவுடன் மக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் தொடங்கப்படும்.

நாமக்கல் மாவட்டம் – பிள்ளிக்கல்பாளையம், ஈரோடு மாவட்டம் – கொடிமனை இவற்றை இணைத்து காவேரி, ஆற்றின் குறுக்கே, 65 கோடி ரூபாய் செலவில் உயர்மட்டப் பாலம் கட்ட திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

கடுமையான வறட்சியை எதிர்கொண்டு, விலைவாசி உயராமல் பார்த்துக் கொள்வது, குடிநீர்ப் பிரச்சினையை கட்டுக்குள் வைத்து, உணவு மானியம் அதிகளவிலே வழங்கப்பட்டது, அம்மாவின் ஆட்சியில்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம், ரேஷன் கடையிலே அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

“நாமக்கல் மாவட்டத்தில், பல்வேறு பணிகள் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும்!” என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். உங்களுடைய மாவட்ட அமைச்சர்கள் மாண்புமிகு திரு.தங்கமணி அவர்களும், மாண்புமிகு திருமதி சரோஜா அவர்களும், உங்கள் மாவட்ட சட்டப்பேரவை உறுப்பினர்களும் கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளை எல்லாம் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலித்து நிறைவேற்றும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிவிப்புகள்

- நாமக்கல் மாவட்டம் ஆலாம்பாளையம், படவீடு பேரூராட்சிகள் மற்றும் திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள, 669 ஊரக குடியிருப்புகள் மற்றும் சேலம் மாவட்டம் சங்ககிரி பேரூராட்சிகளுக்கு, காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டுக் குடிநீர் வழங்கும் பொருட்டு, 3 இலட்சத்து 57 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில், ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு, இந்தப் பகுதி மக்களுக்குத் தங்குதடையின்றி பாதுகாக்கப்பட்ட காவேரித் தண்ணீர் வழங்கப்படும் என்ற செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

- நாமக்கல் மாவட்டத்தில், திருச்செங்கோடு நகராட்சிக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடிநீர்த் திட்டம் மேம்படுத்தப்பட்டு, சுமார் 1 இலட்சத்து 6 ஆயிரம் மக்கள் பயன் பெறும் வகையில், வரும் நிதியாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

- நாமக்கல் மாவட்டத்திலுள்ள நாமக்கல் பரமத்திவேலூர், சேந்தமங்கலம் வருவாய் வட்டங்களிலிருந்து வருவாய் கிராமங்களைப் பிரித்து, மோகனூரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதியதாக மோகனூர் வருவாய் வட்டம், விதிகளுக்குட்பட்டு அமைத்திட அரசு பரிசீலனை செய்யும்.

- நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் நகராட்சிப் பகுதியில், தற்போது நிலவி வரும் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் விதமாக, ஒரு புறவழிச் சாலை

அமைக்கப்படும். இதன் முதற்கட்டமாக, 6 கிலோமீட்டர் சாலையும், இரண்டாம் கட்டமாக, 5 கிலோமீட்டர் சாலையும் அமைக்கப்படும்.

❖ குமாரபாளையம் – பள்ளிப்பாளையம் – ஜேடர்பாளையம் – பாண்டமங்கலம் – வேலூர் சாலையில் (மாநில நெடுஞ்சாலை–198) பள்ளிப்பாளையம் இரயில்வே நிலையத்திற்கு அருகே, பொதுமக்கள் பாதுகாப்பினைக் கருதி, சாலையைச் சுலபமாக கடந்திட, ஒரு சுரங்கப்பாதை அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, இத்தகைய எண்ணற்ற திட்டங்களை நாட்டு மக்களுக்கு வழங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கூட்டம் பொதுக்கூட்டம் அன்று; இதனை ஒரு மாநாடு போல் ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர்கள் திரு. தங்கமணி மற்றும் திருமதி சரோஜா அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கழக நிருவாகிகளுக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
17.09.2017 அன்று, நாமக்கல்லில் நடைபெற்ற
பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

தரையினில் பிறந்து, தண்ணீரில் பிழைக்கும் படகோட்டி மீனவ நண்பனுக்கு நாகையில் நூற்றாண்டு விழா

திக்கற்றவர்களுக்கு வழிகாட்டி!

இன்றைக்குத் தமிழக மக்கள் மனதிலே நீக்கமற இடம்பெற்றவரும், ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாக விளங்கி, தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற இடம்பெற்றிருக்கின்ற, நம்மிடத்திலிருந்து மறைந்த, மனதில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

எல்லாருக்கும் நல்லவர், ஏழைகளுக்குத் தெய்வம், திக்கற்றவர்களுக்கு வழிகாட்டி, திறமையானவர்களுக்கு ஏணி, உழைப்பாளர்களுக்கு உந்துதல், பெண்களை பேணிக்காத்த பொன்மனச் செம்மல், இளைஞர்களைத் தட்டி எழுப்பி இமயத்தில் ஏற வைத்த இணையற்ற தலைவர், மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை உங்களுக்கு வழங்க வந்திருப்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்களே! வரவேற்புரையாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்களே! வாழ்த்துரை வழங்கிய நாகப்பட்டினம்

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே.கோபால் அவர்களே! மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.கே.பாரதிமோகன் அவர்களே! பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.பவுன்ராஜ் அவர்களே! சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வி.பாரதி அவர்களே! மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.ராதாகிருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் எஸ்.சுரேஷ்குமார் அவர்களே! விழாவிற்கு வருகை தந்திருக்கும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக்கழக நிர்வாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும், முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

வீரம், விவேகம், மொழிப்பற்று, தேசப்பற்று, ஆன்மிகம், சமய நல்லிணக்கம், இயல், இசை, நாட்டியம், விவசாயம், மீன்வளம், எனப் பலவகையிலும் ஆற்றல் கொண்ட ஒரு வண்ணமிகு மாவட்டம் நாகை மாவட்டமாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதன்முதலாக பொறுப்பேற்றுக் கொண்டபிறகு, 1991ஆம் ஆண்டு, அக்டோபர் 18ஆம் நாள், புதியதாக உருவாக்கிய மாவட்டம் தான் இந்த நாகை மாவட்டம்.

நாகப்பட்டினம், முற்காலச் சோழர்களின் பன்னாட்டு வணிக மையமாகவும், சிறந்த துறைமுகமாகவும் விளங்கியது.

அதிகமான கப்பல்கள் வந்து சென்றதால் சங்க காலத் தமிழர், ‘நாவாய்’ என்னும் கப்பல்களைப் பயன்படுத்தி, வெளிநாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்து வந்தனர்.

இதனால், இந்த ஊரினை நாவல்பட்டினம் என்று அழைத்தார்கள். இதுதான் பின்னாளில் நாகப்பட்டினம் என்று மருவியது.

இதே நாகை மாவட்டத்தில், காவிரிபூம்பட்டினம் என்ற பூம்புகார் துறைமுகமும் ஒரு காலத்தில் பன்னாட்டு வணிக மையமாகத் திகழ்ந்தது!

கவிச்சக்கரவர்த்தி கம்பர் பிறந்த தேரழுந்தூர், நாகை மாவட்டத்தில்தான் உள்ளது! சைவ சமயக் குரவர்களின் ஒருவரான, திருஞானசம்பந்தர் அவதரித்த சீர்காழி தலமும் இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

‘தமிழிசை மூவர்’ என்று இசை உலகமும் இலக்கிய உலகமும் போற்றும் சீர்காழி அருணாசலக் கவிராயர், முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை ஆகிய மூவரும் வாழ்ந்ததும் சீர்காழியில் தான்!

தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலை அடிகளார் பிறந்த மாவட்டம் இது! தமிழில் புதின இலக்கியத்தை முதன்முதலில் அறிமுகம் செய்த நீதியரசர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் பிறந்த மாவட்டம் இது!

குலோத்துங்க மன்னனிடமிருந்து, ஒரு ஊரையே பரிசாகப் பெற்ற புலவன் ஒட்டக்கூத்தர் பிறந்த, ‘மலரி’ என்ற ஊர் நாகை மாவட்டத்தில் உள்ளது. பரிசாகப் பெற்ற ஊர் ஒட்டக்கூத்தர் பெயரால் ‘கூத்தனூர்’ என்று இன்று அழைக்கப்படுவது. நமக்குப் பெருமை.

டச்சுக்காரர்களால், வணிகத்தின் பொருட்டு முதன்முதலாக வந்து ‘டேனிஷ்’ கோட்டை அமைத்ததும், முதல் அச்சுக்கூடம் அமைத்ததுமான தரங்கம்பாடி இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. தென்னாப்பிரிக்காவில், ‘தேசப்பிதா’ மகாத்மா காந்தியடிகளுடன் போராட்டங்கள் மேற்கொண்ட தில்லையாடி வள்ளியம்மை பிறந்த தில்லையாடி, இந்த மாவட்டத்தில்தான் உள்ளது.

இங்கு அவருக்கு நினைவு மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

“ஆயிரம் ஆனாலும், மாயூரம் ஆகாது!” என்ற பழமொழியுடன் சிறப்புற்று விளங்கும் ஆன்மிக நகரமாகத் திகழும் மாயூரம், இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. அதற்குக் காரணம் ஆயிரம் வருடங்கள் கங்கையில் தினம் தினம் நீராடினால் கிடைக்கும் புண்ணியம் ஐப்பசி மாதத்தில் மாயவரம் துலா கட்ட காவேரியில், புனித நீராடினால் புண்ணியம், கிடைக்கும் என்பது ஐதீகம். 144 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும், காவேரி ‘புஷ்கரணி’ விழா, இந்த ஆண்டு செப்டம்பர் 12ஆம் தேதியன்று தொடங்கியுள்ளதையும், அங்கு பக்தர்கள் புனித நீராட, அனைத்து வசதிகளையும், உதவிகளையும் தமிழ்நாடு அரசு செய்துள்ளது என்பதையும் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மகாத்மா காந்தியடிகள், உப்பு சத்தியாகிரகம் செய்ய, தண்டி யாத்திரை தொடங்கிய போது, மூதறிஞர் இராஜாஜி தலைமையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபெற்ற உப்பு சத்தியாகிரகம் நடைபெற்ற வேதாரண்யம், இந்த மாவட்டத்தில்தான் உள்ளது. பல இஸ்லாமிய இலக்கியங்களைப் படைத்த குலாம் காதீறு நாவலர், நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள நாகூரில் பிறந்தவர்!

உலகப்புகழ் பெற்ற வேளாங்கன்னி மாதாகோயில், நாகூர் ஆண்டவர் தர்கா, பாப்பாவூர் தர்கா, இந்துக்களின் புனித தலமான வைத்தீஸ்வரன் கோயில், திருக்கடையூர் அபிராமி கோயில், சிக்கல் சிங்காரவேலர் கோயில், இன்னும் பல பாடல் பெற்ற ஆலயங்கள் நிறைந்துள்ள திருத்தலங்களையும் கொண்டு, மும் மதங்களின் சங்கமமாகவும் மத நல்லிணக்கத்திற்கு அடையாளமாக திகழும் மாவட்டம் இது.

குடகுமலையில் தோன்றும் புண்ணிய காவிரி, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகாரில் தான் கடலில் கலக்கிறது.

பலநூறு சித்தர்களின் வாழிடமாகத் திகழ்ந்த மயிலாடுதுறை – சித்தர்காடு நாகை மாவட்டத்திற்குப் புனிதத்தை அளிக்கிறது.

விவசாயத்தையும் , மீன்பிடித் தொழிலையும் இரண்டு முதன்மைத் தொழிகளாகக் கொண்டு நீர்வளம், நிலவளம், கடல்வளம் ஒருங்கே பெற்ற ஓர் உன்னத மாவட்டம் இந்த மாவட்டம்.

சிலப்பதிகார நீதிக்கு உரியவளான கற்புக்கரசி கண்ணகியும், பொன், பொருள், சுகம், குடும்பம், சுற்றம் அனைத்தையும் இழந்து முற்றும் துறந்த முனிவராய், முக்காலமும் உணர்ந்த சித்தராய், வாழ்க்கைத் தத்துவத்தை கூறிய பட்டினத்தாரும் பிறந்த மண், பூம்புகார் என்பதால் இம்மண்ணின் மீது மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு மிகுந்த அக்கறை இருந்ததை அவருடைய அரசியல் வரலாறு கூறுகிறது.

புரட்சித்தலைவர் முதல்வராக இருந்த போது, ஒரு முறை பூம்புகார் சென்றிருந்தார். அங்கு விருந்தினர் மாளிகையில் தங்கியிருந்தார். அப்போது சட்டசபை உறுப்பினரான திரு. விஜயராகவன், தலைவரைச் சந்தித்து கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். தில்லையாடி என்ற ஊரில் இருந்து பொறையாறு வழியாக – திருவாரூருக்கு பேருந்து விடுமாறு அந்த மனுவில் அவர் கேட்டிருந்தார். மனுவைப் படித்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், ஆவன செய்வதாக அவரிடம் கூறினார். சட்டசபை உறுப்பினரும் ஊர் திரும்பிவிட்டார். காலையில் மனு அளித்த அவர், மாலையில் பொறையாறில், டீக்கடை ஒன்றில் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது, அங்கே திடுமென்று அரசுப் பேருந்து வந்தது!

மாட்டு வண்டிகளும் சைக்கிள்களும் மட்டுமே ஓடிக் கொண்டிருந்த அந்த வழித்தடத்தில், திடீரென்று பேருந்து வந்ததும், சட்டமன்ற உறுப்பினர் உட்பட அங்கிருந்த அனைவருமே ஒரு கணம் இன்ப அதிர்ச்சியில் உறைந்து போயினர்!

விரைந்து சென்று ஓட்டுநரிடம் விசாரித்த போது, மாண்புமிகு முதல்வர் உத்தரவின் பேரில் உடனடியாகப் புதிய பேருந்து ஒன்றினை, இந்த வழிதடத்தில் இயக்குமாறு அதிகாரிகள் கட்டளையிட்டதாகக் கூறினார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அதிரடி நடவடிக்கையைப் பார்த்து அனைவருமே ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்! அதிரடி நடவடிக்கைக்கும், அவசர உதவிக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு நிகர் அவரே தாம்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பெண்களின் காவலராக விளங்கினார். அவருடைய திரைப்படங்களாக இருக்கட்டும், திரைப் பாடல்களாக இருக்கட்டும், அவற்றில் பெரும்பாலான கருத்துகள் பெண்களைப் போற்றுவதாகவும், பாதுகாப்பதாகவும் இருக்கும்.

அதனால்தான், தமிழ்நாட்டில், குழந்தைகள் முதற்கொண்டு மூதாட்டிகள் வரை, அவர்மேல் அளவிட முடியாத பாசம் வைத்திருக்கிறார்கள் பெண்களுக்கு எங்கெல்லாம் பாதுகாப்பு இல்லையோ, அங்கெல்லாம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உதவிக் கரம் நீட்டி, ஓடி வருவார் என்பது தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் தெரியும். இந்த நாகை மாவட்டத்தில் நடந்த இன்னொரு சம்பவம், என் நினைவுக்கு வருகிறது.

ஏழைகளும் பணக்காரர்களும் கலந்து வாழும் இந்த நாகை மாவட்டத்திற்கு, பார்த்துப் பார்த்து திட்டங்கள் வகுத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போலவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் ஆட்சி பொறுப்பேற்றதும் நாகை மாவட்டம் ஒரு கடலோர மாவட்டம் என்பதாலும், காவிரியை நம்பி விவசாயம் நடைபெறும் மாவட்டம் என்பதாலும், மீனவர்களுக்கும், உழவர்களுக்கும் மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய பல கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்தினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த இந்த அரசும், ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, பல திட்டங்களை வகுத்து வழங்கியுள்ளதை நீங்கள் அறிவீர்கள்! இன்று இந்த மாவட்டத்தில், 100 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 46 பணிகளை, நான் இன்று தொடங்கி வைத்துள்ளேன். மேலும், பல்வேறு துறைகளின் சார்பில், 38 ஆயிரத்து 248 பயனாளிகளுக்கு, 281 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கியுள்ளேன். இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 8 ஆயிரத்து 203 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 33 ஆயிரத்து 533 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், 3 ஆயிரத்து 130 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 555 பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியும் உள்ளேன். ஆக மொத்தம், 11 ஆயிரத்து 334 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 40 ஆயிரத்து

88 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த அரசு, கடந்த ஆறு ஆண்டுகளில் செய்த சாதனைகளைச் சொல்வதென்றால் நாட்கள் போதாது.

ஆயினும், நேரம் கருதி ஒரு சிலவற்றைப் பற்றி மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆதனூர் குமாரமங்கலம் பகுதியில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தடுப்பணை கட்டும் பணிக்கு விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு, பணிகள் தொடங்கி மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில், 96 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 63 ஆயிரத்து 677 மாணவ மாணவியர்களுக்கு, விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளன.

நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதியதாக, தாய் சேய் நலப் பிரிவுக் கட்டிடம் கட்டுப்படவுள்ளது. மற்றும் புதிய ‘சி.டி ஸ்கேன்’ கருவி நிறுவப்பட உள்ளது. மயிலாடுதுறை அரசு தலைமை மருத்துவமனையில் ‘எம்.ஆர்.ஐ’ கருவி அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு குடும்பநலத்துறையின் மூலம், 32.56 கோடி மதிப்பில், பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், 80 ஆயிரத்து 525 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, 71 கோடியே, 47 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 172 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆயிரத்து 282 பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. பிரதம மந்திரி ஊரகக் குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 174 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 15 ஆயிரத்து 836 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

‘தாய் திட்டத்’தின் கீழ், 87 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 6 ஆயிரத்து 312 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீன்வளப் பல்கலைக்கழகம், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் இந்த மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம் தலைஞாயிறு கிராமத்தில் 72 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மீன்வளப் பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இந்த ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

2 பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள், ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒரு பொறியியல் கல்லூரி ஆகியவை இந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளன. நேரத்தின் அருமை கருதி, இங்கே நான் ஒரு சில திட்டங்களை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன். இதற்கு மேலும், பல திட்டங்களை நீங்கள் கோரிக்கை வைக்காமலேயே நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

மக்கள் மனம் அறிந்து, திட்டங்கள் தீட்டுவதில் வல்லவரான மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்தவர்கள் நாங்கள். மக்களுக்காக, மக்கள் எதிர்பார்க்கும் திட்டங்களை நிறைவேற்றித் தருவோம் என்பதை இந்த

நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். காலம் அவர்களையும் மாற்றி, நம்மைப் புகழ வைக்கும். இதைச் சொல்லும் போது, மற்றொரு சம்பவத்தை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தி.மு.க விலிருந்து நீக்கப்பட்டதற்கு தமிழ்நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்தன. அந்தச் சமயத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் நடித்த ‘உலகம் சுற்றும் வாலிபன்’ படப்பிடிப்பில் வெளிநாட்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். திமுக பிரமுகர் திரு. மதுரை முத்து அவர்கள், ‘உலகம் சுற்றும் வாலிபன் படம் வெளி வந்தால் நான் புடவை கட்டிக் கொள்கிறேன்’ என்று சபதமிட்டார். அது மட்டுமல்ல மேடைகளில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைக் கடுமையாக விமர்சித்தும் பேசி வந்தார். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்த தீவிர ரசிகர் ஒருவர் திரு. மதுரை முத்துவை கண்டபடி ஆவேசமாக பேசினார். உடனே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ரசிகரைப் பார்த்து “தம்பி, முத்தண்ணன் இன்று என்னை கடுமையாக விமர்சிக்கலாம். ஆனால், ஒரு காலத்தில் கழக வளர்ச்சிக்காக எண்ணற்ற தியாகங்களைச் செய்தவர். ஏன் நாளை அவருங்கூட நம் பக்கம் வரலாம். யாரையும் கண்ணியக் குறைவாகப் பேசக்கூடாது” எனக் கூறினார்.

காலப்போக்கில் அதேபோன்ற, திரு. மதுரை முத்து அவர்கள், அ.இ.அ.தி.மு.கவில் இணைந்தார். பின்னர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், திரு. முத்துவை மதுரையின் மேயர் தேர்தலில் நிறுத்தி வெற்றியும் பெற வைத்தார்.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதைப் போல் நாம் மற்றவரைப் பற்றி பேசுகின்ற போது, விமர்சனம் செய்கின்ற போது எச்சரிக்கையாக விமர்சனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பலர் மக்கள் மன்றத்திற்கு வராமல், மனக்கோட்டை கட்டிக்கொண்டு, “நான் அதைச் செய்வேன் நான் இதைச் செய்வேன். வானத்தை வில்லாக வளைப்பேன். கடல் அலையை நிறுத்துவேன். சந்திரனிலும் போய் ஆட்சி அமைப்பேன்!” என்றெல்லாம் பேசி, அவற்றை மக்களும் நம்புவார்கள் என நினைக்கிறார்கள். உங்கள் மனக்கோட்டை, கடற்கரையில் கட்டப்படும் மணல்கோட்டை என்று மக்களுக்குத் தெரியும்.

மக்கள் நலனில் அக்கறையில்லாமல், மக்களுக்காக உழைக்காமல், கண்களை மூடிக்கொண்டு, கனவு காண்பதை நிறுத்துங்கள்! உங்கள் அர்த்தமில்லாத கனவு, உங்களுக்கு ஆபத்தைத்தான் ஏற்படுத்தும்! இதைக் கூறுகிறபோது எனக்கு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில், ஒரு குயவர் சட்டி பானைகள் விற்கும் கடை வைத்திருந்தார். அவருக்குத் திருமணம் ஆக வில்லை. ஒரு நாளைக்கு இரண்டு பானைகள் விற்பதே கடினம். ஒரு நாள் ஒருவர் 20 பானைகள் வேண்டுமென்று பணத்தோடு வந்துவிட்டார். குயவர் மகிழ்ச்சியில் மிதந்தார், ‘நீங்கள் கடைத்தெருவில் வேலையிருந்தால் முடித்துவிட்டு

வாருங்கள். நீங்கள் எடுத்து போகிற அளவிற்கு பானைகளைக் கட்டி வைக்கின்றேன்.' என்று வந்தவரை அனுப்பிவைத்தார்.

20 பானைகளையும் எடுத்து, அழகாக அடுக்கி வைத்தார். பானைக்கு அருகில் அமர்ந்தபடி கற்பனையில் ஆழ்ந்து விட்டார். 20 பானைகளை விற்று வரும் பணத்தில் ஒரு கோழி வாங்க வேண்டும் – கோழி முட்டைகள் இட்டு – பல கோழிகளாகும் அவற்றை விற்று, ஓர் ஆடு வாங்க வேண்டும். அந்த ஆடு பல குட்டிகள் போடும், அதை விற்று, ஒரு கறவை மாடு வாங்க வேண்டும் – அந்தக் கறவை மாடு கன்று போடும் – அதை விற்று ஒரு, மாட்டு வண்டி வாங்க வேண்டும். அதில் ஜாம் ஜாம்னு சவாரி போகலாம்.

மாட்டு வண்டியை நல்ல விலைக்கு விற்று குதிரை வாங்கி, சொகுசாகப் பயணம் செய்யலாம் – குதிரையும் குட்டிபோடும். பிறகு வசதி பெருகிவிடும், பிறகு கல்யாணம் செய்து கொள்ள வேண்டும், குழந்தை பிறக்கும் – குழந்தை சும்மாயிருக்குமா ?

நான் பானை சட்டி செய்யும்போது, பக்கத்தில் வந்து களிமண்ணில் விளையாடும். பணக்கார குழந்தையாயிற்றே களிமண்ணில் விளையாடுவதா ? இவளுக்கு அறிவே இல்லையா ? குழந்தையைக் கவனிக்காமல் அப்படி என்ன வேலை, "அடியே குழந்தையைத் தூக்கு" என்று கத்துகிறான். (பகற் கனவில்) மனைவி இருந்தால்தானே, குழந்தையை வந்து தூக்குவதற்கு !

'அழாதடா மகனே, அம்மா வரட்டும் அவளை இப்படி உதைக்கிறேன் !' என்று காலை வேகமாக எதிரே உதைக்க, ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த அனைத்து பானைகளும் சரிந்து உடைந்து நொறுங்கின. கற்பனைக்கும் ஒரு எல்லை வேண்டும்! பலபேர், இப்படித்தான் கற்பனை செய்து கொண்டு தாமும் கெட்டு, தம்மை நம்பியவர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் யார் என்று உங்களுக்கு நன்றாகப் புரியும்.

இவ்வாறு கற்பனையில் மிதப்பவர்கள், தங்கள் கற்பனையை நிறுத்திக் கொண்டு, தாமும் கெட்டு – பிறரையும் கெடுப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும் !

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு ஓ.எஸ்.மணியன் அவர்கள், இங்கே அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு என்னை "நீங்கள் வந்து பார்வையிடுங்கள், பார்வையிடும்போது சுமார் ஒரு மணிநேரம் ஆகும்! என்றார். மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் வரவேண்டும். அப்பொழுது நான் வருகின்றேன் என்று சொன்னேன். இருந்தாலும், "அதிகமாக போக்குவரத்து நெரிசல் இங்கே ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் வருவது சற்று காலதாமதம் ஆகிவிடும், அதனால் நாம் சென்று பார்த்துவிட்டு வந்துவிடலாம், வந்தவுடன் கூட்டத்தை ஆரம்பித்துவிடலாம் !" என்று குறிப்பிட்டார்கள்.

அந்த அரங்கத்திற்குச் சென்று, அங்கே பார்க்கின்றபொழுதுதான் நாங்கள் ஆச்சரியப்பட்டோம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆண்ட

ஆட்சிகாலத்தில் போடப்பட்ட திட்டங்கள் அத்தனையும், அந்த 25 அரங்குகளிலே நிரம்பி வழிகின்ற காட்சியை நாங்கள் பார்க்க முடிந்தது. ஒவ்வொரு அரங்கத்திற்குள்ளே போகின்றபொழுது, தத்ரூபமாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன திட்டங்கள் கொண்டுவந்திருக்கின்றார்கள் என்று, 25 அரங்குகளையும் அமைத்து, காட்சிப்படுத்தியிருந்தார்கள். அந்தக் காட்சிகள் யாவும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த காட்சிகளாக இன்னும் என் கண்களில் நிறைந்து நிற்கின்றன! அதிலே வைத்திருக்கின்ற காட்சி, மிக சரித்திரம் வாய்ந்த ஒரு காட்சியாக நான் கருதுகின்றேன். ஏனென்று சொன்னால், வாயிலே சொல்வதெல்லாம்கூட மக்கள் மனதிலே நிற்காது, அதைப் பார்க்கின்றபொழுதுதான் அது மனதிலே நிலைத்து நிற்கும். ஆகவே, அப்படிப்பட்ட அற்புதமான திட்டங்களை இங்கே வருகை புரிந்திருக்கின்ற, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிலே கலந்து கொண்டிருக்கின்ற மக்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக இந்த அரங்கிலே அமைத்து அந்த காட்சியெல்லாம் நாம் பார்த்தோம். அவை அனைத்தையும் இன்றைக்கு நாம் நேரடியாக பார்க்கின்றபொழுது, அம்மாவினுடைய ஆட்சியிலே எவ்வளவு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இயற்கையாகக் காளை வளர்க்கின்ற திட்டம், அந்த இனம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இதற்கென்று தனி கவனம் செலுத்தி, அதற்காகக் காளை வளர்க்கின்ற திட்டத்தினை இந்த மாவட்டத்திற்குத் தந்திருக்கின்றார்கள். இந்த அற்புதமான திட்டங்களையெல்லாம் இன்றைக்கு இந்த காட்சியின் மூலம் காண்கின்றோம்.

அடுத்தபடியாக, விவசாயம், மீன்பிடி தொழில் இரண்டையும் நம்பியிருக்கின்ற மாவட்டம், நாகை மாவட்டம். இந்த இரண்டையும் மூலதனமாக வைத்துத்தான் இந்த மாவட்ட மக்கள் வாழ்வாதாரம் இருக்கின்றது. மீன் எப்படியெல்லாம் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டினார். அந்த கடலில் வாழ்கின்ற மீன், அதுபோல் இறால், இவற்றை நான் எப்படியெல்லாம் இந்த பகுதியில் வளம் இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டும்விதமாக, அமைந்துள்ளது இங்கு இறால் வளர்க்கின்ற திட்டம். இறால் கிட்டத்தட்ட, 1 கிலோ ரூபாய் 450க்கு விற்க முடியும் என்று சொன்னார். அந்த இறால் வளர்க்கின்ற திட்டம், எப்படிச் செயல்படுத்த வேண்டும், எப்படி பயன்பெற வேண்டும், எப்படி வளர்த்தால் அதிக இலாபம் கிடைக்கும் என்று தத்ரூபமாக அந்த அரங்கத்திலே வைத்திருக்கின்றார்கள்.

அதற்கடுத்தாற்போல், புரட்சித்தலைவர் பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள் காளையை அடக்குவது போல ஒரு காட்சி. தத்ரூபமாக வைத்திருக்கின்றார்கள். ஒவ்வொரு துறைவாரியாக, அந்த காட்சி அமைக்கப்பட்டுள்ளது. அதற்குப்பிறகு, எத்தனைவகை தானியங்கள், எத்தனை வகைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் அந்த அரங்கிலே பார்த்தோம். ஏனென்றால், உடல் நலம் சிறப்பாக இருக்கவேண்டும். உணவு தானியம் மிகவும் முக்கியம். இயற்கை உணவு தானியத்தைப் பயன்படுத்துகின்றபொழுது, உடல் நலம் சிறப்பாக இருக்கும். அதற்காக, இந்த அரங்கிலே பல்வேறு இயற்கை உணவு தானியங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில உணவு தானியங்களை, உங்களில் சிலர் பார்த்திருக்கவேமாட்டீர்கள்! ஆகவே, விவசாயப்

பெருங்குடி மக்கள் அவற்றைப் பார்த்து, பயிரிட்ட இயற்கை உணவை, நீங்கள் வீட்டிலே சமைத்து சாப்பிடுகின்றபொழுது உடல் வளம் பெருகும்.

இந்த நூற்றாண்டு விழா என்பது, ஒரு கூட்டம் மட்டுமன்று; இங்கே, காலையிலே நம்முடைய மாணவர்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்குகின்ற ஒரு கூட்டமாக விளங்கியது. கிட்டத்தட்ட ஒவ்வொரு இடத்திலும், 15,000லிருந்து 20,000 மாணவர்களை பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவிற்குக் காலையிலேயே அழைத்து வந்து, பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்துக்களை அவர்கள் மனத்திலே நிலைநிறுத்துகின்றவிதத்தில், இது விளங்கியது அதன் மூலமாக அவர்களது அறிவுத்திறன் வளர்கின்றது, நல்ல ஒழுக்கம், பண்பு, உயர்வு கிடைக்கின்றது. அப்படிப்பட்ட அற்புதமான கருத்தரங்கைப் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவில்தான், நாம் காணமுடிகிறது.

கிட்டத்தட்ட இன்றுடன் 14 இடத்தில் கூட்டங்கள் நடத்திவிட்டோம். 14 இடங்களில் பார்க்கின்றபொழுது, 2.50 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெற்றிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஆக்க பூர்வமான, அறிவு பூர்வமான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்ருடைய திட்டங்கள், அம்மாவினுடைய திட்டங்கள், இவற்றை இதையெல்லாம் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டுமல்ல, சில அரசியல் தலைவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதையெல்லாம் அரசியல் மேடையாக பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய மேடையிலே, அரசியல் பேசுவதாகக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு அரசும், அரசியல் கட்சியை மையமாக வைத்துத்தான் ஆட்சிக்கு வருகிறது. அரசியல் கட்சியில்லாமல் யாரும் அரசு அமைக்க முடியாது. ஒவ்வொரு கட்சிக்கும், கட்சியுடைய வரலாறு, அந்தக் கட்சியிலிருந்து ஏற்பட்ட திட்டங்கள், கொள்கைகளைத்தான், அரசு திட்டமாக வடிவமைக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட திட்டத்தை வடிவமைக்கும்பொழுது, அந்தக் கட்சியைப் பற்றி சிலவற்றைக் கூறித்தான் ஆகவேண்டும். ஏன், இவருடைய ஆட்சியில் கூறவில்லையா? முன்னாள் முதலமைச்சர், தி.மு.க. தலைவர், மு.க.ஸ்டாலினுடைய தந்தை, எத்தனை அரசு விழா கூட்டத்தில் பேசியிருக்கிறார் தெரியுமா? அத்தனையும் எங்களிடம் record ஆக இருக்கிறது. நாங்களெல்லாம் கொஞ்சம்தான் பேசியிருக்கிறோம். ஆனால், இவர்கள் ஆட்சி அதிகாரத்திலே, முதலமைச்சராக இருந்தபொழுது அரசியல் பற்றி அதிகமாகப் பேசியிருக்கின்றார்கள். ஆகவே, எல்லா கட்சியைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும் ஆட்சிக்கு வரும்பொழுது, அரசு நலத் திட்டங்களிலே கலந்து கொண்டு பேசுகின்றபொழுது, அவர்களுடைய கட்சிகள் எப்படி இருந்தன, அந்தக் கட்சிகள் எப்படியெல்லாம் கொள்கை வகுத்தன, அந்தக் கொள்கை மக்களுக்கு எப்படி திட்டங்களாக போய்ச் சேர்ந்தன என்பதை எடுத்துக் கூறுவது வழக்கந்தான். அதனை 'அரசியல்' என்று நீங்கள் பேசுகின்றீர்கள், அது உண்மையன்று. பேசுகின்றபொழுது உண்மையைச் சொல்லுகின்றோம், நடப்பதை சொல்லுகின்றோம். அதைச் சொன்னால் இவர்களுக்கு என்ன கோபம் வருகிறது? இப்பொழுது நடப்பது என்ன? நன்றாக சிந்தித்துப்

பாருங்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு, சதிவலை பின்னிக் கொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் பிரச்சினை, இந்த ஆட்சியில் என்ன குறை கண்டுபிடித்தீர்கள்? புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்த ஆறாண்டு காலத்திலே, எண்ணற்ற திட்டங்கள் தமிழகத்திற்கு தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அம்மாவினுடைய அரசு, இன்றைக்குத் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அம்மாவினுடைய ஆட்சியில், ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். 16.02.2017 அன்று நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றோம். கிட்டத்தட்ட, இந்த 7 மாதங்களில் பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வாரி வழங்கியிருக்கின்றோம். அம்மாவினுடைய திட்டங்களை, இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இந்த 7 மாதங்களில், என்றைக்கு பார்த்தாலும், இந்த ஆட்சியைக் குறை சொல்வதுதான் அவர்களுடைய வாடிக்கையாகி விட்டது. ஆட்சியைக் குறை சொல்கின்ற பொழுது நாங்கள் அதற்கு பதில் சொல்கின்ற கட்டத்திலே இருக்கின்றோம். அதற்கு பதில், சொல்கின்ற விதமாகத் தான் சொல்கின்றோமேயொழிய, அரசியல் மேடையாக இதனை நாங்கள் ஒருபோதும் பயன்படுத்த மாட்டோம்! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வகுத்த பாதையில், அம்மா வழிவகுத்த கொள்கையில், என்றைக்கும் பிறழமாட்டோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அரசியல் பேசுகின்றார்கள் என்று சொல்வது தவறு என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டம், புரட்சித்தலைவர் ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்களெல்லாம் நிறைவேறுவதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். எத்தனை பொய் சொன்னாலும், மாறி மாறிப் பொய் சொன்னாலும், அது உண்மையாகிவிடும் என்று கருதுகின்றீர்கள்! அது ஒருபோதும் நடக்காது! நீங்கள் இப்படித்தான் பேசுவீர்கள் என்று எண்ணித்தான், மரியாதைக்குரிய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், இந்த மாவட்டத்தின் மைந்தர், திரு ஓ.எஸ்.மணியன் அவர்கள், இங்கே வந்து பார்த்துவிட்டுச் சொல்லுங்கள், அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் எத்தனை என்பதை பாருங்கள் என்று மக்கள் அறிவதற்காக இந்த அரங்கங்களை அமைத்திருக்கின்றார்கள். ஆகவே, இந்தத் திட்டங்களெல்லாம் மக்களுக்கு போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. பொறாமை, பொறுக்க முடியவில்லை, ஆகவே, இந்த ஆட்சி கலைந்துவிடாதா, இந்தக் கட்சி உடைந்துவிடாதா என்று பகல்கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள், நிச்சயம் ஒருபோதும் நடக்காது! இந்த அரங்கிலே ஒன்றரை இலட்சம் மக்கள் குழுமியிருக்கின்றார்கள். ஆகவே, இந்த மக்கள் அத்தனைபேரும், அம்மாவினுடைய ஆட்சி தொடரவேண்டும் என்று எண்ணி வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்த்துக்கு முன்னால் உங்கள் கனவு ஒருபோதும் பலிக்காது என்பதை, இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அ.இ.அ.தி.மு கழகத்தை அழிக்கின்றவர்கள், இந்த ஆட்சியை கவிழ்க்கின்றவர்கள், எண்ணுகின்ற எண்ணமெல்லாம் இன்றைக்கு பகல் கனவாக ஆகிவிடும் என்பதை சுட்டிக்காட்டுகிறேன். அதுமட்டுமல்ல, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே, பல்வேறு திட்டங்களைத் தந்திருக்கின்றோம். அவ்வளவு திட்டங்களைத் தந்துள்ள காரணத்தினால்தான், மக்கள் எங்களை நம்புகிறார்கள்; மக்கள் எங்களை நம்பிய காரணத்தினால்தான், இந்த அரங்கம் நிரம்பி வழிந்து, மக்கள் வெள்ளத்தை சாலை நெடுகிலும் இன்றைக்கு

பார்க்கின்றோம். ஆகவே, ஒரு அரசு நன்றாக இருந்தால்தான், அந்த மக்கள் பேராதரவு கிடைக்கும். அந்தப் பேராதரவு எப்படி கிடைக்கும் என்றால், இப்படிப்பட்ட கூட்டத்தின் வாயிலாகத்தான். இந்த அரசுக்கு மக்கள் பலம் இருக்கிறது என்பதை இந்த நாகை மாவட்டத்தில் நடைபெறுகின்ற கூட்டமே சாட்சி என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அது மட்டுமல்ல, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலும் சரி, அம்மாவினுடைய ஆட்சியிலும் சரி, கல்விக்கு மிக முன்னுரிமை கொடுத்தார்கள். இன்றைக்கு, இந்த மாவட்டம் மீனவர் சமுதாயம் அதிகமாக இருக்கின்ற பகுதி, அதேபோல விவசாயிகள் நிறைந்த பகுதி. இந்த இரண்டு பகுதிகளிலும் இருக்கின்ற மக்களும் உழைக்கின்ற மக்கள். இந்த உழைக்கின்ற மக்களுடைய குழந்தைகள் சிறப்பான கல்வி பயில வேண்டும் என்பதற்காக, அம்மா அவர்கள் ஏராளமான திட்டத்தை வகுத்துத் தந்திருக்கின்றார்கள் இந்த மாவட்டத்திற்கு, கல்லூரிகளைக் கொடுத்திருக்கின்றார்கள், மீன்வளம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, மீன்வளக் கல்லூரியை கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய அரசும், அதிக நிதி ஒதுக்கீடு செய்தது கல்விக்கு. ஒரு கல்வி சிறக்கின்றபொழுது, அந்த மாவட்டம் சிறந்து விளங்கும். அந்த மாவட்டம் சிறந்து விளங்குவதற்காக அம்மாவினுடைய அரசு, இந்த மாவட்டத்திற்கு புதிய அரசு கலைக் கல்லூரியைத் தந்திருக்கின்றது. அம்மாவினுடைய ஆட்சியில்தான், இப்படி திட்டங்கள் அளிக்க முடியும். இதற்கு முன்னால் ஆட்சியில் நடந்தது, என்ன ? எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள் ? சொல்லுங்கள் பார்க்கலாம் ! இந்த ஆட்சி மோசம், மோசம் என்று சொல்கிறீர்களே, இந்த ஆட்சி மோசம் என்று சொன்னால் நீங்கள் கொண்டு வந்தது என்ன திட்டம் ? நாங்கள் கொண்டு வந்த திட்டத்தையெல்லாம் நாங்கள் சொல்கிறோம். இன்றைக்குப் பள்ளிக்கு செல்கின்ற குழந்தைகளென்றால், அவர்களுக்கு 14 வகையான பொருள்கள் வைத்திருக்கிறோம், அந்த அரங்கத்தை போய்ப் பாருங்கள், அந்த அரங்கத்தை வந்து பார்த்துவிட்டுப் போறீர்கள் என்றால், இந்த ஆட்சியிலே நிகழ்ந்த சாதனைகள் எவையென விளங்கும். அம்மாவினுடைய ஆட்சியிலே செய்த சாதனைகள் இந்த அரங்கிலே மக்களுடைய பார்வைக்கு, காட்சிப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறன. நாங்கள் ஒன்றும் மறைத்துப் பேசவில்லை. சாதாரண ஏழைக் குடும்பத்திலே பிறந்த குழந்தைகள், கல்வியில் முன்னுக்கு வரவேண்டும்; அந்த மாணவ, மாணவியர்கள் உயர்ந்த கல்விக்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் ! அப்படிப் பூர்த்தி செய்தால்தான் அந்தக் குழந்தை முன்னுக்கு வரமுடியும் என்று கருதி, தொலைநோக்குச் சிந்தனையோடு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பார்த்து, பார்த்து திட்டங்களை வகுத்து, 14 வகையான பொருள்கள் தந்திருக்கின்றார்கள். காலுக்கு காலணி, பள்ளிக்குச் சீருடை, விலையில்லாப் புத்தகம், பை, Geometry Box, அதேபோல், கல்வி ஊக்கத்தொகை.

நம்முடைய நாகை மாவட்டம், கிராமம் நிறைந்த பகுதி. குழந்தை பள்ளி சென்று படிக்க வேண்டுமென்று சொன்னால், உரிய நேரத்தில் பேருந்து வசதி இருக்காது. அதன் காரணமாக, அந்த குழந்தை பள்ளிக்கு உரிய நேரத்தில் போக முடியாது. பள்ளி முடிந்தபிறகு வீட்டிற்கு வரமுடியாது. ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்களுக்கு, யாருக்கும் வராத சிந்தனை ஏற்பட்டது. அதனால் அம்மா அவர்கள் அந்த குழந்தைக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்ததால், இரண்டு, மூன்று கிலோமீட்டர் நடந்து சென்று கொண்டிருந்த அந்தக் குழந்தை, இன்றைக்கு, சைக்கிளில் சென்று படித்துக் கொண்டிருக்கின்றது. மனஉளைச்சல் இல்லாமல் படிக்கின்றது! அப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்தது அம்மா. ஆனால், கருணாநிதி முதலமைச்சராக இருந்தபொழுது என்ன செய்தார்? நீங்கள் எல்லோரும் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், பரவாயில்லையே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை இவர் ஏற்றுக்கொள்ளமாட்டாரே, எப்படி சைக்கிள் கொடுக்கின்றாரே என்று பார்த்தால், பெயிண்ட்டை மாற்றிக் அந்த திட்டத்தைக் கொடுக்கின்றார். அம்மா கொண்டு வந்த திட்டம் என்பதற்காக அந்த திட்டத்தைக் கொடுக்கக்கூட மனமில்லை. அதை மாற்றிக் கொடுக்கின்ற தலைவர் அவருடைய தலைவர். ஆனால் எந்த எதிர்க்கட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்தாலும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த திட்டத்தை மாற்ற முடியாது என்பது வரலாறு! வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர்கள் கொண்டுவந்த திட்டத்தை எவராலும் நிறுத்த முடியாது! அப்படி அவை மக்கள் மனதிலே நிற்கக்கூடிய திட்டங்கள்! அதுமட்டுமல்ல, விலையில்லா மடிக்கணினியை, வருடத்திற்கு ஐந்தரை இலட்சத்திற்குமேல் கொடுக்கின்றார்கள். இன்றைக்கு ஏழை மாணவன்கூட உயர்ந்த கல்வி பெறமுடியும். ஏழை மாணவர்களுக்கு ரூபாய் 14,000 மதிப்பு கொண்ட மடிக்கணினி வழங்கப்பட்டு அறிவுப்பூர்வமான கல்வியை இந்த அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில், எந்த மாநிலத்திலும் கிடையாது, உலகளவில்கூட கிடையாது, வல்லரசு நாட்டில்கூட அளிக்கப்படவில்லை! புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குச் சிந்தனையோடு, நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விஞ்ஞானக் கல்வி கொடுக்க வேண்டும், தமிழகத்தை விஞ்ஞான மாநிலமாக உருவாக்க வேண்டுமென்பதற்காக, மடிக்கணினியை அளித்தார்கள். இந்த நூற்றாண்டு அல்ல, அடுத்த நூற்றாண்டு வந்தாலும் பெயர் சொல்கின்ற திட்டம் இந்த திட்டம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த திட்டமெல்லாம் இவர்கள் கண்ணுக்கே தெரியவில்லை. ஏதாவது ஒரு போராட்டம் நடத்தி, இந்த ஆட்சிக்கு இடையூறு கொடுக்க வேண்டும்; பிரச்சினையை உண்டாக்க வேண்டும்; குழப்பத்தை உண்டாக்க வேண்டும், அதனால் இந்த அரசுக்கு இடர்பாடு ஏற்பட்டு, இந்த அரசு கலைக்கப்படவேண்டும் என்று எண்ணுகிறார்கள்! ஆனால் இந்த அரசு ஒருபோதும் கலையாது. ஏனென்றால், புரட்சித்தலைவி அம்மா என்கின்ற ஆத்மா சுற்றிச், சுற்றி நம்மையும், இந்த ஆட்சியையும், கட்சியையும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். நீங்கள் எத்தனை அவதாரம் எடுத்தாலும், இந்த இயக்கத்தையோ, ஆட்சியையோ தொட்டுக்கூடப் பார்க்க முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடிமராமத்து என்னும் திட்டம் விவசாயிகளின் கனவுத் திட்டம். இந்த மாவட்டத்தில் விவசாயம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா கண்ட கனவை நனவாக்க வேண்டுமென்பதற்காக, குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை தொடக்கி, விவசாயிகள் பங்களிப்போடு இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏரிகளில் உள்ள வண்டல் மண்ணை, விவசாயிகள் இலவசமாக எடுத்து, தங்கள் நிலங்களுக்கு இட்டு அதிக மகசூலைப் பெருக்குவதற்கு, அம்மாவினுடைய அரசு திட்டமிட்டு, அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, பணிகள் நிறைவுபெறவுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலமாக தூர்வாரப்படுவதால், இந்தப் பகுதியிலே, பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை ஏரிகள், குளங்கள், குட்டைகளில் அதிக அளவில் சேமிக்க இயலும். நிலத்தடி நீர் உயர்வதால், விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. குடிநீர்ப் பிரச்சினையும் தீர்க்கப்படுகின்றது. இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியிருக்கின்றது.

பொதுப்பணித்துறை மூலமாக, ஆசிய வளர்ச்சி வங்கி திட்டப் பணிகள், அரிச்சந்திரா நதியை நவீனப்படுத்துவதற்காக, ரூபாய் 257.74 கோடி, அடப்பாறு, ரூபாய் 168.35 கோடி, பாண்டவையாறு, ரூபாய் 100.80 கோடி, வெள்ளையாறு, ரூபாய் 178.17 கோடி, வளவனாறு வடிகால், 44.62 கோடி, வேதாரண்யம் கால்வாய், ரூபாய் 32.18 கோடி, மின்இறவைப் பாசனங்கள் ரூபாய் 14.59 கோடி, இப்படி மற்றவை 164.21 கோடி, ஆகமொத்தம் ரூபாய் 960.66 கோடி இந்த மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக அம்மா அவர்கள் போட்ட திட்டத்தில் அடங்குபவை இவையனைத்தும். ஒரு நாட்டினுடைய விவசாயி, நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்கின்றான். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கவேண்டுமென்றுசொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள் இவ்வளவு திட்டங்களை அறிவித்து, இன்றைக்கு இந்த திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அறிவிப்புகள்

❖ நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில், 170 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,054 விசைப்படகுகளும், 6,917 கண்ணாடி நாரிழை படகுகளும் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதி, பிரதான மற்றும் துணை அலை தடுப்புச்சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, அலுவலகக் கட்டிடம், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீன மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும். வரும் நிதியாண்டில் இத்திட்டப் பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தினால், தரங்கம்பாடி உள்ளிட்ட சின்னமேடு, சின்னங்குடி, தாழம்பேட்டை, புதுப்பேட்டை, பெருமாள்பேட்டை, வெள்ளக்கோவில், குட்டியான்டியூர், சந்திரபாடி மற்றும் சின்னூர்பேட்டை ஆகிய பத்து கிராமங்களில் உள்ள 14,470 மீனவர்கள் பயனடைவார்கள்.

❖ நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் மீனவ கிராமத்தில், 152 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 100 விசைப் படகுகள் மற்றும் 1,000 கண்ணாடி நாரிழைப் படகுகளும், பாதுகாப்பாக நிறுத்துவதற்கான வசதி, பிரதான மற்றும் துணை அலைத் தடுப்புச்

சுவர்கள், மீன் ஏலக்கூடம், வலை பின்னும் கூடம், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, அலுவலகக் கட்டிடம், சாலை வசதிகள் மற்றும் இவைபோன்ற சகல வசதிகளுடன் கூடிய ஒரு நவீன மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும். வரும் நிதியாண்டில் இப்பணிகள் தொடங்கப்படும். இத்திட்டத்தினால், காமேஸ்வரம், விழுந்தமாவடி, வானவன்மகாதேவி, வெள்ளப்பள்ளம், நாலுவேதபதி, புஷ்பவனம் ஆகிய 6 மீனவ கிராமங்களைச் சார்ந்த, 7,176 மீனவர்கள் பயனடைவார்கள்.

❖ நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறையில் ஒரு நவீன மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியகூறு ஆய்வுகள் உடனடியாக மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வுக்குத் தேவையான நிதி, இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தினால், ஆற்காட்டுத்துறை உள்ளிட்ட மணியன்தீவு, கோடியக்காடு, கோடியக்கரை, செருதலைக்காடு, பன்னல், சிந்தாமணிக்காடு, அன்னப்பேட்டை, கோவில்தாவு, வெள்ளமணல், வாய்மேடு ஆகிய 11 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் பயன் பெறுவார்கள்.

❖ நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சியில், தற்போது இரண்டு பேருந்து நிலையங்கள் இயங்கி வருகின்றன. இருப்பினும், இங்கு நிலவி வரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாக நகராட்சிக்கு அருகே உள்ள மணக்குடி கிராமத்தில் புதிய பேருந்து நிலையம் ஒன்று தனியார் பங்களிப்புடன் (PPP Mode) சுமார் 13.77 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படும்.

❖ நாகப்பட்டினம் மாவட்டத்தில், மழைக்காலத்தில் வீணாகும் உபரிநீரினைச் சேமிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தினை உயர்த்திடும் வகையிலும், கடல் நீர் உட்புகாமல் தடுத்திடும் பொருட்டு, சீர்காழி வட்டம், காவேரி பூம்பட்டினம், தர்மகுளம் அருகில் காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், சீர்காழி வட்டம், திருநகரியில், வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையும், வேதாரண்யம் வட்டம், ஏகராசபுரத்தில் சக்கிலிய வாய்க்கால் குறுக்கே ஒரு தடுப்பணையும், வரும் நிதியாண்டில் (2018–2019) கட்டப்படும்.

❖ மேலும், அடுத்த நிதியாண்டில் (2019–2020), கீழ்வேளூர் வட்டம், கருவேலங்கடையில், கடுவையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ தஞ்சாவூர், மன்னார்குடி, திருத்துறைபூண்டி, வேதாரண்யம் வழியாக கோடியக்கரையை இணைக்கும் 106.86 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் வழியாகச் செல்கிறது. இம் மாநில நெடுஞ்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்திட, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

❖ நாகப்பட்டினம் மாவட்டத்தில், மயிலாடுதுறை நகராட்சிக்கு, 16.880 கிலோமீட்டர் நீளமுள்ள புறவழிச்சாலை அமைக்கப்படும்.

❖ நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் காவல் உட்கோட்டத்திலுள்ள திட்டச்சேரி காவல் நிலையம் மற்றும் நாகூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கிராமங்களைப் பிரித்து, பொதுமக்களின் நலன் கருதி, நாகூர் வட்டம் திருக்கண்ணபுரத்தில் ஒரு புதிய காவல் நிலையம் தோற்றுவிக்க, இந்த அரசு பரிசீலனை செய்யும்.

அதுமட்டுமல்லாமல், நாகப்பட்டினம் மீனவப் பல்கலைக்கழகத்திற்கு, மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித்தலைவி அம்மாவின் பெயர் சூட்டப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஓரடியம்புலம் மீனவக் கல்லூரிக்குப் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயர் சூட்டப்படும். அதேபோல, புதிதாக தொடங்கப்பட்ட சீர்காழி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய பெயர் சூட்டப்படும் என்பதை, இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில், இன்றைக்கு பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இங்கே நான் சுட்டிக்காட்டிய அத்தனை திட்டங்களும் நிறைவேற்றப்படும். ஆனால், எதிர்க்கட்சி இன்றைக்குக் கேட்கிறார்கள், “இந்த ஆட்சியிலே எதுவுமே செய்யவில்லை! சட்டமன்றத்திலே. சட்டமன்ற விதி எண். 110இன்கீழ், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதுவும் செயல்படுத்தவில்லை!” என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களில், பெரும்பாலான திட்டங்கள் அவரிருந்தபோதே நிறைவேற்றப்பட்டன. அம்மா மறைவிற்குப் பிறகு, அம்மா விட்டுச் சென்ற அந்தப் பணிகள் அனைத்தையும் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது என்று, பெருமையோடு இந்த நூற்றாண்டு விழாவிலே குறிப்பிட விரும்புகிறேன் அத்துடன் மிகச் சிறப்பாக, எழுச்சியாக, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் நூற்றாண்டு விழா நடைபெற அரும்பாடுபட்ட இந்த மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தர், மாவட்ட அமைச்சர் திரு. ஓ.எஸ்.மணியன் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் உளமாற நன்றியைத் தெரிவித்து, அதே நேரம் இந்த நூற்றாண்டு விழா, சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அரசு அதிகாரிகளுக்கும், இங்கு வருகை தந்திருக்கின்ற அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்!

நன்றி, வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

20.09.2017 அன்று, நாகப்பட்டினத்தில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

பாதையோரத்துப் பாட்டிகளுக்கும் படிஅளந்த கர்ணமகாராசருக்குக் கிருஷ்ணகிரியில் நூற்றாண்டு விழா

பொற்கால ஆட்சி தந்த பொன்மனச் செம்மல்!

ஏழரைக் கோடி தமிழ் நெஞ்சங்களிலே வீற்றிருந்து, ஒன்றரைக் கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர்மூச்சாக விளங்கிய இந்த மண்ணிலே மறைந்தாலும், நம் இதயங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, உழைப்பால் உயர்ந்த உன்னத தலைவர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுச் சீடன், அறிஞர் அண்ணா அவர்களின் இதயக்கனி, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசியல் ஆசான், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், ஏழைகளின் இதயதெய்வம், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு, உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த இனிய விழாவில், தலைமையேற்று தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! இந்த இனிய விழாவில் சிறப்பாக உரையாற்றி, இந்த மாவட்ட மக்களுக்குத் தேவையான நீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று குரல் கொடுத்த மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! முன்னிலையுரை ஆற்றி, என்னென்ன திட்டங்கள் இந்த மாவட்டத்திற்குத் தேவை என்று கோடிட்டுக்காட்டிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே!

இந்த நிகழ்ச்சியில், வரவேற்புரையாற்றிய தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை தலைமைச் செயலாளர் திரு. இரா வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்களே! வாழ்த்துரை வழங்கிய கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. அசோக்குமார் அவர்களே! ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. மனோரஞ்சிதம் அவர்களே! பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி.வி. ராஜேந்திரன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சி. கதிரவன் அவர்களே! நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக் கழக நிருவாகிகளே, இந்த சிறப்பான நிகழ்ச்சியில் பங்குபெற்று, சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் அமைச்சர், இந்த மாவட்டத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய திரு.கே.பி.முனுசாமி அவர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ மாணவிகளே! நலத்திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ண தேவராயரின் ஆட்சியின்கீழ், இருந்ததால், இது கிருஷ்ணகிரி என அழைக்கப்படுவதாகக் கருதுவர். ‘கிரி’ என்றால் மலை எனப் பொருளாகும். கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்ட கிருஷ்ணகிரி கோட்டை பல போர்களைக் கண்ட கோட்டையாகும். இன்றைக்கும் இந்த கோட்டை கொத்தளம் வலுவாகவும், வடிவாகவும் உள்ளது. இந்தியத் தொல்லியல் துறையால் ‘பராமரிக்கப்படும் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அது இருக்கிறது. 1824ஆம் ஆண்டு, ஆயிரத்து 642 ஏக்கர் பரப்பளவில், ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்ட குதிரை வளர்ப்பு மையம் இன்று ஆசியாவில் உள்ள பெரிய கால்நடைப் பண்ணைகளில் ஒன்றாக மாறியிருக்கிறது.

அழகான குன்றுகள், மலைகள், குளுமையும்
பசுமையும், இயற்கைச் சூழலும் நிறைந்த
‘தளி’ என்ற ஊரை ஆங்கிலேயர்கள்
‘குட்டி இங்கிலாந்து’ என்று அழைத்தது
கிருஷ்ணகிரிக்குக் கிடைத்த பெருமையாகும்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தருமபுரி மாவட்டத்தைப் பிரித்து, 2000ஆம் ஆண்டு கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்கி, இந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'சிப்காட்' தொழில் வளாகம் மற்றும் சிட்கோ தொழிற் பேட்டைகளும், டி.வி.எஸ், அசோக் லேலண்டு, டைட்டன் போன்ற பெரிய தனியார் தொழில் நிறுவனங்களும் அமைந்துள்ள ஒசூர் நகரம் சிறந்த தொழில் நகரமாக வளர்ச்சியடைந்துள்ளது.கடந்த 2014ஆம் ஆண்டு, சூளகிரி வட்டத்தில் இரண்டு சிப்காட் தொழில் வளாகங்கள் துவங்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு தற்போது நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒசூர் அருகே புதிய விமான நிலையம் அமைக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன, விரைவாக இந்த சேவை தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், பர்கூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலமைச்சராகப் பணியாற்றியபோது, போச்சம்பள்ளி தாலுக்காவை உருவாக்கினார்கள். மேலும் ஐ.ஆர்.டி. தொழில்நுட்பக் கல்லூரி, கனிம ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை, கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையம், அரசு பொறியியல் கல்லூரி, மகளிர் அரசு கலைக் கல்லூரி ஆகிய பல்வேறு திட்டங்களை கொண்டுவந்து இந்தப் பகுதிக்குப் பெருமை சேர்த்தவர் என்பதை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 1993ஆம் ஆண்டு தொடங்கி, ஜுன், ஜுலை மாதங்களில் தொடர்ந்து நடைபெறும். கிருஷ்ணகிரி மாம்பழத்திருவிழா மிகவும் பிரபலமானது. கிருஷ்ணகிரி பாகலூரில் உள்ள ரோஜா தோட்டங்களிலிருந்து பெறப்படும் ரோஜா மலர்கள், உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மழைநீரைச் சேமிக்கும் நெடுங்கல் நீர்த்தேக்கம், ராம நாயக்கன் ஏரி, பாரூர் ஏரி உள்ளிட்ட ஏரிகளும், தென்பெண்ணையாறு, மார்கண்டேய ஆறு போன்ற ஆறுகளும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயத்தைச் செழிக்க வைக்கின்றன. கிருஷ்ணகிரி, ஒசூரில் அமைந்துள்ள சந்திரசூடேஸ்வரர் கோயில், 2,500 ஆண்டுகள் பழமைவாய்ந்த காட்டு வீர ஆஞ்சநேயர் திருக்கோயில், 500 ஆண்டுகள் பழமையும் பெருமையும் வாய்ந்த தேன்கனிக்கோட்டை பேட்ராய சுவாமி திருக்கோயில், போன்ற திருத்தலங்களையுடைய புனித மண் கிருஷ்ணகிரியாகும். சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலும், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சருமான மூதறிஞர் இராஜாஜி அவர்கள், இந்த மாவட்டத்திலுள்ள தொரப்பள்ளி என்ற ஊரில் பிறந்தவர். கிருஷ்ணகிரி மாவட்டம் எப்போதும் உழைப்பாளர் பெருமக்களின் வியர்வையில் நனைந்து கொண்டிருக்கின்ற பூமி.

உழைக்கும் மனிதனையும், உழைப்பாளர்கள் நிறைந்த ஊர்களையும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். "நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே!" என்றும் "உடல் உழைக்கச் சொல்வேன் – அதில் பிழைக்கச் சொல்வேன்!" என்றும், "உழைத்து வாழ வேண்டும் – பிறர் உழைப்பில் வாழந்திடாதே" என்றும் உழைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், தனது பல படங்களில் உழைப்பின் மேன்மையைக் குறிப்பிட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி. ஆர் அவர்கள்.

அந்த வகையில் மனித ஆற்றல் மிக்க கிருஷ்ணகிரி மாவட்டத்தை மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதிகம் விரும்பியதில் எந்த ஆச்சரியமும் இல்லை. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உழைப்பின் அருமையும் பெருமையும் உணர்ந்தவர்கள். காரணம், தாம் ஒரு பணக்காரக் குடும்பத்தில் நீதிபதியின் ஐந்தாவது மகனாகப் பிறந்தாலும், சூழ்நிலை சரியில்லாத காரணத்தால், ஏழையாக, வறுமையில்தான் வளர்ந்திருக்கிறார்கள். ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் இவை மூன்றையும். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தம் இளமையில் தன்னிறைவாகப் பெற, கடுமையாக உழைக்க வேண்டியதாயிற்று. இலங்கையில் தந்தையையும், கூடப்பிறந்த 2 சகோதரிகளையும், ஒரு சகோதரனையும் இழந்து, மீதியிருந்த ஒரே சகோதரரான திரு.எம்.ஜி.சக்கரபாணியுடனும், தாயுடனும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள்.

தன்னை நம்பி வந்தவர்களைத் தமிழ் நாடு, என்றைக்குமே ஏமாற்றியது கிடையாது! இன்றைக்கு மட்டுமல்ல, பழங்காலத்திலியிருந்தே தமிழர்கள் தங்களை நம்பியவர்களை வரவேற்று, உபசரித்து வாழவைப்பவர்கள் என்பதை, நமது தமிழ் இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அதனால்தான், உழைக்கும் மனிதர்கள்,உண்மையான மனிதர்கள், வாழத்தகுந்த உன்னதமாநிலமாக,அன்றிலிருந்துஇன்றுவரைதமிழ்நாடுவிளங்கிவருகிறது!'உயர்ந்த கல்விகற்கும்போதே,உழைக்கும்கல்வியையும்மாணவர்கள்கற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான், வாழ்க்கை நன்கு அமையும்' என்ற வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், திரைத்துறையில் கடுமையாக உழைத்து முன்னேறிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் நடந்த ஒரு நிகழ்வை, இங்கே நினைவுகூற விரும்புகிறேன் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொல்கத்தாவிற்குப் படப்பிடிப்பிற்குச் சென்றிருந்தார்கள்.

படப்பிடிப்பு இல்லாத நாட்களில், தம் வீரத்தைக் காட்ட அகலமான சாக்கடைகளைத் தாண்டி சாகசம் செய்த போது, ஒரு கால் செருப்பு அறுந்து விட்டது. உடனே மற்றொரு கால் செருப்பையும் தூக்கி எறிந்து விட்டு, வெறுங்காலோடு நடந்து கொண்டிருந்தார்கள். மறுநாள் படப்பிடிப்புக்கு, புதுச் செருப்பு வேண்டுமென்று அன்று

மாலை திரு.கலைவாணர் அவர்களிடம் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்டார்கள். திரு. கலைவாணர் அவர்கள் ஒரு பொட்டலத்தை எடுத்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் நீட்டினார்கள். அதில் திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் காலையில் தூக்கி எறிந்த செருப்பு தைக்கப்பட்டு, பாலிஷ் போட்டு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்!

“நீ இன்னும் பெரிய நடிகன் ஆகவில்லை அதனால்; காசை வீணாக்காதே! உன் அம்மா உன்னை பெரும் கஷ்டப்பட்டு வளர்க்கிறாள்” என்று திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கு திரு. கலைவாணர் அவர்கள் அறிவுரை சொன்னார்கள். தாம் ஒரு ஆரம்பகால நடிகனாக இருந்தபோது, மாற்று செருப்புகூட இல்லாமல், அனுபவித்த துன்பத்தின் வலியை எப்போதும் நினைவில் வைத்திருந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமக்கு ஏற்பட்ட இந்தத் துயரம், வேறு எவருக்கும் ஏற்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்!

பிற்காலத்தில், இலவசக் காலணித் திட்டத்தை கொண்டு வந்து, ஏழை, எளிய மக்களின் கஷ்டத்தைப் போக்கியவர் புரட்சித்தலைவர் அவர்கள். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், இளம் வயதில் தம் தாயுடன் பட்ட கஷ்டங்களை, பின்னாளில் நினைவுகூர்ந்து, தாம் முதலமைச்சராக இருக்கும்போது அதற்கேற்றவாறு மக்கள் நலதிட்டங்களைச் செயல்படுத்தினார்கள். அதற்கு உதாரணமாக, அவரது வாழ்வில் நடைபெற்ற ஒரு நிகழ்வை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மக்கள் திலகம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் விழுப்புரம் வழியாக காரில் சென்று கொண்டிருக்கும் போது, திடீரென ஒரு ‘பெட்ரோல் பங்க்’ அருகில், காரை நிறுத்தச் சொல்கிறார். தம் உதவியாளரை அழைத்து “இடதுபுறமாக இருபது கடை தாண்டி ஒரு பாட்டி வடை சுட்டுக் கொண்டிருப்பார், அவரிடம் வடை வாங்கிக் கொண்டு

காரில் ஏறும் போது, அந்தப் பாட்டியின் கையில் ரூபாயைக் கொடுக்காமல் அங்கு வடை வைத்திருக்கும் கல்லாவில் போட்டுவிட்டு வந்துவிடு'' என்று கூறினார்கள்.

அந்த உதவியாளரும் அப்படியே செய்தார். தனக்கு திடீரென இருநூறு ரூபாய் கிடைத்ததும் வடை சுடும் பாட்டி திகைத்தார், அதைக் கண்ட நம் வள்ளல் புன்முறுவல் பூத்தார், காரும் புறப்பட்டு சென்று விட்டது.உதவியாளர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் ஏன் அந்தப்பாட்டிக்கு 200 ரூபாய் கொடுத்தீர்கள்? என வியப்புடன் கேட்க, அதற்கு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், ''அந்த 200 ரூபாய் வடைக்கு இல்லை, அந்தப் பாட்டியோட தன்னம்பிக்கைக்கும், தளராத முயற்சிக்கும்! இந்த வயதிலும் சுயமாக உழைச்சுப் பிழைக்கிற அந்த வயதான தாயை கௌரவிக்கவும் ஆசைப்பட்டேன், அதற்காகத்தான்!'' என்றார்.

இப்படியே ஒவ்வொரு முறை விழுப்புரத்தைத் தாண்டும் பொழுதும், வடை வாங்குவதும், 200 ரூபாய் போடுவதும் ஒரு வழக்கமாகவே இருந்து வந்தது. இந்த மாயாஜால வித்தையால் குழம்பிய பாட்டி யார் மூலம் பணம் வருகிறது என்பதைக் கண்டறிய எண்ணினார். ஒருநாள், இதே போல் உதவியாளர் பாட்டியிடம் வடை வாங்கி பணத்தைப் போட முயற்சித்த போது பாட்டி அந்த இருப்பிடத்தில் இல்லாததைப் பார்த்துத் திடுக்கிட்டு சுற்று முற்றும் பார்த்தார்.

அங்கே புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைக் காரில் பார்த்து அடையாளம் கண்டு கொண்ட அந்த மூதாட்டி கண்ணீர் மல்க, ''என் மகராசா! நீங்களா இத்தனை வருசமா இந்த ரோட்டோரமா நான் சுட்ட வடையை விரும்பி சாப்பிட்டீங்க? தினம் தினம் ஆயிரம் குடும்பங்களுக்குப் படியளக்கிற மகாராசா, நான் சுட்ட வடையை நீங்க சாப்பிட்டதற்கு நான் கோடிப் புண்ணியம் செய்திருக்கணும்.

ஆனா நீங்க லாட்டரி சீட்டுல பணம் விழுற மாதிரி ஒவ்வொரு முறையும் 200 ரூபாய் கொடுத்தது எனக்கு தர்மச் சங்கடமாயிருக்கு மகாராசா, என்றார். அதற்கு வள்ளல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ''நான் உங்களுக்கு கொடுத்ததை உங்க மகன் கொடுத்ததா நினைச்சுக்குங்க, சீக்கிரமா நான் அரசாங்கத்திடம் சொல்லி இதே பணத்தை மாசாமாசம் உங்களுக்கு பென்சனா தரச் சொல்றேன்'' என்று சொல்லி விடை பெற்றார்.

தமது வாக்குறுதிக்கேற்பத் தாம் முதலமைச்சரான பிறகு, முதியோர் பென்சன் திட்டத்தை அமலாக்கி அதன் மூலம் மாத உதவித் தொகை, நாள் தோறும் மதிய உணவு, ஆண்டிற்கு இரு முறை இலவச உடை ஆகியவற்றை நடைமுறைப்படுத்தி, வரலாறு படைத்தார் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்! இப்படி மக்களின் குறைகளைப் பார்த்துப் பார்த்துத் திட்டங்களைச் செயல்படுத்திப் பொற்கால ஆட்சி தந்தவர்தான் நம் பொன்மனச் செம்மல்!

இத்தகைய மகத்தான தலைவரை தமிழ்நாடு பெற்றதற்கும் அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கும் தமிழராகிய நாம் பெருமை கொள்ள வேண்டும்!

இத்தகைய மாபெரும் தலைவரின் வழியில் வந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகத் திட்டங்கள் தீட்டினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் இந்த அரசும், அந்தந்த மாவட்ட மக்களுக்கு ஏற்றாற்போல் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. அம்மாவினுடைய அரசு, கடந்த ஆறு ஆண்டுகளில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செய்த சாதனைகளைச் சொல்வதென்றால் நாட்கள் போதாது. ஆயினும், நேரம் கருதி, ஒரு சிலவற்றை பற்றி மட்டும் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய, 89 கோடியே 6 இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், 13 ஆயிரத்து 859 விவசாயிகள் இந்த மாவட்டத்தில் பயன் பெற்றனர்.

மகசூல் பாதித்த 66 ஆயிரத்து 111 விவசாயிகளுக்கு, 17 கோடியே 42 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 65 ஆயிரத்து 207 விவசாயிகளுக்கு, 81 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 123 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 79ஆயிரத்து 575 மடிக்கணிகள் இந்த மாவட்ட மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சரின், ‘பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், 194 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில், சூரிய மின் சக்தியுடன் கூடிய, 11 ஆயிரத்து 485 பசுமை வீடுகள் இந்த மாவட்டத்தில் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

‘தாய்’ திட்டத்தின்கீழ், 155 கோடியே 07 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 10 ஆயிரத்து 253 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 194 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 15 ஆயிரத்து 920 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

ஓசூர் பகுதியில், 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில், அரசு கலைக் கல்லூரி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது, ஊத்தங்கரை மற்றும் கெலமங்கலம் பகுதிகளில் பல்வகைத் தொழில் நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

‘குடிமராமத்து பணிகள் திட்டத்தின்’ கீழ், 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 27 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில், 23 மின் திட்டங்கள் மற்றும் புதிய மின்பாதை, மின் இணைப்பு வழங்கும் திட்டங்கள், 248 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், செயல்படுத்தப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையின்கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 386 கோடி ரூபாய் செலவில், 1,117.9 கி.மீ நீள சாலை பணிகள் முடிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 63 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 17 பாலங்கள், சாலை பணிகள், சிறு பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், 20 கோடி ரூபாய் மதிப்பில், புதியதாக தாய் சேய் நல பிரிவு தொடங்குதல், ஓசூர் அரசு மருத்துவமனைக்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், சி.டி.ஸ்கேன் கருவி வழங்குதல், ஓசூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையத்தில், 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதிய அறுவை அரங்கம் அமைத்தல் உட்பட 25 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று, நான் 66 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 441 பணிகளை தொடங்கி வைத்துள்ளேன்.

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் சார்பில், 182 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ள மின் நிலையங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், 92 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் உட்பட, 327 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். மேலும், 33 ஆயிரத்து 131 பயனாளிகளுக்கு 65 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 8 ஆயிரத்து 312 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 33 ஆயிரத்து 589 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், 3 ஆயிரத்து 130 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 555 பணிகளுக்கு, அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம், 11 ஆயிரத்து 443 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 40 ஆயிரத்து 144 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலினும், முன்னாள் அமைச்சர் பொன்முடியும் “இந்த ஆட்சியில் என்ன திட்டங்கள் கொண்டு வந்தீர்கள்!” என்று கேட்டார்கள். நான் செய்த அத்தனைத் திட்டங்களையும் பட்டியலிட்டு, இந்த மாவட்டத்திற்கு மட்டும் நான் சொல்லியிருக்கின்றேன். எனவே, எதிர்க்கட்சித்தலைவர் நாங்கள் என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்துள்ளோம் என்று தெரிந்து கொண்டு பேசவேண்டும். ஆகவே, வேண்டுமென்றே, ஏதாவதொரு பிரச்சினையைத் தூண்டி அதன் மூலம் ஆதாயம் பார்க்கப் பார்க்கின்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விழிப்போடு இருக்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய துணிவோடு செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டாலும், அம்மாவினுடைய அரசை அசைக்க முடியாது! இந்த அரசு, நாட்டு மக்களுடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற அரசு!

இப்படி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஆற்று நீரோட்டம்போல், தங்கு தடையில்லாமல் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது, அதைப் பாழ்படுத்தும் விதமாக, சிலர் மக்கள் விரோத போக்கை கடைபிடிக்கிறார்கள். சூழ்ச்சியின் மூலம், அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார்கள்; அது எப்போதும் எடுபடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சூழ்ச்சிகள் அரசியல் மூலம் ஆதாயம் பெற முயற்சிப்பது எடுபடாது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதைக் கூறுகின்றபோது எனக்கு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு காட்டில் ஓநாய் ஒன்று, தனக்கு எடுபிடியாக இருக்கும் நரியை அழைத்து, ‘எனக்கு உடல்நிலை சரியில்லை, இன்று என்னால் அலைந்து திரிந்து உணவு தேட முடியாது. ஏதாவது உணவு கொண்டு வா’ என்றது.

நரி கிராமத்து எல்லைக்குச் சென்றது. அங்கே நாட்டு எருது ஒன்று மறைந்து நின்று கொண்டிருந்தது. ‘மாமா, வணக்கம், ஏன் இங்கே மறைந்திருக்கிறீர்கள்’? என்று கேட்டுக் கொண்டே நரி எருதிடம் சென்றது. அதற்கு அந்த எருது, “எனது எஜமான் சுமையை வண்டியில் ஏற்றி ஓட்டுகின்றான். என் ஜோடி எருது அங்கு இருக்கிறது; என்னைக் காணாமல் அவன் திண்டாடட்டும் என்று இங்கே ஒளிந்து கொண்டிருக்கிறேன்”என்று எருது சோகத்துடன் கூறியது.

“ஊரெல்லாம் தேடி முடிச்சிட்டு, கழுதை கெட்டால் குட்டிச் சுவர் என்று இங்கே வந்து, உன்னை இழுத்து போய் விடுவான்” என்றது நரி, “அப்படியென்றால் நான் தப்பிக்கவே முடியாதா ? ” என்று கேட்டது எருது.

“ஏன் முடியாது ?, என்னோடு காட்டிற்குள் வா, நிறைய புல் வளர்ந்து கிடக்கிறது. வேலையே செய்யாமல், தீனி சாப்பிட்டுப் புஷ்டியாக இருக்கலாம்” என்று நரி எருதுக்கு ஆசை காட்டியது.

“காட்டில் சிங்கம் புலியெல்லாம் இருக்கும், ஓநாய் பார்த்தால் கடித்துக் குதறிவிடும் என்பார்களே, அங்கே வந்தால் எனக்கு ஆபத்தில்லையா ? ” என்றது எருது.“காட்டு மிருகங்களை நீ பார்த்திருக்கிறாயா ?” என்றது நரி “நான் இந்த கிராமத்தையே தாண்டியது கிடையாது” என்றது எருது.“உன்னைப் போன்ற எருதுகள் தான் காட்டில் திமுதிமுவென்று வளர்ந்திருக்கின்றன.

உன்னைப் பார்த்தால்தான் மற்ற விலங்குகளுக்கு பயம்”, என்றது நரி. நரி கூறியவற்றை நம்பிய எருது, நரியோடு காட்டுக்குச் சென்றது. நரி, ஓநாயிடம் ஜாடை காட்டியது.

ஓநாய் எருது மேல் வேகமாகப் பாய்ந்து குதறியது. எருதை மீண்டு எழாதவாறு காயப்படுத்திவிட்டு நரியிடம், “எருதைப் பத்திரமாகப் பார்த்துக்கொள் ! குளித்துவிட்டு

வந்து விருந்து உண்கின்றேன்'' என்று சொல்லி ஓநாய் பக்கத்திலிருந்த ஆற்றுக்கு குளிக்கப் புறப்பட்டது. நரிக்கு நாக்கு நமநமத்ததாலும், ஓநாய் குளித்துவிட்டு வந்துவிட்டால் எருதின் மூளை பாகம் தனக்கு கிடைக்காது என்பதால், ஓநாய் வருவதற்குள் எருதின் மூளையைத் தின்று விட்டது.

நீராடி வந்த ஓநாய், 'நீ எருதின் மூளையை ஏன் தின்றாய்?' எனக் கேட்டது.

'மூளையிருந்தால் இந்த எருது என்னை நம்பி என் பின்னால் வருமா? அதான் மூளை இருக்கிறதா என்று பார்த்தேன். நான் யூகித்தது சரிதான் அதற்கு மூளையில்லை' என்றது நரி,

அதை அந்த ஓநாய் நம்பியது, நரி தான் விரும்பியதை அடைந்து விட்டோம் என்ற திருப்தியில், ஏப்பம் விட்டபடியே அந்த இடத்தை விட்டு அகன்றது. இப்படித்தான் பலபேர் அந்த ஓநாய் மற்றும் நரியைப் போல ஆசை வார்த்தைகாட்டி அழைத்துவரச் சொல்லி, கடைசியில் அவர்களை அழித்து விடுகிறார்கள், எனவே, நீங்கள் யாருடைய வார்த்தை ஜாலங்களையும், ஆசை வார்த்தைகளையும் நம்பி, பலியாகிவிடாதீர்கள்!

உங்களுக்குத் தகுந்த இடம் இதுதான், நம்பிக்கையோடு இருங்கள். நீங்கள் எண்ணியது அத்தனையும் நிறைவேறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

குடிமராமத்து என்னும் திட்டம் விவசாயிகளின் கனவுத் திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றவிதமாக அம்மாவினுடைய அரசு விவசாயிகள் அரசு என்பதற்காக, விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற வண்டல் மண்ணை, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகளில் இருந்து அள்ளிக்கொள்ளலாம் என்ற ஆணையை வெளியிட்டது. அதன்படி, விவசாயப் பெருங்குடி மக்கள், தங்கள் பகுதியில் இலவசமாக வண்டல் மண்ணை அள்ளி, நிலத்திற்கு எருவாகவும், அடிஉரமாகவும் இட்டு, மகிழ்ச்சியடையக்கூடிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு!

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மக்களவைத் துணைத்தலைவர் அவர்களுடைய கோரிக்கையின்படி, நீர்வளம் காக்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் திட்டத்தில், தடுப்பணை கட்டப்படுமென்ற அறிவிப்பைத் தந்த அரசு என்பதை இந்த நேரத்திலே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். இத்திட்டத்தின் மூலம் ஆறுகள், ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்படும். இந்த ஆண்டு, ரூபாய் 350 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டுவதற்கு அரசு திட்டமிட்டிருக்கின்றது. ஆகவே, மீதமுள்ள ரூபாய் 650 கோடியில், எஞ்சிய தடுப்பணைகள், இரண்டாண்டுகளில் கட்டப்பட்டு, ஒரு சொட்டுகூட வீணாகாமல், பாசனத்திற்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒரு மனிதனுக்கு உயிர் எப்படியோ, அப்படி விவசாயிகளுக்கு, நீர் உயிர் போன்று தேவைப்படுகின்றது. அந்த

நீர், ஒரு சொட்டுகூட வீணாகாமல் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கின்றேன். விவசாயம், தொழில் வளம் இரண்டும் சேர்ந்த மாவட்டம் இந்த கிருஷ்ணகிரி மாவட்டம்.

தமிழகத்தில், இன்றைக்கு பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாக, 140 ஆண்டுக்காலம் இல்லாத கடுமையான வறட்சி தற்போது நிலவி வருகிறது. இதனால் அணைகள், ஏரிகள், குளங்களிலே போதிய நீர் இல்லை. குடிப்பதற்குக்கூட நீர் இல்லை. அதற்காக அரசு, போர்க்கால நடவடிக்கையில், ரூபாய் 500 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து முதற்கட்டப் பணிகள் தொடங்கப்பட்டன. குடிநீர்ப் பிரச்சினை இல்லாமல், தகுந்த ஏற்பாடுகளை விரைந்து செய்து பார்த்துக் கொண்டது அம்மாவினுடைய அரசு.

இன்றைக்கு கல்வியிலே ஒரு புரட்சியை புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டமாகையால், விவசாயிகளின் குழந்தைகளுக்கு நல்ல கல்வி அறிவு கிடைத்து, அவர்கள் சிறந்த கல்வியாளர்களாக விளங்க வேண்டுமென்பதற்காக, அம்மாவினுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது. இந்த ஆறாண்டுகளில் மட்டும் 41,727 ஆசிரியர்கள், 58 சிறப்பாசிரியர்கள், 4,362 ஆய்வக உதவியாளர்கள், 15,169 பகுதிநேர ஆசிரியர்கள் பணியிடங்களை உருவாக்கி கல்வியில் ஒரு புரட்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்திய அரசு அம்மாவினுடைய அரசு!

நம்முடைய கிராமத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்குச் சிறந்த கல்வி கிடைக்க, புதிய, புதிய பள்ளிகளை ஏற்படுத்தி, மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க வேண்டுமென்பதற்காக, அம்மாவினுடைய அரசால், 227 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடகப்பட்டுள்ளன. 116 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இப்படிப் பல்வேறு நலத்திட்டங்களைப் பள்ளி மாணவர்களுக்கு அளித்ததன் விளைவாக, தொடக்க நிலைக் கல்வியில், மாணவர் சேர்க்கை 99.85 விழுக்காடாகவும், நடுநிலைக் கல்வியில் மாணவர் சேர்க்கை, 99.20 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது.

அதேபோல அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசும், 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்து, ஏழை, எளிய, சமூகத்திலே பொருளாதாரத்தில் பின்தங்கிய வசதியில்லாத குடும்ப மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி கற்பதற்குச் சிறந்த வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சிதான், மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, சட்டக்கல்லூரி இவற்றை உருவாக்கி மாணவச் செல்வங்களிடையே உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியுள்ளது.

அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக 2011இல் பதவியேற்றபொழுது, உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை 100க்கு 21 சதவீதம் தான் இருந்தது. மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான், உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே புரட்சி நடவடிக்கையை மேற்கொண்டு, எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்ததன் விளைவாகத்தான், 2016ஆம் ஆண்டு, உயர்கல்வி சேர்க்கை விகிதம் 44.32 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. 100–க்கு 21 பேர் படித்த எண்ணிக்கை, 44 ஆக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், எத்துணையளவு அம்மா அவர்கள் கல்வியிலே கவனம் செலுத்தியிக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்! அதேபோல, இன்றைக்கு நம்முடைய பாடத்திட்டத்திலே மாற்றம் கொண்டு வரவேண்டும் என்பதற்காக, 2018–2019 கல்வியாண்டிலே, 1ஆம் வகுப்பு, 6ஆம் வகுப்பு, 9ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பிலும், 2019–2020 கல்வியாண்டிலே, 2, 7, 10 மற்றும் 12ஆம் வகுப்புகளிலும், 2020–2021ஆம் கல்வியாண்டிலே, 3, 4, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளிலும் பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டு, சிறந்த மாணவர்களை இந்த அம்மாவினுடைய அரசு உருவாக்கிக் காட்டும் என்பதைத் தெவித்துக் கொள்கிறேன்.

2011–2012ஆம் ஆண்டில், இரண்டாம் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், 2011ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை, நான்கு முறை, 100 இலட்சம் 'மெட்ரிக்' டன்னுக்கும் அதிகமாக, உணவு தானியம் உற்பத்தி செய்து தமிழ்நாடு உயரிய சாதனை படைத்துள்ளது. இதற்கென, மத்திய அரசிடமிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகம் நான்கு முறை "கிருஷி கர்மான்" விருதினைப் பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து முதன்முறையாகத் தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில்தான், உலக முதலீட்டாளர் மாநாடு, 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 தேதிகளில், சென்னையில் நடைபெற்றது. இதில் 1,200 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், 5,000 இந்தியப் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். 76 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் நேரடி மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மீதமுள்ள ஒப்பந்தங்களைத் துரிதப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தொழில் துறையில் ஒரு நாடு முன்னேற வித்திட்டு, அடித்தளமாக விளங்கிய ஒரு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தாம்! தமிழகத்திலே, ஒரு தொழிற்சாலை நகரம் உருவாக்குவதற்கு, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்ததன் மூலமாக, இப்படிப்பட்ட தொழிற்சாலை நம்முடைய மாநிலத்திற்குக் கிடைத்தது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்திலே திமுக ஆட்சி நடைபெற்றது, எதையுமே செய்யவில்லை. மத்தியிலே, ஆட்சி அதிகாரத்திலே, 1996 முதல் 2014 வரை ஆட்சி அதிகாரத்திலே இருந்தார்கள்.

தி.மு.க., காங்கிரஸ் ஆட்சியிலும், பாரதீய ஜனதா ஆட்சியிலும் பங்கு பெற்றார்கள். அப்பொழுதெல்லாம் தமிழ்நாட்டைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தார்கள். அவர்கள், தமது குடும்பத்தைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள், எந்த இலாகாவை வாங்கலாம், மகனுக்கு வாங்கலாமா? பேரனுக்கு வாங்கலாமா? இதுதான் அவர்கள் மனதிலே இருந்தது! ஆனால், தமிழ்நாட்டு மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை! மாண்புமிகு துணை முதலமைச்சர் குறிப்பிட்டதைப் போல, நீண்டகாலமாக இருந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தீர்வுகான, மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுதே இதை வலியுறுத்தியிருந்தால், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்கும்.

ஆகவே, “இருக்கின்றபொழுது என்ன சாதித்தோம் என்பதுதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இலட்சியம்!” என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான், சாதாரணத் தொண்டனும் கூட, உயர்ந்த நிலைமைக்கு வரமுடியும் என்று மக்களவை துணைச் சபாநாயகர் தெரிவித்தார். அது உண்மை! வேறு எந்த ஆட்சியிலும் வரமுடியாது! திமுக வில் வாரிசு அரசியல் தான் இருக்கும். அப்பா, மாவட்ட செயலாளராக இருப்பார்; மகன் சட்டமன்ற உறுப்பினராக வருவார்! மற்ற கட்சிகளிலெல்லாம் மிராஸ்தார், தொழிலதிபர்கள்தாம் சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் வரமுடியும், அமைச்சராக முடியும். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய ஆட்சிக்காலத்திலும்

சரி, புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலும் சரி, இந்த இயக்கத்திற்கு விசுவாசமாக, உண்மையாக உழைக்கின்ற சாதாரணத் தொண்டன் கூட, உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்ற நிலை அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக கட்சியில்தான் இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டிய இயக்கம், நமது இயக்கம்! இந்த இயக்கத்தை அழித்துவிடுவோம்!'' என்று சிலபேர் எண்ணுகிறார்கள், இந்த இயக்கம் ஒன்றரை கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கட்டப்பட்ட எஃகு கோட்டை. இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினால் கட்டப்பட்ட எஃகு கோட்டையுடன் மோதினால், மோதுகின்ற தலைதான் உடையுமே தவிர, கோட்டை என்றும் உடையாது. அதேபோல, இன்னும் சிலபேர் இந்த ஆட்சியை சதி செய்து கவிழ்த்துவிடலாம் என்று வஞ்சக எண்ணத்தோடு எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஒருபோதும் நடக்காது. ஏனென்று சொன்னால், இந்த அரசு மக்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிற அரசு; மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசு! ஆகவே, இந்த அரசை நீங்கள் எந்தக் காலத்திலும் அசைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிதான், நிறைய திட்டங்களை கொடுத்திருக்கிறது. இன்றும் ஒரு சிலர், ஏதாவது குழப்பத்தை உருவாக்கி, அந்தக் குழப்பத்தின் வாயிலாக அரசுக்கு நெருக்கடி உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் சதிசெய்து கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆட்சியிலே, சட்டம், ஒழுங்கு சீர்கெட்டிருப்பதாகச் சொல்கின்றார்கள். இவர்கள் ஏதாவது பேராட்டத்தை அவிழ்த்து விட்டுவிட்டு, அதில் ஏதாவது பிரச்சினை வெடித்து, இந்த அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி, அதன் விளைவாக, ஏதாவது பிரச்சினை உருவாகாதா என்று ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள், ஒருபோதும் நடக்காது. ஏனென்றால், மக்கள் அம்மாவினுடைய அரசு பக்கம் இருக்கின்றார்கள்! மக்கள் இந்த அரசை, அரணாக இருந்து பாதுகாத்துக் கொண்டிக்கும் வரை நீங்கள் இந்த அரசு ஒன்றும் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது. ஆகவே, உங்கள் எண்ணமெல்லாம், பகல் கனவாகத்தான் இருக்கும், கானல் நீராகத்தான் இருக்கும். எனவே, நீங்கள் ஆக்கப் பூர்வமான ஆலோசனையைத் நீங்கள் தருவீர்களானால், நிச்சயமாக அம்மாவினுடைய அரசு அதை ஏற்றுச் செயல்படும்! புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆருடைய கனவை, அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். அம்மா விட்டுச் சென்ற பணியை, இந்த அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செய்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது.

இங்கே நம்முடைய மாவட்ட அமைச்சர் அவர்களும், உங்களுடைய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் முன்னோடியான, கழக நிருவாகிகளும் பல்வேறு கோரிக்கைகளை என்னிடத்திலே கொடுத்தார்கள். அந்த கோரிக்கையில் ஒரு சிலவற்றை அரசு நிறைவேற்றுமென்ற அறிவிப்பை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அறிவிப்புகள்

அலியாளம் அணைக்கட்டு வலதுபுறக் கால்வாய் நீட்டிப்புச் செய்தல்

❖ கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அலியாளம் பகுதியில் ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டிலிருந்து ஏற்கெனவே ஒரு வலதுபுறக் கால்வாயானது 8,960 மீட்டர் தொலைவிற்குக் கட்டப்பட்டுள்ளது. இதில் 8,800 மீட்டர் தொலைவிலிருந்து, புதியதாக 19.85 கிலோ மீட்டர் நீளத்திற்கு, பிரதானக் கால்வாயும், 1.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு கிளைக்கால்வாய் அமைக்கப்பட்டு, வெள்ளக் காலங்களில் வரக்கூடிய உபரி நீர் ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டங்களில் உள்ள 12 ஏரிகளுக்குக் கொண்டுசெல்லப்படுகிறது. தருமபுரி மாவட்ட மக்கள் வேண்டுகோளினை ஏற்று, அங்கு உள்ள தூள்செட்டி ஏரிக்கு நீர் கொண்டு செல்லவும், வழிவகை செய்யப்படுகிறது. இதன் மூலம் 869 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இந்தப்பணி உடனடியாக நிறைவேற்றப்படும்.

❖ அதேபோல, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலக்கட்டத்திலே, என்னிடம் கொல்புதூர் கால்வாய் வெட்ட ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தார்கள். அம்மாவினுடைய ஆட்சியிலே, முதற்கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

அரசம்பட்டி மற்றும் பெண்டரஅள்ளியில் தடுப்பணைகள்

கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அரசம்பட்டி மற்றும் பெண்டரஅள்ளி ஆகிய இரு இடங்களில் தடுப்பணைகள் கட்டித் தரப்படும்.

கொடியாளம் அணைக்கட்டிலிருந்து 25 ஏரிகளுக்கு மின்விசைப்பம்பு மூலம் நீரேற்றம் செய்ய ஆய்வு மேற்கொள்ளுதல்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், பெண்ணையாற்றின் குறுக்கே கொடியாளம் பகுதியில், ஏற்கெனவே ஓர் அணைக்கட்டு உள்ளது. இந்த அணைக்கட்டின் அருகே ஒரு கிணறு அமைத்து, அதிலிருந்து மின் விசை பம்ப் மூலம், குழாய் வழியாக நீரேற்று முறையில், சுமார் 25 ஏரிகளுக்கு நீரினைக் கொண்டு செல்வதற்காக உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு நிலத்தடி நீர் செறிவூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புதிய நீர்வரத்துக் கால்வாய் அமைக்க ஆய்வு

கிருஷ்ணகிரி மாவட்டம் தாமோதரஹள்ளி ஊராட்சியிலுள்ள சந்தனூர் ஏரியிலிருந்து, பாப்பாரப்பட்டி ஊராட்சி கொட்டாவூர் ஏரிக்குப் புதியதாக நீர்வரத்து

கால்வாய் அமைக்கவும் கும்பாரஹள்ளி ஊராட்சியிலுள்ள பச்சனம்பட்டி ஏரியிலிருந்து பட்டகரஹள்ளி ஏரிக்குப் புதியதாக நீர்வரத்துக் கால்வாய் அமைக்கவும், ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

பொதுப்பணித்துறைக்குப் புதிய அலுவலகங்கள்

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, கிருஷ்ணகிரியை தலைமை இடமாகக் கொண்டு ஒரு புதிய கட்டடக் (கட்டடம் மற்றும் பராமரிப்பு) கோட்டம் உருவாக்கப்படும்.

சூளகிரி புறவழிச்சாலை

சூளகிரி நகருக்குப் புறவழிச்சாலை அமைக்கப்படும். இப்புறவழிச்சாலைக்கு 4 இலட்சம் ரூபாய் செலவில், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் பணி நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாத்தகோட்டா சாலையில் உயர்மட்டப் பாலம்

வி.சி.சி சாலை முதல் பாத்தகோட்டா சாலை கி.மீ.2/6ல், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே, உயர்மட்டப் பாலம், 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

ஒசூர் நகருக்கு வெளிவட்டச் சாலைக்கான நில எடுப்பு பணி

ஒசூர் நகருக்கு வெளிவட்டச் சாலை அமைக்க, 145 கோடி ரூபாய்க்கு நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

தளி சாலையில், இரயில்வே மேம்பாலம் அமைக்கத் திட்ட அறிக்கை

ஒசூர் மற்றும் ஆனைக்கல் இரயில் நிலையங்களுக்கு இடையில், தளி சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்திடத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்றாம்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி ஊராட்சி ஒன்றியத்தில் அமைந்துள்ள நாட்றாம்பாளையம் கிராமம் மலைப்பகுதியில் அமைந்துள்ளதால் பொதுமக்கள் தற்போது சுகாதாரத் தேவை பெறுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அப்பகுதி மக்கள் நலன் கருதி, நாட்றாம்பாளையம் கிராமத்தில் ஒரு புதிய ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

புதிய துணை இயக்குநர் (குடும்பநலம்) அலுவலகம்

கிருஷ்ணகிரி மாவட்டம் பிரிந்த பிறகும், சுகாதாரத்துறை குடும்ப நலத் துணை இயக்குநர் அலுவலகமானது தொடர்ந்து தருமபுரியிலேயே இயங்கி வருகிறது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு எனத் தனியாக, ஒரு துணை இயக்குநர் (குடும்ப நலம்) அலுவலகம் அமைக்கப்படும்.

ஒசூர் நகரம் அருகே வர்த்தக ஊக்குவிப்பு மையம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் நகரமானது வளர்ந்து வரக்கூடிய ஒரு தொழில் நகரமாகும். இங்கு ஆட்டோமொபைல் உற்பத்தித் தொழிற்சாலைகள், எலக்ட்ரானிக்ஸ் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், விமான உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியன செயல்பட்டு வருகின்றன. இத்துடன் கிரானைட் மெருகூட்டும் தொழிலும் உலக அளவில் பெருமைப்படத்தக்க வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும், கொய் மலர், பட்டு, மாங்கூழ் போன்ற பல விவசாயம் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் தொழில்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டு, ஓசூர் – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் சூலகிரி அருகே 'சிட்கோ' மற்றும் தொழில் மற்றும் வர்த்தக சங்கங்களை ஒருங்கிணைந்து ஒரு வர்த்தக ஊக்குவிப்பு மையம் உருவாக்கி இயங்கவைக்கப்படும்.

ஒசூரை மாநகராட்சியாக தரம் உயர்த்துதல்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் நகராட்சி, கடந்த 2012ஆம் ஆண்டு முதல், சிறப்புநிலை நகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. நகரமயமாக்குதல் காரணமாக ஓசூர் நகராட்சியை ஒட்டியுள்ள அச்செட்டிபள்ளி, பேகேப்பள்ளி, சென்ன சந்திரம், கொத்தகொண்டப்பள்ளி, நல்லூர், ஒன்னல்வாடி, தொரப்பள்ளி அக்ரஹாரம், பேரண்டப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகளை சேர்த்து ஓசூர் நகராட்சியை, மாநகராட்சியாகத் தரம் உயர்த்திவைக்கப்படும். இதனால், இப்பகுதி மக்களுக்கான அடிப்படைக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும்.

கிருஷ்ணகிரியை, சிறப்பு நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்துதல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி நகராட்சியானது, கடந்த 1984ஆம் ஆண்டு முதல், முதல்நிலை நகராட்சியாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது கிருஷ்ணகிரி நகராட்சிக்கு அருகிலுள்ள வெங்கடாபுரம், அகசிப்பள்ளி, தேவசமுத்திரம், காட்டிநாயனப்பள்ளி, கட்டிகானப்பள்ளி, பெத்தனப்பள்ளி, கள்ளக்குறிச்சி மற்றும் பையனப்பள்ளி ஆகிய 8 ஊராட்சிகளை, கிருஷ்ணகிரி நகராட்சியுடன் இணைத்து, சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், புதிய குடிநீர்த் திட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 6 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 425 குடியிருப்புகளுக்கு, முழுமையாக குடிநீர் வழங்கும்பொருட்டு, தென்பெண்ணை ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு, 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய குடிநீர் திட்டம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும். இதனால், 2 இலட்சத்து 42 ஆயிரத்து 668 பேர், நிரந்தர, பாதுகாக்கப்பட்ட குடிநீர் பெறக்கூடும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒசூர் விளையாட்டு அரங்கிற்கு, கூடுதல்விளையாட்டு அரங்கங்கள்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் விளையாட்டு அரங்கம், விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்கள் நலன் கருதி, தற்போது 400 மீட்டர் தடகள ஒடு பாதை, கால்பந்து மைதானம், கையுந்து பந்து ஆடுகளம், கபாடி ஆடுகளம் மற்றும் கோ–கோ ஆடுகளம் ஆகிய கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இவ்விளையாட்டு அரங்கில், கூடுதலாக ஒரு கூடைப்பந்து ஆடுகளம், இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கம், நடைபாதை மற்றும் உடற்பயிற்சி கூடம் அமைத்துத் தரப்படும்.

பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு, ராஜேந்திரன் அவர்கள், பல கோரிக்கைகளை தங்களது தொகுதிக்கு நிறைவேற்றித்தர வேண்டுமென்று, பட்டியலிட்டுக் கொடுத்திருக்கிறார். அதையெல்லாம் அரசு பரிசீலித்து, என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றக்கூடுமோ, அந்தந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, இவ்வளவு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், “இந்த அரசில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை! இந்த ஆட்சி நடக்கிறதா, இல்லையா என்று சந்தேகம்!” என்று சொல்லுகின்றார்கள். உங்களுக்கு எந்தச் சந்தேகமும் தேவையில்லை; தெளிவாகப் பார்த்துக் கொள்ளலாம். மேடையிலே அறிவித்திருக்கிறோம். அம்மாவினுடைய அரசு, என்னென்ன திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்று தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறோம்; அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம்! மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். மக்கள் அம்மா பக்கம் இருக்கின்றார்கள்; அம்மாவினுடைய அரசு பக்கம் இருக்கின்றார்கள்! ஆகவே, அம்மாவினுடைய அரசு தொடர்ந்து மக்கள் பணியாற்றும் என்பதைத் திட்டவட்டமாக, இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கும், அதற்குத் துணை நின்ற மாவட்ட அமைச்சர் மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டு, இந்த அரசு உங்களின் சேவகனாக தொடர்ந்து பணியாற்றும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்!

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித் தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*

23.09.2017 அன்று, கிருஷ்ணகிரியில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

‘ஒரு தாய் மக்கள் நாமென்போம்’ என்ற சமுதாயக் காவலருக்கு சேலத்தில் நூற்றாண்டு விழா

“எல்லோரும் ஒரே சாதிதான் அது மனித சாதி” என்றவர் புரட்சித்தலைவர்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்களே! முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மக்களவை துணைத்தலைவர் டாக்டர் தம்பிதுரை அவர்களே! வரவேற்புரை ஆற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. R. வெங்கடேசன் அவர்களே! முன்னிலை வகுத்து கொண்டிருக்கின்ற சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. பன்னீர் செல்வம் அவர்களே! நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களே! கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர்

டாக்டர் கே. காமராஜ் அவர்களே! மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. செம்மலை அவர்களே! சேலம் (மேற்கு) சட்டமன்ற உறுப்பினர் திரு. கோ. வெங்கடாசலம் அவர்களே! சேலம் (தெற்கு) சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.பி. சக்திவேல் அவர்களே! வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் திருமதி பி. மனோன்மணி அவர்களே! சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.ராஜா அவர்களே! ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். வெற்றிவேல் அவர்களே! ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்களே! கெங்கவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்களே! ஏற்காடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி கு.சித்ரா அவர்களே! தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே! சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத் தலைவர் திரு.ஆர்.சின்னுசாமி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே! தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்களே! அரசு தலைமைக் கொறடா திரு. இராஜேந்திரன் அவர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே! தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு. பி.கே.வைரமுத்து அவர்களே! நன்றியுரை ஆற்ற உள்ள சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரோஹிணி அவர்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, தலைமைக்கழக நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற கழகக் கண்மணிகளே! அரசு அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! பரிசு பெறுகிற மாணவ மாணவிகளே! நலத் திட்டப் பயனாளிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்திற்கென்று தனிச் சிறப்புகள் இருக்கின்றன.

வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத பெருமை சேலம் மாவட்டத்திற்கு உள்ளது. ஓமலூர் கருப்பூரிலே பிறந்து இவ்விழாவிலே தலைமை பொறுப்பு ஏற்றுள்ள திரு. ப. தனபால் அவர்கள் மாண்புமிகு சட்டப்பேரவை தலைவராகவும், அதேபோல எடப்பாடி தொகுதியிலே சிறுவன்குளத்தைச் சேர்ந்த நான் தமிழ்நாடு முதலமைச்சராகவும் பொறுப்பேற்றது இந்த மாவட்டத்திற்கு பெருமையும் மகிழ்ச்சியும் தரும் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு பதவிகளுமே உயர்ந்த பதவிகள்! இந்த இரண்டு பதவிகளையும் வகிக்கின்ற ஒரே மாவட்டம் சேலம் மாவட்டம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கும் கழக வேட்பாளராக, மாண்புமிகு அண்ணன் திரு.தனபால் அவர்கள் ஐந்து முறை சங்ககிரி தொகுதியிலே போட்டியிட, இரு பெரும் தலைவர்களும் வாய்ப்பளித்தார்கள்.

அண்ணன் அவர்கள் சங்ககிரி தொகுதியிலே நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றார். அம்மா அவர்களுடைய அமைச்சரவையிலே கூட்டுறவு அமைச்சராகப் பணியாற்றினார். மாண்புமிகு அம்மா அவர்கள், மாண்புமிகு அண்ணன் திரு. தனபால் அவர்களைத் துணைச் சபாநாயகராகவும், பிறகு இரண்டு முறை தொடர்ச்சியாக திரு. தனபால் அவர்களைச் சபாநாயகராக பணியமர்த்தி, மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்தவர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

சேலம் மாவட்டத்திற்குச் சிறப்பு சேர்க்கும் வகையில், மாண்புமிகு அண்ணன் தனபால் அவர்களுக்கு நிகர் அவரே என்பதை இந்த நேரத்திலே நினைவு கூறுவதைப் பெருமையாக தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல சேலம் மாவட்டத்திற்குச் சில பெருமைகள் இருக்கின்றன. அருள்மிகு அண்ணாமலையார், இந்த பூலோகத்தில் முதலில் தன் பொற்பாதத்தை வைத்த இடம் இந்த சேலம் மாவட்டத்தில் உள்ள கோதுமை மலை என்றும், இந்த கோதுமை மலையில் கால் வைத்து, மலை ஒரு பக்கம் சரிந்ததால் அதைச் சமப்படுத்த மற்றொரு பொற்பாதத்தைத் திருவண்ணாமலையில் வைத்ததாகவும், பிறகு இரண்டு திருப்பாதங்களையும் திருவண்ணாமலையில் வைத்து அங்கு ஜோதியாக அருளினார் என்றும் பக்தர்களால் நம்பப்படுகின்றது.

மாங்கனிக்கும், இரும்புக்கும், கனிமப் பொருள்களுக்கும் பெயர் பெற்றது சேலம் மாவட்டமாகும். சைலம் என்றால் மலைகள் சூழ்ந்த பகுதியாகும். சேலம் என்பது ‘சைலம்’ என்ற சொல்லிலிருந்து வந்தது என்றும், சேலைத் தொழிலுக்குப் புகழ் பெற்றதால், இது சேலையூர் என்றாகி, பிறகு காலப்போக்கில் ‘சேலம்’ என்று மருவியதாகவும் கூறுவர். இவ்வூரில் உள்ள மலையை சேரன் ஆண்டதால், ‘சேர்வராயன் மலை’ எனப் பெயர்பெற்றது.

ஏத்தாவூர் செப்பேடு, இவ்வூரை ‘சாலிய சேரமண்டலம்’ எனக் குறிப்பிடுகிறது. எனவே, இது ‘சேரலம்’ என இருந்து, பிறகு சேலம் என மாறியதாகவும் சில அறிஞர்கள் கூறுகிறார்கள். சேலம், மதுரை நாயக்கர்களாலும் ஹைதர் அலியாலும், லார்ட் கிளைவாலும் ஆளப்பட்டு இருக்கிறது. ஆங்கிலேயர்களின் இராணுவபடைத்தளமாகவும் சேலம் விளங்கியிருக்கிறது. 1808ஆம் ஆண்டு, திரு. இ.ஆர்.ஹார்கிரேவ் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த போது, இது சேலம் மாவட்டம் என அதிகார பூர்வமான பெயராக அறிவிக்கப்பட்டது. பின்னர், சேலம் மாவட்டத்திலிருந்து 1965ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டமும், பின்னர் நாமக்கல் மாவட்டமும் உருவாக்கப்பட்டன.

சேலத்திற்குப் பல பெருமைகள் இருக்கின்றன

★ வெள்ளிக் கொலுசு உற்பத்தியில் இந்தியாவிலேயே முதலிடம்.

★ கைத்தறித் துணி வகைகள் – பட்டு நூல், பட்டுசேலைகள் – இந்தியாவிலேயே, முதல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், சேலம் குகை பருத்தி பட்டு கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் 1930ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, இன்று வரை, இலாபத்துடன் செயல்பட்டு வருகிறது. ஆகவே, கூட்டுறவுத்

துறைக்கு இந்தியாவிலேயே முன் மாதிரியாக விளங்குகின்ற மாவட்டம் சேலம் மாவட்டம் என்பதை இந்த தருணத்திலே பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

★ இந்திய அளவில் பழமை வாய்ந்த, விவசாயப் பெருமக்கள், பொதுமக்கள் ஆகியோர் பயனடையும் வகையில் திட்டமிட்டு கட்டப்பட்ட 'லீ பஜார் வர்த்தக சங்கம் – 1919ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. அன்றுமுதல் இன்று வரை மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் உணவுப் பொருட்களை நியாயமான' விலையில் வழங்கவும், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவும், அப்போதைய சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. E.W. லீ அவர்களால் திறக்கப்பட்டது இந்த 'லீ' பஜார்.

★ இச்சங்கத்திற்கு காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, இராஜாஜி, சர்தார் வல்லபாய் படேல் போன்ற தலைவர்கள் வருகை வந்து பெருமை சேர்த்துள்ளார்கள்.

★ சேகோ சர்வ் – 1981ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில் தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு, ரூ.414 கோடி வர்த்தகம் நடைபெறுகிறது. விவசாயிகள் விளை பொருட்களுக்கு இலாபகரமான விலை, உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை இங்கே கிடைப்பதற்காக உருவாக்கப்பட்டது.

★ மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழகத்தில் முதன்முதலில் 1978ஆம் ஆண்டு, சேலத்தில் ஆடிமாதம் நடைபெறும் மாரியம்மன் பண்டிகையையொட்டி அரசுப் பொருட்காட்சியை நடத்த ஆணையிட்ட தலைவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அதன்பின் மற்ற மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சி நடைபெற ஆரம்பித்தது.

★ மேட்டூர் அணை என அழைக்கப்படும் 'ஸ்டேன்லி' நீர்த்தேக்கம், காவிரி ஆற்றின் குறுக்கே, மேட்டூரில் 1925ஆம் ஆண்டு தொடங்கி, 1934ஆம் ஆண்டில், ரூ.4.80 கோடி செலவில், கட்டி முடிக்கப்பட்டது! இந்த அணையின் முழுக் கொள்ளளவு 95.660 TMC ஆகும். இதனது நீர்தேக்கம், 120 அடி ஆகும். இதில் மின்சார உற்பத்தியும் செய்யப்படுகிறது. தமிழகத்தின் ஜீவ நதியாக விளங்குவது காவேரி நதி ஆகும். காவேரித் தண்ணீரைத் தேக்கிவைத்துக் கொண்டு, 16 மாவட்டங்களின் மக்களுக்கு நீர் ஆதாரமாக விளங்கிவருகிற அணை மேட்டூர் அணை சேலம் மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறது.

★ 'ஏழைகளின் ஊட்டி' – ஏற்காடு – ஆண்டுதோறும் 'மே' மாதத்தில் அரசு கோடைவிழா. ஆகவே, இன்றைக்கு ஊட்டியில் இருப்பதை போல ஏழை, எளிய மக்கள் நிறைந்த சேலம் மாவட்டம், சுற்று வட்டாரத்தில் இருக்கக்கூடிய கிருஷ்ணகிரி, தருமபுரி, எல்லாம் நமது சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்த

பகுதிகள். ஆகவே, இந்தப் பகுதியில் இருக்கின்ற நம் மக்கள் எல்லாம் இன்றைக்கு சுற்றுலா வர வேண்டும் என்றால், ஏழைகளின் ‘ஊட்டி’ என்று அழைக்கப்படும் ஏற்காட்டிற்கு வந்து சுற்றுலா காண்கின்ற காட்சியை இன்றைக்கு நமது மாவட்டம் பெருமை பெற்றிருக்கிறது.

★ சேலம் நகரிலுள்ள சுகவனேசுவரர் ஆலயம், கோட்டை மாரியம்மன் கோயில், தேரடி ராஜகணபதி ஆலயம், கைலாசநாதர் திருக்கோயில், கந்தாஸ்ரமம், குமரகிரி கோயில், குந்தை இயேசு பேராலயம், கோட்டை சிஎஸ்ஐ சர்ச், கோட்டை மசூதி, சன்னியாசிக் கூண்டு தர்கா என்று அனைத்து சமய ஆலயங்களையும் தன்னகத்தே பெற்ற மாவட்டம், சேலம் மாவட்டமாகும்.

★ மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, சுதந்திர போராட்டத் தியாகி தீரன்சின்னமலை அவர்களது நினைவு மணிமண்டபம் சங்ககிரியில் கட்ட ஆணையிட்டு, அந்த மாவீரனுக்கு மணிமண்டபம் அமைத்த தலைவி மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

★ தமிழ்த் திரைப்படங்களின் தொடக்கப்புள்ளியாக, நமது சேலம், – தென்னிந்தியாவின் ‘கோலிவுட்’ என்றழைக்கப்படும். எனக்கு முன்னாலே மக்களவைத் துணை சபாநாயகர் திரு. தம்பிதுரை அவர்கள் கூறியதை போல, சென்னைக்கு முன்பே சேலத்தில்தான், மாடர்ன் தியேட்டர்ஸ், ரத்னா ஸ்டுடியோ, சென்ட்ரல் ஸ்டுடியோ மற்றும் சங்கர் பிலிம்ஸ் ஆகிய திரைப்பட நிறுவனங்கள் கொடி கட்டிப் பறந்தன.

★ சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்சாரால், 1950இல், தயாரிக்கப்பட்டு வெளிவந்த ‘மந்திரி குமாரி’ திரைப்படம்தான், நமது புரட்சித்தலைவர் அவர்களுக்கு திரைப்படத் துறையில் திருப்புமுனையாக அமைந்தது. இந்தப் பகுதியிலே இருக்கின்ற ஸ்டுடியோவில் அப் படம் எடுக்கப்பட்டது. வெள்ளி விழாக் கண்ட, ‘அலிபாபாவும் 40 திருடர்களும்’ என்ற திரைப்படத்தைத் தயாரித்ததும் சேலம் மாடர்ன் தியேட்டர் நிறுவனம் தான்!

★ ஆகவே, இரண்டு திரைப்படங்கள் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த மந்திரி குமாரி மற்றும் அலிபாபாவும் 40 திருடர்களும் ஆகிய திரைப்படங்கள் மாடர்ன் தியேட்டர்ஸ்சாரால் தயாரிக்கப் பட்டவையாகும். புரட்சித்தலைவரின் திரைப்பட வெற்றி வரலாற்றில், சேலம் முக்கிய பங்கு வகிக்கிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆன்மாவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆன்மாவும்தான் எனக்கு வழிகாட்டிகள். அவர்கள் இருவரின் ஆன்மாக்கள்தாம், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை பொறுப்பேற்று நடத்த, உத்தரவிட்டிருப்பதாகவே நான் நினைக்கிறேன்!

இந்த நூற்றாண்டு விழாவை, தமிழ்நாடு முழுவதும் மிகவும் சீரும் சிறப்புமாக நாம் கொண்டாடி வருகின்றோம். அந்தந்த மாவட்டத்து மக்கள் பெருந்திரளாக அலைகடலென விழாவில் கலந்து கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வாழ்த்தி வணங்கிவிட்டுச் செல்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்துப் பொறுத்துக் கொள்ள முடியாத மாற்றுக் கட்சியினர், இந்த விழாவைக் களங்கப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில், இல்லாத விஷயத்தைத் தேடித் தேடிக் கண்டுபிடித்து புதிய புதிய குற்றச்சாட்டுகளை உருவாக்கி, மக்களிடையே பரப்பி வருகிறார்கள். அவர்களுடைய கெட்ட நோக்கம் ஒரு காலமும் நிறைவேறாது.

மாற்றுக் கட்சியினர் பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்து, கண்ணுக்குத் தெரியாத குறைகளை, கற்பனையாக அள்ளி வீசுவதற்கு மக்கள் மன்றத்தில் பதில் கூறுகின்றோம்; அவ்வளவுதான்! அது எங்கள் கடமை! அதே நேரம் உங்கள் வரலாற்றை, கடந்த காலத்தை, நீங்களும் திரும்பிப் பார்க்க வேண்டும். உங்களுக்குத் தெரியுமோ! தெரியாதோ! மக்களுக்கு நன்றாகவே தெரியும்!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற ஊரில் போய்ப் பேசுகின்ற போது அந்த ஊரைப்பற்றி முழுமையாக அறிந்து கொண்டு, அந்த ஊரின் பழைமை, பெருமைகளைப் பற்றிப் பேசுகின்றேன். பிறகு அந்த ஊரோடு, நூற்றாண்டு நாயகன் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இருந்த தொடர்புகளைப்பற்றி பேசுகிறேன்.

அந்த ஊருக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அம்மா அவர்களுக்குப் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் அம்மாவின் அரசும் செய்த, செய்துவரும் நலத்திட்டங்கள், தொடங்கி வைக்கப்படும் திட்டப்பணிகள், அடிக்கல் நாட்டப்படும் திட்டங்கள், அன்றைய நாளில் மேடையில் வழங்கப்படும் நலத்திட்டங்கள் பற்றி யெல்லாம் பேசுகின்றேன்.

இதுவரை, 15 மாவட்டங்களில் நடந்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக்களில், இதே முறையைத்தான் நான் பின்பற்றி வந்திருக்கின்றேன். ஒவ்வொரு கூட்டத்திலும், நான் கூறும் குட்டிக்கதைகளைப் பற்றிக்கூட, விமர்சனம் செய்கிறார்கள்!

என் பேச்சை, முழுமையாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாகிய நீங்கள் கேட்டு வருகிறீர்கள் என இதிலிருந்து தெரிய வருகிறது! மிக்க மகிழ்ச்சி! ஆனால், எதெற்கெல்லாம் விமர்சனம் செய்ய வேண்டுமென்ற வரையறை வேண்டாமா? கதை சொல்வதில் கூடவா விமர்சனம். ஒருவேளை பொறாமையா? மக்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் ஒரு குட்டிக்கதையின் மூலம் எனது கருத்தை சொல்கின்றேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய உரையில் பல குட்டிக்கதைகளைக் கூறி விளக்குவார்கள். அதை மக்கள் கூர்ந்து ரசிப்பார்கள்!

அன்றைய நிலையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கூறும் குட்டிக்கதைகளைப் பற்றி விமர்சனம் செய்தார்கள். அதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உடனுக்குடன் பதிலடி கொடுத்தார்கள்!

பேரறிஞர் அண்ணா கூட கதை சொல்லித்தான் தம்முடைய கருத்துக்களை மக்களுக்குப் புரிய வைத்தார்.

"கதை சொல்வதில் தவறில்லை. நான் சொல்லுகின்ற கதைகள் எல்லாம் அர்த்தமுள்ள கதைகள். மக்களுக்கு அறிவைப் புகட்டுகின்ற கதைகள். தத்துவ ரீதியான கதைகள். நான் சொல்லுகின்ற கதைகளால் மக்களுக்குப் பயன் உண்டு. ஆகவே, யார் என்ன விமர்சனம் செய்தாலும், இந்த கதைகள் சொல்வதை நான் நிறுத்தப் போவதில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்", என்று மாண்புமிகு அம்மா அவர்கள், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியைத்தான், நாங்களும் கடைப்பிடிக்கிறோம். அன்று குறை சொல்ல ஆரம்பித்தவர்கள்தாம், இன்று வரையும் குறைசொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். குறை சொல்வது மட்டுமே அவர்களுடைய வேலை; மக்கள் பணி மட்டும்தான் நம்முடைய வேலை!

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் திரைப்படத் துறையிலும் சரி, அரசியலிலும் சரி, உச்சத்தை எட்டிய போதும் அவரது எண்ணம் எப்போதும் சமூகத்தின் கடைநிலையில் வாழும் சாதாரண மக்களைப் பற்றியே இருந்தது.

அதனால்தான், சாதாரண மக்களின் மனங்களில் இன்றும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இதற்காக, புரட்சித்தலைவர் அவர்கள் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூறுகிறேன். மும்பையில், மாதுங்கா, டெல்லியில் கரோல்பாக் போல கொல்கத்தா நகரில், 'லேக் ஏரியா' என்ற இடம், தமிழர்கள் அதிகம் வாழும் பகுதி.

1982ஆம் ஆண்டில், அங்கு கட்டப்பட்ட தமிழ்ச்சங்கக் கட்டடத்தை, நிருவாகிகள் அழைப்பின் பேரில் அங்கு சென்று, மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார்கள். தமிழ்ச்சங்கக் கட்டடம் கட்டுவதற்காக, ரூ.5 இலட்சம் நன்கொடையாக அளித்தார்.

விமானம் மூலம் கொல்கத்தா சென்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை, திரளான தமிழர்கள் வரவேற்றனர். மாலையில் தமிழ்ச்சங்கக் கட்டடத் திறப்பு விழா நடந்தது. மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அப்போது தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையில், மேற்கு வங்க அரசின் விருந்தினராக வரவேற்கப்பட்டார். விமான நிலையத்தில் இருந்து, அதிகாரிகள் அவரை ஆளுநர் மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு தான், இரண்டு நாட்களும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தங்குவற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

பிரம்மாண்டமான ஆளுநர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்ட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தாம் தங்க வேண்டிய இடத்தைச் சுற்றிப் பார்த்தார். 10 நிமிடங்களில் ''இந்த இடம் நமக்குச் சரிப்பட்டு வராது, ஓட்டலுக்குச் சென்று தங்கிவிடலாம்!'' என்று கூறி புறப்பட்டு விட்டார். மேற்கு வங்க அதிகாரிகளுக்கு அதிர்ச்சி ஒருபுறம், வியப்பு மறுபுறம் ''ராஜ் பவனில் எல்லா வசதிகளும் இருக்கின்றன. இங்கேயே தங்கலாமே'' என்று கேட்டுக் கொண்டனர்.

புரட்சித்தலைவர் புன்னகைத்தபடியே ''தங்களின் அன்புக்கு நன்றி, இங்கே எனக்கு வேண்டிய எல்லா சவுகரியங்களும் உள்ளன. ஆனால் நிறையத் தமிழர்கள் என்னைப் பார்க்க வருவார்கள்; கட்டுப்பாடுகள் நிறைந்த ஆளுநர் மாளிகைக்குள் அவர்களால் நுழைய முடியாது; அவர்களுக்குச் சவுகரியமான இடத்தில் நான் இருக்கணும்!'' என்று சொல்லிவிட்டு ஆளுநர் மாளிகையில் இருந்து கிளம்பிவிட்டார்.

ஆளுநர் மாளிகை அமைந்திருக்கும் 'டல்ஹவுசி சதுக்கம்' என்ற பகுதியிலேயே இருந்த ஒரு ஓட்டலில் தங்கினார். தன்னுடன் வந்த உதவியாளர்களையும், தமிழக அரசு அதிகாரிகளையும் அதே ஓட்டலில் தங்க வைத்தார்.

''நான் உங்கள் வீட்டுப் பிள்ளை,
இது ஊர் அறிந்த உண்மை,
நான் செல்லுகின்ற பாதை,
பேரறிஞர் காட்டும் பாதை''

என்ற அவரது பாடலின் சமத்துவத் தத்துவத்திற்கு ஏற்ப, அரசு சார்பில் ராஜ போகங்களுடன் இலவசமாகத் தங்குவதற்கு வாய்ப்பு இருந்தும், தன்னைப் பார்க்க வரும் தமிழர்களின் வசதிக்காக, ஓட்டலில் தங்கினார்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

இவ்வாறு மக்களின்பால் நீங்கா அன்பு கொண்ட அந்தப் பெருந்தலைவர் மீது, மக்களும் இன்றளவும், பேரன்பு கொண்டு இருக்கிறார்கள் என்பதற்கு இங்கு வந்திருக்கும் உங்களை எல்லாம் பார்த்தே தெரிந்துக் கொள்ளலாம்! புரட்சித்தலைவர் அவர்கள், அனைத்து தரப்பு மக்களால் போற்றப்படுவதற்குக் காரணம், அவர் என்றுமே கடைப்பிடித்து வந்த அனைத்து மக்களும் ஒன்றே என்ற தத்துவம் தான்!

''ஒன்றே குலம் என்று பாடுவோம்,
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்,
அன்னை இதயமாக, அன்பு வடிவமாக,
வந்து வழிகாட்ட வேண்டும் என்று வணங்குவோம்''
என்று அவர் பாடியிருப்பார்.

அதற்கேற்ப, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், தமது படங்களில் தாம் ஏற்கும் கதாபாத்திரங்கள் குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த பாத்திரங்களாக இருப்பதை அனுமதிக்க மாட்டார்கள்.

அது போன்று அவர் நடித்ததும் இல்லை! எந்த மதத்தினரின் நம்பிக்கைகளையும் புண்படுத்தமாட்டார். அதனால்தான், அவர் சர்வ சமுதாயக் காவலராகப் போற்றப்பட்டு வருகிறார்!

தமது திரைப்படங்களில், திராவிட இயக்கங்களின் கொள்கைகளையும், முற்போக்கு சிந்தனைகளையும் ஜாதிக் கொடுமைகள் குறித்தும் காட்சிகள் வாயிலாக, மக்கள் மனங்களில் பதிய வைப்பது புரட்சித்தலைவர் அவர்களின் உத்தி. உரிமைக்குரல் திரைப்படத்தில், புரட்சித்தலைவர் அவர்களின் அறிமுகக் காட்சியே அதற்கு ஒரு சாட்சி.

வில்லனின் ஆட்கள் ஒரு பெண்ணை தூக்கிச் செல்வார்கள். அவர்களை அடித்து விரட்டி விட்டு, அந்தப் பெண்ணை, அவர்களிடமிருந்து மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீட்பார்கள். பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்து, தமது குதிரை வண்டியில் ஏறும்படியும் பாதுகாப்பாக வீட்டில் கொண்டு விடுவதாகவும் கூறுவார்.

அப்போது அந்தப் பெண், "ஐயா நான் தாழ்த்தப்பட்ட ஜாதியை சார்ந்தவள். உங்கள் வண்டியில் ஏறக் கூடாது" என்பாள். அதற்கு, மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் "உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி இதெல்லாம் இந்த சமுதாயம் செஞ்சு வெச்ச கொடுமை. என்னைப் பொறுத்தவரை எல்லாரும் ஒரே ஜாதிதான். அது மனித ஜாதி" என்பார்கள்.

இப்படிப் படங்களில், பொருத்தமான இடங்களில் ஜாதிக் கொடுமைகளைச் சாட, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தவறியதேயில்லை. ஆனந்த ஜோதி என்ற படத்தில்,

“ஒரு தாய் மக்கள் நாம் என்போம்
ஒன்றே எங்கள் குலம் என்போம்
தலைவன் ஒருவன் தான் என்போம்
சமரசம் எங்கள் வாழ்வு என்போம்!”

போன்ற பல பாடல் வரிகளின் மூலம் சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டார். மாநில முதல்வராகப் பொறுப்பெற்றவுடன், அதற்குரிய ஆளுமையுடனே பணியாற்றினார். இதுபற்றி, ஒரு நிகழ்வினை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்து முதல் சட்டசபை கூட்டம் நடைபெறுகிறது. வாதம்–பிரதிவாதம் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில், எதிர்கட்சித் தலைவர் கோபமடைந்து ‘இந்த ஆட்சி என்பது நாங்கள் சாப்பிட்டுப் போட்ட எச்சில் கொட்டை’ என்றார்கள்.

உடனே மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எழுந்து, ‘நீங்கள் எந்த அளவிற்கு சாப்பிட்டீர்கள் என்று கணக்கிடுவதற்குத்தான் நாங்கள் வந்திருக்கிறோம்’ என்றார்கள். அப்போது கைதட்டலால் சட்டசபை அதிர்ந்தது!

அப்படி சமயோசிதப் புத்திக்கூர்மை கொண்ட சிறந்த தலைவரின் வழியில் வந்தவர்கள் நாங்கள். உங்களைப் போல் கட்டுப்பாடு மீறி, மக்கள் முகம் சுளிக்கிற அளவிற்கு, மேடைகளைப் பயன்படுத்த மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்!

அறிவுப்பூர்வமாக பதில் கூறுகின்ற ஆற்றலை, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தாம் கழகத்தொண்டர்களுக்கும் கொடுத்துச் சென்றுள்ளார்கள்! அதற்குத் தான் இந்த சம்பவத்தை நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் இந்த அரசு, மத்திய அரசுடன் இணக்கமாகப் போகிறது என்று விமர்சனம் செய்கின்றார்கள்.

மத்திய அரசுடன் இணக்கமாக போவது என்ன, குற்றமா? மத்திய அரசு என்பது என்ன? அது அந்நிய அரசா? இந்தியா நமது நாடு, நாம் அனைவரும் இந்தியர்கள் தாம் என்பதை இவர்கள் ஏன் அடிக்கடி மறந்து விடுகிறார்கள்?

மாநிலத் திட்டங்களுக்கு – மத்திய அரசு நிதி ஒதுக்குகிறது. தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்க, மத்திய அரசிடம் திட்டங்களுக்கு – நிதி கேட்டுப்பெற வேண்டியது மாநில அரசின் கடமை. அப்படித்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலிருந்து, இன்றுவரை, நாம் பெற்று வருகின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மத்தியில் இருக்கின்ற ஆளும் கட்சியோடு ஒரு காலமும் விரோதப் போக்கைக் கடைபிடித்தது கிடையாது.

மாண்புமிகு முன்னாள் பிரதமர்கள் திரு. மொரார்ஜி தேசாய், திருமதி இந்திரா காந்தி,

திரு. ராஜீவ் காந்தி ஆகிய அனைவரிடமும் இணக்கமாகவே இருந்து, மாநிலத்திற்கு வேண்டிய நலத் திட்டங்களுக்கு நிதிகளைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால், பதவிக்காக மட்டுமே, மத்திய அரசுடன் இணக்கமாக இருப்பதும், வேண்டிய பதவி கிடைக்கவில்லை என்றால், மத்திய அரசை எதிர்த்து விமர்சனம் செய்வதையும் வாடிக்கையாகக் கொண்டவர்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள்! இதனை வரலாறு ஆழமாகப் பதிவு செய்திருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது.

இவற்றையெல்லாம், தமிழ்நாட்டு மக்கள் உன்னிப்பாகவே கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்! நாங்கள் மத்திய அரசோடு, சுமூகமான உறவு வைத்துக் கொண்டிருப்பதால்தான், தமிழ்நாட்டிற்கு 10 ஸ்மார்ட் சிட்டிகள், மக்களுக்குக் குறைந்த செலவில், தரமான டிஜிட்டல் ஒளிபரப்பு, வறட்சி நிவாரணம் மற்றும் பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டத்தின்கீழ், 6 இலட்சத்து 79 ஆயிரத்து 340 வீடுகள், தமிழ்நாட்டில் ‘ஜப்பான் தொழில் நகரம்’ அமைத்தல் உட்பட மக்கள் பயன்பெறும் வகையில் பல சிறப்புத் திட்டங்களைப் பெற முடிந்தது.

மேலும், நகரங்களை இணைக்கும் விமான சேவைக்காக, மத்திய அரசு அறிவித்துள்ள ‘உதான்’ திட்டத்தில், சேலம், ஒசூர், நெய்வேலி ஆகிய நகரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக சேலம், காமலாபுரத்தில் அமைந்துள்ள விமான நிலையத்தினை விரிவாக்கம் செய்யும் பணிகள் துரிதமாக நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான், 35 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 25 பணிகளைத் தொடங்கிவைத்துள்ளேன். இன்று சேலம் மாநகராட்சியில், குடிசை மாற்று வாரியம் உட்பட, 5 துறைகளின் சார்பில், 23 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 159 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து, இன்று வரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த 8 ஆயிரத்து 400 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 34 ஆயிரத்து 45 திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், 3 ஆயிரத்து 458 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, 6 ஆயிரத்து 557 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

ஆக மொத்தம், 11 ஆயிரத்து 858 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான, 40 ஆயிரத்து 602 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் இன்று வரை, கடந்த ஏழு மாதங்களில், மக்கள் நலப் பணிகளைத் திறம்படச் செய்வதற்காகவே எனது முழு நேரத்தையும் செலவிடுகிறேன்.

என்னிடம் வரும் அனைத்து கோப்புகளையும், உடனுக்குடன் பார்த்து ஒப்புதல் அளிக்கின்றேன். இதுவரை 3,563 கோப்புகள் என்னால் ஒப்புதல் வழங்கப்பட்டு, அவற்றின் மீது உரிய ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் மற்றும் மாண்புமிகு புரட்சித்தலைவியின் வழி வந்த இந்த இயக்கத்தினையும், ஆட்சியையும் அகற்றப் பலர் முயற்சி செய்கிறார்கள், ஆணவத்துடனும் பேசியும் வருகிறார்கள். ஆனால், அவர்கள் எண்ணம் ஒருநாளும் ஈடேறாது. இத்தருணத்தில், எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு காட்டில் முதுமையான மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தில், பறவைகள் தலைமுறை தலைமுறையாகக் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. வழிப்போக்கர்களுக்கு அந்த மரம் உண்பதற்குப் பழங்களையும், இளைப்பாற நிழலும் தந்து கொண்டிருந்தது.

மழைக்காலத்தில் புதியதாக வளர்ந்த கொடி ஒன்று அந்த மரத்தின் மீது படர்ந்து, மரத்தின் உச்சிவரை சென்றிருந்தது. இந்த பெரிய மரத்தை விடத் தான் உயரமாக வளர்ந்துவிட்டோம் என்ற கர்வம், அந்த கொடிக்கு வந்தது!

ஒரு நாள் அந்த கொடி, மரத்திடம் “மரமே! நீ எத்தனை வருடங்களாக இந்தக் காட்டில் இருக்கிறாய்?” என்று கேட்டது. “100 வருடங்களுக்கு மேல், இந்த காட்டில் இருக்கின்றேன்” என்றது மரம். அந்த கொடி நமட்டுச் சிரிப்புடன், “மரமே, 100 வருடங்களாக நீ இவ்வளவு உயரம்தான் வளர முடிந்தது. என்னைப் பார்த்தாயா? ஒரே மாதத்தில் உன் உயரத்தை நான் தாண்டி விட்டேன்” என்றது. அதற்கு அந்த மரம் அமைதியாகக் கூறியது, “கொடியே, ஒவ்வொரு மழைக்காலத்திலும், உன்னைப்போல பல கொடிகள் இப்படித்தான் என்மீது படர்ந்து வளரும். வளர்ந்த பின் தன்னையே மிக உயரமான கொடியென்று கொக்கரித்துக் கொள்ளும், அடுத்த சில வாரங்களிலேயே அவை பட்டுப்போய் – இருந்த இடம் தெரியாமல் போய்விடும். இப்படி எத்தனையோ கொடிகளைப் பார்த்தவன் நான். நீயும் அப்படித்தான்.. எனவே, நீ இருக்கிற குறைந்த காலத்தில், எதை வேண்டுமானாலும் பேசு. ஒரு சில வாரங்களில் நீயும் காணாமல் போய் விடுவாய்.!” என்றது மரம்.

இந்தக் கதை மூலம் தெரிவது, தன் நிலை அறிந்து, அடக்கத்துடன் செயல்படுபவர்கள் யாராக இருந்தாலும், மண்ணில் நிமிர்ந்து நிற்கலாம். இதை அறியாதவர்களுக்கு, கொடிக்கு ஏற்படும் நிலைதான் உண்டாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், மக்கள் நலத்திட்டங்கள் எதையுமே செய்யவில்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார். அவரோடு சேர்ந்து, சில எதிர்க்கட்சிகளும் ‘ஜால்ரா’ போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன! புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விட்டுச் சென்ற பணியை, அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. அதில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

✶ ஒரு இலட்சத்து 53 ஆயிரத்து 29 மாணாக்கர்களுக்கு, 348 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விலையில்லா மடிக்கணினி. இந்தியாவில் மட்டுமல்ல, வல்லரசு நாடுகளில் கூட, விலையில்லா மடிக்கணினி வழங்கப்படுவதில்லை. ஆனால்,

புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு விஞ்ஞானக் கல்வி, அறிவுபூர்வமான கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காகக் கடைக்கோடியில் இருக்கின்ற, குடிசையில் இருக்கின்ற ஏழை, எளிய மாணவன் கூட உயர்ந்த கல்விக்கு, உச்ச நிலைக்கு வளரமுடியும் என்பதற்காக, அம்மா அவர்கள் ரூ.14,000 செலவில் laptop வாங்கித்தந்து, நம்முடைய மாணவர்களுக்கு விஞ்ஞானக் கல்வியை வழங்கினார்!

- ✶ திருமண உதவித் திட்டம் – இன்றைக்கு கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த பெண்கள், படித்த பெண்கள், திருமண வயதை எட்டுகின்ற பொழுது பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக, திருமணம் செய்ய முடியாத நிலையில் திருமணம் தடைபடுகின்றது. அம்மா அவர்கள் தம் தொலைநோக்குச் சிந்தனையால், திருமண உதவித் திட்டத்தை அறிவித்தார்கள்! தாலிக்குத் தங்கம்! முதலிலே அரை பவுன் வைத்து அறிவித்தார்கள், பிறகு 1 பவுன் கொடுத்தார்கள், படித்த பெண்களுக்கு ரூ.25,000லிருந்து ரூ.50,000ஆக உதவித்தொகை உயர்த்தி வழங்கப்பட்டது. இதுவரை சேலம் மாவட்டத்தில் திருமண உதவித்திட்டத்தின் கீழ் 30,003 ஏழைப் பெண்களுக்கு, 103 கோடியே 48 இலட்சம் ரூபாய் திருமண நிதியுதவி வழங்கியிருக்கிறது, 120 கிலோ தங்கம் வழங்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அற்புதமான திட்டம், ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இந்தத் திட்டம், இந்தியாவிலேயே எந்த மாவட்டத்திலும் இல்லை.

- ✶ கடுமையான வறட்சி – 1 இலட்சத்து 41 ஆயிரத்து 272 விவசாயிகளுக்கு, 65 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் இடுபொருள் மானிய நிவாரணத் தொகை மற்றும் விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் தள்ளுபடி திட்டம் – 81 ஆயிரத்து 224 விவசாயிகக்குக் – கடன் தள்ளுபடி, 399 கோடியே 26 இலட்சம் ரூபாய். ஆகவே, நம்முடைய மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, வறட்சி நிவாரண உதவி, கடன் நிவாரணம் ஆகிய அத்தனைத் திட்டங்களையும், அளித்து, இன்றைக்கு அவர்களுக்கு உற்ற நண்பனாய் விளங்கும் அரசு, தமிழ்நாடு அரசு என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

- ✶ மாண்புமிகு முதலமைச்சரின் ‘உழவர் பாதுகாப்புத் திட்டம்’, – 1 இலட்சத்து 73 ஆயிரத்து 14 விவசாயிகளுக்கு நிதியுதவி 211 கோடியே 19 இலட்சம் ரூபாய். ஆகவே, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக, இவ்வளவு நிதியை நம்முடைய மாவட்ட மக்களுக்கு வழங்கியிருக்கின்றோம்.

- ✶ 235 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 14,026 சூரிய சக்தியுடன் கூடிய ‘பசுமை வீடுகள்’ வழங்கப்பட்டுள்ளன.

- ✶ 14,026 சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளை, இன்றைக்கு ஏழை, எளிய கிராமப்புறத்திலே வாழ்கின்றவர்களுக்கெல்லாம் கட்டிக் கொடுக்க

வேண்டுமென்று, அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்தப் பசுமை வீடுகளில் இன்றைக்கு அந்த ஏழை மக்கள் வாழும் காட்சியைப் பார்க்கின்றோம்! அதற்கு மட்டும், சேலம் மாவட்டத்தில், 235 கோடியே 67 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ‘தாய்’ திட்டத்தின்கீழ், 143 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 9,582 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கிராமத்தில் இருக்கின்ற மக்கள் வசதி பெறுதற்காக, ‘தாய்’ திட்டத்தைக் கொண்டு வந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.
- ‘பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம்’ – 181 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், இத்திட்டத்தின்கீழ ஆயிரத்து 544 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.
- குடிநீர் அபிவிருத்திக்காக, 11,285 பணிகள் 180 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- குடிசை மாற்று வாரியத்தின் மூலம், 37 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், குடியிருப்புகள்.
- நங்கவள்ளி மற்றும் மேச்சேரி குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 158 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பில், செயல்படுத்தப்பட்டு இவ்வாண்டு இறுதிக்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.
- ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள் மற்றும் 20 பேரூராட்சிகள் உட்பட்ட 1,345 குடியிருப்புகளுக்கு, 270 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காவேரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- மேட்டூர் நகராட்சிக்கு, பாதாளச் சாக்கடை திட்டம் 73 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- சேலம் மாவட்டத்தில், நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள 2,451 கி.மீ. சாலைகளில், 952 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1,883 கி.மீ சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 332 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 50 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- மேலும், நடப்பாண்டில் 102 கி.மீ. சாலைப்பணிகள், 75 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், 526 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 13 பாலங்கள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.
- தாரமங்கலத்தில், ரூ.20 கோடி செலவில் புறவழிச் சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன.
- விவசாயிகளுக்கு விலையில்லா வண்டல் மண் வழங்கும் திட்டத்தின்கீழ், சேலம் மாவட்டத்தில், 979 நீர்நிலைகள் கண்டறியப்பட்டு, அவற்றில் 415 நீர்நிலைகளில்,

வண்டல் மண் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. மொத்தம் 39 ஆயிரத்து 524 விவசாயிகளுக்கு, வண்டல் மண் வழங்கப்பட்டுள்ளது.

- ✶ குடிமராமத்து திட்டத்தின்கீழ், சென்ற ஆண்டில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 48 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில், 9 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 51 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இவைல்லாம் விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகள்! அம்மாவினுடைய அரசு, விவசாயிகளுடைய அரசு, விவசாயிகள் நலன் காக்கும் அரசு. ஆகவே, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகளில், குளங்களில், இன்றைக்கு வண்டல்மண்ணை அள்ளி விவசாயிகள் எருவாக தங்கள் நிலத்திற்கு இடுகிறார்கள். வண்டல் மண் அள்ளுவதால் ஏரிகள், குளங்கள் ஆழப்படுகின்றன. பருவமழைக் காலங்களிலே நீர் சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்படுகிறது. விவசாயிகளுக்குத் தேவையான நீரும், குடிதண்ணீரும் கிடைக்கிறது. அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை உருவாக்கிய அரசு, அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✶ மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலமாக, 7 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 9 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, புதிய கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், 12 ஆரம்ப சுகாதார நிலையங்கள், தலா 30 படுக்கை அறைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அதனால், ஆங்காங்கே இருக்கின்ற பொதுமக்கள் அந்தந்தப் பகுதியிலேயே எளிமையாகச் சிகிச்சை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியை, அம்மா ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

- ✶ ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக, 4 புதிய விடுதிகளும் மற்றும் 9 விடுதிகளுக்குப் புதிய கட்டடமும் கட்டித் தரப்பட்டுள்ளன.

- ✶ அதே போல, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக 3 புதிய விடுதிகளும், 13 விடுதிகளுக்கு புதிய கட்டடங்களும் கட்டித் தரப்பட்டுள்ளன.

- ✶ வேளாண்மைத் துறைக்காக 7 புதிய கட்டடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன.

- ✶ கால்நடை பராமரிப்புத் துறையில், 12 புதிய கால்நடை மருந்தகங்களும், 18 புதிய கால்நடை துணை நிலையங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்துறைக்காக, 87 கட்டடங்கள் புதியதாக கட்டித் தரப்பட்டுள்ளன. வாய் பேசுகின்ற மனிதருக்கு மட்டுமல்ல, வாய் பேசமுடியாமல் இருக்கின்ற அந்த கால்நடை ஜீவன்களுக்கும், நலன் காக்கும் அரசு, அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✶ உயர் கல்வித் துறையின் மூலம், ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

✶ பள்ளிக் கல்வித் துறையின் மூலம், 46 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 7 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

✶ மகளிர் நலன் கருதி, 46 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 600 படுக்கைகள் கொண்ட தாய்–சேய் சிறப்பு மருத்துவப் பிரிவு ஒன்று, சேலம் தலைமை மருத்துவமனையில் தொடங்கப்பட்டது.

✶ சேலம் அரசு மோகன்குமார் மருத்துவமனையில், இன்றைக்கு ஏழை தாய்மார்களுக்கு பிரசவம் நடக்க வேண்டுமென்றால், தனியார் மருத்துவமனையில் ரூ.10,000, முதல் ரூ.15,000 வரை, செலவாகும். அந்தக் குறைகளை போக்குவதற்காக, அம்மா அவர்கள், ஏழை, தாய்மார்கள், எளிமையாகப் பிரசவம் பெறவேண்டும் என்பதற்காக அற்புதமான மருத்துவமனையை நம்முடைய சேலம் மாவட்டத்திற்குத் தந்த தலைவிப் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அந்த ஏழைத் தாய்மார்கள் பெற்றெடுத்த குழந்தைகள் நலமாக வாழ வேண்டும் என்பதற்காக, அந்த மருத்துவமனையிலே பச்சிளங்குழந்தைகளுக்கும் 50 படுக்கை கொண்ட சிறப்புச் சிகிச்சை முகாம் தொடங்கப்பட்டிருக்கின்றது.

✶ அதுமட்டுமின்றி, சேலம் மாநகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு ஏதுவாக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலேயே, மாநில அரசால், ரூ.340 கோடி அளவிற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து கட்டப்பட்ட மேம்பாலம், 5 ரோடு மேம்பாலம். அது மட்டுமல்ல, ஏ.வீ.ஆர் ரவுண்டானா, திருவாககவுண்டனூர், குரங்குச்சாவடி மற்றும் 'லீ'பஜார், முள்ளுவாடி கேட், மணல் மேடு, பழைய இரயில்வே சூலமங்கலம் பகுதி, இப்பொழுது, சேகோசெர்வ். அதாவது, இரும்பாலை பிரிகின்ற ரோடு. அங்கேயும் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேம்பாலம் கடட்டப்படும் திட்டத்தை அறிவித்தார்கள். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதி கொடுக்காததால், காலதாமதமாகியது. விரைந்து அப்பணி தொடவக்கப்படும். ஆக, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சேலம் மாநகர மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்த மாநகரப் பகுதியை, முற்றிலும் போக்குவரத்து நெரிசல் இல்லாத நகரமாக உருவாக்க, சுமார் ரூ.640 கோடி, அம்மா வாரி வழங்கினார்கள் நம்முடைய சேலம் மாவட்டத்திற்கு என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

மாண்புமிகு அம்மா அவர்களின் 2011–2016இல் நடைபெற்ற மக்கள் நல ஆட்சியில், மேலே குறிப்பிட்ட திட்டங்கள், சேலம் மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்றதால்,

சேலம் மாவட்ட மக்கள் 11 சட்டமன்ற தொகுதிகளில், 10 இடங்களில், அதாவது டபுள் டிஜிட்டில் 2016 சட்டமன்றத் தேர்தலில் வென்ற மாவட்டம் சேலம் மாவட்டம்.

ஆகவே, சேலம் மாவட்டம் என்றாலே, அம்மாவினுடைய கோட்டைதான்! எனவே, இந்தக் கோட்டைக்குள் எவராலும் நுழைய முடியாது, நுழைய எத்தனை முயற்சி மேற்கொண்டாலும் தோற்றுத்தான்போவார்கள்! இன்றைக்கு, எவ்வளவோ விமர்சனம் செய்கின்றார்கள். இங்கே வந்திருக்கின்ற கூட்டம் அம்மாவிடம், உண்மையான விசுவாசத்தைக் கொண்டுள்ள மக்கள் நிறைந்த கூட்டம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவிலே, நடைபெறுகின்ற பொதுக்கூட்டம் அன்று; ஒரு மாநில மாநாடு போல், மக்கள் வெள்ளம் கடல் போல் காட்சி அளிக்கின்ற கூட்டம் இன்றைக்கு இங்கே கூடியிருக்கிறது. இத்துணையளவு பெரும் மக்களின் செல்வாக்கு மிக்க இருபெரும் தலைவர்களின் ஆசி இருப்பதால், எவராலும் எங்களை அசைக்க முடியாது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கின்றபொழுதும், விசுவாசமாக இந்த மாவட்டம் விளங்கியது. அதேபோல, அவருடைய ஒரே அரசியல் வாரிசாக விளங்கிய புரட்சித்தலைவி அம்மா அவர்களிடமும், சேலம் மாவட்ட மக்கள் விசுவாசமாக இருக்கின்றார்கள் என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாக நாம் பார்க்கின்றோம்! மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, தொடர்ந்து மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடந்த ஆறு ஆண்டுகளில், மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்ட முக்கிய பணிகளில் ஒருசிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பள்ளிக்கல்வி

கல்வியிலே புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மிகப்பெரிய புரட்சியை செய்தார்கள். இந்திய அளவிலேயே கல்விக்கு முன்னுரிமை கொடுத்த ஒரே மாநிலம் , அம்மா ஆண்ட தமிழ்நாடுதான்! ஆகவேதான், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே, கிராமத்திலே, நகரத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய குழந்தைகள், அற்புதமான கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காக, 14 வகையான பொருள்களை நம்முடைய மாணவ செல்வங்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தார்கள்!

6 ஆண்டுகளில், 41 ஆயிரத்து 727 ஆசிரியர்கள், 58 சிறப்பாசிரியர்கள், 4,362 ஆய்வக உதவியாளர் மற்றும் 15,169 பகுதி நேர ஆசிரியர்கள் பணி நியமனம். கடந்த 6 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசில் 227 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 116 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு, மாணவர்களின் வளமான வாழ்விற்கு வழி வகுத்துக் கொடுத்துள்ளோம்.

அதுபோல, பாடத்திட்டத்தில் இன்றைக்கு மாற்றம் செய்யும் வகையில், 2018 – 2019 கல்வியாண்டில் 1, 6, 9 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்கும், 2019 – 2020 கல்வியாண்டில் 2, 7, 10 மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கும், 2020 – 2021 கல்வியாண்டில் 3, 4, 5 மற்றும் 8ஆம் வகுப்புகளுக்கும், பாடத்திட்டங்கள் மாற்றப்படவுள்ளன.

எந்த மாநிலத்தில் இப்படி நடந்தது? எதிர்க்கட்சி எல்லாம் பேசுகிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்று தெரியவில்லை! இவ்வளவு திட்டங்களை நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். உங்களது ஆட்சியில் எந்த திட்டத்தைக் கொண்டுவந்து செயல்படுத்தினீர்கள்? மேடை போட்டுச் சொல்லுங்கள் பார்க்கலாம்! இவ்வளவு திட்டங்களுக்கும் இன்றைக்கு நிதி ஒதுக்கீடு செய்து, பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கல்வியிலே ஒரு புரட்சி, மறுமலர்ச்சி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். எந்த ஒரு நாட்டில், மாநிலத்தில் கல்வி வளர்கிறதோ, அங்கு பொருளாதாரம் வளரும், அமைதி நிலவும், பண்பு, உயர்வு கிடைக்கும். அத்தனைக்கும் வழிவகுத்த ஒரே தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தாம். ஆகவேதான், ஆங்காங்கே பள்ளியினுடைய தரம் உயர்த்தப்பட்டு, மாணவர்களுடைய சேர்க்கை சதவீதமும் உயர்ந்து இன்றைக்குத் தமிழகத்திலே கல்வி கற்கக்கூடியவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்திருக்கின்றது! இந்தியாவிலேயே, தமிழ்நாடு முன்னுதாரணமாக விளங்கும் மாநிலம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, பாடத்திட்டத்திலே இன்றைக்கு மாற்றம் செய்ய இருக்கின்றோம்.

உயர் கல்வி

அதேபோல, இன்றைக்கு, இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் உயர்ந்திருக்கிறது! ஏழை, எளிய, சாமானிய மக்கள் வீட்டிலே இருக்கும் மாணவ, மாணவியர்கள் உயர்கல்வி படிக்கவேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள், 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்தார்கள். எனவே, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆங்காங்கே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உருவாக்கியதன் காரணமாக, ஆங்காங்கே இருக்கும் எழை, எளிய குடும்பத்தின் மாணவ மாணவிகள் குறைந்த கட்டணத்திலே, உயர்கல்வி கற்கின்ற சூழ்நிலையை உருவாக்கினார். 2011ஆம் ஆண்டு, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பதவியேற்றபொழுது, 100க்கு 21 பேர் மட்டுமே உயர்கல்வி கற்றிருந்தனர்! புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினால் கல்வியிலே புரட்சி ஏற்பட்டு, இன்றைக்கு 44.32 சதவீதமாக, படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது!

சுகாதாரத் துறையிலும் பல்வேறு சிறப்பு திட்டங்கள்! கடந்த 6 ஆண்டுகளில், மருத்துவர்கள், மருத்துவம் சாராத் தொழிலாளர்கள் உட்பட, 1 இலட்சத்து 20 ஆயிரத்து 506 பேர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். புதிய மருத்துவ கல்லூரிகள், புதிய மருத்துவமனைகள் கட்டுதல் ஏற்கெனவே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை நிலை உயர்த்துதல் முழு உடல் பரிசோதனை – சென்னையில் ‘சூப்பர் ஸ்பெசாலிட்டி’ மருத்துவமனை. ஆக, இப்படி இன்றைக்கு மருத்துத்துறையிலே அம்மா அவர்கள் தம் ஆட்சியில், பல்வேறு திட்டங்களை கொடுத்திருக்கிறார்கள்.

வேளாண்மைத்துறை

வேளாண் துறையிலே தமிழகம் கடந்த 5 ஆண்டுகளில் 4 முறை இந்தியாவிலேயே முதலிடம் பெற்று க்ருஷி கர்மான் பரிசு பெற்ற மாநிலமாக விளங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உணவு தானிய உற்பத்தியிலே, இன்றைக்கு இந்தியாவிலேயே சிறந்த விருதான 'க்ருஷி கர்மான்' விருதைப் பெற்ற மாநிலம். அம்மா ஆண்ட தமிழ்நாடுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

தொழிற்சாலை – ஒரு நாட்டினுடைய வளர்ச்சி தொழிற்சாலைகளைப் பொறுத்து இருக்கிறது. தமிழ்நாட்டை தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலமாக உயர்த்தவேண்டும் என்பதற்காகப் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், சென்னையிலே 'தொழில் முதலீட்டாளர் மாநாட்டை' நடத்தினார்கள். அதன் மூலமாக, ரூ.2,42,160 கோடி அந்நிய முதலீடு ஈர்க்கப்பெற்று, 62 ஆயிரத்து 738 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு திட்டங்கள் செயலாக்கத்தில் உள்ளன. இதுவரை 76 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். ஆகவே, புதிய, புதிய தொழிற்சாலைகள் உருவாக்கி, நம்முடைய மாணவச் செல்வங்கள் படித்துப் பட்டம் பெற்ற பின்பு, வேலைவாய்ப்பைப் பெற வேண்டும் என்பதற்காக, தொலைநோக்கு சிந்தனையோடு, தொழில் முதலீட்டாளர் மாநாட்டை சென்னையிலே நடத்திய தலைவர் புரட்சித்தலைவி அவர்கள்.

மின்சாரம் – இன்றைக்கு மின்சாரம் தன்னிறைவு பெற்றிருக்கின்றது. இன்றைக்கு காலையில் கூட தொலைக்காட்சியில், பத்திரிகையில் பார்த்திருப்பீர்கள். நம்முடைய தேவையை விட, அதிக அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்த காரணத்தினாலே, சென்னையிலே 1,200 மெகாவாட் மின்சாரம் அனல் மின்சாரத்திலிருந்து தயாரிக்கப்படுவது இன்றைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, கடுமையான மின்வெட்டு இருந்தது. அந்த மின்வெட்டைப் போக்கியே தீரவேண்டுமென்று, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமது கடுமையான நடவடிக்கையின் மூலமாக, இன்றைக்கு தமிழ்நாட்டிலே உபரியாகவே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது இருக்கின்றது. அப்படிப்பட்ட சூழலை உருவாக்கித்தந்தவர் தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம், ரேசன் கடைகளில் அனைத்துப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே, பொது விநியோகத் திட்டம் தமிழகத்தில்தான் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ரேசன் கடைகள் மூலம், அனைத்துப் பொருள்களும் இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஸ்மார்ட் கார்டும், இன்றைக்கு வழங்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, புதிதாக எதிர்க்கட்சித்தலைவர் கண்டுபிடித்துவிட்டார். இன்றைக்கு அ.தி.மு.க. மைனாரிட்டியில் இருக்கிறது என்று! இவர்கள்

ஆட்சியில் இருக்கும் பொழுது, 96 எம்.எல்.ஏ. ஆகவே, ஒரு பெரும்பான்மை அரசு என்றால் எவ்வளவு இருக்க வேண்டும் என்று அப்போது அவருக்கு கணக்குத் தெரியாதா? இப்பொழுது கணக்குச் சொல்கிறாரே, அப்பொழுது ஏன் கணக்குச் சொல்லவில்லை? 96 எம்.எல்.ஏ.க்களைக் கொண்டு, 2006லிருந்து 2011 வரைக்கும் 'மைனாரிட்டி' ஆட்சியே செய்து முடித்துவிட்டுது தி.மு.க.! இன்றைக்கு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசு, பெரும்பான்மை பலத்தோடு இருக்கின்ற அரசு என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.ஆகவே, உங்களுக்கு பேசுவதற்கு எந்தத் தகுதியும் இல்லை. ஏனென்றால், 96 எம்.எல்.ஏ.க்ளோடு ஆட்சி செய்த நீங்கள், எங்களைக் கேள்வி கேட்பதற்கு எந்தத் தகுதியும் இல்லை என்பதை, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு, எவ்வளவோ திட்டங்களை நாங்கள்தாம் கொண்டுவந்தோம் என்று சொல்கிறீர்கள்; எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தீர்கள்? கடந்த 14 ஆண்டு காலம், மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே தி.மு.க.பங்கு வகித்தது. 1996ஆம் ஆண்டு, மத்தியிலே ஆட்சியில் தி.மு.க. பங்கு பெற்றது, அப்பொழுது பாரதிய ஜனதா கட்சியில் முதலில் பங்கு பெற்றார்கள். ஆட்சி அதிகாரத்தில் இருந்தார்கள், தமிழ்நாட்டிற்கு ஏதாவது செய்தார்களா? எதுவும் செய்யவில்லை! அதேபோல, அதற்குப் பிறகு, காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்து போட்டிபோட்டு வெற்றி பெற்று காங்கிரஸ் தலைமையிலே தி.மு.க. அங்கம் வகித்தது மத்திய அரசோடு. அப்பொழுதும் ஏதும் செய்யவில்லை! ஆனால், வாய்கிழியப் பேசிக்கொண்டிருக்கிறார், நன்றாக எண்ணிப் பாருங்கள். எனவே, 14 ஆண்டுகாலம், மத்தியிலே ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது, தமிழ்நாட்டிற்கு எந்தத் திட்டத்தையாவது கொண்டு வந்தீர்களா? எந்த திட்டத்தையாவது நிறைவேற்றிக் காட்டினீர்களா? இன்றைக்கு காவிரி நதிநீர் பிரச்சினைகுளித்து, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப் போராட்டம் நடத்தி, மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த பெருமையைப் பெற்றார்கள்! இன்றைக்கு ஜீவநதியாய் இருப்பது காவிரி நதிநீர். மேட்டூர் அணை நிரம்பினால் தான், டெல்டா பகுதி மக்கள் வாழமுடியும். அங்கே 14 இலட்சம் ஏக்கருக்கு மேலாகச் சாகுபடி செய்யப்படுகின்றது. அந்த நீரை நம்பித்தான் அந்த மக்கள் இருக்கின்றார்கள். குடிநீருக்கும் மேட்டூரை நம்பித்தான் இருக்கிறது. இது எதற்காகவாவது வழி கண்டீர்களா? நீங்கள் மத்திய ஆட்சி அதிகாரத்திலே 14 ஆண்டுகாலம் இருந்தபொழுது, இதைப் பெற்றிருக்கலாம், நீங்கள் செய்யத் தவறி விட்டீர்கள். ஆனால் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு இன்றைக்கு மத்திய அரசோடு இணக்கமாக உள்ள காரணத்தினாலே, எவ்வளவு திட்டங்களைக் குறுகிய காலத்திலேயே, நாங்கள் பெற்றுத் தந்திருக்கின்றோம்! ஆகவே, ஆட்சி அதிகாரத்தில் இருப்பதுதான் அவர்களுடைய எண்ணமேயொழிய, நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதிலே துளி கூட எண்ணம் இல்லை என்பதை சுட்டிக் காட்டுகிறேன். அம்மாவினுடைய அரசு, எப்பொழுதும் மக்களை சிந்தித்துக் கொண்டிருக்கின்ற அரசு!ஆனால் எதிர்க்கட்சியைப் பொறுத்தவரைக்கும் அவர்களுடைய குடும்ப நலன் ஒன்றே அவர்தம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்! ஆகவே, மத்திய அரசில் குறிக்கோள் மகனுக்குப் பதவி வேண்டும்; பேரனுக்கு பதவி

வேண்டும்; எந்தெந்தப் பதவி பெறலாம் என்று. கேட்டுக் கேட்டுப்பெற்று, ஆனால் தமிழ்நாட்டிற்கு எதையுமே செய்யத் தவறி விட்டீர்கள். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டதா என்று எங்களைக் கேட்கின்றார்கள். நீங்கள்தான், மத்தியிலே 14 ஆண்டு காலம் ஆட்சி அதிகாரத்திலே இருந்தீர்கள்! நீங்கள் நினைத்திருந்தால் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டிருக்கலாம், அதைச் செய்ய தவறியது எதிர்கட்சியான தி.மு.க. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், புரட்சித்தலைவி அம்மாவை பொறுத்தவரைக்கும், விவசாயிகள் நலன் காக்கவேண்டும், விவசாயிகள் வயிற்றில் பால்வார்க்க வேண்டும் என்பதற்காக உச்சநீதிமன்றத்தில் காவிர் நதிநீர் வழக்கைச் சட்டரீதியாக சந்தித்து, காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்குண்டான நடவடிக்கையை இன்றைக்கு மேற்கொண்டு வருகிறது. வாதங்கள் எல்லாம் உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கு நிறைவு பெற்றுள்ளன, நிச்சயமாக, நல்ல தீர்வு நம்முடைய தமிழகத்திற்கு கிடைக்கும், கிடைக்கின்ற பெருமை அம்மாவைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்! ஆகவே, விவசாயிகள் ஆகட்டும், ஏழைகள் ஆகட்டும், அத்தனை பேருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஒரே அரசு, அம்மாவினுடைய அரசுதான் என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அது மட்டுமல்ல; இன்றைக்கு, சேலம் மாவட்டத்திலே பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று மேடையிலே வீற்றிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அவற்றில், முடிந்த அளவுக்கு நிறைவேற்ற இந்த அரசு பாடுபடும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, புரட்சித்தலைவர் அவர்கள் பாடியது போல், இந்த இயக்கம் “வாழை போல் வெட்ட வெட்டமுளைக்கும், சங்கு போல் சுட ச்சுட வெளுக்கும்” எனக் கூறி, இந்த விழா சிறப்பாக நடைபெற, அல்லும் பகலும் பாடுபட்ட, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரோஹிணி அவர்களுக்கும், எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழாவிற்கு சிறப்பாக ஏற்பாடு செய்த சேலம் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.வெங்கடாசலம் அவர்களுக்கு, எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இந்த விழா சிறப்பாக நடைபெற பாடுபட்ட அனைத்து நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு இந்த அரசு உங்களின் சேவகனாக தொடர்ந்து பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கும் கழகக் கண்மணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வாகனங்களில் பத்திரமாக வீடு போய்ச் சேர வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே! வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் புகழ்! தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி! நன்றி! வணக்கம்!

அறிவிப்புகள்

சேலம் மாவட்டத்தில் ஏழு இடங்களில் புதிய தடுப்பணைகள் கட்டப்படும்.

- ✶ பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே, லக்கம்பட்டி கிராமத்தில் ஒரு தடுப்பணை. பெரியபள்ளம் ஓடையின் குறுக்கே, கொளத்தூர் கிராமத்தில் ஒரு தடுப்பணை. சுவேதா நதியின் குறுக்கே, இரண்டு தடுப்பணைகள். வசிஷ்ட நதியின் குறுக்கே ஒரு தடுப்பணை.சித்தேரி ஊராட்சியில் மஞ்சினி ஓடையில் ஒரு தடுப்பணை. மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் பொன்னியாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை. ஆகவே, புரட்சித்தலைவி அம்மாவுடைய அரசு, நிலத்தடி நீர் முழுமையும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகப் பருவ காலங்களிலே பெய்கின்ற மழைநீர் முழுமையும் சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீரை செருவூட்டுவதற்காக இந்த தடுப்பணைகள் கட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை, இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
- ✶ போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சி மையம் அமைக்கப்படும்.
- ✶ பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குப் புதிய குழாய் அமைக்கப்படும்.

சங்ககிரி பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்:

- ✶ சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சிக்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, நாமக்கல் மாவட்டத்துடன் சேர்ந்து பயன்பெறும் வகையில், ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

சேலம் மாநகருக்கு, மேற்கு சுற்றுச்சாலை:

- ✶ சேலம் மாவட்டம் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலைகள் எண்.43, 44, 47 மற்றும் 79 ஆகியவற்றை ஒருங்கிணைத்து, சந்தியூரில் தொடங்கி, உத்தமசோழபுரம் வழியாக பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை அரபிக் கல்லூரி வரை, 21 கி.மீ. நீளமுள்ள மேற்கு சுற்றுச்சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக அமைக்கப்படும்.

ஆத்தூர் புறவழிச் சாலை:

- ✶ தாண்டவராயபுரம் அருகில் இருந்து காந்திபுரம் வரை, சுமார் 11 கி.மீ. நீளத்திற்குப் புறவழிச் சாலை அமைக்கப்படும்.

சாலை மேம்பாலங்கள் / இரயில்வே மேம்பாலங்கள்:

- ✶ சேலம் மாநகர் இரும்பாலை சாலை சந்திப்பில் ஒரு புதிய மேம்பாலம்.

நான் குறிப்பிட்டவை எல்லாம், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போதே அறிவித்த திட்டங்கள்!

- ✶ தொளசம்பட்டிச் சாலை கி.மீ. 8/4இல், ஓர் உயர் மட்டப் பாலம்.
- ✶ முள்ளுவாடிச் சாலையில், வசிஷ்ட நதியின் குறுக்கே கி.மீ.0/2இல் உள்ள பழைய பாலத்திற்கு பதிலாக புதிய உயர் மட்ட பாலம் கட்டப்படும்.
- ✶ ஓமலூர்–மேச்சேரிச் சாலை கி.மீ.0/4இல், உள்ள கடவு எண்.10க்கு மாற்றாக, இரயில்வே கி.மீ.9/1–2இல், ஓமலூர் மற்றும் தொளசம்பட்டி இரயில்வே நிலையங்களுக்கு இடையே, சாலை மேம்பாலம் கட்டப்படும்.
- ✶ தொளசம்பட்டிச் சாலை (ODR) கிமீ.7/2இல், இரயில்வே கடவு எண்.15–க்குப் பதிலாக, இரயில்வே கி.மீ.15/13–16இல் துளசம்பட்டி மற்றும் மேச்சேரி இரயில்வே நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.
- ✶ தாரமங்கலம் – நங்கவள்ளி – குஞ்சாண்டியூர் சாலை (மாநெ223) கி.மீ.17/10இல், இரயில்வே கடவு எண்.21–க்கு பதிலாக, இரயில்வே கி.மீ.31/9–10இல் மேச்சேரி மற்றும் மேட்டூர் அணை இரயில் நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.
- ✶ ஆத்தூர்–பெரம்பலூர் சாலை கி.மீ.0/2ல், (மாநெ157) இரயில்வே கடவு எண் 131க்குப் பதிலாக, இரயில்வே கி.மீ.139/100–200இல், சின்ன சேலம் மற்றும் ஆத்தூர் இரயில்வே நிலையங்களுக்கிடையில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.
- ✶ சேலம்–திருப்பத்தூர்–வாணியம்பாடி சாலை கி.மீ.0/2இல், (மாநெ 18) இரயில்வே கடவு எண் 169க்குழுப் பதிலாக, இரயில்வே கி.மீ.182/2–3இல், மின்னாம்பள்ளி மற்றும் சேலம் இரயில் நிலையங்களுக்கிடையில், சாலை மேம்பாலம் கட்டப்படும்.
- ✶ கருப்பூர் 'எல்காட்' வளாகத்தில், ரூ.80 கோடி செலவில், நவீன தொழில் நுட்பத்துடன் முற்றிலும் கணினிமயமாக்கப்பட்ட புதிய 230 கி.வோ துணை மின்நிலையம் அமைக்க, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ✶ சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சிகள், பேரூராட்சி பகுதிகளில் மற்றும் பெரிய பஞ்சாயத்துப் பகுதிகளில், புதிய மின் மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்) ரூ.120 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- ✶ சேலம் மாநகராட்சி அண்ணா பூங்காவில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*

30.09.2017 அன்று, சேலத்தில் நடைபெற்ற

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை.

“புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.** அவர்களின் கனவை புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் நனவாக்கினார்கள். புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் விட்டுச் சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம்.”

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை